
அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM
Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com



தாய்
# வீடு
THAIVEEDU உள்ளும் புறமும் மே 2008



வீடு வாங்க, விற்க மற்றும் income tax, mortgage சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
HOMELIFE HIGHER STANDARDS
T: 416.264.0101
C: 416.568.4301
SELVA VETTYVEL
Broker of Record
HomeLife Future Realty Inc. Brokerage
262 Markham Road Scarborough, On M1J 3C5



## 20 ஆண்டுகளில்

# மக்களின் சம்பளம் அதிகரிக்கவில்லை

### 2006ம் ஆண்டின் கருத்துக் கணிப்பின் முடிவு

கனடாவின் தொடக்கநிலை வருமானம் உள்ளோர்கள் கடந்த 20 ஆண்டுகளில் முன்னேறவில்லை என்று தெரியவருகிறது. 1980இல் இருந்து 2005 வரையான காலப் பகுதியில் மத்தியதர மக்களின் ஊதியம் உயரவில்லை, மாறாகக் குறைந்திருக்கின்றது. கனடாவின் 2006வது ஆண்டின் கருத்துக் கணிப்பின் அடிப்படையிலேயே இது தெரிய வந்திருக்கிறது.

மக்கள் தொகையில் 70 வீதம் பேரின் ஊதியம் 20 வீதத்தால் வீழச்சியடைந்துள்ளது. மத்தியதர மற்றும் தொடக்க நிலையில் உள்ள மக்களும் வேலைப் பிரிவினரும் இந்த வருமான இழப்பைச் சந்தித்துள்ளனர்.

வருமானத்தைப் பொறுத்தவரை பெண்களின் நிலை 2000 ஆண்டிலிருந்து இன்று வரை மாறவில்லை. ஆண்கள் 1 டொலரை வருமானமாகப் பெறுகையில் பெண்கள் 85 சதமே வருமானமாகப் பெறுகிறார்கள்.

பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு முடித்தவர் 60,003 டொலர்களும் கல்லூரியில் படித்தவர் 37,403டொலர்

3ம் பக்கம் பார்க்க...



கடந்த ஏப்பிரல் மாதம் 26ம் திகதி கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட வருடாந்த விருந்துபசாரத்தில் லிபரல் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான **Stéphane Dion** சிறப்பு விருந்தினராகக் கலந்துகொன்டார்.


RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8


THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX
Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI MORTGAGE CANADA


Cash Point Mortgages
Ask Us How You Can Own Your Home Today!
• Mortgages • Refinancing
• Debt Consolidation
• Insurance
Tel: 416.284-0005,
Sutha: 416.824-6605
3852 Finch Avenue E.,
Unit 202, Scar, ON


PMCI MORTGAGE CANADA
Buying - Selling - Investing
PROPERTY MAX
Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300


இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

முக்கிய குறிப்பு வீட்டு உரிமையாளர்களுக்கு
60 நாட்களில் அதிகூடிய விலையில் உங்கள் வீட்டை என்னால் விற்க முடியும் உங்கள் அனுசரணையுடன். தாமதிக்காது உடன் அழைத்தால்...
S.K. Bales CRA, MVA, CRES, FRI
Canadian Residential Appraiser, Real Estate Broker
416.801.3219 (Cell)
416.290.1200 (Bus), www.skbales.com
Century 21
Affiliate Realty Inc.



R&S AUTO SALES
HONDA - TOYOTA - GM MINI VANS ON THE SPOT FINANCING
சிறந்த சேவைக்கான பல விருதுகளைப் பெற்ற வாகன விற்பனை முகவர்
Radha
4362 Sheppard Ave. East
Scarborough, ON
M1S 1T6 Canada
Tel: 416.412.3838
Fax: 416.412.1174


Mortgage
Residential & Commercial
Line of Credits
Personal & Business
Second Mortgage
Raj. S
Broker / Director
416. 993. 2638
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial


Tel: 416-836-1946, 416-423-5057
40 Crockford Blvd., Scarborough, ON, M1R 3C3
24 hrs Service
SAM
Mobile Mechanic
K.S.TRUCK & CAR TRAILER REPAIR
All Automotive Repairs
Specializing in Mechanical, Body, Electrical Repairs & Wheel Spring


416.200.5470
ELECTRICAL - PLUMBING & DRAINAGE SERVICES
SANTHA
www.santha.ca
416-200-5470


வீடு வியாபார ஸ்தாபனம்
வாங்க விற்க
Logan Manikavasagar
Broker
Direct : 416.708.9903
Century 21
Percy Fulton Ltd. Brokerage*
2911 Kennedy Rd.Toronto, Ontario M1V 1S8
Tel : 416.298.8200 (24Hr) Fax : 416.298.6602
Email : sales@loganhotproperties.com
www.loganhotproperties.com
Buy or Sell Your Properties?
Real Estate is My Job...Worry Free for you...
Kalai Logan
Sales Representative
Direct : 416.697.9903
Your #1 Choice


HIGHPOINT
Laser Products
Brand Name Toners Cartridges for Copy Machines
Laser Printers Fax Machines.
100 Ironside Cres., Unit 10, Scarborough, ON. M1X 1M9
Tel : 416.297.9994 Fax : 416.297.6113, 1 877 281 9997
www.highpointlaser.com
brother EPSON DELL hp
LANIER LEXMARK Panasonic IBM
TOSHIBA NEC océ SAMSUNG
KONICA MINOLTA PitneyBowes XEROX
Tektronix muratec KYOCERA
SHARP Canon
Lower Cost - 100% Guaranteed - Free Delivery 416-708-9903

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்

## உணவுத்தட்டுப்பாடு

அரசியலை விட அரிசி பற்றிய பிரச்சினை பெரும் பிரச்சினையாக இப்போது உருவெடுத்துள்ளது. உலகத்தில் 1.1பில்லியன் மக்கள் தினமும் தங்களது வருமானமாக ஒரு டொலரைவிடக் குறைவாகவே பெறுகின்றனர். இதில் ஏறத்தாள 700 மில்லியன் மக்கள் (மூன்றில் இரண்டு பங்கு மக்கள்) அரிசியை பயன்படுத்தும் மூன்றாம் உலக நாடுகளில் வசிக்கின்றனர். வறுமையில் உள்ள மக்கள் தமது வருமானத்தில் 30-40 வீதமான பணத்தை அரிசி வாங்குவதற்கே பயன்படுத்துகின்றனர். இந்த மக்கள் அரிசி விலை ஏற்றத்தால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் வரட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகள் தற்கொலை செய்யும் வீதம் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. அந்த விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளுக்கு மத்தியில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. விதர்பா பிராந்தியத்தில், 450க்கும் அதிகமானோர் தற்கொலை செய்து கொண்டதை அடுத்து, அங்கு நிவாரணத்திட்டங்களுக்காக இந்திய அரசும், அதிகாரிகளும் 100 கோடிக்கும் அதிகமான டாலர்களை செலவிட்டனர். ஆனால், அடுத்த வருடம் அங்கு 1400க்கும் அதிகமானோர் தற்கொலை செய்துகொண்டதாக, அரசாங்க அறிக்கை ஒன்று கண்டறிந்துள்ளது.

அரிசி தட்டுப்பாட்டுக்கு காரணம் என்பது பற்றிய தகவல்கள் பலமாதிரியும் உள்ளன.

பெரும்பாலான நாடுகளில் விளைநிலங்களை அழித்தே குடியிருப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. அத்தோடு ஆஸ்திரேலியா, இந்தியா உட்பட பல நாடுகளில் ஏற்பட்ட கடும் தொடர் வரட்சியால் பெருமளவு விளைச்சல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. அதே வேளை கூடிய விளைச்சல் பெறக்கூடிய புதிய முறைகளைப் பெருமளவில் கடைப்பிடிக்காமல் விட்டிருப்பதும் இந்தத் தட்டுப்பாட்டுக்கு ஒரு காரணம்.

இதே வேளை எரிபொருட் பாவனைக்கு சோளம் கரும்பு போன்ற உணவுப் பொருட்கள் பாவிப்பதனால், இது போன்ற உணவுப்பொருட்களுக்கு சந்தையில் நல்ல கிராக்கி இருப்பதாலும், கோதுமை, அரிசி போன்ற தானியங்கள் விளைவித்த இடங்கள் பல, பணப்பயிர்களாக மாறிய கரும்பும் சோளமும் விளையும் விளைநிலங்களாக மாறின. அதுவும் இந்தத் தட்டுப்பாட்டுக்கு ஒரு காரணம்.

இதனால் கோதுமையும் அரிசியும் உற்பத்தி செய்யும் உலகின் முதன்மை நாடுகள் பல தானிய ஏற்றுமதியைத் தடைசெய்துவிட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்னும் சில மாதங்களில் உலகத்திற்கு தேவையான அரிசியை உற்பத்தி செய்வதற்காக சீனா தனது அண்டை நாடுகளில் உள்ள நிலங்களை வாடகைக்கு பெற்றுள்ளது. சில மாதங்களில் இந்த அரிசி கனடாவுக்கும் வந்து சேரும்.

அரிசி விளைச்சல் குறைந்த காரணத்தால் தான் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்பது நம்பகத் தன்மையான விடயமாக இல்லை. மேற்குலகத்தின் அரசியலுக்கு எதிராக இந்த அரிசியை ஒரு ஆயுதமாக இந்தியா பயன்படுத்துகின்றது என்ற சந்தேகமும் உள்ளது.

III

**www.inayam.net**

**தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்**

உங்கள் நிகழ்வுகளை பார்ப்பதற்கும் பதிவதற்கும்

**www.inayam.net**

**416 400 6406**

# 20 ஆண்டுகளில்...

1ம் பக்கத் தொடர்ச்சி...

களும் பாடசாலைப் படிப்பும் அதற்குக் குறைவான படிப்புடையவர்கள் 32,029 டொலர்களும் சராசரி வருமானமாகப் பெறுகிறார்கள்.

இளைய - தனியான பெற்றோர், புதிய குடிவரவாளர் மற்றும் வெளிப்படையாகச் சிறுபான்மையினராகத் தெரியும் வகுப்பினரே இவ்வாறான பாதிப்பில் அதிகம் உள்ளனர்.

கனடாவின் மத்திய மாற்றுப் பொருளாதார மைய ஆலோசகரான ஆர்மின் (Armine Yalnizyan) 'இது எச்சரிக்கை மணி' என்று தெரிவித்துள்ளார். 'இந்த புள்ளிவிவரத்தை கனடிய மக்களும் அரசும் புறக் கணிக்க முடியாது' என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில் ரொரன்ரோப் பகுதியில் உள்ள மத்தியதர மக்களின் வரும்படி 2000 ஆவது ஆண்டிலிருந்து 2005 ஆவது ஆண்டுவரையான காலப்பகுதியில் மிகவும் குறைவடைந்துள்ளது.

ரொரன்ரோப் பல்கலைக் கழத்தின் நகர்ப் புறக் கல்வித்துறையின் பேராசிரியர் டேவிட் (David Hulchanski) சொல்கின்றார் 'முன்பு குடிவரவாளர்கள் கட்டுமானப்பணிகள் போன்றவற்றில் பங்கெடுத்தார்கள். அவை தொழிற்சங்க வயமாயிருந்தன. ஆதனால் ஊதியம் அதிகமாயிருந்தது. இன்றோ வேலையில்லை. எனவே தொழிற்சங்கத்துக்கு புறம்பே வேலை தேடுகிறார்கள். தங்கள் கல்விக்கு புறம்பே வேலை தேடுகிறார்கள். புதிய குடிவரவாளர் வந்து அடிப் படை வேலையைச் செய்கிறார்கள். எங்கள் பணிமனைகளை, விடுதிகளைப் பல்கலைக் கழகங்களைச் சுத்தப்படுத்துகிறார்கள். எங்கள் வாடகைக்கார்களை ஓட்டுகிறார்கள். எங்களுக்கச் சமைத்துப் போடுகிறார்கள்...'

நிலை இதுதான். கனடாவில் பிறந்தவர் ஒருவர் 1980ஆம் ஆண்டளவில் 10 டொலர் ஊதியம் பெற்றால் குடிவரவாளர் 8.50 சதம் ஊதியம் பெற்றார். ஆனால் கனடாவில் பிறந்தவர் 2005 ஆவது ஆண்டளவில் 10 டொலர் பெறுகையில் புதிய குடிவரவாளர் 6.30 சதம் மட்டுமே பெற முடிகிறது. புதிய குடிவரவாளப் பெண்களைப் பொறுத்தவரை நிலை இன்னும் மிக மோசமாக உள்ளது.

ஆனால் இந்நிலையிலும் உயர்வருவாய் பெறுபவர்களின் வரும்படி 16 வீதம் அதிகரித்திருக்கிறது என்றும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

பெற்றோல் விலை அதிகரித்திருக்கிறது. தானிய விலை அதிகரித்திருக்கிறது. டொலர் பெறுமதி கூடியிருக்கிறது. ஆனால் வரும்படி மட்டும் குறைந்திருக்கிறது. துன்பப் படுபவர்கள் அடிப்படை மக்கள் தான் என்னும் நிலை தெட்டத் தெளிவாயிருக்கிறது. குடிவரவாளர்களின் கனவுலகம் என்ற கனடாவின் நிலை மாறியிருக்கிறது.

■ ■ ■

**Publisher & Editor : P.J. Dilipkumar**
**பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்**

**ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், கருணா, பொன்னையா விவேகானந்தன், ரதன், சுந்தர் சின்னத்தம்பி.**

**தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி.**

**ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி.**

**வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)**

**தொடர்புகள் :**
**For More Info : Editor**
**P.O.Box #63581**
**Woodside Squarew**
**1571 Sandhurast Circ.**
**Toronto, ON. M1V 1V0**

**Montréal விநியோகம் : சுகுமாரன் சின்னையா**
**1-514-299-3186**
**Ottawa விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு**
**1-613 -276-7253**

**Tel : 416-646-3422, 416.400.6406**
**Fax : 416.849.0594**
**Web : www.thaiveedu.com**
**E-mail : info@thaiveedu.com**

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

**#1 TEAM @ PROPERTY/MAX REALTY INC.**



PROPERTY MAX®
Realty Inc. Realtor
**Mohan Subramaniyam**
Broker of Record
**416.321.2300**

New Mortgage, Commercial Mortgage
New Immigrans, Ist, 2nd Mortgage
Re-Financing, New Home Buyers

**Search More Properties @**
**www.realestatebrokerofrecord.info**

WE BRING CANADA'S LEASING LENDER'S TO YOU
PMCI
PROPERTY MORTGAGE CANADA INC.

**PLEASE MENTION PROPERTY/MAX WHEN ENQUIRING ABOURT PROPERTIES!**

## ஈரானின் எரிவாயுக் கரங்களுக்குள் அகப்படும்

# தென்னாசியா ஈரானை உள்விழுங்குமா?

- அ. கணபதிப்பிள்ளை -
kanapathipillai@thaiveedu.com

தென்னாசியப் பிராந்தியத்தியத்தினுள் கால் எடுத்து வைத்துவிட்ட ஈரான் தென்னாசிய சமூக, பொருளாதார நலன்களில் தன்னை இணைத்துக்கொள்ளுமா என்பதனையும் ஈரானின் வருகை பிராந்திய நலனுக்கு எந்த விதத்தில் உதவியாகவிருக்கப்போகின்றது என்பதனையும் ஆராய்வதே இக்கட்டுரை-யின் நோக்கமாகும்.

உலகிலேயே இரண்டாவது மிகப்பெரிய வலுவள நாடாகத் திகழும் ஈரான் மேற்குலக முதலாளித்துவ நாடுகளிலிருந்து வேறு ஒரு அணியில் தன்னை இணைத்துக்கொள்ள விரும்புவதன் வெளிப்பாடு வளர்ந்து வரும் மனிதவள நாடுகளை நோக்கிய ஈரானின் பயணமாக அமைகின்றது.

தென்னாசியாவில் மிகவும் பிரதான நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய மூன்று நாடுகளுக்கும் ஈரானிய ஜனாதிபதி மகமூத் அகமதிநிஜத்தின் பயணம் பொருளாதார நலன் சார்ந்ததா, சமூக - கலாச்சார நலன் சார்ந்ததா என்பதனையும் அதன் பின்னணியில் அரசியல் லாபம் தேடும் முயற்சி ஒன்று அடிப்படையாக அமைந்துள்ளதா என்பதனையும் தெளிவு-படுத்திக்கொள்ள வேண்டும்.

1979ம் ஆண்டு ஈரானிய இஸ்லாமியக் குடியரசாக தன்னை அறிமுகப்படுத்திய ஈரான் 1935ம் ஆண்டுவரை பாரசீகம் (பேர்சியா) என்று அழைக்கப்பட்டது. மெசப்பத்தேமியா சிந்துவெளி நாகரீகங்களின் தொடர்ச்சியும் இணைவும் பாரசீகம் ஒரு நாகரீக நாடு என்பதனைத் தெளிவுபடுத்தியது. கிமு 4000 ஆண்டுகாலப் பழைமையான நாகரீகத்தின் தொட்டில் தான் இந்த ஈரான்.

இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து நாகரீக அம்சங்களைப் பெற்றுக்கொண்டும் அதே வேளை அதற்கு நாகரீக அம்சங்களையும் வழங்கியிருந்த பாரசீகம்- பேர்சியா இன்று தனது உறவினைப் பலப்படுத்திக் கொள்-கின்ற வாய்ப்பு இந்திய, பாகிஸ்தான், இலங்கை விஜயங்களினூடாகக் கிடைத்-திருக்கின்றது.

இந்தோ ஆரிய மொழிபேசும் ஈரான் மக்கள் தமது நிலத்தை ஆர்யானாம் என்றும் தங்களை ஆர்யாஸ் என்றும் அழைத்தனர். பலுஸ்சிஸ்தான் தென் சிந்துநதிப்பகுதியில் வாழ்ந்த சிந்துவெளி மக்களுடன் (திராவிடர் களின் குடும்பத்தினர்) தங்களை இணைத் துக் கொண்டதன் விளைவாக பாரசீக-இந்தியக் கலாச்சாரத்தின் விழுதுகள், இலங்கை தென்கிழக்காசியா கிழக்காசியா வரையில் பரந்துபட்டிருந்தது என்ற கலாச்-சாரப் பின்னணிதான் இந்த ஈரானை தென் கிழக்கு, தென்னாசியா, கிழக்காசிய மக்கள் தங்களுடன் சேர்த்துக்கொள்ள விரும்புகின்-றார்கள் என்ற காரணம் ஒருபுறமாகவும் இஸ்லாம் கிழக்கு நோக்கிப் பரந்துபட்ட பொழுது அதனை ஏற்றுக் கொண்ட நாடு-களின் மதப்பின்னணி தான் காரணம் என்பது மறுபுறமாகவும் முக்கியப்படுத்தப்-படுகின்றது.

மத்திய கிழக்கில் அரபு நாடாக இல்லாத ஈரான் மதத்தின் பெயரால் அரபுநாடுகளுக்கு உதவுவதாகவும் அரபு நாடுகளின் எதிரி-யான இஸ்ரேலைப் பகைத்துக் கொண்ட தொரு நாடாகவும் இன்று காணப்பட்டாலும் மேலைத்தேய முதலாளித்துவ நாடுகளின் குறிப்பாக ஆளகைக்குட்பட்ட எண்னெணய் வளக் குத்தகைப்பிரதேசங்களில் ஒன்றாக இந்தநாடும் இருந்தது என்பது மறுக்கமுடி-யாத உண்மையாகும். வரலாற்றுக்காலத்தில் பட்டுப்பாதையாகவும் பாரசீகக் கிரேக்கப் படை நடத்தற் பிரதேசங்களாகவும் முக்கியம் பெற்ற இந்தப் பாரசீகம் எண்ணெய்வளத் தேவை முக்கியம் பெற்ற உலக யுத்தங்-களின் பின்பாக வல்லரசு நாடுகளின ஈர்ப்புப் பிரதேசமாகவும் குறிப்பாக முன்னர் அமெ-ரிக்காவின் பின்னர் இரஸ்யாவின் ஆதரவு நாடாக இருந்து வருகின்றது. 1949ல் இஸ்ரேல் உதயத்தின் பினபாக அமெரிக்கா வின் கையினுள் அகப்பட்டுக்கொண்ட மத்திய கிழக்கு அதிலிருந்து விடுபட நினைக்கின்ற பொழுது ஏற்படும் வலிந்த யுத்தங்களுக்கு ஈரானும் முகம் கொடுக்கவேண்டிய இக்கட்-டான சூழலில் இருக்கின்றமைதான் இன் றைய ஈரானின் வரலாறாகும்.

அணிசேரா நாடாகத் தன்னை அடையாளம் காட்டிய ஈரான் அமெரிக்க அணியிலும் பின்-னர் ரஷ்ய அணியிலும் தன்னை இணைத்துக் கொண்டிருந்தாலும் பாகிஸ்தான், இந்தியா இலங்கை ஆகியவற்றின் உறவு மீண்டும் அணிசேரா நாடாக அதனை மாற்றுமா என்ற எதிர்பார்ப்பு இருக்கத்தான் செய்கின்றது.

தென்னாசிய நாடுகளான ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகியவற்றினை எல்லைக-ளாகக் கொண்ட ஈரானை ஐரோ-ஆசிய நாடாகக் காட்டமுயன்ற பிரதேசப் புவியிய-லாளர்கள் ஈரானைத் தென்னாசியநாடாகக் காட்டுவதே பொருத்தமென உணர்கின்றார்-கள். இதன் அடிப்படையில்தான் தென்னா-சியா ஈரானை உள்விழுங்குமா என்றதொரு கூற்று முன்வைக்கப்படலாயிற்று.

ஈரான் தென்னாசியவுடன் இணைய விரும்-பிய வாய்ப்பானது இந்திய நோக்கிய எரிவாயுக் குழாய்களின் பொருத்தலின் மூலம் உறுதிப்படுத்தப்படக்கூடிய சாத்தியக்-கூறுகள் தென்படுகின்றன. தென்னாசியா வின் அணு ஆயுத வல்லரசுகளான இந்தியா, பாகிஸ்தான் இரண்டுடனும் தன்னை இணைத் தக்கொள்ளும் ஈரான் தனது யூரேனியச் செறிவூட்டல் நடவடிக்கைக்கு இடைஞ்சலாக இருக்கும் அமெரிக்காவிடமிருந்து ஆறுதல தேட முனைவதாகவும் இதனைக் கொள்ள லாம். ஈரான் சர்வதேச அணுவாற்ற நிறுவ-னத்தின் விதிகளுடன் ஒரு உடன்பாட்டினை எட்டியதன் மூலம் அணுவாற்றலை பயன் படுத்தக்கூடியதான ஒரு ஏற்பாட்டினை ஏற்றுக்கொள்ளச் செய்கின்ற வாய்ப்பினைப் பெறுகிறது. ஈரான் சமாதான வழியில் அணு வாற்றலைப் பயன்படுத்தினாலும் ஒரு காலத்தில் அதன் எதிரி நாடுகள் மீது பிரயோகித்துவிடக் கூடும் என்ற அமெரிக்கா வின் நம்பிக்கை தான் ஈரானை இந்தியா நோக்கிச் செல்ல அனுமதிக்கப்படுவதற் கான காரணம் என்றதொரு அரசியல் இராஜதந்திரமும் கூட இங்கு ஆதிக்கம் பெறுகிறது.

பாகிஸ்தானில் அணுவாயுத இரகசியங்கள் மத்திய கிழக்கூடாக சின்னாசியா எனப்படும் துருக்கிக்கும் கூட எடுத்துச்செல்லப்பட்டு விட்டது என்ற ஊகங்கள் இடம்பெற்ற வேளையில் ஈரானில் யுரேனியச் செறிவூட்-டல் நிகழ்ச்சித்திட்டத்தைத் தடுப்பதும் ஈராக் மீதான அணுவாயுதப் பீதியும் ஒருங்கே இடம் பெற்றிருந்தன. இது ஈராக் போராக வடிவமெடுத்தது. பாகிஸ்தானில் இருந்து கொண்டே அணுவாயுதத்தைக் கட்டுப்படுத்-திக் கொண்ட அமெரிக்கா இந்தியாவையும் அணுவாயுத ஒப்பந்தத்தினுட் கொண்டுவந்து விட முயற்சி செய்கின்றது. அதேவேளை ஈரானின் இந்திய வருகையைக் கொண்டு இந்தியா மூலம் ஈரானின் அணுவாயுத ஆசையினை அடைக்கிவைத்துவிட முடியும். என்ற அமெரிக்காவின் நம்பிக்கை என்ற அரசியல் எல்லாவற்றுக்கும் மேலாக இருப்-பதாகவும் எண்ணத்தோன்றும்.

ஈரானின் வலுவள வர்த்தகத் தொடர்புகள் ரஷ்ய, ஜப்பான், இத்தாலி, சீனா, தென் கொரியா, ஜேர்மனி ஆகிய நாடுகளுடன் இருந்தாலும் ஐ.நா.வின் பொருளாதாரத் தடையினை ஒப்பாசாரத்துக்காகவாவது பேணவேண்டிய தேவை ஐ.நா. பாதுகாப்புச் சபையிலுள்ள நாடுகளுக்கு இருந்து வருகி றது. அந்தத் தடைகளை எல்லாம் மீறக் கூடியதாக பரஸ்பர நல்லெண்ண உடன்-பாடுகளும் பொருளாதார மென் கடன்களும் அபிவிருத்தி உதவிகளும் ஈரானினால் ஏற்படுத்தப்படுகின்றன. ஈரான் சீனாவுக்கும் எரிவாய்வுக் கரங்களை நீட்டுவதற்கு ஆலோசித்திருந்தாலும் இந்தியாவுடனான 15 வருடகால பேச்சுவார்த்தையினை நடைமுறைப்படுத்தும் வாய்ப்பு இப்பொழுது தான் ஈரானுக்குக் கிடைத்திருக்கின்றது. என்பதனால் இதற்குத்தான் முதல் முக்கியத் துவம் கொடுத்திருக்கிறது இந்தச் சந்தர்ப்-பம் அமெரிக்கா கொண்டிருக்கும் பொருளா தார மந்தம் பற்றிய பய உணர்வினால் சாத்தியமாக அமைந்திருக்கின்றதா என்ற ஊகமும் முக்கியம் பெறுகின்றது. பல்வேறு காரணங்களுக்காக இந்தியாவைப் பகைக்க விரும்பாத அமெரிக்கா சாதாரண அறிக்கை களின் ஊடாக இந்த ஈரானின் வருகையினை ஆமோதிக்க வேண்டிய கடப்பாட்டில் இருந்தது.

தென்னாசிய நாடான இலங்கையினுள் ஈரான் வரவேண்டிய தேவை என்ன என்ற கேள்வியும் ஆச்சரியமும் புதிதாக இருக்க முடியாது. நீண்டகாலமாக மத்திய கிழக்கு நாடுகளுடன் உறவினைப் பேணுவதற்கு இலங்கை அரசாங்கங்கள் முயன்று வந்துள் ளன. அதேவேளை மத்திய கிழக்கு நாடு-களில் பெறப்படும் வேலைவாய்ப்புக்கள் மூலம் இலங்கை அந்நியச் செலாவணியை யும் மாறாக தேயிலைச் சந்தையினையும் பெற்றுக்கொண்டிருக்கிறது.

இலங்கை போன்ற சிறிய வளர்ச்சியடைந்-துவரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி யில் எண்ணெய்வளம் அடிப்படையாகவும் மிகவும் செலவு கூடியதாகவும் இருப்பதனால் இலங்கை மத்திய கிழக்கில் எண்ணெய் வளத்தினை பெறும் முயற்சிகள் நடை-பெற்றமை இது முதற்தடவையாக அமைய வில்லை. இலங்கை அரசாங்கத்தில் அங்கம் வகித்த இஸ்லாம் அமைச்சர்கள் இந்த மத்தியகிழக்கு எண்ணெய் வளத் தேடல் களில் முக்கிய அங்கம் வகித்து வந்தார்கள்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகள் இலங்கையின் மனித உரிமை

7ம் பக்கம் பார்க்க...

> “ இலங்கை மீது கட்டுப்பாட்டினை போட நினைக்கின்ற இந்தியாவுக்கு ஈரான் என்ற ஒரு ஆயுதம் தற்போது கிடைத்திருக்கின்றது. ஈரான் போருக்கு உதவிசெய்யும் அதேவேளையில் சமாதானத்திற்காகத் தான் முன்வருவதாகவும் தெரிவித்திருக்கிறது. இலங்கையில் முதலிடுகின்ற இந்தியாவுக்கு ஈரானின் வருகையும் அது உதவவிருக்கும் சமாதான முன்னெடுப்பும் தேவையாகவே இருக்கிறது... ”

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker

Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



# நீரை சேமிப்போம்! பயன் பெறுவோம்!!

எம்மில் பலர் நீர் யானை மாதிரி – உங்களை சொல்லவில்லை குறைநினைக்க வேண்டாம். குளிக்கப் போனால் மற்றவர் வந்து கதவை தட்டும் வரை மெய்மறந்து குளித்துக் கொண்டிருப்பார்கள். நீங்களும் அவர்களில் ஒருவரா? தயவு செய்து இக் கட்டுரையை வாசித்து பயன் பெறவும். நீங்கள் அவர்களில் ஒருவர் இல்லாவிட்டாலும் வாசித்து மற்றவர்களும் தெரியப்படுத்துங்கள்.

நீரை சிக்கனமாக பயன் படுத்துவதன் காரணமாக ஒன்ராறியோ மாகாணத்தின் குடியிருப்பாளர்கள் தங்களது வீட்டுப் பாவனைக்கான நீரின் அளவை ஒரு நாளைக்கு 260 லீட்டர்களாக குறைத்தள்ளனர். ஐரோப்பாவில் சராசரியாக நாள் ஒன்றிற்கு 150 லீட்டர் நீரை பயன் படுத்தும் அதே சமயம் சராசரி ஆபிரிக்கர் ஒருவர் 50 லீட்டர் நீரையும், வட அமெரிக்கர் ஒருவர் 350 லீட்டர் நீரையும் பயன் படுத்துகின்றனர்.

## சிறிய சேமிப்பு நடவடிக்கைகள் பெருமளவிலான சேமிப்பிற்கு வழியை ஏற்படுத்தும்

எங்களது அயலவர்களில் பலர் தமது புல் வெளிக்கு தினமும் நீர் பாய்ச்சுவதையும், அவர்கள் தமது வதிவிடங்களை விட்டு வெளியே செல்லும் போது மின்சார விளக்குகளை எரிய விடுவதையும், அல்லது குழாய்களில் இருந்து நீர் வடிந்து கொண்டிருப்பதை அலட்சியப்படுத்துவதையும் நாங்கள் அவதானிக்கிறோம். இவைகளை பற்றி அக்கறை எடுக்காமல் இருப்பது இலகுவானது. ஆனால் நாம் ஒவ்வொருவரும் ஒரு சில சிறிய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம், ஓர் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். தொடர்ச்சியாக நீர் வடிந்து கொண்டிருக்கும் குழாயைத் திருத்தி அமைத்தல் உங்களது வீட்டு புல்வெளிக்கும் தோட்டத்திற்கும் வாரத்திற்கு ஒரு தடவை மட்டுமே நீர் பாய்ச்சுதல் போன்ற செயற்பாடுகள் ஓர் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். ஒவ்வொரு

> “ நீங்கள் ஒரு தடவை குளிக்கும் நேரத்தை இரண்டு நிமிடங்களால் குறைத்தால், ஒரு வருடத்திற்கு 131,400 லீட்டர் நீரை சேமிக்கலாம். ”

வரும் தமது சிறிய பங்கை செய்வதன் மூலம் நாம் எமது சேமிப்பை அதிகரிக்க முடியும்.

## குடிநீர் குழாய்களை மூடுவதன் மூலம் பூமி வெப்பமடைதலை நிறுத்துவதற்கு நீங்கள் எவ்வாறு உதவமுடியும்.

நீரை சேமித்தல், பூமி வெப்பமடைதல் ஆகிய இரண்டிற்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி எம்மில் பலர் அறிந்திருப்பதில்லை. உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு இந்த நாட்டிலேயே அதிக அளவு தூய்மையான நீர் உள்ளது. ஆனால் இந்த அதிர்ஷ்டமான தன்மையை நாங்கள் கருத்தில் கொள்ளாமல் அதிகளவில் நீரை விரையமாக்குகிறோம்.

## நீரை பயன்படுத்துவதும் காபன் வெளியேற்றமும் எவ்வாறு ஒன்றோடென்று தொடர்பு உடையவை

எங்களது வதிவிடங்களில் உள்ள குழாய் களில் இருந்து வரும் நீர் இந் நாட்டிலுள்ள பாரிய வாவிகள் மற்றும் ஆறுகள் என்பவற்றிலிருந்து நேரடியாக வருவதில்லை, இதை மிகவும் அதியுயர் தரமானதாக சுத்திகரித்து, வடிகட்டி குழாய்கள் வழியாக எம்மை வந்தடைகிறது. இந் நடவடிககைகளுக்காக பெருமளவு மின்சாரம் செலவளிக்கப்படுகிறது.

நீங்கள் உங்களது வீட்டில் பயன்படுத்தும் நீரின் அளவைக் குறைப்பதன் மூலம் நீர் விநியோகத்திற்கு தேவையான சக்தியின் அளவை குறைக்க முடியும். இதன் மூலம் வளி மண்டலத்திற்கு செல்லும் காபன் கசிவின் ( Carbon Emission) அளவை பெருமளவு குறைக்க முடியும்.

## நீர் குழாய்களில் ஏற்படும் கசிவினால் குடி நீர் வீணாக்கப்படுதல்

உங்களது வீட்டில் ஏற்படும் சிறிய நீர் கசிவும் பெருமளவு நீரை விரையமாக்குகின்றது.

மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -
mahen@thaiveedu.com



உதாரணம்:

10 வினாடிகளுக்கு ஒரு தடவை நீர் ஒழுக்கு ஏற்பட்டால் ஒரு நாளுக்கு 3.2 லீட்டரும் ஒரு வருடத்திற்கு 1193 லீட்டரும் செலவாகிறது.

2 வினாடிகளுக்கு ஒரு தடவை நீர் ஒழுக்கு ஏற்பட்டால் ஒரு நாளுக்கு 16 லீட்டரும் ஒரு வருடத்திற்கு 5969 லீட்டரும் செலவாகிறது.


1 வினாடிகளுக்கு ஒரு தடவை நீர் ஒழுக்கு ஏற்பட்டால் ஒரு நாளுக்கு 32 லீட்டரும் ஒரு வருடத்திற்கு 11937 லீட்டரும் செலவாகிறது.

## இதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை

- ஒழுக்கு ஏற்படும் குழாயை திருத்துவதால், குறைந்தது ஒரு வருடத்திற்கு 120,000 லீட்டர் நீரை சேமிக்கலாம்.
- நீங்கள் ஒரு தடவை குளிக்கும் நேரத்தை இரண்டு நிமிடங்களால் குறைத்தால், ஒரு வருடத்திற்கு 131,400 லீட்டர் நீரை சேமிக்கலாம்.
- குறைந்த அளவான நீரை பயன்படுத்தும் கழிவறை உபகரணத்தை (Toilet) பயன் படுத்துவதால், ஒரு வருடத்திற்கு 500,000 லீட்டர் நீரை சேமிக்கலாம்.

நீரை சேமித்து நீங்களும் பயன்பெற்று நாட்டையும் வளம்பெற வைப்போம்.

■ ■ ■



# அழகிய பூஞ்செடிகள்



சந்திரசேகரி
segari@thaiveedu.com

## - வீட்டுத் தோட்டம் - 4

சென்ற இதழில், வளரும் தாவரம், நல்ல செழிப்பான முறையில் இருக்க எவ்வாறு கவனிக்க முடியும் என்பதைச் சற்று பார்த்தோம். இன்றைய இதழில் கிழங்குகள் எப்படி நிலத்திலிருந்து கிண்டி எடுத்துப் பாதுகாக்கப் படவேண்டும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

### கிண்டியெடுத்தல்:

படத்தில் காட்டியபடி, தோட்ட முள்ளு மண்வெட்டி அல்லது தட்டை மண்வெட்டி போன்ற உபகரணத்தால், தாவரத்திலிருந்து 1அடி தள்ளி 8அங் ஆழமாக நிலத்தினுள் ஊண்டிக் கிழங்குகளைத் தண்டோடு சேர்த்து கிளப்பவேண்டும். இதேபோன்று தாவரத்தைச்சுற்றி கிண்டியும் ஈற்றில் இறுதியாகத் தண்டினை ஒருபுறம் இலேசாக பிடித்து மேலே இழுப்பதுபோல, மறுபுறம் முள்ளு மண்வெட்டியை சிறிது அழுத்தி உயர்த்தி கிழங்குகளைத் தண்டோடு சேர்த்து கிளப்ப வேண்டும்.

தட்டை மண்வெட்டி உபயோகிக்கும் போது. கூடுதலாக இன்னும் 4 அங் தள்ளி நிலத்தைக் கிண்டவேண்டும், இல்லையேல், கிழங்குகள் வெட்டுப்படலாம். தட்டை அல்லது குளிவுள்ள மண்வெட்டி உபயோகிப்பதால் கிழங்கிலிருந்து வரும் திடமான வேர் வெட்டப்படலாம். எனவே முள்ளு மண்வெட்டி பாவிப்பது ஏற்றதாயிருக்கும். கிழங்கு வெட்டப்பட்டோ அல்லது கழுத்தோடு கிழங்கு வேறாக்கப்பட்டு இருப்பின், அவை முளை தரமாட்டா. கிழங்கள் கிண்டிய பின்னர், தண்டோடு சேர்த்துக் கிழங்குளை இலேசாகக் கழுவவேண்டும். ஒரு சில கிழங்குத் தொகுதியாக இருந்தால், தண்ணீர்க் குழாயைப் பிடித்துக் கழுவிவிடலாம், இல்லையேல் இதற்குரிய வலைப் பின்னலுள்ள மேசையில் வைத்து தண்ணீர் இலேசாக அடித்தால், மண்ணும் நீரும் கீழே போய் விடும். கீழேயுள்ள படத்தைக் கவனிக்கவும்.

### கிழங்குகள் பாதுகாப்பு

கிழங்குகள் வேறாக்கப்பட்டோ அல்லது கூட்டாகவோ காற்றோட்டமுள்ள பைகளில், கடதாசிப் பெட்டிகளில், அல்லது பிளாஸ்ரிக் பாத்திரங்களில் மரத்தூள்களோடு சேர்த்து போடப்பட்டு குளிருள்ள நிலக் கீழ் அறைகளில் அல்லது குளிருள்ள அறைகளில் வைக்கப்பட வேண்டும். பிளாஸ்ரிக் பெட்டி, கடதாசிப்பெட்டி, பலகையால் செய்த பெட்டி, எதுவாயிருந்தாலும் சரி, கிழங்குகளுக்கு வெளிச்சம் போகாத வகையில் இருக்கவேண்டும். கிழங்குகள் கிண்டப்பட்ட நிலையில் எப்படியிருந்ததோ, அப்படியே நீண்ட காலம் கிழங்குகள் எடுக்கும் வகையில் இருக்கவேண்டும். கிழங்குகள் சுருங்கும் வேளையில் ஈரத்தன்மையைக் கூட்ட வேண்டும். எனது அனுபவத்தில் கிழங்குகள் ஏறக்குறைய 45 பாகை பரன்னைற் இருக்கக்கூடிய இடத்தில் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும், இல்லையேல் கிழங்குகள் பாதிப்படையும். கிழங்குகள் இருக்கும் பைகளை மாதமொருமுறை அவதானிக்கவேண்டும். மார்கழி தொடக்கம் பங்குனிவரை கிழங்குகளைப் பார்வையிட்டு, அழுகியவற்றை அகற்றவேண்டும்.

■ ■ ■



முள்ளுமண்வெட்டி, தட்டைமண்வெட்டி



நிலமேல் 6 அங் விட்டுக் தாவரத் தண்டு



கிழங்குகள் கழுவும் இடம்



கிழங்குகள் வேறாக்கப்படுகின்றன



பாதுகாப்புக்காக பையில் வைக்கப்படுகின்றது.



மரத்தூள்களோடு பைகளில் வைக்கப்படுகின்றது.

### கிழங்குகள் பிரித்தல்

படத்தில் பல வகையான கிழங்குகள் பிரிக்கும் உபகரணங்கள் காட்டப் பட்டுள்ளன. ஏற்ற கருவியைக் கொண்டு தண்டின் சிறுபகுதியோடு சேர்த்து வேறாக்கவும். தண்டின் அடிப்பகுதியில் கூடுதலான நீர் இருந்தால் பாதுகாக்கும் வேளை, கிழங்குகள் அழுகநேரிடம். எனவே, கிழங்குகளில் ஓரளவு தண்ணீர்ப் பற்று காய்ந்தவுடன், கிழங்குகள் வேறாக்கிய பின்னர் பாதுகாப்பதற்காகச் சிறந்த வழிகளைத் தெரிவு செய்ய வேண்டும். அனுபவரீதியில் வசதியான முறை இதுவாகும்.

## வேப்பமரம் (Family Meliaceae)

**(Botanical Name:Azadirachta indica) (Eng.Name: Margosa tree)**



இலங்கையின் தனிநிகரான மரமாகும். கிராமத்தின் பொக்கிசமாக "கிராமத்தின் மருத்தகம்" எனச் சொல்வர். இலங்கை, இந்தியா, பர்மா, ஈரான், மலேசியா, இந்தனேசியா போன்ற வெப்பமான நாடுகளிலும் வளரும் மிகவும் பயனுள்ள ஒரு மரம்.. மிகவும் உயரமாக வளரக்கூடியது. வேறு பல இனங்கள் இருந்தபோதிலும், இலங்கையில் பெரிய இனம்தான் நிலைகொண்டு இருக்கிறது. அடிமரம் செங்குத்தானது. சுற்றளவு 4-6 அடிவரை கூட இருக்கும். அடிமரம் பலகைகளாக வெட்டப்பட்டு வீட்டு நிலைகள், கதவுகள், கட்டில், செய்வதற்கு பயன்படுத்தப்படும். மிகவும் வைரமுள்ளவை. நையீரியா நாட்டில் காணப்படும் இனம், மிகவும் குட்டையானவை. முஸ்லிம் மக்களுக்கு மரங்கள் நிழலாக இருப்பவை. மரம் எல்லாப் பருவ காலங்களிலும் இலைகள் கொட்டாது, பூக்களையுடையகாகக் காட்சி தருவது ஓர் ஆச்சரியம். இதன் மருத்துவப் பண்புகள் கருதி, இதனை ஒரு மூலிகை என்றும் வகைப் படுத்துவர். பூக்களிலிருந்து தயாரிக்கும் வேப்பம்பூவடகம், பச்சடி, ரசம் சிறப்பான உணவுவகைகள், மக்கள் விரும்பி உண்பார்கள். இலைகள் மருத்துவ ரீதியில் கிருமிகளை அழிக்கவல்லவை, கிருமிகளை அணுகவிடாது தடுப்பவை. சமயச் சடங்குகளில் பயன்படுத்துவார்கள். வெண்குஸ்டம், பித்தநோய், தோல்சம்பந்தமான நோய் போன்றவற்றைக் குணப்படுத்தும். தானியம் சேமித்து வைப்பதற்கு இலைகள் பாவிக்கப்படும். வித்திலிருந்து தயாரிக்கப்படும். வேப்பெண்ணெய் மருத்துவரீதியில் மிகவும் பயனுள்ளது. பட்டைகள் மூட்டு வியாதிகளுக்கு உதவுகின்றன.



# வீடு வாங்க விற்க

உங்கள் வருமானத்திற்கேற்ப எவ்வகையான வீடு வாங்குவதென அறிந்து
கொள்ள முதல் முறை வீடு வாங்குபவர்களின் சலுகைகள் பற்றி
அறிந்துகொள்ள இன்றே எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்

Prudential Properties Plus Brokerage
**Bus: 416.962.8113**
**Fax: 416.962.4615, Res: 416.502.8939**
552 Parliament Street, Toronto, ON, M4x 1P6



**Alfred Soosaipillai**
Broker

# மூளைக்குருதிக்கலன் விபத்து
# (STROKE or CEREBROVASCULR ACCIDANTS)

## இதயம் மலர்கிறது - 3



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiogapher -
senthil@thaiveedu.com

பாரிசவாதம், பக்கவாதம் என்று கூறப்படும் இந்நோய் மூளையில் ஏற்படும் குருதி விநியோகத் தடையால் உருவாகுவதாகும். எமது மூளை உடலில் உள்ள எல்லாவித தொழிற்பாடுகளையும் சீராக இயக்கிக் கொண்டு இருக்கின்றது. மூளையில் பலவித கட்டுப்பாட்டு மையங்கள் உண்டு. பார்வை மையம், செவிப்புலமையம், சுவாசமையம், பேச்சு மையம், இயக்கமையம், இருதயமையம் என்று ஒவ்வொரு தொழிற்பாட்டிற்கும் மூளையில் பலவிதமான கட்டுப்பாட்டு மையங்கள் உண்டு. இவை மூளையில் பரந்துபட்டுக் காணப்படுகின்றன.

மூளை சரியாகத் தொழிற்படும் பொழுது உடலின் ஒவ்வொரு பகுதியும் ஒருங்கிசைந்து ஒரு ஒழுங்கு முறையில் செயற்படக்கூடியதாக இருக்கும். இதற்குப் போதியளவு குருதி விநியோகம் அவசியம். மூளைக்கு மூளைநாடிகளினூடாக குருதி விநியோகிக்கப்படுகின்றது. இதயத்தில் உள்ள குருதிக்கலன்கள் அடைபடுவது போல் மூளையில் உள்ள குருதிக்கலன்களும் அடைபடலாம். சில சமயங்களில் குருதிக்குழாய்கள் வெடித்து மூளையினுள் குருதி பெருகலாம். மூளையின் எந்தப்பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டதோ (அதாவது குழாய் அடைத்தோ அல்லது வெடித்தோ குருதி விநியோகத்தைப் பெறவில்லையோ) அந்தப் பகுதியைப் பிரதிபலிக்கும் உடலின் அங்கம் அல்லது அதன் செயற்பாடு செயலிழக்கும்.

விபத்து ஏற்பட்ட மூளையின் பகுதி இடது காலை அசைக்கும் பகுதியாக இருந்தால் இடது கால் இயங்காமல் போய்விடும். இடது பக்கம் முழுவதையும் அசைக்கும் மூளைப் பகுதியாயின் இடது பக்கம் முழுவதும் செயலிழந்து கை, கால் அசைக்க முடியாமல் போய்விடும். பேச்சுப் பகுதியாக இருந்தால் கதைக்க முடியாமல் போய்விடும். குணங்குறிகள் பாதிக்கப்பட்ட மூளையின் பகுதிக்கு ஏற்ப வித்தியாசப்படலாம்.

### பாரிசவாதத்தின் குணங்குறிகள் என்ன?

- சடுதியாக ஒருபக்க கை அல்லது கால் அல்லது இரண்டும் விறைத்துப் போதல், பலமிழத்தல் அல்லது செயலிழத்தல்.
- சடுதியாக விறைப்பு ஏற்பட்டு வாய், முகம், ஒருபக்கம் இழுத்தல்.
- பேச்சில் தடுமாற்றம் கொன்னை தட்டுதல், மூச்செடுக்க கஷ்டப்படுதல்
- பார்வை மங்குதல் அல்லது குறைதல், அநேகமாக ஒருபக்கப் பார்வைப் பிரதேசம் அற்றுப்போதல்.
- சடுதியான பாரிய தலையிடி
- மயக்கம் அல்லது சமநிலை இழத்தல்
- தன்னை அறியாமல் மல, சலம் கழிதல், வீணீர் வடிதல்.

### எப்படி உதவலாம்?

- உடனே 9-1-1 அழைக்கவும்
- நோயாளி சுய நினைவுடன் இருந்தால் உடைகளை இழக்கி தலையும் தோள்ளும் சற்று உயரமாக இருக்கும்படி நிமிர்த்திக் கிடத்தவும்.
- சுயநினைவற்ற நோயாளியினது, சுவாசம், இதயம் இரண்டும் தொழிற்படுமாயின் அவரைப் பக்கவாட்டில் கிடத்தவும். அப்பொழுது சுவாசவழி அடைபடாது, சுவாசமும் இதயத் தொழிற்பாடும் இல்லையாயின் முதலுதவி தெரிந்திருப்பின் முதலுதவி செய்யவும்.
- E.M.S. வரும் வரை நோயாளியை கண்காணிக்கவும்.
- வாயினால் ஒன்றும் குடிக்கக் கொடுத்தல் ஆகாது.

பாரிசவாதம் சில சமயங்களில் தற்காலிகமாக ஏற்பட்டு பின்பு குணமடைவதும் உண்டு. மூளைக்குச் செல்லும் குருதிக் குழாய்களினுள் கொழுப்புப் படிவினாலோ அல்லது குருதிக் கட்டி உருவாகியுள்ளதாலோ தற்காலிகமாக குருதி விநியோகம் தடைப்படலாம். இது தற்காலிக பாரிசவாதத்தை (TRANSIENT ISCHEMIC ATTACK-TIA) ஏற்படுத்தும். அனேகமாகப் பாரிசவாதம் முன்னெச்சரிக்கையுடன் ஏற்படுவதுண்டு. தற்காலிகமாகப் பாரிசவாதம் ஏற்பட்டுக்குணமாகிய ஒருவருக்கு நிரந்தரமாகப் பாரிசவாதம் வரக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. தற்காலிக பாரிசவாதத்தை TIA என்று கூறுவர். இந்த TIA முதலாவது எச்சரிக்கைச் சமிக்ஞையாகும்.

பாரிசவாதம் ஏற்பட்டால் உடனே நேரத்தைக் குறித்துக் கொள்ளவும். விரைவாகத் தொழிற்பட்டு EMS வண்டியை வரவழைத்து விட்டால் அவர்கள் நோயாளிக்கும் குருதிக் கட்டி கரைக்கும் மருந்துகளை ஏற்றி அதனைக் கரைக்க முயல்வார்கள். அல்லது வைத்தியசாலையில் இதனைச் செய்வார்கள். குணங்குறிகள் தோன்றி 3 மணித்தியால காலப்பகுதிக்குள் தான் குருதிக்கட்டி உடைக்கும் சிகிச்சை முறைகளைக் கையாள்வார்கள். இது ஒரு பொது விதி. வைத்தியர்கள் தான் சரியான தீர்வை எடுக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

இருதயத்திற்கு குருதி விநியோகம் செய்யும் குருதிக் கலனில் விபத்து ஏற்படுவதனால் மார்படைப்பு (HEART ATTACK) ஏற்படுகின்றது. அதேபோல் மூளைக்குக் குருதி விநியோகம் செய்யும் குருதிக்கலனில் விபத்து ஏற்படுவதனால் பாரிசவாதம் (STROKE) ஏற்படுகின்றது.

வாதங்கள் பலவகைப்படும். மூட்டுவாதம், முடக்குவாதம், குதிவாதம், மொளிவாதம் என்று பல்வேறுபட்ட காரணங்களால் இவை தோன்றுகின்றன. தொண்டை, சிறுநீரகங்கள் என்பனவற்றில் ஏற்படும் நாட்பட்ட கிருமித் தொற்றுக்கள், எலும்புகள் தேய்தல், குருதியில் யூரியா உப்பு அதிகரித்தல், தன்னினமறியாப் பிறபொருளெதிரிகளின் தாக்கம் (Auto immune Disease) என்று பல காரணங்களை மேலும் கூறலாம்.

■ ■ ■

முதலுதவி கற்பதற்கு

**Dr.Kandiah Senthilnathan**
(Registered Medical Officer - SLMC)
Echo-cardiographer - Canada,
First Aid & CPR Instructor
(Certified in Canada)

**647-801-9252,**

**416-502-9252**

# ஈரானின் எரிவாயுக் கரங்களுக்குள்...

மீறல்களைக் கண்டிப்பதன் காரணமாக
**4ம் பக்கத் தொடர்ச்சி...**

இலங்கை ஈரானிடம் ஓடிவிட்டது என்ற கருத்து பலரிடமும் இருப்பதனைக் காண்கின்றோம். சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடமிருந்து பெறப்படும் உதவிகளுடன் ஈரானிடமிருந்தும் பெறப்படும் உதவியும் ஈழப்போருக்கு கைகொடுக்கும் என்று இலங்கை எண்ணியிருக்கின்றது.

உதவி வழங்கும் நாடுகளின் கட்டுப்பாடுகள் பயமுறுத்தல்கள் இடம்பெறும் வேளையில் எண்பது சதவீதத்திற்கு மேற்பட்ட சிங்கள மக்கள் விரும்புகின்ற போரை (அண்மையில் எடுத்த ஒரு கணக்கெடுப்பு) நடத்த வேண்டிய தேவை இன்றைய இலங்கை அரசுக்கு இருக்கின்றது. அதேவேளை இலங்கையின் பொருளாதாரம், பணவீக்கம் என்பனவற்றை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாத அபாயநிலையும் இலங்கைக்கு உள்ளது. ஒருவேளை இலங்கை வடஇலங்கைப் போரில் தோற்றுப் போகின்ற போது புதிய சமாதான நடுவரைத் தேடிப் பிடிக்கின்ற தேவையும் இலங்கைக்கு இருக்கின்றது. இந்த நிலையில் இலங்கை ஈரானின் உதவியினை நாடியது.

இலங்கை விடயத்தில் ஐரோப்பிய நாடுகளைப் பயன்படுத்தியும் ஜப்பானைப் பயன்படுத்தியும் சமாதானத்தை ஏற்படுத்த முடியாத இந்தியாவுக்கு ஈரானின் வருகை ஆறுதலாக அமைந்திருக்கின்றது -ஈரான் இந்தியாவால் வலுக்கட்டாயமாக இலங்கைக்கு அனுப்பப்பட்டதா என்ற ஊகமும் உள்ளது. இலங்கைப் போர்ப் பிரதேசமாக இருப்பதும் அதனால் ஏனைய நாடுகள் தங்கள் தலைகளை நுழைப்பதனையும் இந்தியா விரும்பாதிருப்பதற்கு இலங்கைக்கு ஆயுத உதவிகளையும் பொருளாதார மென் கடன் வசதிகளையும் வழங்கியிருக்கும் அதேவேளை எவ்வாறு ஈரானையும் கடன் வழங்க இந்தியா அனுமதித்தது என்ற கருத்தும் சிந்தனைக்குரியது.

இலங்கை அரசின் நம்பிக்கையினைப் பெறுவதற்காக அதனுள் வருகின்ற எல்லா நாடுகளும் உதவிகளை முதலில் வழங்கியிருந்தன என்பதும் அதன்மூலமே இலங்கையினை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்றன என்பதும் வெளிப்படை. இவ்விதம் ஈரானின் வருகையும் அமைந்திருக்கின்றது.

இலங்கை மீது கட்டுப்பாட்டினை போட நினைக்கின்ற இந்தியாவுக்கு ஈரான் என்ற ஒரு ஆயுதம் தற்போது கிடைத்திருக்கின்றது. ஈரான் போருக்கு உதவிசெய்யும் அதேவேளையில் சமாதானத்திற்காகத்தான் முன்வருவதாகவும் தெரிவித்திருக்கிறது. இலங்கையில் முதலிடுகின்ற இந்தியாவுக்கு ஈரானின் வருகையும் அது உதவவிருக்கும் சமாதான முன்னெடுப்பும் தேவையாகவே இருக்கிறது.

இலங்கை ஈரானைச் சமாதான வழிக்காகவா அல்லது போருக்காகவா உள்விழுங்க முனைகிறது என்பது வாதப்பிரதிவாதத்தினுள் இருந்தாலும் இரண்டு நாடுகளும் பிரதேச ஒருமைப்பாட்டுக்கு முக்கியமளிப்பதனையும் அரசியல் ஆலோசனை வழங்குவதனையும் அபிவிருத்தி உதவியினை முக்கியப்படுத்துவதனூடாக சமாதானத்தையும், அரசியல் உறுதிப்பாட்டினையும் பரஸ்பரம் இருநாடுகளிலும் பேணுவதிலேயே தாம் கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்திருப்பது இலங்கை ஐ.நாவில் தனக்காக அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதனை ஈரான் விரும்புகின்ற அதேவேளை இலங்கையின் அபிலாசையினை ஈரான் பூர்த்தி செய்வதாக தெரிவித்திருப்பதாகவும் கொள்ளலாம்.

ஈரானின் தென்னாசியப்பயணம் இந்தியாவுக்கு எவ்விதம் பொருளாதார உதவியாக அமையப்போகிறதோ அதற்கு மேலாக இலங்கை அரசு மேலைத்தேய முதலாளித்துவ அரசுகளிலிருந்து விலகியிருப்பதற் உதவி செய்வதன் மூலம் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளுடன் போரை நடாத்தக் கூடிய உடனடி வாய்ப்பினைக் கொடுத்திருந்தாலும் ஈரானின் வருகை ஈழப்போர் நலிவடையச் செய்து சமாதானப் பாதை தேட வேண்டியதொரு சூழலுக்கு இலங்கையினைச் சர்வசேத்திடமிருந்து தனிமைப்படுத்தும் என்றே கூற முடிகிறது.

■ ■ ■

ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER   Everything Factory Direct Prices



Sales - Service - Installations
Custom Made
Wood & Vinyl Shutters: California Style Shutters, Plantation Style Shutters, Traditional Style Shutters, Arches
Blinds: Vertical Blinds, Venetian Blinds, Wood Blinds, Bamboo Shades, Roller Shades, And More
Draperies: Swags, Sheers, Valance, Curtains, And More
(We Do Any Colour Of Paint & Stain)

உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்



Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:
தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

OFFICE: 416.321.6969

வீடு, வியாபார நிலையங்கள்

## வாங்க விற்க

ஜூடி
ஞானேந்திரன்



Sales Representative
CELL: 416.629.9797

ஞானேந்திரன்
நரசிங்கம்



Sales Representative
CELL: 416.937.8090

HOMELIFE
HIGHER STANDARDS

### RESIDENCIAL PROPERTIES



**33 CANDLEBROOK CRES, Warden & Finch**

$599,000

- Gorgeous 4 Bdrm Home, 2800 sqft
- Two apartments in BSMT
- Close to all amenities
- Rare Opportunity don't miss it.



**FINCH & STAINES**

$399,900

- Spotless 4 Yrs Old,4 Bdrms,3 Baths
- 9' Ceilings.Gleaming Hwd Fl.Open Concept.
- Dream Kit W Stainless Steel Appliances & Breakfast Bar.
- Min To Schools,Ttc& Rouge Park.



**BRIMLEY & STEELES**

$578,800

- Immaculate&Well Maint. "Monarch" Built Executive Hm
- 9' Ceilings & Columns *Over $40K Upgds
- Gorgeous Living Rm W/17'Cathedral Ceilings
- Steps To Park,Ttc,School & All Amenities

### COMMERCIAL PROPERTIES



**"Market East"**
**Markham & Steeles**

Last Phase of 20 Restaurant and Retail Units. Some of the Units are available.

More details **Call Gnani.**

**STRIP PLAZA FOR LEASE ON LAWRENCE ROAD**

Call GNANI

- Fully Renovated 4000 sqft Retail Strip Plaza
- Accross LCBO Store & High Rise Apt. Building.
- Bright, Clean Retail Space With Prominant Exposure.



**"Sitara"**

The largest South Asian Indoor Mall in North America

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3
*EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED



MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE

- No Money Down Programs
- Credit பிரச்சிளை உள்ளவர்கள் Credit இல்லாதவர்கள்
  Late Payment, Bankruptcy and R9's - No Problem
- புதிய குடிவரவாளர்களுக்கும், சுய தொழில் வாய்ப்புள்ளவர்களுக்கும் Mortgage ஒழுங்குகள் செய்து தரப்படும்
- New Mortgages, Refinances, Switches - (Switch for free) & Pre - Approval
- தமிழில் இலவச ஆலோசனைகள், கடைசி நிமிடக் கட்டணம் இல்லை
- Fast Approvals & Closings
- 45 வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டி வீதம் ஒழுங்கு செய்து தரப்படும்
- உங்களது வீட்டுக்கே வந்து Mortgage செய்து தரப்படும்
- உங்கள் திருப்தியே எங்கள் வெற்றி

digi Media Creations - 416.467.4952

# MORTGAGE
# MORTGAGE
# MORTGAGE

ராம் கிருஷ்
**RAM KRISH**
Senior Mortgage Consultant
The Mortgage Alliance company of Canada
Head Office: 2005 Sheppard Ave. E, Suite 200,
Toronto, ON M2J 5B4
Phone: 416.499.5454, Fax: 416.499.8366



**TEL: 416.526.4996**

NATIONAL BANK OF CANADA · BRIDGEWATER financial services ltd. · FirstLine MORTGAGES · Scotiabank · FIRST NATIONAL · TD · cervus · BMO

# ஊர்திப் பாதை (Driveway) பராமரிப்பு



வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -
vela@thaiveedu.com


வீடும் விடியலும் - 27

பனிக்காலத்தில் பட்ட அவஸ்தைகள் முடிந்து மெதுவாக வசந்தகாலத்தின் ஊடாக கோடை காலத்தை நோக்கி பயணிக்க ஆரம்பித்து விட்டோம். குறிப்பாக வீட்டுரிமையாளர்கள் இத்தகைய காலநிலையை பெருத்த அங்கலாய்ப்புடன் காத்திருக்கிறார்கள் என்பதனை HOME DEPOT, GARDEN CENTRE போன்ற இடங்களில் மக்கள் வெள்ளம் குவிந்திருப்பதில் இருந்து அறிய முடியும். அந்த வகையில் கோடைகாலத்தில் நாம் வீட்டிற்கு செய்யக்கூடிய அல்லது செய்ய வேண்டிய பராமரிப்பு அம்சங்கள் பற்றி தொடர்ந்து வரும் சில கட்டுரைகளில் ஆராய்வோம்.

## ஊர்திப் பாதையைச் சுத்தம் செய்தலும் பராமரித்தலும் Driveway Cleaning & Maintenance:

பொதுவாகக் கூறுவதானால் சுமார் 75%ற்கு மேலானவர்கள் Driveway பராமரிப்பைப் பற்றிச் சிந்திப்பதில்லை. அதில் பலர் அதன் முக்கியத்துவத்தை அறியாமல் இருப்பதே இதற்குக் காரணமாகும். குறிப்பாக கனடாவில் உறைபனியின் கொடுமையில் இருந்து தப்பிக் கொள்வதற்காக எல்லோரும் மிகத் தாராளமாக உப்பு போடுகிறோம். இந்த உப்பு எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதனை நாம் பயணிக்கும் தெருக்களில் உள்ள கிடங்குகள் மூலம் அறிந்து கொள்ள முடியும். அத்தகைய பாதிப்புக்கள் தான் எமது ஊர்திப் பாதைகளிலும் போடப்பட்ட உப்பு மெதுவாக அரித்து அரித்து பாரிய பாதிப்புக்களைக் காலப்போக்கிலே ஏற்படுத்துகின்றது.

பொதுவாக 4 விதமான ஊர்திப் பாதைகளைக் காணக்கூடியதாக உள்ளது.

- Asphalt Driveway
- Interlock Driveway
- Concrete Driveway
- Stamped Concrete Driveway

இந்த வகையான ஊர்திப் பாதைகளில் Interlock, Concrete Drivewayகளுக்கு உப்பினைப் பாவிக்கவே கூடாது. அவற்றுக்கு உகந்த சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட "Ice Melter"ஐப் பாவிப்பதுதான் பொருத்தமானது. Costco, Canadian Tire போன்ற இடங்களில் பனிக்காலங்களில் இவற்றினை வாங்கிப் பாவிக்கமுடியும். சாதாரண உப்பை விட சற்று விலை அதிகமாக இருந்தாலும் அதனால் ஏற்படும் பலன் அதிகம் என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

வசந்தகாலத்தினைக் கண்டவுடன் முதலாவதகச் செய்ய வேண்டிய வேலை ஊர்திப் பாதையை நன்றாகக் கழுவிவிடுதல். எமது கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் போடப்பட்ட உப்பு அல்லது Ice Melter போன்றவை மேற்பகுதியில் இருந்தும் வெடிப்புகளில் இருந்தும் அரிப்பதைத் தடுப்பதற்கு "Power Washer" மூலம் நன்றாகக் கழுவுதல் நன்று. பெய்யும் மழைக்குக் கழுவுப்படும் என நினைப்பது தவறானது.







## ஊர்திப் பாதைகளை பாதிப் படையச் செய்யும் காரணிகள்.

- உப்பு
- கூடிக்குறையும் காலநிலை மாற்றம்
- வாகனங்களில் இருந்து ஒழுகும் Engine oil, Transmission oil, Gasoline etc…
- பராமரிப்பின்மை

## பராமரிப்பு

எத்தகைய ஊர்திப் பாதைகளாக இருந்தாலும் 2-4 வருடங்களுக்கு ஒருமுறை அவற்றினை முறைப்படி புறப்பூச்சு (Seal Coating) செய்ய வேண்டியது மிக அவசியமானது. புதிய Asphalt Driveway ஆக இருந்தால் 3 மாதத்தில் புறப்பூச்சு செய்தல் வேண்டும். பொதுவாகக் காணப்படும் Asphalt Drivewayகளில் காணப்படும் சிறு பள்ளங்களையோ வெடிப்புகளையோ அடைத்துவிட்டு புறப்பூச்சு செய்தால் ஊர்திப் பாதைகள் பார்ப்பதற்கு அழகாக இருப்பது மட்டுமன்று அதற்குரிய வாழ்க்கைக்காலமும் அதிகரிக்கும்.

முதலீடு செய்வது மட்டுமல்ல செய்த முதலீட்டை முறையாக பாதுகாக்காது விட்டால் ஏற்படப்போவது 'முதல் நஷ்டம்" என்பதை பலரும் உணர்ந்து கொள்வதில்லை அல்லது அறிந்து கொள்ள முயற்சிப்பதில்லை என்பது துரதிஷ்டவசமானது. (Regular driveway maintenance is needed to prevent cracks, chuckholes, or any type of erosion that may occur. Instead of spending a ton of money on a driveway repair company, learn how to do-it-yourself.)

Asphalt Drivewayகளை புறப்பூச்சு செய்வதற்கான புறப்பூச்சுக்களை சாதாரண Home Depot போன்ற கட்டிட நிர்மாணக் கடைகளில் வாங்கி நாங்களே செய்து கொள்ளலாம். யூன் - ஆகஸ்ட் மாதங்களில் வெப்பம் கூடிய காலப்பகுதியில் இவற்றினைச் செய்வது பொருத்தமானது. Concrete, Interlock Drivewayகளை Seal செய்ய உரிய துறை சார் வல்லுனர்களை நாடுதல் சாலச் சிறந்தது. அல்லது அதற்கு சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட மூலப்பொருட்களை உரிய இடங்களில் பெற்று நீங்களே செய்து கொள்ளலாம். குறிப்பாக இத்தகைய மூலப்பொருட்களை Spray பண்ணுவதுதான் சிறந்தது என்பதால் அதற்குரிய உபகரணங்களில் முதலீடு செய்வது சரியானதா என்பதை சிந்தித்துச் செயற்படவும்.

குறிப்பாக அளவுக்கதிகமாக வருடாவருடம் புறப்பூச்சு செய்ய முற்பட்டால் அதனாலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. அதாவது அளவுக்கு அதிகமான புறப்பூச்சில் வெடிப்புக்கள் ஏற்பட்டு ஊர்திப் பாதைகளின் அழகு கெட்டுவிடும் என்பதையும் நினைவில் வைத்திருக்கவும். பொதுவாக 2 - 4 வருடத்திற்கு ஒருமுறை புறப்பூச்சு செய்வது போதுமானது என்பதே அத்தகைய மூலப் பொருட்களை உற்பத்தி செய்பவர்களது சிபார்சு ஆகும்.

## புறப்பூச்சு செய்வதால் ஏற்படும் பலாபலன்கள்

- ஆயுட்காலம் விரிவுபடுத்தப்படும்
- உண்மையான நிறம் பாதுகாக்கப்படும்
- எப்போதும் அழகாக இருக்கும்.
- ஏற்படக்கூடிய ஒழுக்குகளில் இருந்து பாதுகாக்கும்
- சுத்தமாக வைத்திருத்தல் மிகச் சுலபம்
- செலவிடும் சிறு தொகையால் நீண்ட காலத்தில் ஏற்படும் பலனின் அளவு மிக அதிகமானது.
- Seal coating your asphalt will help ward off the elements and extend the Beauty and Longevity of your Asphalt Driveway!!!
- A Smoother Driveway is easier to keep clean!!
- Seal your Driveway when it is new , to keep it looking new!
- Fill all cracks and holes to prevent water from getting into the foundation or base to prolong decay!

"An ounce of prevention is worth a pound of cure......"

■ ■ ■










Buy or sell any properties through us, and WIN this brand new BMW and more..




Justin William
Broker
Cell: 416.803.7344




Wilton Gnanapragasam
Sales Representative
Cell: 416.554.4747




Ravi Raveendran
Broker
Cell: 416.817.8479




- 3 Bedroom House In Markham
- Finished Basement
- Stainless Steel Appliances
- Great location
- Lots Of Upgrades....




- Money Making Business
- Lotto Comm Approx $1500/mth
- 4 Business under one roof
- Low Rent
- Potential extra income from bsmt




- Busy Variety Store in a busy plaza
- Lotto Comm. Approx $ 1800/mth
- Extra income from moneygram
- Low Rent
- Do not miss this opportunity




- 2 Bedroom Luxury Condo
- 24 hrs gate security
- Close to mall, medical center etc.
- Well maintained building.
- Great starter home....

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*1711 McCowan Rd, Suite 206, Scarborough, On. **Office: 416.321.6969**

This is not intend to solicit properties currently listed for sale

*Independently owned and operated



# எமக்கென்று ஒரு தனிக்குழல்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

**416.438.1688**

Fax: 416.438.1612
2250 Midland Ave., #3
(South of Sheppard)
Unit 3, Scarborough, ON M1P 4R9

RBC Financial Group

# கருத்தரித்த பெண்களுக்கு ஒரு எச்சரிக்கை!

- சிவா சுப்ரா -
sivasubra@thaiveedu.com

கருத்தரிக்கின்ற போது நிகழும் ஓர் அனர்த்தம் பற்றி கடந்த இதழில் பார்த்தோம். கருத்தரிக்கின்ற போது நிகழ்கின்ற இன்னுமோர் அனர்த்தம் பற்றிய விபரங்களை தாய்மை அடைய விரும்புகின்ற பெண்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

கருத்தரித்த பெண்கள் "அற்ககோல்" அருந்துவதால் கர்ப்பத்தில் இருக்கின்ற சிசு மிக மோசமான பாதிப்புக்குள்ளாகின்றது என்பதை அனேகமான பெண்கள் அறிந்திருப்பதில்லை. இவ்விதம் கர்ப்பிணிப் பெண்கள் தாம் கருத்தரித்திருக்கின்ற போது எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமான அளவு அற்ககோலை தாய்மார்கள் அருந்துகின்றார்களோ, அந்தளவுக்கு அதிகமாகக் கர்ப்பப்பையில் உள்ள குழந்தைகள் உடல் ரீதியாகவும், மனஇயல் ரீதியாகவும் பெரும் பாதிப்புக்குள் உள்ளாகின்றன. மூளை வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது.

அற்ககோல் அருந்தி சிசுவுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு Fetal Alcohol Syndrome (FAS) என்று அழைக்கப்படுகின்றது.

> **கனடாவில் பிறக்கின்ற குழந்தைகளில் ஆயிரத்திற்கு 1 முதல் 3 குழந்தைகள் இவ்விதமான *Fetal Alcohol Sprectrum Disorder (FASD)*க்கு உள்ளாகின்றனர். இதன் பாதிப்பினை இவர்கள் தமது வாழ்நாள் முழுவதுக்கும் அனுபவிக்க வேண்டி இருக்கும். இவ்விதமான *Fetal Alcohol Sprectrum Disorder (FASD)* பாதிப்புக்கு உள்ளாகியகுழந்தைகள், வளர்ந்த பின், தமது தாயிடம் நட்ட ஈடு கோரி வழக்குத் தொடர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.**



இந்தக்குழந்தைகள் வயதுக்கு வந்ததின் பின்னரும் தமது வயதுக்குரிய நடத்தைகள் எதுவும் இன்றி சிறு குழந்தைகள் போல நடந்து கொள்ளுகின்றன. உடல் உறுப்புகளின் செயல்பாட்டில் குறைபாடு நிகழ்ந்திருக்கும். உடல் அவயவங்கள் முழுமையாக வளர்ச்சியடையாமல் குறைபாடுடன் இருக்கலாம். வளர்ச்சி குன்றிய விரல்கள், கைகள், கால்கள் என்று இவர்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள். கற்பது என்பது இவர்களுக்கு சிக்கலான ஒரு விடயமாக இருக்கும். இவர்களுக்கு ஞாபக சக்தி வெகு வெகு குறைவாக இருக்கும். எத்தனை தரம் ஒன்றைச் சொன்னாலும் மண்டையில் ஏறாது. இதயத்திலும் பாதிப்பு ஏற்பட்டிருக்கும்.

கனடாவில் பிறக்கின்ற குழந்தைகளில் ஆயிரத்திற்கு 1 முதல் 3 குழந்தைகள் இவ்விதமான Fetal Alcohol Sprectrum Disorder (FASD)க்கு உள்ளாகின்றனர். இதன் பாதிப்பினை இவர்கள் தமது வாழ்நாள் முழுவதுக்கும் அனுபவிக்க வேண்டி இருக்கும். இவ்விதமான Fetal Alcohol Sprectrum Disorder (FASD) பாதிப்புக்கு உள்ளாகியவர்கள் தமது பின் நாட்களில் வேறு பல சிக்கலான நிகழ்வுகளுடன் தொடர்பாக இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. பாடசாலைக்கு

13ம் பக்கம் பார்க்க...





# YOU ARE THE LEADER

OREA Trained Real Estate Leader




Dixie / Peter Robertson




Mclaughlin / Williams Parkway




Middlefield / Finch

## MANGA ARUNASALAM

Real Estate Broker

**HomeLife Metro Realty Inc. Brokerage**
Independently Owned & Operated
**5200 Finch Avenue East, Suite 206**
**Scarborough, ON M1S 4Z4**

**CELL:** (416) 816 8775 **TEL:** (416) 293 5093
**RES:** (905) 944 9604 **FAX:** (416) 293 5237

# குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
RBC Insurance
Canada Life
Manulife Financial



## RESP SPECIAL!

**இம்மாதம் RESP செய்பவர்களுக்கு**
**3 விசேட சலுகைகள் உண்டு!**

**- Start from $25**

**தனா**
**மாணிக்கவாசகர்**
*Broker*

## Life Insurance

**Critical Illness Insurance**

**Home Equity Line of Credit**

## Disability Insurance

## Mortgage Insurance

**RRSP - Start from $25**
**Loan approval within 24hrs - Bad credit no problem**
**RESP - Start from $25**
**(20%-40% Government Grant + 15% Company Bonus)**



**INSURANCE SERVICE INC.**
**Cell: 416-728-5772**
Business: 416-290-1200

# கருத்தரித்த பெண்...

11ம் பக்கத் தொடர்ச்சி...

தொடர்ந்து செல்லாமல் பாடசாலையை விட்டு முன் கூட்டியே வெளியேறி விடுவது, அற்ககோல் மற்றும் போதைப் பொருட்களின் பழக்க வழக்கத்திற்கு உள்ளாவது, வீட்டை விட்டு வெளியேறி மறுபடியும் வீட்டுக்குத் திரும்பாமல், தெருக்களில் வசிக்கத் தொடங்குவது (Homeless People ஆவது), சட்டத்தைப் பற்றி எந்த பிரக்ஞையும் இன்றி அதற்கு முரணான வழிகளில் செயல்படுவது என்று பல குளறுபடிகளான நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடுவது அறியப்பட்டுள்ளது.

இவ்வளவுக்கும் காரணம் இவர்கள் கர்ப்பப்பையில் சிசுவாக இருக்கின்றபோது, இவர்களுடைய தாய் மது அருந்தியதே ஆகும். எதிர்காலத்தில் இத்தகை பாதிப்புக்குள்ளாகிய குழந்தைகள், வளர்ந்த பின், தமது தாயிடம் நட்ட ஈடு கோரி வழக்குத் தொடரக் கூடிய வகையில் சட்டங்கள் வந்தால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

**அற்ககோல் மட்டுமல்ல கர்ப்பிணிப் பெண்கள் புகைப்பதினாலும் கர்ப்பத்தில் உள்ள சிசு மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றது.**

தாய்மை அடைந்த தாய்மார்கள் இந்த அற்ககோல் மற்றும் புகைத்தல் தொடர்பாக மட்டுமா கவனமாக இருக்கவேண்டும். இல்லை. இன்னும் பல விடயங்களில் இவர்கள் அதிக அக்கறையோடு இருக்க வேண்டும். தாம் உண்ணுகின்ற உணவு தொடர்பாகவும் இவர்கள் மிக கவனமாக இருப்பது மிக அவசியம். தாய்மை அடைந்த தாய்மார் தமக்கு வழமையாகத் தேவைப்படுகின்ற புரத உணவிலும் பார்க்க மேலதிக புரத உணவை உள்ளெடுக்க வேண்டும். ஓர் ஆரோக்கியமான, பூரண வளர்ச்சியடைந்த சிசுவில் 925 கிராம் புரதம் இருக்கும். இந்த சிசு அண்ணளவாக 280 நாட்கள் கர்ப்பப்பையில் தங்கியிருக்கும். ஆகவே நாள் ஒன்றுக்கு 3.3 கிராம் தேவைப்படும் என்று ஒரு கணக்கு சொல்லலாம். ஆனால் உண்மை அப்படி அல்ல. கருத்தரித்த முதல் மாதம் தாய் மேலதிகமாக .6 கிராம் புரதத்தை மேலதிகமாக உள்ளெடுத்தால் போதுமானது. அதே நேரம் இந்த தாய் கருத்தரித்து முப்பதாவது வாரம் 6.1 கிராம் புரதத்தை மேலதிகமாக உள்ளெடுக்க வேண்டும். கருத்தரித்த தாயின் வயது, நிறை என்பனவற்றைக் கருத்திற் கொண்டு, அந்தத் தாய் எவ்வளவு புரதத்தை உள்ளெடுக்க வேண்டும் என்பதை ஒரு சத்துணவியல் நிபுணரே தீர்மானிக்க முடியும்.

எனவே கர்ப்பிணித் தாய்மார்களே, உங்கள் குடும்ப வைத்தியரின் உதவியுடன் நீங்கள் ஒரு சத்துணவியல் நிபுணரை சந்திப்பது மிக முக்கியமானது.

நம்மவர்களுக்கு ஒரு வழக்கம் உள்ளது. உண்மையில் இது நம்மவர்களுக்கு உரிய வழக்கம் மட்டும் அல்ல. தாய்மை அடைந்த தாய் இரண்டு உயிரை சுமக்கின்றாள் எனவே அவள் இரண்டு மடங்காக சாப்பிட வேண்டும் என்பது தான் இந்த தவறான அபிப்பிராயம். உலகம் முழுவதும் இத்தகையஒரு எண்ணம் உள்ளது.

உண்மை என்ன?

தாய்மை அடைந்த தாய் 140 இறாத்தல் என்று வைத்துக் கொண்டால் அவருடைய வயிற்றில் வளரும் குழந்தை சராசரியாக ஏழு இறாத்தல் நிறையுடையதாக இருக்கும். எனவே இந்த தாய் மேலதிகமாக சாப்பிட வேண்டியது தனது மேலதிக ஏழு இறாத்தல் நிறைக்கு மட்டுமே. தாய்மை அடைந்த பெண்கள் அளவுக்கு அதிகமான புரதத்தை உள்ளெடுக்கின்ற போதும், அளவுக்கு குறைவான அளவு புரதத்தை உள்ளெடுக்கின்ற போதும் கர்ப்பத்தில் உள்ள சிசு பாதிப்புக்கு உள்ளாகின்றது.

■ ■ ■

# Autism குழந்தைகள்...

15ம் பக்கத் தொடர்ச்சி...

தேவை என்பதை சுட்டிக்காட்டி நிற்கின்றது. ஏனவே Autism பற்றியும் இதனால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை அல்லது பெற்றோர்களை எப்படி கையாளுவது என்பது பற்றியும் நாம் கட்டாயம் அறிந்து வைத்திருக்க வேண்டிய நிலையில் தள்ளப்பட்டுள்ளோம்.

இந்தக் குறைபாட்டால் பாதிப்படைந்திருக்கும் குடும்பங்களின் வீட்டில் எப்போதும் பதற்றமும், பிரச்சினையும் என்று ஒரு நிம்மதி இல்லாத நிலை காணப்படும். ஒரு பெற்றோர் மட்டுமே வேலைக்கு செல்பவராகவும் மற்றவர் இக்குழந்தையை பராமரிப்பவராகவும் இருப்பார்கள். அத்துடன் ஒரு சில குடும்பங்கள் தமது பிரச்சினைகளையோ அல்லது தமது குழந்தையின் இக் குறைபாட்டையோ சமுதாயத்திற்கு மூடி மறைத்து வாழ்கின்றார்கள். இதற்கு எமது சமுதாயக் கட்டமைப்பும் ஒரு காரணமாக கருதப்பட்டாலும் சம்பந்தப்பட்ட பெற்றோர்களே முழுப் பொறுப்பையும் எற்கவேண்டும். இப்படியான குடும்பங்களுக்கு சரியான ஆலோசனை வழங்கி சமுதாயத்திற்கிடையேயான நெருக்கத்தை அதிகரிக்க வேண்டும்.

Autistic குழந்தைகள் ஒரு குறிப்பிட்ட கல்வியிலோ அல்லது ஏதாவது ஒரு துறையிலோ அதீத திறமைமிக்கவர்களாக காணப்படுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். இவர்களிடம் எவ்வகையான திறமைகள் இருக்கின்றன என்று அறிந்து அதற்குரிய பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்களை அத்துறையில் வல்லுனர்களாக்கலாம். இதற்குரிய சரியான ஆலோசனைகளையும் ஆதரவுகளையும் பல குடும்பங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன.

இது போன்ற எத்தனையோ வழிகளில் இந்த Autism குடும்பங்கள் உதவிகளுக்காக ஏங்கி நிற்கின்றன.

இவர்களின் தேவைகளை சரியாக பயன்படுத்தி அவர்களுக்கான ஒரு வலை அமைப்பை உருவாக்கி உதவிகளை வழங்குவதன் மூலம் ஒரு எதிர்கால சமுதாயத்தின் இருண்ட காலங்களுக்கு ஒளி கொடுக்க எம்மால் முடியும்.

நாம் ஒவ்வொருவரும் Autism பற்றிய பூரண அறிவுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ தயாராகுவது இன்றைய காலகட்டத்தின் அவசிய மற்றும் அவசர தேவையாக இருக்கின்றது. இதற்கு எமக்கென்றொரு அமைப்பு இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம். ஆனால், ஒவ்வொருவரது ஆரோக்கியமான உதவிகளையும் Autism குடும்பங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன.

வைத்தியர்கள், வழக்கறிஞர்கள், சமூக சேவையில் ஈடுபடுவோர்கள், மாணவர்கள் என்று மட்டுமல்லாமல் சமூக அமைப்புகள், மன்றங்கள் கோவில்கள் என்று எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு வலுவான ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை கட்டியெழுப்புவோம்.

- Autism குழந்தைகளின் தேவைகளை அறிவோம்.
- சமுதாயத்தில் உள்ள யாவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்.
- முடிந்த உதவிகளை, ஆலோசனைகளை வழங்குவோம்.

International studies indicates In Children:
Leukemia affects 1 in 25,000
Muscular Dystrophy affects 1 in 20,000
Pediatric AIDS affects 1 in 8000
Juvenile Diabetes affects 1 in 500
Autism affects 1 in 166

■ ■ ■


Buy & Sell Residential and Commercial Properties



Raj. A. Rasaratnam B.Com.
Sales Representative
416-726-8055
416-299-8570

HomeLife Higher Standards
HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently owned and operated
1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3
Bus: (416) 321-6969
Fax: (416) 321-6963

$379,900


9thLine/14th Ave
Brick and Stone front, Corner lot, 4 Bedrooms, 3Washrooms, Upgraded maple Kitchen Cabinets with lots of upgradings

$324,900

Birch./Ellesmere
3 Bedrooms Condo Towns, $220 Maintenance, 24 hrs Security, Nearly 1820 Sqft Tridel Quality Town house Close to all amenities

$384,900

Middlefield/Denison
Corner lot with 4 Bed rooms, Finished basement with Kitchen sep entrance. Walking distance to Ttc, School, Park,and Shopping

$489,900

9th Line / 14th Ave
Bright Detached with 4 Bedrooms, Lesthan 2years old Close to Highway, Lots of upgrades, Potlights and Moulding, Oak Stair case, Jacuzzi

$490,000

14th Ave / 9th Line
Detached,2-Storey, Bed Rooms: 4, Washrooms: 3, Fild gate Boxgrove community, Combined Liv/Din rooms with 9ft Ceilings and oak Stair case

$415,000

Markham/14th Ave
Detached,2-Storey, Beautiful 4+2 Bedroom,4 Washrooms Beautiful Home, . ProfessionallyDone Basement Hardwood floor, Freshly painted, more parking space

Mortgage arrangement, Business incorporation and corporate tax preparation
416-726-8055

# வாழ்க்கை சுவர்க்கமாவது இனிய இல்லமொன்றில்...


**Sheppard/Markham**




**$149,000** For Sale

Go Train Station Will Be Set Up On The Opposite Next Year. Best Location For Muslim Restaurant Or South Asian Restaurant.


**Brimley / Lawrence**



**$279,900**

3 Bedrooms, 2 Washroom, Att/Row/Townhouse, This Almost New 1,342 Sq Ft Home Shows Like A Model! Great For First Time Buyers. Soaring 9' Ceiling, Laminate Flrs


**Sheppard/Meadowvale**



**$298,800**

3+1 Bedrooms, 3 Washroom, Att/Row/Twnhouse, Fabulous Mattamy Built 3-Storey Deep Lot Townhome, Approx 1809 Sq. Ft.,Newly Repainted, Hardwood Floor


**Kennedy/Steeles**



**$299,800**

3+1 Bedrooms, 2 Washrooms, Link 2-Storey, Well Kept Home In Great Location. Walking Distance To Ttc, Go Station & Shops. Newer Windows. Walk To School & Park.


**Markham Rd/14th Ave.**



**$326,000**

3 Bedrooms, 3 Washroom, Link 2-Storey, Spacious & Simply Gorgeous Home With Many Newer Upgrades.See Interior Pictures On Line.Shows Like A Model Home

**Markham Rd/Highglen**



**$345,000**

3 Bedrooms, 3 Washroom, Link 2-storey, Clean 3 Bedroom 1600Sqft Detached Home With Separate Family Room. Large Enclosed Front Porch With Access To Garage


**Mccowan/Highglen**



**$349,000**

3 Bedrooms, 3 Washroom, Link 2-Storey, Located On A Child Safe Crescent, Steps To Schools:Coppard Glen Public,High School-Father Mcgivney & Middlefied Collegegate

**Steeles/McCowan**



**$349,900**

3+1 Bedrooms, 3 Washroom, Link 2-Storey, Newer Laminate Floor In Living/Dining, Newer Broadloom On 2nd Floor On All Bedrooms. 1 Bedroom Basement Apartment With Seperate Entrance.


**Mccowan/Dennison**



**$351,900**

4 Bedrooms, 3 Washroom, Link 2-Storey, Well Maintained 2000 Sqft.4Bdrms Home In Desirable Location Fridge, Stove, Washer, Dryer, Cac, Cvac And Accessaries, All Electric Light Fixtures

**Markham Rd./14th**



**$365,000**

3 Bedrooms, 3 Washroom, Link 2 Storey, Very Bright Home With Beautifull Layout.Thousands $$ Spend On Upgrades In 2007 Such As New Hardwood Flooring And Paint On The Main Floor

**Steeles/Middlefield**



**$399,800**

4 Bedrooms, 3 Washroom, Link 2-Storey, Well Maintained,One Of The Biggest Homes Here,Bright & Sun Filled W/Skylight & Spiral Stairs,M/F Laundry

**Denison/Markham**



**$399,900**

4 Bedrooms, 3 Washroom, Link 2-Storey, Beautiful Desired 4 Bedroom 2050 Sqft Detached Brick Home In Ideal Location On Child Safe Court. 2nd Largest Lot On The Court


**Highglen/Featherston**



**$409,900**

3+2 Bedrooms, 4 Washrooms, Beautiful 2 Storey Link Home With Separate Entrance. Finished Basement With Kitchen, 2 Bdrms, And 4Pc Bath Huge Driveway


**Staines / Steeles**



**$409,900**

4 Bedrooms, 3 Washroom, Detached 2-Storey, Beautiful, Well Maintained Approx. 2100 Sqft Home With Close To Park, 2nd Floor Laundry, Master Bedroom With 4 Pcs Ensuite


**Sheppard/Meadowvale**



**$429,000**

4 Bedrooms, 3 Washroom, Detached 2-Storey, Sun-Filled Mattamy Home,Great Location!Corner Lot!Oak Hrd Wood Stairs W/Oak Pickets Railing,Main Flr Throughout Oak Hardwood


**Highglen / Brimley(S.W.)**



**$699,000**

4+3 Bedrooms, 6 Washroom, Detached 2-Storey, Totally Renovated!! Brand New Kitchen W/Granite Tops And Floor. All New 5'Strip Oak Fl.

**Kennedy/Highglen**



**$1,090,000**

4+2 Bedrooms, 6 Washroom, Immaculate Custom Built Executive Home, $$$upgrds, Granite & Hardwood Fl Thru-Out, Deco Colums, Cornile

**Confederation**




**$1,900,000** For Sale

2 Bedrooms, 1 Washroom, Great Location !!! Gas Bar, Land, And Building For Sale Together In The Heart Of Downtown Mississauga.

**I can also assist you with: Mortgage Financing, Home Inspection, Real Estate Lawyer**

## List YOUR HOME with MIKE SRINATHAN Today!

- Your home sold …Guaranteed!!!
- Commission as low as **1%**
- Your home will be advertised on the Newspaper and on the web
- You are working with a Professional RE/MAX Realtron Realtor
- For a **NO CHARGE** Evaluation of your home



RE/MAX
ReMax Realtron Inc., Brokerage
Independently Owned and Operated

**Elaguppillai (Mike) Srinathan,** B.Sc.

Sales Representative

**Direct: 416.276.1225**

**Office: 905.470.9800 Fax: 905.470.7770**

esrinathan@trebnet.com

digi Media Creations - 416.467.4952

# Autism குழந்தைகள்

ராஜ்மோகன் செல்லையா
- ஈட்டுக்கடன் பிரதிநிதி -
rmohan@thaiveedu.com



மனிதனின் பரிணாம வளர்ச்சிப் பாதையில் இதுவரை எத்தனையோ விடயங்களைக் கண்டுபிடித்திருக்கின்றான். ஆனாலும் இயற்கையின் சீற்றமும் கொடிய நோய்களின் தாக்கமும் இன்றுவரை தொடர்ந்து கொண்டே வருகின்றன.

இந்த வகையில் Autism (Autism Spectrum Disorders - ASD) இன்றைய காலகட்டத்தின் மிகவும் முக்கியமான குறைபாடாகவே கருதப்படுகின்றது. ஒரு குழந்தை பிறந்து முதல் மூன்று வயதுகளில் கண்டறியப்படும் இந்த Autism ஒரு சமூகத்தின் முதுகெலும்பாக விளங்கும் குழந்தைகளைத் தாக்குவது மிகவும் கொடுமையானதாக கருதப்படுகின்றது.

அது மட்டுமல்லாமல் இக்குறைபாட்டுக்குரிய மூல காரணங்கள் இன்றுவரை சரியாக கண்டுபிடிக்கப்படாமை ஒரு இருண்ட எதிர்காலத்தையே தோற்றி நிற்கின்றது.

இந்த நிலையில் Autism பற்றிய பூரணமான விழிப்புணர்வு ஒரு சமுதாயத்தைப் பொறுத்தவரை மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது. United Nations அண்மையில் ஒவ்வொரு April 02ஆம் திகதியையும் "World Autism day" என்று அமுல்படுத்தியதன் மூலம் இதனுடைய தேவையை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

எமது சமுதாயத்தில் இது பற்றிய விழிப்புணர்வை எப்படி ஏற்படுத்துவது மற்றும் இந்த Autism குறைபாட்டால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கு அல்லது அது சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு எந்தவிதமான உதவிகளை வழங்குவது போன்ற விடயங்களை ஆராயும் நோக்கிலேயே இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

ஆனால், 'Autism என்றால் என்ன" என்று இன்றுவரை வியப்பவர்களுக்காக அதுபற்றிய சில தகவல்களை முதலில் பார்ப்போம்.

## Autism என்றால் என்ன?

Autism என்பது மூளையின் முக்கிய செயற்பாடுகளான பேச்சுத்திறன் (Communication Skills) மற்றும் சமுதாயத் தொடர்பு (Social Interactions) போன்ற பகுதிகளின் விருத்தியை பாதிக்கும் ஒரு சிக்கலான குறைபாடாகும்.

Autism உள்ள குழந்தைகளை (Autistic) அவர்களின் நடவடிக்கைகளை வைத்து அடையாளப்படுத்திக் கொண்டாலும் இந்தக் குறைபாடுகள் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு விதமாக வேறுபடுகின்றன.

Autistic குழந்தைகள் தமக்குள்ளேயே ஒரு உலகை உருவாக்கி அதனுள் தமது உணர்வுகளையெல்லாம் முழுமையாக அர்ப்பணித்து தம்மைச் சூழ உள்ள உலகை உணரத் தெரியாதவர்களாக வாழ்ந்து கொண்டு வருவார்கள்.

தமது உணர்வுகளுக்கு அல்லது தேவைகளுக்கு எந்தவொரு இடையூறும் வராதவிடத்து சாதாரண குழந்தைகளாகவே அனேகர் கண்களுக்கு தென்படுவார்கள். அத்துடன் இக்குழந்தைகள் மற்றவர்களின் உணர்வுகள் பற்றிய எந்தவித அக்கறையும் இன்றி தமது தேவைகளையும் உணர்வுகளையும் சரியாக வெளிப்படுத்த முடியாமல் தத்தளித்துக் கொண்டிருப்பார்கள்.

Autismஇன் தாக்கம் அதிகரித்து வரும் இக்காலகட்டத்தில் இக்குறைபாட்டுக்குரிய மூல காரணங்களை இதுவரை ஆராய்ச்சியாளர்களால் சரியாக கண்டுபிடிக்க முடியவில்லை. எனினும் மரபணு (DNA) மற்றும் சூழலின் இரசாயன மாற்றங்கள் (Environment play) இதற்குப் பிரதான காரணங்களாக கருதப்படுகின்றன. மரபணுவின் கண்டுபிடிப்பு ஒரு நல்ல திருப்பத்தை கொண்டுவரும் என்று எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் இது எந்த வகையில் பாதிக்கப்பட்ட Autistic குழந்தைகளுக்கு பயன்படும் என்பதும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இதேவேளை பல பெற்றோர்கள் குழந்தைகளுக்கு வழங்கப்படும் Vaccine (MMR)களினாலே இக்குறைபாடு ஏற்பட்டதாக கூறிவருகின்றனர். இது பற்றிய தடயங்கள் அவர்களிடம் இருந்தபோதும் ஆராய்ச்சியாளர்களால் இதுவரை எதுவித தகவலும் வெளியிடப்படவில்லை. இதற்கு அரசியல் காரணங்கள் பின்னணியில் இருப்பதாகவும் பல பெற்றோர்கள் நம்பிவருகின்றனர்.

அனேகமான Autistic குழந்தைகள் ஆண் குழந்தைகளாகவே காணப்படுகின்றனர். இது 4:1 என்ற விகிதாசாரத்தில் இருப்பதாகவும் வட அமெரிக்காவில் பிறக்கின்ற 150 குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு Autism ஏற்படுவதாகவும் அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது கனடாவில் 2002ஆம் ஆண்டு 1:200 ஆகவும் இன்று 1:144 ஆகவும் காணப்படுகின்றது.


இனி Autism குழந்தைகளின் அறிகுறிகளை சற்றுக் கவனிப்போம்.

- யார் முகத்தையும் பார்க்காமல் இருத்தல் (No eye contacts)
- காது கேட்காதது போல் புலன்களை வேறு இடத்தில் வைத்திருத்தல்.
- யார் மீதும் நாட்டம் கொள்ளாமை அல்லது மற்றவர்களிடம் சேர விருப்பமின்மை.
- தனிமையை நோக்கி எப்போதும் செல்லல்
- குறிப்பிட்ட சில Toysகளில் மட்டுமே விளையாடல்.
- சரியான முறையில் Toys உடன் விளையாடாமை.
- சில சொற்களை அல்லது சத்தங்களை திரும்ப திரும்ப கூறுதல்.
- திரும்ப திரும்ப (repetition) நடக்கும் எந்தச் செயலிலும் அக்கறை காட்டுதல்.
- வழமையான (routine) பழக்க வழக்கங்களை மாற்ற முனையும் போது எதிர்ப்பைக் காட்டுதல்.
- வெறும் சுவரையோ அல்லது ஏதேனும் ஒரு பொருளையோ தொடர்ந்து பார்த்துக்கொண்டிருத்தல்.
- குறிப்பிட்ட சில துறைகளில் அதீத ஈடுபாடு காட்டுதல்.
- சில பொருட்களில் மட்டும் அதிகம் விருப்பப்படுதல்.
- குறிப்பிட்ட சில உணவுகளை மட்டுமே உண்ணுதல்.
- உடலை ஒரே முறையில் மீண்டும் மீண்டும் அசைத்தல் (Rocking)
- அர்த்தமற்ற செயல்களில் ஈடுபடுதல்
- கைகளை அடிக்கடி உதறுதல் மற்றும் விரல்களை உற்றுநோக்குதல்.
- கதவுகள் மூடித் திறப்பதை உன்னிப்பாக அவதானித்தல்.
- காரணம் இன்றி மற்றவர்களை அடிக்க முனைதல்
- எப்போதும் கைகளில் தொடுகை உணர்வு (Sensory) கொண்ட ஒரு பொருளை வைத்திருத்தல்.
- காரணமின்றி சிரித்தல் அல்லது அழுதல்

இப்படி பல வகையான அறிகுறிகள் அறியப்பட்டிருந்தாலும் இவற்றில் பல ஒரு ஆரோக்கியமான குழந்தைக்கும் கூட காணப்படலாம். எனவே இது பற்றிய சரியான தெளிவுக்கு ஒரு வைத்தியரை அணுகுதல் அவசியமாகின்றது.

> "அனேகமான *Autistic* குழந்தைகள் ஆண் குழந்தைகளாகவே காணப்படுகின்றனர். இது 4:1 என்ற விகிதாசாரத்தில் இருப்பதாகவும் வட அமெரிக்காவில் பிறக்கின்ற 150 குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு *Autism* ஏற்படுவதாகவும் அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது கனடாவில் 2002ஆம் ஆண்டு 1:200 ஆகவும் இன்று 1:144 ஆகவும் காணப்படுகின்றது."

சமூகத்துடன் ஒன்றிவாழும் குணம் இல்லாத இந்த Autistic குழந்தைகளுக்கும் சமூகத்திற்கும் இடையேயான இடைவெளி இன்று மிகவும் விரிசலானதாகவே காணப்படுகின்றது. இந்த இடைவெளியை குறைப்பதற்கு அக்குழந்தைகளிடம் இருந்து எதனையும் எதிர்பார்க்க முடியாது. எனவே அது இன்று எமது சமூகத்தின் கைகளிலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளது.




### Autistic குழந்தைகள் சமுதாயத்துடன் இணைந்து வாழ்வதற்கான நடைமுறை சிக்கல்கள்


- பொது இடங்களுக்கு இன்நோயால் பாதிப்படைந்த குழந்தைகளை கூட்டிச் செல்லாமல் Autismஇன் பாதிப்பை அதிகரித்தல்.
- பொருளாதார வசதிகள் இன்றி இக் குழந்தைகளுக்கு கிடைக்க வேண்டிய தேவைகளை நிறைவேற்றாமை.
- அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கும் உதவிகள் பெறுவதில் இருக்கும் சிரமங்கள்.
- இக்குழந்தைகளை சரியாக அணுகாமல் பிரச்சினைகளை வலுவடையச் செய்தல்.
- இது சார்ந்த குடும்பங்களில் இருக்கும் கவலைகளை மற்றும் சுமைகளை மற்றவர்கள் புரிந்து கொள்ளாமை.
- இதனால் மன அழுத்தத்திற்குள்ளாகி இருக்கும் பல பெற்றோர்களுக்கு ஆறுதல் அளிக்காமை.
- மொழிப் பிரச்சினை இருக்கும் பெற்றோர்களுக்கு சரியான உதவிகள் வழங்கப்படாமை.
- Autism பற்றிய முழுமையான தகவல்கள் மற்றும் தடுப்பு முறைகள் பாதிக்கப்பட்ட பெற்றோர்களுக்கு கிடைக்காமை.

இதுபோன்ற பல காரணங்கள் எமது சமுதாயத்திற்கு Autism பற்றிய விழிப்புணர்வு


13ம் பக்கம் பார்க்க...

Rely On The Expert Team
Committed to Providing Real Estate Service with Integrity and Honesty

Amir Ramalingam, B.Sc.
Sales Representative
Cell: 416-409-6067
Email: aramalingam@trebnet.com



Century 21
King's Quay Real Estate Inc.
Bus: 905-940-3428 (24hrs)



Pratheep Balasubramaniam
Sales Representative
Cell: 416-884-7020
Email: pbalasubramaniam@trebnet.com

சிறப்பான சொந்த வீடு மற்றும் சொந்த முதலீடுகளை முழுமனநிறைவுடன் மகிழ்ச்சிகரமாக அடைவதற்கு
அழையுங்கள் அமிர்/பிரதீப் Top Producing Agents.
Call us for a No cost, No obligation market evaluation of your home.


வளமான வாழ்விற்கு
வதிவிடம் வாங்கிட.......
ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
SOLD IN 4 DAYS
Westney/Rossland
3 Bedrooms, 3 Washrooms Well Maintained Great Gulf Home Located In A Quiet Crescent. Many Upgrades: Hardwood Floors Throughout
$284,900
Morningside/Finch
3 Bedrooms, 3 Washrooms Well Maintained Laurier Built Home, Approx. 1840 Sq.Ft., 1st Owner, Quiet Cresent. New Paint,Maple Hardwood Fl
$324,900
Port Union/Hwy 401
3 Bedrooms, 2 Washrooms Quality Built 4 Years Home, In A Great Rouge River Area! Picture Glass Door Entry
$334,900
Kennedy/Finch
5+2 Bedrooms, 5 Washrooms Ideal For Large Family, All Brick Spacious 4 Bedroom Home With Separate Entrance To Finished Basement
$639,900
Bayly/Monarch
3 Bedrooms, 3 Washrooms Brand New Feehold Townhouse Never Been Lived In. Sundial-Frankling Model. Approx, 1580 Sq Ft
$259,900
9th Line/14th Ave
4 Bedrooms, 3 Washrooms Excellent Box Grove Neighbourhood! 2712 Sq Ft! Less Than 1 Year New Arista Home! Dble Dr Entry
$549,900
Mccowan/Denison
5+2 Bedrooms, 6 Washrooms Stunning House - Monarch Built, Basement Finished, Interlocking Driveway, Double Enclosed Porch
$599,900
Neilson & Mclevin
3 Bedrooms, 3 Washrooms Fernbrook Freehold Townhouse Move-In Condition, Parquet & Ceramic Floors On Main Level Close To 401, Ttc, Shopping
$299,900
Castlemore/Markham
4 Bedrooms, 3 Washrooms "Brand New 4 Bedroom Home" Never Lived In Popular Greensborough Community Of Markham
$1,650 For Lease
Hwy 427/Rexdale
2 Bedrooms, 2 Washrooms Brand New Tridel/Hallmark Luxury Condo In Etobicoke Never Lived In, Laminate Flooring In Living &Dining Room
$269,900
KARU'S
ROYAL TEAM
Top 10 TEAM in CANADA
துாணி லழகியதாய் - நான்மாடங்கள்
துய்ய நிறத்தினவாய் - அந்தக்
காணி நிலத்திடையே - ஒரு மாளிகை
- புரட்சிக்கவி பாரதியார்
Top 1% Team in all of Canada
RANJAN FRANCIS XAVIER
Sales Representative
DIR: 416-816-1220
Bus: 416-284-4751

# வியர்வை நாற்றம்




மஞ்சுளா ராஜலிங்கம்

manju@thaiveedu.com


வியர்வையால் விளையும் சில அசௌகரியங்களையும், சங்கடங்களையும் கொஞ்சம் அலசுவோம்.

நம் சொந்த தாய்மண்ணானது, வருடம் பூராவும், வெப்பத்தைக் கொண்ட ஒரு நாடாக பூகோளத்தில் அமைந்துள்ளது. எப்பொழுதும் சூடுதான், வியர்வைதான். மனிதர்கள் அங்கே வாழும்வரையில், ஒருவருக்கொருவர் வியர்வையில் குளிப்பதையோ, அன்றி அதனால் ஏற்படும் அசௌகரியமான வாடையையோ நாம் கண்டு கொள்வதில்லை என்பதைவிட, அவை நம்மை ஒரு போதும் இம்சை செய்ததில்லை என்றுதான் கூறல் வேண்டும். அது நம் கருத்தில் அங்கிருக்கும்வரை ஒருபோதும் படிந்ததில்லை. ஆனால் இங்கே நாம் இருப்பதோ, பல இனத்தவர் நம்மைப்போல் வந்து தஞ்சமடைந்த நாடு. இங்கே பலதரப்பட்ட எதிர்பார்ப்புக்களும், முகஞ்சுழிப்புக்களும்; நிறத்துக்கும், மொழிக்கும், பண்பாட்டுக்கும் இருக்கத்தான் செய்கின்றன. இங்கே கோடை காலம் என்பது என்னவோ, எண்ணி நாலே மாதங்கள் தான். ஆனால், அதில் வியர்க்கும் அளவோ, நம் மானத்தையே வாங்கி விடும். சிலருக்கு அறவே வியர்க்காது. சிலருக்கு மயக்கம் போடும் அளவுக்கு வாடையுடன் வியர்வை பெருகித் தள்ளும். அது அவரவர் உடல்வாகு அப்படி. ஆனால், நாம் ஆடைகளை உடுத்தி, அழகு காட்டுவதில் உள்ள ஆர்வத்தை நம் ஆரோக்கியத்தில் காட்டுவதில்லை. உதாரணமாக, வியர்வை பொங்கிவழியும் ஒருவர், அவர் எவ்வளவு தான் அழகாக இருந்தும், ஆடைகளை கண்பறிக்கும் விதத்தில் உடுத்தும், நுனிநாக்கு ஆங்கிலத்தை வெடித்தாலும், அவர் அருகில் செல்லும் ஒருவர், அவர் மேல் ஒருவித வியர்வை நாற்றம் வந்தால், அவ்வளவுதான், எட்டவே நின்று கதைப்பார்கள். இது ஆண், பெண் இருபாலாருக்கும் பொருந்தும். சமயத்தில் வேறுநாட்டவர்கள் முகத்துக்கு நேரேயே மணக்கிறது என்று சொல்லவும் கூடும். சிலர், தர்மசங்கடத்தில் இருந்துகொண்டு, எப்படி அந்த இடத்தை விட்டு அகலலாம் என்றுதான் ஒவ்வொரு நொடியையும் எண்ணுவார்கள், காரணம், பொறுக்க முடியாத அந்த நெடி. சிலவேளைகளில் நம் மணம் நமக்கே தெரிவதில்லை. ஆனால், இம்மாதிரி சந்தர்ப்பங்களைக் கேள்விக்குறியாக்கி விடாமல், வியர்வைக்குரிய காரணங்களையும், கட்டுப்படுத்த முடியுமா என்பதுபற்றியும் நாம் இங்கு நோக்குவோம்.

உடற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி செய்வது, ஒரு கூட்டத்தில் பிரசங்கம் செய்வது, நாடக நாட்டிய நிகழ்வுகளில் பங்கேற்பது, உடல் களைத்து வேலை செய்வது, கடும் வெப்ப சீதோஷ்ணம், மனவழுத்தம், தடுமாற்றம், கடுமையான யோசனை - இவ்விதமான செயல்கள் உங்கள் உடலில் வியர்வையை உருவாக்கும். இயற்கையின் நியதியில், இவ்வாறு வேர்ப்பது இயல்பு மற்றும் உடலுக்கு ஆரோக்கிய மும் கூட. அத்துடன் இம்மாதிரிச் சூழல்களில் உங்கள் உடலிலிருந்து கணிசமான அளவில் நீர் இம்முறையில் வெளியாகியிருக்கும். இவ்வாறு வியர்க்கும் தருவாயில், உங்கள் உடலிலுள்ள ஒரு லீட்டர் இரத்தமானது, ஒரு பாகை செல்ஸியஸ் வரையில் குளிர்ந்துவிடும்.

ஆனால் இப்படி வியர்க்கும் நிலையானது சிலவேளைகளில் கட்டுக்கடங்காமல் இருக்கும், அல்லது வியர்வை என்பதே இல்லாத ஒரு நிலையும் வரலாம். இரண்டுமே ஆபத்தானது தான். உடல்நிலையின் ஆபத்தான ஒரு கட்டமாக, அளவுக்கதிகமாக வியர்ப்பது நேரினும், அது ஒரு உடல் கூசி, அவமானத்தில் வெட்கித்துப் போகக் கூடிய ஒரு செயலாகவும் நம்மை நோகச்செய்து விடும்.

பலருக்கு வியர்வை என்பது ஒரு சின்ன பிரச்சினை. மேலதி வியர்வையினால் ஒரு வித, நாசிக்கொவ்வாத நெடி (நாற்றம்) ஏற்படலாம். வியர்வை என்பது பொதுவில், ஒரு மனமில்லாதக் கசிவுதான். ஆனால் நம் தோலில், பக்டீரியா போன்ற நுண்கிருமிகள் இருந்து, அவற்றில் இந்த வியர்வை போய் படர்ந்தால், அங்கு இருக்கிறது விஷயம். இப்படித்தான் மணம் பரவ ஆரம்பிக்கின்றது. இந்த விடயத்தில் நீங்கள் மட்டும் ஒரு தனித்தீவென எண்ண வேண்டாம். வருடந்தோறும் அமெரிக்கர்கள் இதற்கான மணம் அகற்றும் பூச்சுக்களுக்காக ஆயிரமாயிரம் மில்லியன் டொலர்களைச் செலவிடுகின்றார்கள்.

## அறிகுறிகள்:

ஆரோக்கியமானவர்களுக்கு வியர்வை சுரக்கும். ஆனால் எங்கே, எப்போது, எந்தளவு என்பது கேள்விக்குறிதான்.


உணர்வுகளினால் உந்தப்பட்டு சிந்தப்படும் வியர்வையானது, உங்கள் முகம், கமக்கட்டு, பாதங்களின் விரலிடுக்குகள், மற்றும் உள்ளங்கை போன்றவற்றில் ஏற்படுகின்றன. ஆனால் வியர்வையின் அளவும், அதன் மணமும் உங்கள் மனநிலை, சாப்பாடு, மற்றும் அருந்தும் பொருட்கள், மருந்துகள், உடலில் உண்டாகும் மருத்துவ நிலைமைகள், மற்றும் சுரப்பிகளின் நிலையைப் பொறுத்தே நிர்ணயிக்கப் படுகின்றன.

உங்கள் தோலில் இரண்டுவிதமான வியர்வைச் சுரப்பிகள் உண்டு. ஒன்றை ஆங்கிலத்தில் Eccrine glands என்றும் மற்றையதை Apocrine glands என்றும் கூறுவதுண்டு. Eccrine glands எனப்படுவது உடம்பின் கூடுதலான பாகத்தில் நடைபெறுவதோடு, இது தோலின் மேற்புறத்தில் மட்டுமே பெரும்பாலும் சுரக்கும். Apocrine glands சுரப்பது, பெரும்பாலும் கண்களுக்குத் தோன்றாத இடங்களில். அதாவது, மயிர்த் துவாரங்கள், தலை, கமக்கட்டு, மற்றும் பிறப்புறுப்புப் பகுதிகளை அண்டிய பகுதிகளில் இச்சுரப்பிகள் சுரக்கும் வாய்ப்பு அதிகம்.

நமது உடலில் கிட்டத்தட்ட 2 மில்லியன் தொடக்கம் 5 மில்லியன் வரையிலான அளவில் Eccrine வியர்வைச் கணுக்கள் உள்ளன. எப்பொழுது நம்முடைய உடலில் வெப்பம் அதிகரிக்கின்றதோ, அப்பொழுது எமது உடலின் சுரப்பிகள் சுரந்து ஈரத்தைத் தோலின் மேல் கசியச் செய்கின்றன. அதே நேரம் நீராவியாகி வெளியேறும் தருவாயில், இந்நிலை உங்கள் உடலைக் குளிர்மையடையச் செய்கின்றது. இந்த வியர்வையானது நீரும் உப்பும் கலந்த ஒரு தன்மையாகும். இதிலுள்ள விதவிதமான மற்றைய இரசாயனக் கலவைகள் உடலிலுள்ள நீர்த்தேக்கத்தை நடுநிலையாக வைத்திருக்க உதவுகின்றன.

Apocrine glands நேரடியாக இவ்வியர்வைச் சுரப்பிகளினுள், கொழுப்பு நிறைந்த வியர்வையைச் சுரந்து விடுகின்றன. மனநிலை சோர்வடையும் பொழுதில், சுரக்கும் இச்சுரப்பியின் வியர்வைகள் தோலின் வெளிப்புறத்தை அடைந்தவுடன், நுண்கிருமிகள், அதாவது, பக்டீரியா போன்றவை இதனை ஆட்கொள்ள முற்படுகின்றன. இச்செயற்பாடு நிகழும்பொழுது தான், வியர்வையானது நெடியைக் கிளப்ப ஆரம்பிக்கின்றது.

பல காரணங்கள் உங்கள் வியர்வைச் சுரக்கும் அளவையும், அதன் மணத்தையும் நிர்ணயிக்கின்றன. சிலவற்றை இங்கே ஆராய்வோம்.





**பரம்பரை:** சிலருக்கு இது ஒரு பரம்பரைத் தொற்று, முக்கியமாக உள்ளங்கைகளிலும், கால்விரல் இடுக்குகளிலும் இப்படி வியர்க்கும் தன்மையுண்டு.

**உணவுகளும், பானங்களும்:** சூடான பானங்களை அருந்துதல், மற்றும் சில வகை மதுபானங்களும் வியர்வையைப் பெருக்கும். கார உணவுகளைச் சுவைப்பதன் மூலமும் இது உண்டாகலாம்.

**சிலவகை மருந்துகள்:** தைரொய்டைச் சுரக்கச் செய்யும் மருந்துகள், மற்றும் மனச் சிதைவைச் சரிசெய்ய பாவிக்கப்படும் மருந்துகள், மற்றும் அளவுக்கதிகமாக மேற்கொள்ளும் டைலனோல், அஸ்பிரின் போன்ற வலிகொல்லி மருந்துகளும் வியர்வையின் அளவைப் பெருக்கும்.

**மாதவிடாய் நின்றுபோதல்:** இந்த காலத்தில் பெண்களுக்கு hot flash என்று சொல்லப்படும், சடுதியான உடல்வெப்ப ஏற்றத்தால், உள்சூட்டை உணரக்கூடிய அதேநேரத்தில், வியர்வை இரவுகளில் ஆறாகப் பெருகி ஓடும். இந்த கண்விழிப்பு பின்னர், சடுதியாக ஆழ்ந்த குளிரில் உடம்பைப் பதம் பார்க்கும்.

**ஆண்விதை சரிவர இயங்காமை:** ஆணின், இந்தவகை இயக்கமின்மையாலும், அவர்களும் hot flashes என்ற கடும் சூட்டை உணரலாம். இதுவும் வியர்வைக்கே கடைசியில் வழிவகுக்கின்றது.

**இரத்தத்தில் குறைந்த சீனி:** இரத்தத்தில் சீனியின் அளவு குறிப்பிட்ட அளவிலிருந்து கீழிறங்கின், வியர்வை உண்டாகும். அதாவது insulin அல்லது வாய் மூலம் மருந்து உட்கொள்ளும் நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு, வியர்வை, நடுக்கம், பலவீனம், பசி, மயக்கம், வாந்தி போன்றவை உண்டாகும். அதிலும் வயிற்று அல்லது குடல் அறுவை சிகிச்சை போன்றவை செய்தோருக்கும், சாப்பிட்ட பின்னர் இரத்தத்தில் சீனியின் அளவு குறைய வாய்ப்புண்டு.

சரி, என்ன செய்து இந்த வியர்வைப் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்தலாம், அல்லது ஓரளவுக்குக் குறைக்கலாம் என்பதனைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

**தினமும் குளித்தல்:** தினமும் குளிப்பதன் மூலம் உடம்பில் கண்ணுக்குத் தெரியாமல் தேங்கியிருக்கும் பக்டீரியாக்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாம்.

**குளித்தபின் பாதம் காய்தல்:** சின்ன நுண்கிருமிகள் பாதங்களின் விரலிடுக்குகளில் சிக்கிவாழ வாய்ப்புண்டு. கட்டாயம் ஒரு சிறிய துணிகொண்டு, பாதங்களைச் சுத்தமாகத் துடைத்துக் காயவையுங்கள்.

**மாற்றுப் பாதணிகள்:** பலவித பாதணிகளை தினம் ஒன்று என்ற விதத்தில் அணியுங்கள். வியர்வை பட்ட பாதணி ஒரு இரவில் காய்ந்துவிடாது. வியர்வைப் பிரச்சினை இருந்தால், குறைந்தது இரண்டு நாட்களுக்கொருமுறை தானும் மாற்றலாம்.

**காலுறைகளை அடிக்கடி மாற்றுதல்:** காலுறைகளை ஒவ்வெரு நாளும் மாற்றுதல் வேண்டும். மற்றும் மாற்றும்போது, கட்டாயம் பாதங்களை ஈரம் போகத் துடையுங்கள். பெண்கள் அணியும் மெல்லிய

40ம் பக்கம் பார்க்க...


FOR ALL MORTGAGE NEEDS



Rajmogan Selliah
Mortgage Consultant

TD Canada Trust Scotiabank

2929 Lawrence Ave. East, Suite 203,
Scarborough, ON M1P 2S8
Head Office: 701 Evans Ave., Suite 600, Toronto, ON M9C 1A3
rajmoganselliah@invis.ca

Dir: 416.569.3200
Bus: 416.430.0111, Fax: 416.430.0222

digi

# Wireless Technology





ஜெவ்றி உதுமாலெப்பை
- கணனி வல்லுனர் -
jiffry@thaiveedu.com

Wireless Technology. கம்பியில்லாமல், தகவல்களையும், சக்தியையும் பரிமாறும் தொழில்நுட்பம். கணணி உலகத்தைப் பொறுத்தவரைக்கும், அல்லது நம்முடைய சாதாரண வாழ்க்கையில், தகவல்களைப் பரிமாறுவதற்கு, cable மூலமாக அல்லது கம்பிகள் மூலமாக நாம் தகவல்களை அனுப்பி வைப்போம். cable tv அல்லது வீட்டில் பாவிக்கும் landline telephone போன்றவை மூலமாக ஒரு காலத்தில் அல்லது இப்பொழுதும் பாவித்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால் மனிதனின் அன்றாடத் தேவைகளை ஒரே இடத்தில் இருந்து அவற்றைப் பாவிக்காமல், அவர்கள் எங்கு சென்றாலும், எந்த இடத்திலும் அவர்களுக்கு வேண்டிய தகவல்களைத் தரக்கூடிய சுகபோகமான வாழ்க்கையை அமைப்பதற்காகப் பல தொழில்நுட்பங்கள் தகவல் துறையில் அபிவிருத்தி அடைந்துள்ளது. அந்தத் துறைகளில் ஒன்று wireless technology. wireless technologyஐ நாங்கள் தமிழில் கூறுவதாக இருந்தால், கம்பியில்லாமல் தகவல்களை அனுப்பக்கூடிய ஒருமுறை என்று கூறலாம். இருவர் தங்களிடையே உரையாடிக் கொண்டிருக்கும்போதும், கணணியிலிருந்து அல்லது வானொலிப் பெட்டியிலிருந்து உங்கள் காதுகளுக்குச் சேரும் வரை அந்த இடைவெளியில் அந்தக் காற்று மண்டலமூடாக நடைபெறும் தகவல் பரிமாற்றம் wireless technology என்று கூறலாம்.

இன்னுமொரு வகையில் நமது அன்றாட வாழ்க்கையில் பாவிக்கும் தொழில்நுட்பத்தைக் கொண்டு, இந்த wireless technologyஐ விளங்கப் படுத்தலாம். உதாரணமாக வீட்டிலிருக்கும் VCR அல்லது Television அல்லது DVD Playerஐ இயக்குவதற்குப் பாவிக்கும் remote control நாம் play button அல்லது channelஐ மாற்றும்போது tvயில் நீங்கள் கொடுக்கும் கட்டளையை நிறைவேற்றிக் கொண்டிருப்பதற்குக் காரணம் உங்களுடைய remote controlக்கும் அந்த tvக்கும் இடையேயிருக்கும் காற்று மண்டலத்தினூடாக நடைபெறும் infrared என்ற wireless technologyயின் ஒரு தகவல் பரிமாற்றும் முறை.

Wireless Technologyஐ நாங்கள் அன்றாடமாக எங்களை அறியாமலேயே எத்தனையோ வகைகளில் பாவிக்கின்றோம். அவற்றில் சிலவற்றை இங்கே கூறுகின்றேன். Cellphones, அதாவது கையடக்கத் தொலைபேசிகள். அல்லது செல்லிடத் தொலைபேசி என்றும் கூறுவார்கள். PDA, wireless computers, wireless speakers, GPS systems, wireless keyboards, wireless mouse, satellites, TV receivers, satellite phones, satellite radios, cordless phones, wireless video cameras, கடைசியாக wireless devicesகளில் மறக்கக்கூடாத, பல கணவர்களுக்கு உணவைச் சூடாக்கித் தரும் microwave.




இந்த wireless technology எப்படி வேலை செய்கின்றது? எந்தத் தகவலையும் அனுப்புவதற்கு ஒரு energy இருக்க வேண்டும். அதாவது ஒரு சக்தி இருக்க வேண்டும். தகவல்கள் காற்று மண்டலமூடாக, மின்காந்த அலைகள் என்ற சக்திவடிவ மூலமாக அனுப்பப் படுகின்றது. இந்த மின்காந்த அலைகள் தகவல்களை ஒரு இடத்திலிருந்து அடுத்த இடத்துக்குக் கொண்டு செல்ல உதவுகின்றது. இந்த மின்காந்த அலைகள் பலவிதங்களில் மனிதனுக்கு உதவக் கூடியதாக இருக்கின்றது. மின்காந்த அலைகளைப் பற்றி மிகச் சுருக்கமாகக் கூறினால், நீங்கள் கேட்கும் சத்தம் ஒரு மின்காந்த அலையின் விளைவு. நாங்கள் பார்ப்பதற்கு உதவியாக இருக்கும் இந்த ஒளிக்கற்றைகள் கூட ஒரு மின்காந்த அலையின் பகுதியாகக் கூறலாம்.

சரி, ஒலி ஒளியாக வரமுடியுமா? முடியும். ஒளி ஒலியாக வரமுடியுமா? முடியும். அதற்குரிய சக்தி மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய உபகரணங்களைப் பொறுத்து அவற்றை மாற்றக் கூடியதாக இருக்கும். அந்த satelliteஇலிருந்து அந்த satellite receiverருக்கு வருமட்டும், அந்த tvயில் வரக்கூடிய படம் உங்கள் கண்களுக்குத் தெரிவதில்லை. Satelliteஇலிருந்து Satellite receiverக்கு வரும் வரைக்கும், tvயில் தோன்றக்கூடிய ஒளிப்படங்கள், காற்று மண்டலத்தினூடாக மின்காந்த ஒலி அலைகளாகவே satellite receiverஐ வந்தடைகின்றன. satellite receiversகள் அந்த ஒலியலைகளை. ஒளியலைகளாக மாற்றி அமைக்கின்றன.

இந்த மின்காந்த அலைகளினுடைய சக்தியை இரண்டு விடயங்கள் ஆக்கிரமிக்கின்றன. ஒன்று அதற்குரிய wavelength, frequency, அதாவது wave per second. அடுத்தது size of the wavelength. அந்த wavelength கூடும்பொழுது, அதனுடைய சக்தியளவு குறைவாக இருப்பதும், அதனுடைய wavelength குறையும்பொழுது, அதனுடைய சக்தியளவுகள் கூடிச்செல்வதையும் காணக் கூடியதாக இருக்கும்.

மின்காந்த அலைகளின் சக்தியின் அடிப்படையில், இவற்றைப் பல அலைவரிசைகளில் பாகுபடுத்தியிருக்கிறார்கள். இந்தப் பாகுபடுத்தப்பட்ட அட்டவணையை electromagnetic spectrum என்று அழைப்பார்கள். Electromagnetic spectrumஇல் முதலாவதாக, அநேகமாகக் கூறப்படும் AM அலைவரிசைகள் frequencyஇல் கூடுதலாக இருக்கும், ஆனால் சக்தி குறைந்ததாக இருக்கும். கடைசியாக இருக்கும் Gamaray இன் wavelengthக்கள் மிகவும் குறுகியதாக இருக்கும், ஆனால் சக்தி மிகவும் அதிகமாக இருக்கும். இதற்கொரு சிறிய உதாரணத்தைக் கூறுகிறேன். வானொலிப் பிரியர்களுக்கு AM அலைவரிசைகள் அல்லது FM அலைவரிசைகளானது ஒரு பரிச்சயமான ஒரு சொல். AM அலைவரிசைகளில் கேட்கும்போது தெளிவாக இருக்காது, ஆனால், ஒரு பரந்த அளவான ஒரு நிலப்பரப்பிற்கு அந்த ஒலிபரப்பைக் கேட்கக் கூடியதாக இருக்கும். ஆனால் FM அலைவரிசைகளில் ஒலிபரப்பாகும் வானொலி நிகழ்ச்சிகள் ஒரு குறிப்பிட்ட சிறிய நிலப்பரப்பை மட்டுமே ஆக்கிரமிக்கக் கூடியதாக இருக்கும். இதற்குக் காரணம் AM அலைவரிசைகள் wavelength அதிகமாகக் கொண்டதாகவும், FM அலைவரிசைகள் சிறிய அலைவரிசைகளைக் கொண்டதாகவும் இருக்கும். ஆனால் சக்தியைக் கூடுதலாகக் கொடுக்கும்.

கனேடிய வானொலிகளைப் பொறுத்தவரைக்கும், தமிழோசை AM அலைவரிசையில் 1430 என்ற அலைவரிசைகளில் ஒலிபரப்பாகின்றது. CMR தமிழ் FM 101.3 என்ற அலைவரிசைகளில் ஒலிபரப்பு நடைபெறுகின்றது. ஆகவே 1430க்கும் 101.3க்கும் உள்ள வித்தியாசத்தை நீங்களே அறிந்து கொள்வீர்கள்.

Electromagnetic spectrumத்தில் முதலாவதாக AM அலைவரிசையைப் பார்த்தோம். அடுத்து FM அலைவரிசை. microwave oven (நெருப்பில்லாமலே புகையும் என்பார்களே, அதுதான் இது). அடுத்ததாக ராடார். அலைவரிசை குறைந்தது. ஆனால் ஒரு சக்தி கூடுதலாக இருக்கும். அடுத்ததாக வருவது Audiable sound, அதாவது மனிதனுடைய காதுக்குக் கேட்கக் கூடிய, அலைவரிசையில் வரக்கூடிய சத்தம். இன்னும் அலைவரிசை குறையும்போது அவை ஒளியாக மாறுகின்றன. அடுத்ததாக அவை ultraviolet, x-ray, gama rays என அவற்றின் frequencyகளின் அடிப்படையில் மிகச்சக்தி வாய்ந்த மின்காந்த கதிரியக்கங்களாக மாறுகின்றன.

எந்த ஒரு தொழில்நுட்பத்துக்கும் அதன் இயக்கத்தையும், பரிமாணத்தையும் அளவீடு செய்து கொள்ள ஒரு அளவுகோல் இருக்கும். இந்த மின்காந்த அலைகளை அளப்பதற்கு அல்லது சக்திகளை அளப்பதற்கு டெசிபல்ஸ் அல்லது db என்ற அளவுகோல் கொண்டு அளப்பார்கள்.

உலகத்திலிருக்கும் internet பாவனைகளில், ஏறத்தாழ 25சதவீதமான பாவனைகள் wireless technology மூலமாக எடுத்துக் கொள்ளப் படுகின்றன. பொதுவாக ஒரு கணணித் துறையில் அல்லது Management துறையில் அல்லது ஒரு Doctor, Lawyer என்று பார்த்தால், எல்லோரிடமுமே ஒரு Blackberry என்ற சாதனம் இருப்பதனைப் பார்க்கலாம். Blackberryல் அவர்களுடைய E-mail அல்லது internetஐ wireless மூலமாக எடுத்துக் கொள்கிறார்கள். அடுத்ததாக PDA மூலமாக internetஐப் பார்க்கிறார்கள். வீடுகளில் கூட இப்போது அனேகமாக ஒரு wireless routerஐப் பூட்டிவிட்டு, வெளியே


20ம் பக்கம் பார்க்க...

வீடு வாங்க விற்க



Sutton

Alen Sivasambu
Sales Representative
Please Call Alen :
905-822-5000
Fax: 905-822-5617



alen@sutton.com

# HOMELIFE FUTURE REALTY

Office: 416-264-0101
Fax: 416-261-1519

262 Markham Road
Toronto, Ontario
M1J 3C5

*Dedicated to...*
*Making Your Dream Home*
*A Reality*

**LOKAN SUNDARAM**
Broker
416-450-3984
lokan.homelife@gmail.com






- 3 + 2 Bedrooms
- 2 Washrooms
- Fin. Bsmnt
- Renovated Kitchen




- 4 Bedrooms
- 4 Washrooms
- Fin. Bsmnt w/Kitchen
- In Demand Neighbourhood




- 4 + 2 Bedrooms
- 4 Washrooms
- Fin. Bsmnt w/Sep. Ent
- Close to all amenities




- 3 Bedrooms
- 3 Washrooms
- Stainless Steel Appliances
- Beautiful Neighbourhood




- 3 + 1 Bedrooms
- 3 Washrooms
- Fin. Bsmnt w/ Sep Ent.




- 2 Bedrooms
- 2 Washrooms
- Perfect for First Time Buyers



# நிம்மதியான வாழ்வுக்கு நிரந்தரத்தீர்வு காப்புறுதி ஒன்றே...

ஆமாம் உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமான ஒரு காப்புறுதி நிறுவனத்தில்
உங்கள் குடும்பத்திற்குரிய அனைத்துக் காப்புறுதி ஒப்பந்தங்களையும்
ஒழுங்காக அமைத்துத் தருவதே எனது சேவை....

## சியாமளா ரட்ணசபாபதி

RBC
Manulife Financial
Canada Life™

COMMUNITY
FINANCIAL SERVICE GROUP INC.
2100 Ellesmere Road, Unit 105, Scarborough, Ontario M1H 3B7



# LIFE INSURANCE

## Shiamala Ratnasabapathy

Life Insurance Broker

**Dir : 416.414.2374**

# Wireless Technology...

18ம் பக்கத் தொடர்ச்சி...

summer காலங்களில் deckஇல் இருந்து கொண்டு, அவர்களுடைய laptop மூலமாக internetஐயோ அல்லது அவர்களது தொழில் சார்ந்த விடயங்களையோ internet மூலமாகப் பாவித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

சிலர் கேட்கலாம். cellular phoneஐ பாவிக்கின்றோம். அதுவும் wireless technology. அதேவேளை நாங்கள் வீட்டில் wireless routerஐப் பாவித்து internetஐயும் பாவிக்கின்றோம். அதேவேளை நம்முடைய cord-less phone மூலமும், கதைத்துக் கொண்டிருக்கிறோம். எந்த வகையில் இவையெல்லாம் conflict பண்ணாமல் இருக்கின்றது என்று கேட்கலாம். இதற்குக் காரணம் cell-phone பாவிக்கும் அலைவரிசையும், வீட்டில் நாங்கள் பாவிக்கும் phoneனுடைய அலை வரிசையும், எங்களுடைய wireless phone பாவிக்கும் அலைவரிசையும் வித்தியாசமானவை. இந்த அலைவரிசைகளை CRTC என்ற கனேடிய அரசாங்க நிறுவனம் கனடாவில் மட்டுப்படுத்துகின்றது. நாங்கள் நினைத்த மாதிரி ஒரு antennaவைப் போட்டு நாங்கள் எங்களுடைய நினைப்பிற்கு ஒரு radio stationஐ நடத்த முடியாது.

உலகத்தில் எந்த நாட்டிலேயுமே இந்த wireless technologyயுடைய அலைவரிசைகளின் பங்கீட்டை, அந்த நாட்டுக்குரிய அரசாங்கம் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள்ளேயே எப்பொழுதும் வைத்திருக்கும், ஏனென்றால், wireless தொழில்நுட்பம் என்பது மிகச்சக்தி வாய்ந்த ஊடக சாதனமாகும். தகவல்களை மற்றவர்கள் காதுகளுக்குக் கேட்காமலே அனுப்பக்கூடிய, மிகவும் சக்தி வாய்ந்த ஊடக சாதனம்.

ஆனால் கனடாவில் இரண்டு அலைவரிசைகளை license free என்ற வகையில் வைத்திருக்கிறார்கள். யாருமே அந்த அவைரிசையைப் பாவிக்கலாம். அதாவது, 2.4 GHz அடுத்தது 5.8 GHz. அந்த இரண்டு அலைவரிசைகளையும் எந்த ஒரு நிறுவனமோ அல்லது தனிப்பட்ட மனிதர்களோ பாவிக்கலாம். அதற்கு license தேவையில்லை.

அந்த இரண்டு அலைவரிசைகளையுமே அனேகமான internet routerகள் பாவிக்கின்றன, அல்லது வீட்டிலிருக்கும் cordless phoneகள் பாவிக்கின்றன.

Wireless technology பாவிப்பதற்குத் தேவையான உபகரணங்கள் என்ன என்று பார்ப்போம். ஒன்று antenna, அடுத்தது receiver (Access points). Antennaக்கள், அதாவது மின்காந்த அலைகளாக வரும் தகவல்களை digital dataக்களாக இருவழிகளிலும் மாற்றக்கூடிய ஒரு உபகரணம். அடுத்தது access points. இவை பல உபகரணங்களில் இருந்தும் வரக்கூடிய குறிப்பிட்ட மின்காந்த அலைகளை தங்களுக்குள் உள்வாங்கிக் கொண்டு, தங்களுடைய கட்டுப்பாட்டு எல்லைக்குள் இருக்கக்கூடிய antennaக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தக் கூடிய உபகரணம். இவற்றுக்கு இடையிலிருக்கக் கூடிய இன்னொரு உபகரணம் bridges என்று கூறுவார்கள். அவைகள் குறிப்பிட்ட துாரத்துக்கு மேலாக மீண்டும் அதனைச் செலுத்த வேண்டுமென்றால், repeater என்ற உபகரணத்தைப் பாவிக்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

இந்த wireless technologyஇல் பொதுவாகப் பார்க்க வேண்டிய இன்னுமொரு முக்கியமான தகவல் இந்த antennas. Antennaக்கள் பல வகைகளில் பாவிக்கப்படுகின்றன. Point to point, point to multipoint என்று பலவகை இருக்கின்றது.

Wireless routersகளைப் பாவிக்கும்போது கவனிக்க வேண்டிய முக்கியமான இரண்டு விடயங்கள். signalலுடைய strength. அடுத்தது security. முதலாவதாக signal strengthஐ எப்படி பேணிப் பாதுகாக்கலாம் என்பதைப் பார்ப்போம்.

இரண்டுமாடி, ஒரு நிலவறை உள்ள ஒரு வீட்டை எடுத்துக் கொண்டால், wireless routerஐ ground floorஇல் வைத்துக் கொள்ளுங்கள். அப்படி வைக்கும்போது, மேல் மாடிக்கும் basementக்கும் சரிசமமான signal strength இருக்கக் கூடியதாக இருக்கும். அதேவேளை அந்த routerஇல் இருக்கும் antennaக்களை நிலப்பரப்புடன் சமாந்தரமாக வையுங்கள். காற்று மண்டலத்தில் ஒலி அலைகள் ஒரு குளத்தில் நாங்கள் கல்லைப்போடும் போது அலைகள் அந்தக் கல்லுப் போட்ட இடத்தைச் சுற்றி வட்டமாக செல்வது போன்றே காற்று மண்டலத்திலும் எங்கள் சப்தங்கள் பரப்பப் படுகின்றன. இதனை அடிப்படையாக வைத்து உங்கள் antennaக்களை எப்படி வைக்க வேண்டும் என்று பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் wireless routerகளை microwave அல்லது tvக்கள், cordless phonesகளுக்கு மற்றும் blue toothக்கு அண்மையில் வைப்பதனைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

■ ■ ■

நீங்கள் புகை பிடிக்கும் பழக்கம் உள்ளவரா?

புகைப்பதால் உங்களுக்கு மட்டுமல்ல உங்களைச் சார்ந்தவர்களுக்கும் புற்றுநோய் வருவதற்கான அறிகுறிகள் அதிகம் உள்ளன.

புகைத்தலை நிறுத்துவது கடினம் இல்லை.

இயற்கை மூலிகையினால் தயாரிக்கப்பட்ட, பக்கவிளைவுகள் அற்ற ஒளடதம்
100% இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.

AMAZON HEELTH CARE
2602 Eglinton Ave East
Midland & Eglinton

416 264 8787

உலகத் தமிழர் சமூக நூலகம்
உங்களை அழைக்கிறது!

புலம்பெயர் நாடுகளிலேயே
மிகப் பெரிய நூலகம்!
15,000க்கும் மேற்பட்ட தமிழ் நூல்கள்!
சிறுவர் முதல் பெரியோர்வரை
பயன்பெறக்கூடிய நூல்கள்!
வருடமொன்றிற்கு 200க்கும் மேற்பட்ட
புத்தகங்களை
வாசிக்கக்கூடிய அதிர்ஸ்டம்!
இணையத்தளம் www.tamillibrary.caஐப்
பார்வையிடுங்கள்.
இன்றே அங்கத்தவராகிப்
பயன் பெறுங்கள்.

தொடர்புகளுக்கு:
39, Cosentino Dr. Scarborough, ON
M1P 3A3
Midland & Progress

Tel: (416) 335 0622

THE MOST BEAUTIFUL PERSON ON THIS EARTH...
OUR BEST CRITIC ...
YET OUR STRONGEST SUPPORTER...
" MOM "

அன்னையர் தினம் கொண்டாடுவோம்.
May 11, 2008



msnHomes.ca
Re/Max Crossroads Realty Inc. Brokerage
1055 McNicoll Ave., Toronto, ON.
416 491 4002

KEN KIRUPA
Sales Representative
416 294 9322

familyprotection.ca
Liland Insurance Inc.,
759 Warden Ave., Toronto, ON
416 759 5453

# வாடிக்கையாளரும் பணம் அறவிடலும்

ராகுலன்
- Accountant -
ragulan@thaiveedu.com



பல சிறிய வர்தகங்களை ஆய்வு செய்த விற்பன்னர்கள் வாடிக்கையாளர்களிடமிருந்து பணத்தை நேரத்திற்கு பெற்றுக்கொள்வதில் பலருக்கும் சிரமமான காரியம் தான் என்று தெரிவித்துள்ளார்கள்.

நீங்கள் அந்த பணத்தைப் பெற்றுக்கொள்வ-தில் எவ்வளவு ஆவலாக இருக்கிறீர்களோ அதைக் தாமதிப்பதில் உங்கள் வாடிக்கை யாளர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள். ஏனென்றால் அந்தப் பணத்தை அவர்கள் தமது வியாபாரத்தை விரிவுபடுத்தப் பயன் படுத்துகிறார்கள். உங்களுடைய பணம் அவர்களின் வங்கிக் கணக்கில் இருக்கும் போது வட்டியைப் பெறும் அல்லது தமது வியாபாரத்திற்கு பாவிக்க கடன் பெறுவதை விட உங்கள் பணத்தைப் பாவித்துக் கொள் வார்கள்.

காசோலை தபாலில் வந்து கொண்டிருக் கின்றது என்ற சாக்குப் போக்கைப் பாவித்து உங்களுக்கு தர வேண்டிய பணத்தை சில வாரங்களால் தள்ளிப் போட்டு விடுவார்கள். ஆரம்ப நிலையில் இருக்கும் சில வியாபா-ரங்களுக்கு இது ஒரு பாரிய இடர் ஆகும். உங்களுடைய பணத்தின் போக்கை (Cash Flow) சரியாக நிர்வகிக்க வேண்டுமென் றால் இந்த சூழல் சிக்கலில் இருந்து நீங்கள் வெளியே வரவேண்டும்.

ஒரு தொழிலதிபர் என்ற வகையில் உங்கள் நிறுவன பணப்போக்கு அதன் உயிர் நாடி ஆகும். உங்களுக்கு அடிப்படை பொருட்க-ளைத் தருபவர்களுக்கு உங்கள் வாடிக்கை யாளர் போக்கு அறிந்து, அவதானித்து, நிர்வகிப்பது எந்த வர்த்தகர்களுக்கும் முக்கியமானதாகும். இதை நீங்கள் சில நேரங்களில் நாளாந்தம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

உங்களின் பற்றுச் சீட்டுக்களை (Invoice) நேரத்திற்கு வாடிக்கையாளருக்கு அனுப்பி விட வேண்டும். அத்துடன் யார் யார் எப் போது பணத்தை அனுப்புகிறார்கள் என்பதை அவதானித்துக் கொள்ள வேண்டும். இரு வாரங்களுக்கு ஒருமுறை இந்த பற்றுச் சீட்டு அனுப்புதல் நன்று என பல விற்பண்ணர்-களும் தெரிவிக்கின்றார்கள்.

சில நேரங்களில் சிறிய நிறுவனங்களில் பணப்புழக்கம் மிகவும் முக்கியம் ஆகும். ஒரு மாதம் காத்திருப்பது பொருத்தமாகாது என்பது அவர்களின் அபிப்பிராயம். அத்து-டன் உங்களின் வாடிக்கையாளருக்கு நீங்கள் ஒரு செய்தியையும் அனுப்பகிறீர் கள். அதாவது உங்களின் கவனம் எங்கு இருக்கின்றது என அவர்களுக்கு தெரியப் படுத்துகிறீர்கள். உங்களின் பற்றுச் சீட்டுக் களை அனுப்பிவிட்டு உங்களுக்கு தேவை யான பொருட்களுக்கான அழைப்புக்களை நீங்கள் மேற்கொள்ளலாம்.

ஆரம்பத்தில் உங்கள் வாடிக்கையாளருடன் உங்கள் வசதிகளை வகுத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக 30 நாட்களுள் பணம் வராவிட்டால் தொடர்ந்து பொருட் களை விநியோகம் செய்ய முடியாது என்பது இனி கொடுக்கல் வாங்கல் 'காசு மட்டும்' என்ற விதிக்குள் அடங்கும் என்பது.

அடுத்ததாக ஏன் உமது வாடிக்கையாளர் ஏன் பணத்தைத் தர மறுக்கிறார் என ஆராய்ந்து பார்க்க வேண்டும். உங்களது சேவையிலே அல்லது நீங்கள் விற்கும் பொருளிலோ உள்ள தராதரத்தைப் பார்க்க வேண்டும். சரியான தராதரம் இல்லாவிட்டா லும் வாடிக்கையாளர் நேரத்திற்கு பணத்-தைத் தர மாட்டார்கள் இந்தப் பிரச்சினை-யை நீங்கள் சரி செய்யும் மட்டும் பணத்தை அறவிடுதல் உங்களுக்கு ஒரு கடினமான பணியாகவே இருக்கும்.

இன்னும் நீங்கள் விரைவாக 10 நாட்களுள் பணத்தை தரும் வாடிக்கையாளருக்கு ஒரு 2% கழிவு கொடுக்கலாம். ஆனால் தற் போது அநேகமானோர் இப்படிப்பட்ட கழிவு களை வழங்குகிறார்கள். அத்துடன் இந்த 2% வழங்கப்பட்ட வாடிக்கையாளர்கள் 10 நாள் தாண்டிய பின்னம் இந்த 2% எடுத்துக் கொண்டு பணத்தைத் தந்தால் இந்த 2% பெற அதைவிடக் கூட செலவாகும்.



ஆகவே வித்தியாசமாக நீங்கள் உடன-டியாக பணம் தரும் வாடிக்கையாளர்களை அனுக வேண்டும். அவர்கள் தரக்கூடிய சேவையின் அளவை அதிகரிக்கலாம். புதிய சேவையினை அறிமுகப்படுத்தப்படும்போது அவர்களுக்கு மலிவாக அறிமுகப்படுத் தலாம். அத்துடன் வருடாந்த கழிவுகளை விலையில் அறிமுகப்படுத்தலாம்.

ஆனால் உங்களின் சில வாடிக்கையாளர் பணம் தருவதை திருப்பி திருப்பி செய்து கொண்டிருந்தால் இது ஒரு வித்தியாசமான பிரச்சினையாகும். இப்படி சுயகௌரவம் இல்லாத வாடிக்கையாளர்களை நீக்குதலே நீங்கள் செய்யக்கூடிய வேலையாகும். ஒரு பொருளை அல்லது சேவையை செய்து விற்பது மிகவும் சிரமமானதாகும். அதற்கான பணத்தைப் பெறுவது அதைவிட சிரமமாக இருந்தால் அது தேவையில்லாத வேலை யாகும்.

அத்துடன் உங்களது வாடிக்கையாளர்களை பணம் தரும் வழக்கத்தையும் அவதானித்-துக் கொள்ள வேண்டும். வழமையாக நேரத்திற்கு பணம் தருவோர் அந்த வழமை யில் இருந்து தவறுமிடத்து நீங்கள் அவரை அழைத்து தவறுவதற்கான காரணத்தை அறிய முயல வேண்டும்.

இன்னும் நீங்கள் உங்கள் வாடிக்கையாளர் கள் பற்றிய Bankers Reportஐ வர்த்தகத் திற்கு ஏதாவது பணப் பிரச்சினை அண்மை யில் வந்ததா என அறிய வேண்டும். இது உங்கள் வியாபாரத்தை பாதுகாக்க நடவ-டிக்கைகளை எடுக்க உதவும்.

பணம் தரும் விதிக்கு இலகுவாக்கலும் ஒருவகையில் இதற்கு உதவும். அதிக மானோர் Credit Cardஐ பாவிக்க விரும்பு வார்கள். ஆனால் உங்கள் வங்கிக்கு நீங்கள் தரும் 2% 3% சேவைக் கட்டணம் உங்க ளுக்கு கட்டுமானமாக இருக்க வேண்டும்.

இறுதியாக Account Receiable என்பது உங்களின் பணம் அடுத்தவர் பையில் இருப்பதே. உங்கள் பணம் உங்கள் பையில் இருப்பதே பாதுகாப்பானதும் பிரயோசமான-தும் ஆகும்.

■ ■ ■


## வீடு வியாபார நிலையம் வாங்க விற்க

புத்தம் புது வாகனத்தை வெல்லுங்கள்

WIN







$499.900
SOLD
Western & Rutherford
4 Bedrooms 3 Washroom




$449.000
Western & Rutherford
3 Bedrooms 3 Washroom
கட்டு எண் 1. வடக்கு வாசல் வீடு



$299.900
Oldfinch & Morningside
3 Bedrooms 3 Washroom
Finised Basement



NEW CONDOS
In Down Town
& Scarborough
(Closing 2010)



165.000
0 % DOWN
Weston & Sheppard
2 Bedrooms 2 Washroom

AVAILABLE
GAS STATIONS
(PETRO CANADA, SHELL, ESSO, SUNOCO)
CONVENIENCE STORES
NEW HOMES & CONDOS

எனது அனுசரணையோடு
2008 ஆம் ஆண்டு
(14-02-2008 முதல் 31 - 12 - 2008 வரை)
முடிவிற்குள் வீடு ஒன்றை
வாங்கும் அல்லது விற்கும்
அதிஸ்டசாலி ஒருவருக்கு
புத்தம் புதிய Toyota Cruiser
ஒன்று பரிசாகக் காத்திருக்கிறது.

நம்பிக்கை நேர்மை நட்பான சேவைக்கும் அழையுங்கள்

Win a brand New TOYOTA - fj - CRUISER

*Some conditions may apply

Century 21
Affiliate Realty Inc.
Brokerage

சத்தி மருதப்பா
Sales Representative
(முழுநேர வீடு விற்பனை முகவர்)
416-816-1500

208 - 80 Corporate Drive,
Toronto, Ontario M1H 3G5
Bus: 416-290-1200
Fax: 416-290-1900

brightsun print - 416-845-6565

# உறவுக்கு கை கொடுப்போம்...



கே. எஸ். பாலச்சந்திரன்
ks@thaiveedu.com

பல இனங்கள் வாழும் கனடா போன்ற நாட்டில், இனங்களுக்கிடையே நல்லுறவைப் பேண வழிகள் கண்டறியப்படலாம். அவற்றை நடைமுறைக்கு கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். அது வரவேற்கப்பட வேண்டியவையே.

ஆனால் ஒரு சமூகம் தன்னளவில் முன்னேற்றம் காண வேண்டுமென்றால் அதற்கான முயற்சி அந்தச்சமூகத்தில் இருந்து தான் தொடங்கப்படவேண்டும். உதவி வெளியில் இருந்து வரும் என்று எதிர் பார்க்க முடியாது.

சமூகத்தை ஒரு வீடு என்று உருவகித்துக்கொண்டால், அதற்கான நான்கு பக்கச் சுவர்களும் சமமான உயரத்தைக் கொண்டிருப்பதுதான் மரபு.

அதேபோல ஒரு சமூகத்தின் வளர்ச்சியும், உயர்வும் ஏகோபித்ததாக இருக்கும்போது, அது ஆரோக்கியமானதாகின்றது.

எங்கள் சமூகத்தை எடுத்துக் கொள்வோமே. ஒரு தனிமனிதனின் வெற்றி அவருக்கு சந்தோசத்தை, உயர்ந்த வாழ்க்கை வசதிகளைத் தரலாம். ஆனால் அவரோடு உடன்பிறந்தவர்கள் வாழ்வில் நிமிர்ந்து கொள்ள அவர் உதவிசெய்ய நினைக்காமல் போவது கவலைக்குரியது.

நலிவுற்ற ஒருவருக்கு ஒரு மீன் கொடுக்கச்சொல்லவில்லை. அது அன்றைய பசியைப் போக்கலாம். ஆனால் மீன் பிடிக்க கற்றுக் கொடுத்தால் வாழ்நாள் முழுவதும் அவன் பசி போகும்.

எங்கள் சமூகத்தில் ‘அந்தஸ்து’ என்ற வார்த்தைக்கு கொடுக்கப்படும் விலை ஒருபக்கமிருக்க, அதற்கான விளக்கம் கூட விசித்திரமானது. நெருங்கியவர்களுக்கிடையே உயர்ந்து நிற்பது பெரிதாக நினைக்கப்படுகின்றது. ஒரு சிறிய கோட்டுக்கு பக்கத்தில் பெரிய கோடு போடுவதினால் அது பெரிய கோடு என்று நிரூபணமாகலாம். ஆனால் அந்தச் சிறிய கோடு என்றும் அப்படியே இருக்கவேண்டும். அது வளர்ச்சி பெற்றால் என் அந்தஸ்து என்னாவது என்று நினைத்தால் அது மகா கொடுமை.

பாரதி பாடினானே.. “சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காரடி” என்று.

### 13. மூளையில் உருவாகும் கட்டி (Benign brain tumour)

மூளையில் ஏற்படும் இக்கட்டி என்பது இரு வகையானதாக மருத்துவ அகராதியின்படி, வரைவிலக்கணப்படுத்தப் பட்டுள்ளது. அவையாவன:

(a) Malignant Brain Tumour:
இது பயங்கரமான ஒரு கட்டியாக உருவாகி, சத்திர சிகிச்சைமூலம் அகற்றினாலும் மீண்டும் உருவாகும் சந்தர்ப்பம் உள்ள புற்று நோய்க் கட்டியாகும். தப்பிக்கொள்வது கொஞ்சம் சிரமமானதாகும்.
(b) Benign Brain tumour: மூளையில் வளரும் சாதாரண கட்டி என்பது சத்திர சிகிச்சைமூலம் அகற்றினாலும் திரும்ப வளரும் சந்தர்ப்பம் குறைவு. ஓரளவு தப்பிக் கொள்ளலாம்.

ஆனால், இங்கு கொடிய நோய்க்கான காப்புறுதித் திட்டத்தின் வரைவிலக்கணத்தின்படி, இரு வகையான கட்டிகளினால் பாதிக்கப்பட்டவர்களும் நட்டஈடு பெறத் தகுதியானவர்கள் ஆவார்கள்.

### 14. எய்ட்ஸ் நோய் (Occupational HIV Infection)

ஒருவரின் உடலில் எய்ட்ஸ் நோய்க் கிருமிகள் பின்வரும் வழிகளில் தொற்றிக்கொள்ளும் என இந்நோய் பற்றிய ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

a. இன்னொருவருடன் தகாத, பாதுகாப்பற்ற முறையில் வைத்துக்கொள்ளும் பாலியல் உறவுகள் மூலம்.
b. இரத்த தானங்களினூடாக இன்னொருவரின் இரத்தத்தினைப் பெற்று உடலில் ஏற்றும்போது தொற்றலாம்.
c. இந்நோயால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணின் கர்ப்பப் பையில் வளரும் சிசுவுக்கு வரலாம். அல்லது தாய்ப்பால் ஊட்டும்போது தமது குழந்தைக்குப் பரப்பலாம்.
d. எய்ட்ஸ் நோயாளிக்கு மருந்து ஏற்றிய அதே ஊசியினை இன்னொருவருக்கு உபயோகிக்கும்போது தொற்றலாம்.

இங்கு எய்ட்ஸ் கிருமிகளினால் பாதிக்கப்பட்ட ஒருவர் ஏற்கனவே காப்புறுதி ஒப்பந்தம் செய்து வைத்திருந்தால் நட்டஈடு பெறலாம்.

ஆனால்...... முக்கிய நிபந்தனைகள்!

a. அது தவறான முறையில் பாலியல் உறவில்போய் எய்ட்ஸ் கிருமிகளை வாங்கி வந்த நோயாளியாக உள்ளார் என்பது மருத்துவ பரிசோதனையில் நிரூபிக்கப்பட்டால் நட்டஈடு வழங்கப்படமாட்டாது. அதாவது நட்ட ஈடு பெறவேண்டுமானால் நிரபராதியான நிலையில் இந் நோய்க் கிருமியால் பாதிக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.
b. கனடா அல்லது அமெரிக்காவில் உள்ள நுண் பரிசோதனைக் கூடத்தின் பரிசோதனை முறையில் அப்பாவித் தனமான முறையில் பாதிக்கப்பட்டவர் என்பது நிரூபிக்கப்படல் வேண்டும்.
c. ஒப்பந்தம் வலிமையுடையதாக இருக்கும் நிலையில் கனடா அல்லது அமெரிக்காவில் நிற்கும் காலங்களில் அப்பாவித்தனமாக எய்ட்ஸ் கிருமிகளினால் பாதிக்கப்பட்டவராக

36ம் பக்கம் பார்க்க...

EXPERT
BUILDING INSPECTIONS LTD
"Dedicated to Expert, Honest & Independent Inspections"
Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315
- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging
www.expertinspector.com
- Tough and Thorough Inspections by University of Toronto educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of ASHI and CAHPI-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week
ASHI MEMBER
CAHPI Ontario

# CALL ME @ 416-873-5780 I CAN ARRANGE

| MORTGAGE RATES | |
|---|---|
| Variable | Prime - 1.00% |
| Fixed | Call me |

## MORTGAGE NEEDS
- Pre-Approvel, First Mortgage, Second Mortgage
- Buying a Second and a Third Home,
- New Immigrants, Self-Employed, 0% Down Payment Mortgage
- Re-Finance (To pay off outstanding debts or Personal needs)
- Equity line of Credit (If you have Equity in your Home)
- Renew your Mortgage with lower interest rate

## PERSONAL NEEDS
- Line of Credit, Loan, Credit Card
- Secured Credit Card ( To Re-Estabilish your Credit)
- No Credit History, I can arrange a Credit card to start your Credit

## BUSINESS NEEDS
- Mortgage for the Commercial Properties
- Money to start the Business, Buy the Existing Business
- Money to buy the Inventory, Improvements (lease Hold)
- Line of Credit, Credit Card



Apex Creations - 416-297-0707



ViaFinancial Services Inc.

**Kethes Sivasubramaniyam**

Mortgage Consultant

**Cell : 416.873.5780**

**Our Office :** 5200 Finch Ave. E, Suite 304, Scarborough, ON. M1S 4Z5

RBC BMO Bank of Montreal TD Canada Trust Scotiabank

## வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

# KETVAR
## TAX & ACCOUNTING

304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
**Tel : 416-548-8005** Fax : 416-548-8006
Email : ketvar@gmail.com

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Serving Advice

Tax Problems?
Penalties?
Haven't Field?
We can help you...

# கொடிய நோய்களும் காப்புறுதி...

34ம் பக்கத் தொடர்ச்சி...

இருத்தல் வேண்டும். (உதாரணமாக, கனடாவில் காப்புறுதி ஒப்பந்தம் வைத்திருப்பவர் இந்தியாவில் போய் நிற்கும்போது எய்ஸ்ட் கிருமியினால் பாதிக்கப்பட்டு அது நிரூபிக்கப்பட்டால் நட்டஈடு இல்லை.)

d. எய்ட்ஸ் கிருமியினால் பாதிக்கப்பட்ட நோயாளி கனடாவில் அங்கீகாரம் இல்லாத மருந்துகள், சிகிச்சைகள் மூலம் இக்கிருமிகளை அழிக்க முயன்றிருந்தாலும் காப்புறுதி நட்டஈடு வழங்க மாட்டார்கள்.

e. இக்கிருமியினால் பாதிக்கப்பட்டவர் தீர்வு காணமுடியாது என உறுதிப்படுத்தப்பட்டால் பதினான்கு நாட்களுக்குள் காப்புறுதிக் கம்பனிக்கு அறிவித்தல் வேண்டும். மருந்துகளினால் தீர்வு காணமுடியுமானால் 90-180 நாட்களுக்குள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

### 15. மத்திய நரம்பு மண்டல சீரழிவு நோய் (Multiple sclerosis –MS)

உடலின் மத்திய நரம்பு மண்டலத்தில் ஏற்படும் சீரழிவு, அங்கு நுண்ணுயிர் எதிர்ப்பு சக்தியினைக் குறைத்து, தொடர்ச்சியான தீர்வு காணமுடியாத நோயாக வளர்ந்து, மூளை, மத்திய நரம்பு மண்டலம். ஏனைய நரம்புகள் யாவற்றினையும் பாதிக்கும் ஒரு நோயாக தொடர்ந்து உருவாகிக்கொண்டே போகும்.

ஆனால், இந்நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் நட்டஈடு பெறவேண்டுமாயின் இந்நோய் தொடர்பான காப்புறுதி வரைவிலக்கணப்படி, ஒரு மாதத்திற்கு தொடர்ச்சியாக நோயாளியின் அன்றாட நிகழ்வு பாதிக்கப்பட்டது என்பதற்கு ஒரு முதலாவது அறிக்கையும், இரண்டாவது அறிக்கை ஆறு மாதத்திற்குத் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு இருக்கின்றது என்பதும் ஒரு நரம்பியல் நிபுணரினால் பரிசோதனைக்கூட தரவுகளை அடிப்படையாக வைத்து அறிக்கை சமர்ப்பித்து இருத்தல் வேண்டும்.

அதாவது, இந்நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு ஆறு மாத காலத்தின் பின்பே நட்டஈடு அவரது கைக்கு வந்து சேரும்.

### 16.எண்ணங்களின் செயற்பாடுகளைக் கடத்தும் நரம்பு மண்டல கலங்களின் சீரழிவு நோய்(Motor neuron disease or ALS disesse Amyotrophic Lateral sclerosis)

மூளையில் ஒருவருக்கு உருவாகும் 'எண்ணங்கள்' என்ற செய்தி உணர்வுகளை உடலின் தசைகளுக்கு எடுத்துச் செல்லும் கலங்களில் ஏற்படும் ஒருவகையான இச்சீரழிவு என்னும் இக்கொடிய நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் தொடர்ந்து ஆறு மாத காலம் பாதிக்கப்பட்டு உள்ளார் என்பதனை ஒரு நரம்பியல் நிபுணரினால் பரிசோதனை கூட ஆய்வுகளின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்படும்போதே நட்டஈடு பெற தகுதியுடையவராவார்.

### 17. உடலின் உறுப்புகள் ஏதாவது மாற்றப்படுதல் (Major organ transplant)

இருதயம், சுவாசப் பை, சிறுநீரகம், கல்லீரல், எலும்பு மச்சை என ஏதாவது ஒன்று செயற்படாத நிலைமையில், இன்னொருவரின் உடலில் இருந்து எடுத்து நோயாளியின் செயற்படாத பகுதிக்குப் பொருத்த வேண்டிய நிலையில் ஒரு நோயாளி இருப்பாராக இருந்தால் அந்நோயாளி ஏற்கனவே இக்காப்புறுதி செய்து வைத்திருந்தால் நட்டஈடு பெறலாம்.

ஆனால், கனடாவில், காப்புறுதி செய்த ஒருவருக்கு உடலின் பகுதியினைத் தானம் செய்பவர்கள் மருத்துவரீதியாக அங்கீகரிக்கப்பட்டு கனடாவில் அல்லது அமெரிக்காவில் இச்சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

### 18. வாய்பேச முடியாத நிலை (Loss of speech)

ஒரு நோய் அல்லது விபத்து காரணமாக 'குரல்பெட்டி' (Voice box) என்ற உறுப்பினுள் ஏற்பட்ட பாதிப்பு முற்றான பாதிப்பாக உருவாகி என்றும் மீளப் பெறமுடியாது என்ற நிலைமையில் மருத்துவ அத்தாட்சிகளுடன் நிரூபிக்கப்படும்போது மட்டும் இந்நிலையில் நட்டஈடு பெறலாம். (சில காப்புறுதிக் கம்பனிகள் "தொடர்ந்து 180 நாட்களுக்கு பேசமுடியாத நிலைமை என்பது இருத்தல் வேண்டும்" என இந்நோய் தொடர்பாக நட்டஈடு வழங்குவதில் நிபந்தனை வழங்கியுள்ளது.)

### 19. கண் தெரியாத நிலைமை (Blindness)

மீளமுடியாத நிலைமையில் இரு கண்களும் முற்றாகப் பார்வை இழந்திருந்தால் மட்டும் நட்டஈடு பெறலாம்.

### 20. காது கேளாத நிலைமை (deafness)

இரு காதுகளின் செவிப் பறையும் மீளமுடியாத நிலையில் காது கேளாத நிலையில் இருத்தல் வேண்டும். ஒரு காதுப் பகுதியின் செவிப்பறை பாதிக்கப்பட்டால் நட்டஈடு கிடையாது.

### 21. உதடுகள் உடைந்த நிலைமை (Loss of limbs)

மேல், கீழ் உள்ள இரண்டு உதடுகளும் ஏதாவது விபத்தில் பாதிப்புக்குள்ளாகி (ஒரு உதடு பாதிக்கப்பட்டால் நட்டஈடு இல்லை.) அது சத்திர சிகிச்சையில் நீக்கப்பட்டு செயற்கையாகப் பொருத்தப்பட்ட நிலையில் இருந்தால் நட்டஈடு கிடைக்கும்.

### 22. நினைவு அற்ற நிலைமை (Coma)

நினைவு அற்ற நிலைமை என்பது குறைந்தது 96 மணித்தியாலங்கள் செயற்கைச் சுவாசம் பொருத்தப்பட்ட நிலையில் இருந்தால் மட்டுமே நட்டஈடு கிடைக்கும். மருந்துகளினாலோ அல்லது மதுபானம், போதை வஸ்துகளினாலோ நினைவு அற்ற நிலையில் இருக்கும் நிலைமையினை நட்டஈடு கோரலுக்கு நினைத்துப் பார்க்கவே முடியாது.

### 23. கடுமையான முறையில் தீக்காயங்களினால் பாதிக்கப்பட்ட நிலைமை (Severe Burns)

எரிகாயம் என்பது தோலின் ஆழத்தினைப் பாதித்த நிலையில் மருத்துவ அகராதியின் படி மூன்று பாகை தீக்காயமாக உடலில் குறைந்தது 20 வீதம் எரிகாயத்திற்கு உள்ளாகியிருத்தல் வேண்டும். இங்கு சிறு எரிகாயங்களை நட்டஈடு வழங்குவதில் கருத்தில் கொள்வதில்லை.

### 24. சுயமாக அன்றாட வாழ்வில் இயங்கமுடியாத நிலைமை (Loss of Independent Existence)

ஒப்பந்தம் செய்த ஒருவர் தமது 75வயதுக்கு முன்னர் தொடர்ந்து 90 நாட்களுக்குப் பின் வரும் ஆறு அன்றாட செயற்பாடுகளில் இரண்டு விடயங்கள் தம்மால் செய்யமுடியாத நிலைமை உள்ளது என வாழ்வின் இயங்கு சக்தியினை மதிப்பிடும் மருத்துவ நிபுணரினால் (Occupational therapist) நிரூபித்தல் வேண்டும். (ஆனால், இம்மருத்துவர் நோயாளியின் உறவினராகவோ அல்லது வர்த்தக உறவுகளில் இருப்பவராகவோ இருத்தல் கூடாது.)

1, சுயமாக எவருடைய உதவியும் இல்லாது குளிக்க முடியாத நிலைமை(Bathing)

2, சுயமாக உடைகள் அணிந்துகொள்ளவோ அல்லது களைந்துகொள்ளவோ முடியாத நிலைமை(Dressing)

3, சுயமாக மலசலகூடத்திற்குப் போக முடியாத நிலைமை(Toileting)

4, சமைத்த உணவை சுயமாக உண்ண முடியாத நிலைமை(eating)

5, படுக்கையிலோ அல்லது கதிரையிலோ படுக்கவோ இருக்கவோ அல்லது எழுந்திருக்கவோமுடியாத நிலைமை (Transfering)

6, மலம், சலம் போகும் உணர்வு நிலை தெரியாத நிலைமை (Bladder & Bowel Continence)

சித்தசுவாதீனமான நிலைமை, நினைவாற்றலின் சீரழிவுகள் போன்ற நிலையில் மேற்குறிப்பிட்ட ஆறு அன்றாட நிகழ்வுகளில் இரண்டு நிகழ்வுகள் சுயமாக இயங்க முடியாதவர் ஒரு நாளைக்கு குறைந்தது எட்டு மணித்தியாலங்கள் மருத்துவ கண்காணிப்பில் இருந்தாலும் இவ்வொப்பந்தத்தில் இருந்து நட்டஈடு பெற உரித்துடையவர் ஆவார்.

ஆனால், சாதாரண மனநிலை பாதித்து, தற்காலிகமான நிலையில் இருப்பவர்கள் இந்நட்டஈடு பெறும் வரைவிலக்கணத்தினுள் அடங்கமாட்டார்கள்.

■ ■ ■


KESAVAN LAW OFFICE

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும்
சந்திக்கலாம்

- Real Estate
- Business Law
- Immigration Law
- Family Law
- Last Wills
- Power of Attorney
- Affidavits



சட்டம் சம்பந்தமான சகல
தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

THANGAVEL M. KESAVAN
(Barrister & Solicitor)

Tel: 416-754-9843
Fax: 416-754-2362

5200 Finch Ave. East, Unit 302,
Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
Web: www.lawyers.com/kesavanlaw
E-Mail: kesavanlawoffice@bellnet.ca



www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam
416-400-6406

digi



இந்த மண்ணில் உங்களுக்கோர்!
சுய அடையாளம் தேவை!
அது தனித்துவமானதோர் வீடு



**RAJEEF KONESWARAN**
Broker
DIR: 416.568.1078

RE/MAX
# #1 NEGOTIATOR

**SASI KUNARATNAM**
Sales Representative
DIR: 416.754.HOME

"The Names Friends Trust & Recommend"

## Why Sell with Rajeef and Sasi

- ✔ As low as 1% commission*
- ✔ Buy a home with "0" Down
- ✔ Get up to $10,000 loan no interest for 60 to 90 days*
- ✔ Your house SOLD in 90 days or FREE commission*
- ✔ Buy or sell with us and use our moving truck FREE*
- ✔ You can't afford your payment? House needs renovation? Having a hard time selling? – We will sell or buy it!*
- ✔ #1 Tamil Realtor in Re/Max
- ✔ 2 Full-time Top Producing Realtors for the same price as hiring a single agent
- ✔ We know more because we sell more
- ✔ 24 Hours Rogers TV advertisement

**Call The Listing Experts For FREE Evaluation Of Your Home**




**WIN a Brand New 2008 Ford Escape HYBRID SUV!!**


Buy or Sell with Rajeef and Sasi in 2008 and have your name entered on a ballot for a draw to WIN a Brand New 2008 Ford Escape HYBRID SUV.

**Call Rajeef and Sasi Today!**


## RAJEEF & SASI SOLD OVER 110 HOMES IN 2007** 90 HOMES IN 2006**




**MCCOWAN/LAWRENCE**
3+1 Bedroom, 2 Washroom, Detached, A True Gem, The Upper Floor Feature, Fully Upgraded Bottom Up!




**MIDLAND & LAWRENCE**
3+2 Bedroom, 2 Washroom, Unique Bungalow, Hrdwd flr, Upgraded Lux. Kitchen, 2 Bdrm Bsmt w/ Sep Ent.




**LESLIE/HWY 7**
2 Bedroom, 2 Washroom, Pent House, Luxury Condo, 3 Open Balconies, Spectacular view!




**MORNINGSIDE/MCLEVIN**
3+1 Bedroom, 3 Washroom, Detached, Ideal for first time buyers!




**MEADOWALE/SHEPPARD**
4 Bedroom, 3 Washroom, Detached, Stunning Home, Lots of Upgrades, Oak Stairs, **Lucky #5**




**MEADOWVALE/SHEPPARD**
Absolutely Gorgeous Home, 3+1 Bedroom, 3 Washroom, Bright and Spacious, Oak Stairs, Sep Ent to Bsmnt.




**NEILSON/MCLEVIN**
2+1 Bedroom, 1 Washroom, Stunning Started Home, Balconies, Bright Bdrm, Spacious Kitchen, Close to Church, Park, Mall, Clinic.




**MEADOWVALE/SHEPPARD**
4+1 Bedroom, 4 Washroom, Semi-Detached, Model Home, Hardwood Flr, Maple Staircase, , Sept Ent to Bsmnt thro' Garage.




**MCCOWAN/DENISON**
4+1 Bedroom, 4 Washroom, Spacious and Bright 2 Storey, High Demand Location, Prof Fin Bsmnt w/ Sep Ent.




**LAWRENCE/MIDLAND**
2 Bedroom, 2 Washroom, Bright And Renovated, Spacious Corner Unit, Super Clean, w/ Great View.




**LAWERENCE/MANSE**
7+1 Bedroom, 3 Washroom, Detached, One of a Kind! Perfect 2 Family Home, Extensive 2nd Floor Addition.




**MEADOWVALE/SHEPPARD**
4 Bdrm, 3 Washroom, Detached Absolutely Gorgeous Home, Interlock Walkway, Maple Stairs, Prof. Landscape, Sep Ent to Bsmnt




**HARWOOD/ROSSLAND**
4 Bedroom, 3 Washroom, Detached, Immaculate, Open Concept, Double Door, Circular Oak Stairs, Jacuzzi.




**BRIMLEY/EGLINTON**
3+2 Bedroom, 2 Washroom, Detached Bungalow, Spacious and Bright, 2 Bedroom Basement Apt.




**9TH/REEVES WAY**
3 Bedroom, 3 Washroom, Detached, Golf Home, Bright, Spacious, Oak Stairs, Walk Out Lot.

RE/MAX EXECUTIVE REALTY INC. (1996), BROKERAGE
1125 KENNEDY ROAD, SUITE 2000, TORONTO, ON, M1P 4Y1
FAX: 416.285.7327
OFFICE: 416.285.8555
WEB: WWW.TEAMMAXPROS.CA

*Some conditions may apply *Not intended to solicit buyers and sellers currently under contract **Transactions completed where either buyer/seller is represented. Promotions cannot be combined. Different commission rate, fees and listings and marketing services may be offered by other Re/Max Franchisees and Sales Associates in Canada.

# கனடாவும் குண்டு குழியும்

சிவாஜினி பாலராஜன்
sivajini@thaiveedu.com




முழுமையாக வெயிலையும், அரிதாக மழையையும் கண்டு பழக்கப்பட்ட எங்கஞக்கு இந்நாட்டின் காலநிலை ஓர் அதிசயம் மட்டுமல்ல, ஆசையைத் தூண்டுவதாகவும் இருந்தது. ஆங்கிலப் படங்களில் பனியை ரசித்த காலத்தில் வாழ்க்கையில் எப்பொழுதாவது இந்தப் பனியை நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைக்குமா என ஏங்கிய காலம் போய், இனிமேல் இந்தப் பனியே வேண்டாம் என்று நினைக்கும் காலம் வந்திருக்கிறது.

இங்கே கனடாவில் எல்லாப் பருவ காலங்கஞம்அழகு சொட்டுகின்றன. பனிக் காலத்தில் ஒரே வெண்மை. (6 மாதம்.. கொடுமை!). அது முடிந்ததும் இளம் பசுமை நிறத்தில் வசந்த காலம், அழகு வண்ணப் பூக்கள், தளிர்விடும் மரங்கள் (அனுபவிப்பு). அப்புறம் கடும் பச்சை நிறத்தில் கோடை காலம். கண்ணில் படும் பூஞ்செடிகளை எல்லாம் வாங்கவேண்டும் என்ற வேகம் (கொண்டாட்டம்).இதன் பின்னர் வரும் செம்மஞ்சள்/மஞ்சள் வண்ண இலையுதிர்காலம். (புகைப்பட வேட்டை) இப்படி நாள்தோறும் மாறும் வனப்பு. எனினும், பனிக்காலம் கொஞ்சம் கொடுமையாகத்தான் தெரிகிறது.

இந்தப் பனிக்காலம் வரும்போதும் போகும் போதும் உயிரினங்களுக்கு நோயும் பிணியும் வருவது மட்டுமல்ல, கனடிய தெருக்கஞக்கும் பெருந் தெருக்களுக்கும் கூட நோய்நொடி வந்துவிடுகிறது. தெருக்கள் என்று சொல்வதைவிட, பெருந் தெருக்கஞக்கு வரும் நோய்தான் மிகவும் பாரதூரமானது. ஒவ்வொரு வருடமும் பனிக்காலம் முடிந்து வசந்த காலம் ஆரம்பிக்கும் நேரம் தெருக்கள் எல்லாம் குண்டும் குழியுமாகி விடும். அதுவும் இந்த ஆண்டு மிகவும் மோசமான முறையில் பெருந் தெருக்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. இப்பாதிப்பு தெருக்களைப் பாவிக்கும் சாரதிகளுக்கு மட்டுமல்ல, அரசாங்கத்துக்கும் ஒரு செலவு தானமாக அமைந்துவிடுகிறது.

சாலையின் அடித்தளத்து சீமெந்து-சரளைக் கலவை வெப்பத்தினால் சூடாகி இருக்கும் பொழுது, அதன்மீது தொடர்ந்து வாகனங்கள் போவதால் ஏற்படும் அதிர்வினால் அதன் உட்பக்கத்தில் வெடிப்பு ஏற்படும். பனியும் தண்ணீரும் இவ்வெடிப்பினுள் போய் உறைவதால் ஏற்படும் அமுக்க விசையினால் சீமெந்து-சரளைக் கலவை வெளியே பிதுங்கி, உறைபனியின் உறைவிடமாகிறது. பின்னர் மீண்டும் வெப்பநிலை ஓரளவு கூடும்பொழுது, உறைபனி உருகும். அதன் மேல் செல்லும் வாகனங்களே மேற்படி குண்டு குழிகளை உருவாக்குகின்றன.

இந்தக் குண்டும் குழியும் அரசாங்கத்துக்கு மட்டுமல்ல, பொது மக்களாகிய எங்களுக்கும் ஒரு விதத்தில் செலவை வைக்கின்றன. கிட்டத்தட்ட ஒவ்வொரு வருடமும் 165,000க்கும் மேற்பட்ட குழிகள் மாநகராட்சி மன்றத்



தால் நிரவப்படுகின்றன. சென்ற வருடம் ரொறன்ரோவில் 40,000 குழிகள் நிரவப்பட்டதாகவும் அதற்காக மாநகராட்சி மன்றம் 3.5 மில்லியன் டொலர் வரை செலவழித்ததாகவும் தெரிகிறது. இந்த வருடமும் பெருந் தொகையான தொழிலாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

குண்டு, குழிகள்மீது விழுந்தெழும்பிச் செல்லும் வாகனத்தின் சில்லுகள், suspension, Wheel alignment, shock absorbers, mufflers பாதிக்கப்படுகின்றன. பெரும்பாலான சாரதிகள் குண்டு குழிகளைக் கருத்தில் கொள்வதில்லை. அவர்கள் வேகமாகக் குண்டு குழிகளுள் விழுந்தெழும்பி ஓடுவார்கள். குண்டின் ஆழ அகலத்தைப பொறுத்து எங்கள் வாகனத்திற்கு மட்டுமல்ல, எமது உடலில்கூட சில சமயங்களில் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு. இப்படியான தெருக்களில் உள்ள குழிகளினால் வாகனங்களுக்கோ அல்லது எங்களுக்கோ ஏற்படும் பாதிப்புகளுக்கு நாங்கள் எங்கள் மாநகராட்சி மன்றத்திடம் நட்டஈடு கோரலாம்.
ஓராண்டில் ஒட்டாவா மாநகராட்சி மன்றத்திடம் இவ்வாற நட்டஈடு கேட்டு சராசரியாக 120 கோரிக்கைகள் (pothole claims) முன் வைக்கப்படுகின்றன. இவற்றில் கிட்டத்தட்ட 5% கோரிக்கைகள் ஏற்றுக்கௌ்ளப்படுகின்றன. ரொறன்ரோவிலும் குண்டு குழிகளினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நட்டஈடு வழங்கப்படுகின்றது. கடந்த வருடம் 13 சதவீத கோரிக்கைகளை ஏற்று நட்டஈடு வழங்கப்பட்டது. நட்டஈடுகளை வென்றெடுப்பது கொஞ்சம் சிரமமாக காரியம். மிகவும் அவதானமாகத் தடயங்கள் அனைத்தையும் திரட்டிச் செயற்பட வேண்டும். கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் மட்டுமல்ல, பிரித்தானியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளிலும் இவ்வாறு மாநகராட்சி மன்றங்கள் மீது பொது மக்கள் வழக்குத் தொடர்கிறார்கள்.

## நட்டஈடு கோருவது எப்படி?

இவ்வாறு pothole பாதிப்புக்கு உள்ளானோர் முதலில் தமது காப்புறுதி முகவருடன் கதைக்கவேண்டும். உங்கள் கழிபடு தொகையுள் (Deductible) அடங்கும் சேதம் ஈடுசெய்யப்பட மாட்டாது. சில்லுச் சேதத்துக்கு நட்டஈடு கோருவது கடினம். ஏனெனில், அது தெருக் கேட்டுக் காப்புறுதி (Road Hazard Insurance) என்னும் பிரிவினுள் அடங்கும்.

மேற்கண்ட வரையறையை விஞ்சிய பாதிப்பைக் குறித்து, உங்கள் மாநகராட்சி மன்றத்துக்குச் சென்று Pothole claim ஒன்றை முன்வைக்கவும். சம்பந்தப்பட்ட குழியைப் படம்பிடித்து, உங்கள் இழப்புத் தொகையைக் கணித்து, உரிய சான்றுகளைத் திரட்டவும்.

எச்சரிக்கை அறிவிப்புடன் கூடிய குழியினால் ஏற்பட்ட சேதத்துக்கு நீங்கள் நட்டஈடு கோரமுடியாது. உங்களுக்கு மிகவும் பாரதூரமான காயம், அல்லது உங்கள் வாகனத்துக்கு பாரதூரமான சேதம் ஏற்பட்டால் ஒரு சட்டவாளருடன் உசாவுவது நலம்.

கீழ்வரும் இணையத்தளத்தில் உங்களுக்குத் தேவையான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன், உங்கள் மாநகராட்சி மன்றத்துடன் தொடர்புகொண்டும் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

http://49th-parallel.blogspot.com/2008/04/city-will-pay-for-pothole-damage-but.html

http://blog.rogersradiointernet.com/halina-balka/2008/03/07/15/

http://wwwcaaqubec.com/Automobile/TruceConseils/CapsulesConseilsDetail.htm?TipsID=07554061-bb03-4c3a-b4ed-9dfd0a08ba75&lang=en

- குண்டு குழிகளைத் தவிர்த்து வாகனங்களைச் செலுத்துவது எப்படி?
- கவனமாகச் சாலையைப் பார்த்து, போதிய இடைவெளி விட்டு வாகனத்தைச் செலுத்த வேண்டும்.
- வழமையாகப் போகும் பாதையில் பழகிய பாதையில் பயணம் செய்வது நல்லது.
- இப்படியான குழிகளைத் தவிர்த்து வாகனத்தைச் செலுத்தும்பொழுது, நீங்கள் வாகனத்தின் கட்டுப்பாட்டை இழந்துவிடக் கூடாது.

நீங்கள் சாலையில் பயணிக்கும்போது பெரிய குழிகளைக் கண்டால், 416-599-9090 என்னும் தொலைபேசி இலக்கத்தைப் பயன் படுத்தி Pothole Hotline என்பதுடன் தொடர்பு கொண்டு # அடையாளத்தை அழுத்தி, 164 என்னும் இலக்கத்தில் சேதி தெரிவிக்கலாம். இது நாங்கள் கட்டாயம் செய்யவேண்டிய ஒன்று. "யாம் பெற்ற துன்பம் பெறுக இவ் வையகம்" என்று பேசாமல் இருந்துவிடாதீர்கள். அல்லது வேறு யாரும் அறிவிப்பார்கள்தானே என்று விட்டுவிடாதீர்கள். அத்தகைய போக்கை மாற்றிக்கொள்ளவும்.

■ ■ ■

NATIONAL
Driving Institute
Experienced Male & Female Instructors
will Teach for G1, G2 Road Test
Early Apointment for Road Test
Please Call
Mrs. Saththi
416•219•0181
905•653•3878

சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில்
முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 9000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 90க்கும் மேலான துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) ,
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services),
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 275,000 வரை காப்புறுதி

- சக்திவேல் -

தொலைபேசி: 416.706.3530, 905.428.9299, 905.763.8912
Fax: 905.428.9307 Email: george14@sympatico.ca

மன்னிக்கவும்!
வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!

# www.realhouse.ca

## முகவரி காட்டும் முகவர்களாய் நாங்கள், வீடு வாங்க விற்க அழையுங்கள்

**Markham & Denison**



**$354,900**

3 Bedrooms, 3 Washroom
Very Demand Location!!
Premium Lot, Main Floor laminate
And Ceramic, 2nd Floor Hardwood,
Freshly Painted, Demand Location,
Do-Not Miss This Home.

**McCowan & Denison**



**$439,000**

4+2 Bedrooms, 3 Washroom
Approx 2600 Sq Ft House
Freshly Painted,
Newly Renovated Kitchen, Roof
Seller Willing To Replace All Window,
Close To Markham/TTC Transit.
Walk To Schools, Plaza And Community Center.

**14th & 9th Line**



**$499,900**

4 Bedrooms, 3 Washroom
Brand New Oxward Build
Home In Very Demand Area. .
Hardwood Throughout Main Flr.
9' Ceiling, Circular Oak Staircase,
Close To School,
Hospital & Highway 407.

**Hwy 7 & 9th Line**



**$539,900**

4 Bedrooms, 3 Washroom
Corner Detached Home In
Demand Location!!...
Tastefully Painted, Front Exterior With Stone,
Upgraded Light Fixtures,
Upgraded Kitchen Cabinets,
Well Kept Home...***

**Sandalwood & Dixie**



**$389,900**

3 Bedrooms, 3 Washroom
Childsafe Cresent, Great Neighbourhood,
Very Clean & Bright,Big Deck,
Cold Room,
Front House Exterior With Stone..
Close To Brampton,New Hospital,
Schools, Park & Hwy 410.

**Markham & Bur Oak**



**$589,900**

5 Bedroom, 4 Washroom
Fully Loaded Upgrades
Over 70K By Royal Park Builder,
Upgraded Hardwood Staircase,
Close To School, Park & Shopping..
Steps To Go Station Public Transit.

**Markham & Bur Oak**



**$354,000**

3 Bedrooms, 3 Washroom
Luxury Freehold End Unit like Semi
Oak Stairs, Bright Basement, Tastefully
Painted, Close to School, Park & Shopping
Must See !! Priced for quick Sale !!

**Kennedy & Finch**



**$889,500**

4 Bedrooms, 5 Washroom
Custom Built Home In Very Demand Area.
Newly Renovated Kitchen with Granite
Counter Top & Granite Fl In Main Fl,
Finished Basement with Granite
C.Top & Flr In Kitchen & Bar,
Hardwood Flr Thru-Out The House,


**McCowan & 401**



**$216,900**

2 Bedrooms, 2 Washroom
Demand Location!!..Unobstructed View,
Beautiful Penthouse with Great Layout
.State Of The Art Facilities Including:
Exercise Room & Indoor Pool,
Close To Scarborough Town Centre,
Public Transit & Hwy 401.

**உங்களுடையது**



**அழையுங்கள்**



HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/Future Realty Inc., Brokerage***

262 Markham Road, Scarborough, Ontario M1J 3C5

**Bus.: 416.264.0101 Fax : 416.261.1519**

*Independently Owned and Operated, REALTOR



Apex Creations - 416-297-0707

**Thamil Suberamaniam (Selvan)**
Sales Representative
**Direct : 416.358.6200**
Email : thamilrealtor@gmail.com

**Mugunthan Nadarajah**
Sales Representative
**Direct : 416.276.8025**
Email : homelifemugunthan@gmail.com

Not Intended to Solicit Currently Listed Properties or Buyers Under Contract.

**Make the Right Move, at the Right Time, with the Right Professional**

# வியர்வை நாற்றம்...

17ம் பக்கத் தொடர்ச்சி...

முழுக் காலுறைகளும் கூட, பருத்தியில் செய்திருப்பின் மிகவும் நல்லது.

**காற்றுப் படும் பாதம்:** வெறுங்கால்களில் நடக்கும் சந்தர்ப்பம் வாய்ப்பின், கட்டாயம் செய்யுங்கள். மற்றும் பாதணிகளை அணிந்திருப்பினும், அடிக்கடி அவற்றைக் கழட்டி கொஞ்ச நேரம் வைத்திருக்க லாம். இதன் மூலம் சுத்தமான காற்று உங்கள் பாதங்களைக் கொஞ்சம் ஆசுவாசப் படுத்தும்.

**இயற்கை மூலப்பொருள் உடைகள்**
கூடியளவில் பருத்தி, பட்டு, கம்பளி போன்ற பொருட்களில் செய்த ஆடைகளையே அணியுங்கள். இவற்றின் மூலம் சுத்தமான காற்று உங்கள் உடலை வருடும். ஆனால் கடும் உடற்பயிற்சி செய்யும் இடத்தில், உயர்ந்த ரக நெய்யல் ஆடைகளை அணியும் தருவாயில், அவை சூட்டை உங்கள் உடலிலிருந்து தம்முள் வாங்கிக் கொள்ளும்.

**வாசனைக் களிம்பு பூசல்:** இரவில் படுக்கப் போகும் முதல், கமக்கட்டுப் பகுதி, உள்ளங்கைகள், பாதங்கள் ஆகியவற்றில் அந்தந்த இடத்திற்குப் பொருத்தமான களிம்பு மற்றும் பூச்சுக்களைப் பூசிக் கொள்ளுங்கள். இதிலும் வாசனைத் திரவியங்கள் கலக்காத பூச்சுக்களையே கட்டாயம் தெரிந்தெடுங்கள்.

**நீர் பருகுதல்:** முடிந்தளவு நீரைப் பருகுங்கள். தாகம் வந்தால் மட்டும் தான் நீரைப் பருகுவேன் என்று அடம்பிடிக்கா தீர்கள். தாகம் வந்தாலே, உடம்பிற்கு நீர் தேவை என்றுதான் அர்த்தம்.

**காலநிலைகளுக்கேற்ற உடை:** வெப்பமான காலநிலைகளில், மெல்லிய, அதிக பாரமில்லாத, உடலை இறுக்காத, இயற்கை மூலப்பொருளில் செய்த ஆடைகளை அணியுங்கள். குளிர்காலங்களில், இரண்டு மூன்று ஆடைகளை ஒருங்கே அணியுங்கள்.

**Caffeine பானம் அல்லது மது:** இவற்றை அறவே அருந்துவதைத் தவிர்க்கலாம். இவை இயற்பில் உடம்பில் உள்ள நீரை அற்றுப் போகச் செய்யும்.

சிலர் மணித்தியாலக் கணக்கில் குளித்தாலும், வியர்வையின் துர்நாற்றம் அகலாது. காரணம், சிலர் குளித்தாலும், வியர்வை பட்டு மணம் பரப்பும் முக்கிய பகுதிகளான கமக்கட்டில் இருக்கும் முடியை அகற்றுவதில்லை. முன்பே சொன்னதுபோல், பக்டீரியாக்கள் முடிகளில் பட்டால்தான், இம்மாதிரி வாடை வீசத் தொடங்குகின்றது. அதுவும் கமக்கட்டு என்பது காற்று புகாத பெரும் பகுதி. அதில் வியர்வை தங்கி இம்மாதிரி மணங்களைக் கொண்டுவந்து விடும். இன்னொருவிதம், சிலர் ஓரிரு உடைகளையே தினமும், கழுவாமல் அணிதல். அதில் முதலிலேயே வியர்வை நம் கண்காணாமல் படிந்திருக்கும். ஆனால், அதை மறுநாள் சும்மா போட்டாலே நாற்றம் வரும், ஆனால், இஸ்திரிபோட்டு மீண்டும் அணியும் போது, வருகின்ற நாற்றம் குடலைப்புரட்டி விடும். அது அணிபவர்களுக்குத் தெரிவதே இல்லை. உள்ளாடைகளையோ, தினம் தினம் மாற்றுதல் தான் முறை. அவைதான், உடலின் அந்தரங்கங்களை மிகவும் இறுக்கிப் பிடிக்கும் சமாச்சாரங்கள். அது இன்னொரு விதமான நெடியை உடலில் தோற்றுவித்து விடும்.

இன்னும் சில விடயங்கள் உண்டு. குறிப்பாகப் பெண்கள், நாளின் எந்த நேரமானாலும், சமைத்துவிட்டு, சற்று ஓய்வாக இருக்க எண்ணும் இடத்தில், குளியலைப் பொருட்படுத்துவதில்லை. சமைத்த மணம் போகக் குளிக்க வேண்டும். அத்துடன் அடுப்படியுடனே மாரடிக்கும்போது, அந்த வெப்பத்தில் உடல் நம்மையறியாமலே வியர்வையைக் கக்கும். அது அப்படியே அணியும் ஆடைகளை ஆக்கிரமித்துக் கொள்ளும். பிறகு குளிக்கலாம், காலையில் குளிக்கலாம் என்ற எண்ணம் அந்த காரணத்துக்காக ஆகவேண்டிய நினைப்பையே தட்டிச் செல்கின்றது. பிறகென்ன, அதே பிரச்சினைதான் இங்கும். இன்னும் கொஞ்சம் அந்தரங்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், படுக்கையில் இணையும், கணவன், மனைவி அடுத்தநாள் காலையில்கூட, குளிப்பது என்பது சிலர் வாழ்க்கையில் இல்லை என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். அது இன்னொருவித இம்சை. இப்படியே எழும்பி அரக்கப்பறக்க வேலைக்குப் போனால், நமக்குத் தெரிந்த அந்தரங்கம், சொல்லாமலே மற்றவர்களுக்குத் தெரிந்துவிடும். வியர்வை நாற்றத்தைப் போல, ஒரு கொடுமையான, மனதை சிறுமைப் பண்ணச் செய்யும் செயல் போல் ஒன்றில்லை. மற்றவர் மத்தியில் அவமானப்பட வேண்டும். அவர்கள் முகத்தைச் சுழிப்பதைக் காணலாம். சிலர் பழகவே விரும்பாதிருக்கலாம். சிலர், இருக்கும் பாதையில் நடந்து போனாலே, காற்றோடு மணம் துரத்திவந்து நம் மூக்கையடையும்.

வியர்வை மணத்துடன் ஒருவர் எவ்வளவு தான் தான் அறுசுவை விருந்து படைத்தாலும், அதைச் சாப்பிடும்போது, வாந்தியே எடுக்கும்நிலை வந்துவிடும். இது மனரீதியாகவும், இன்னார் தானே இதைச் சமைத்தார், என்று சிந்திக்கும்போது, சாப்பிடக்கூடி மனம் வராது.

இந்த நிலையை நாம் சற்று புரிந்து கொள்ள வேண்டும். பிறவியில் நாம் சந்தனக் கட்டையாகவே இருக்கலாம். ஆனால், எம்மேல் எந்த வேர்வை மணமும் இல்லை என்று மட்டும் நீங்களே உங்களைப்பற்றித் தீர்மானித்துக் கொள்ளாதீர்கள். எவ்வளவுதான், நீங்கள் மல்லிகையாக மணத்தாலும், கட்டாயம் இதற்கென்று விற்கும் anti persiparant, body spray, foot powder, perfumes போன்றவற்றைப் பாவிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். சரி, விலை கூடுதலாக வேண்டாம், அன்றி brand name ஆகக்கூட இருக்க வேண்டிய அவசியமில்லை. நம் தகுதிற்கேற்றாற்போல், பலவித விலைகளில், பலவிதத் தரவுகளில், இம்மாதிரி, வியர்வையைக் கட்டுப்படுத்தும் பூச்சுக்கள் மிஞ்சி மிஞ்சிப் போனால், டொலர் கடைகளில் கூட விற்பனையாகின்றன. வாங்கிப் பாவிக்கப் பழகிக் கொள்ளுங்கள். அதற்கு முன், கட்டாயம், கமக்கட்டில் உள்ள முடிகளை வாரத்துக்கொரு முறையாவது, அறவே மழித்துக் கொள்ள வேண்டும். பெண்களுக்கெனவே மென்மையான shavers, hair removal creams, remover pads போன்றவை கூட கடைகளில் உண்டு. எது உங்களுக்குத் தோதானதோ, அவைகளை வசதி போல் வாங்கி வைத்து சரியான நேரத்தில் உபகயோகியுங்கள். புடவை ஜாக்கெட்டுக்கள் உடலை இறுகப் பிடித்து வியர்ப்பதில் முதன்மை வாய்க்கின்றன. அது கமக்கட்டில், ஒரு அடையாளத்தையே வியர்வை மூலம் உண்டாக்கி விடும். பல ஆயிரம் பேர் முன்னிலையில் கையை உயரத்தூக்க வேண்டி வந்தால், அதைப்போல் அசிங்கம் வேறு ஒன்றுமில்லை. சற்று சிந்தியுங்கள். நாகரிகம் என்பது தலையில் இருந்து கால் வரையில் தான். ஆனால் அவை ஒவ்வொன்றிற்குமே தனிப்பட்ட முறையில் கவனம் தேவை. செய்யுங்கள். உங்கள் மேல் உங்களுக்கே அசைக்க முடியாத தன்னம்பிக்கை இதனால் உருவாகும்.

தாழ்வு மனப்பான்மை உருவாவது இப்படியான சம்பவங்களால்தான். மாற்றிப் பாருங்கள். ஒருவர் உங்களைச் சினேகமாய் பார்த்து சிரிக்க முன்னர், நீங்களே அவருக்கு உற்சாகமாய் 'ஹாய்' சொல்வீர்கள்.

■ ■ ■



I'm here to get your mortgage smarter and faster.
உங்களுக்கு அதிக கடன் பளு இருந்தால் அனைத்தையும் குறைந்த ஒரு மாதக்கட்டணத்தில் கொண்டுவருவதுடன் உங்களுக்கு அதிக பணத்தையும் சேமிக்க உதவுவேன்.

- **Residential**
- **Industrial**
- **Commercial**

**1st, 2nd, 3rd Mortgages Upto 100%...**

**வங்கி வட்டி வீதத்தை விட குறைந்தளவு வட்டி வீதம்**

**NO FEE FOR RESIDENTIAL MORTGAGES**
- Rate discount up to 3%
- Give me a call for free consultation
- Mortgages without no down payment

**We do the best for you**

நீங்கள் வங்குரோத்துக்கு போயிருந்தாலும் நிராகரிக்கப் பட மாட்டீர்கள். யாருமே நிராகரிக்கப் படமாட்டார்கள் அனைவரும் தகுதியானவர்கள். குறைந்த வட்டி வீதத்தில் ஈட்டுக்கடன் பெற்றுக்கொள்ளவும், கடன்கள் குறித்த இலவச ஆலோசனைகளுக்கும் அனைவரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான அகிலா செந்திலை அழையுங்கள்

When it comes to finding the Right Mortgage Solution to meet your needs, Please call **ME** befor making any **Decision!!!**

**Our interest rates starts from 0%**
- First-time Buyers
- Renewal
- Refinancing
- Pre-Approval
- Self Employed
- Bankruptcies
- Poor Credit
- New Immigrants
- Debt. Consolidation
- Construction Loans

invis

**After Approval**

# Joy is yours Pride is ours





**அகிலா செந்தில்**

**Akila Senthil**, AMP
*Senior Mortgage Consultant,*
*Team Leader, Platinum Award Winner*
*A Challenging Prosperity Long Term Experienced Team Leader*

**Cell: 416.895.4321**
104-5770 Hurontario St., Mississauga, ON L5R 3G5
Fax: 905-283-3339, Web: www.mortgageprincess.ca, E-mail: akilasenthil@invis.ca
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2



# S.P. IMPORTERS

ஒரே பிளாசாவில் நான்கு தனிப்பெரும் ஸ்தாபனங்கள்

**மிகப்பிரமாண்டமான *(15,000 சதுர அடி)* காட்சியறை கொண்ட தளபாட மாளிகை**



**கண் கவர் தளபாடங்கள்** Solidwood Bedroom set, Solidwood Diningroom Set, Leather Sofa Set, Kids Bedroom sets and more..

**அனைத்து வயதினருக்கும் தேவையான மெத்தை வகைகள்** (orthopedic, CiroPedic, Poster Pedic mattress andmore..)

**$100 OFF**
with purchase of $1500 of furniture

www.spimporters.ca

**416-266-3077**

# NO PAYMENT INTEREST for 1 YEAR*



# Your life.
# Your career.
# *Your call.*

If you're looking for a career that offers the potential for financial success and have the drive, discipline, energy, and self-confidence to run your own business, then consider becoming a Sun Life Financial advisor. Contact us to learn more about this rewarding career opportunity.



**Chandran Rasalingam**
Sales Manager
Bus 416-412-0401 ext 305
Cell 416-909-0400
Fax 416-412-1438
gnanachandran.rasalingam@sunlife.com

2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

Sun Life Financial

Sun Life Financial advisors are contracted with Sun Life Financial Distributors (Canada) Inc., registered in Quebec as a financial services firm.
© Sun Life Assurance Company of Canada, 2008.


இசைக் கருவிகள் அனைத்தும் சங்கமிக்கும் ஒரே இடம்
Gogulam
"Where you find Art"
கோகுலம்
இது ஒரு கலைக் களஞ்சியம்
20%- 50%
All Costume Clarence Sale
All Jewellery Clarence Sale
குஞ்சம் $4.00முதல்
உச்சிப்பட்டம் $3.00முதல்
ஜடைநாகம் $2.00முதல்
All காப்பு Clarence Sale இத்துடன்
தபேலா $125.00முதல்
பொங்கஸ் $25.00முதல்
Tamarin $10.00 முதல்
மிருதங்க Clape for sale
வயலின் Rosin 50சதம் முதல்
Shawl $8.00 முதல்
இவை மட்டுமல்லாது அழகிய
கண்கவர் வேலைப்பாடுகளுடன் கூடிய படுக்கை
விரிப்புகள் 50% கழிவு விலையிலும்
Pillow Cover $6.00 முதல்
All Wall Hunging Clothes Items for Clearence sale
Gift Item 20% - 50% Off
அனைத்து சுவாமிப் படங்கள் பூஜாப் பொருட்கள் உட்பட clearence Sale ல் பெற்றுக் கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.
காரில் ஒட்டும் கணேசா 1$ தும்பை all size clearence sale சிறியவர் பெரியவர்களுக்கான குர்த்தா, பாவாடை சட்டை, சுடிதார், சாரி, வேட்டி, பஞ்சாபி, Top's அனைத்தும் Clearence sale ல் பெற்றுக் கொள்ளலாம்
குத்துவிளக்கு, நிறைகுடம் set sale விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
Coffee trail அழகான வேலைப்பாடுகளுடன் கூடிய solitwood small table all clearence. அத்துடன் water fountin all size for sale‘ Pambo Flower vase, Banana leaf Bowl அனைத்தும் Clerence saleல் பெற்றுக் கொள்ள கோகுலத்தை நாடி வாருங்கள்..இத்துடன் cricket bat, wicked, caramboat உட்பட அனைத்தும் sale விலையில் பெற்றுக் கொள்ள கோகுலத்தை நாடுங்கள்.
Tel:(416) 265-2093
2654 Eglinton Ave, East, Scarborough, Ontario
M1K 2S3 Canada (Brimley & Eglinton)
E.Mail: info@gogulam.ca Web: www.gogulam.ca

from the firm foundations of creative photos

la photographie est un art




KARUNA PHOTOGRAPHY

- Wedding Photography
- Bridal Portrait Sessions
- Custom Reception Slideshows
- DVD Slideshows
- Custom Designed Albums
- Parent Albums
- Digital Proofs
- Digital Retouching
- Framed Prints & Canvases

elegant memorable real

416.467.4952

# என் நினைவில் சுஜாதா



தேவகாந்தன்
devakanthan@thaiveedu.com

ஆண்டுத் தொடக்கத்தில் அந்த மரிப்பு நிகழ்ந்தது. திரு. சுஜாதாவின் மறைவை முதன்முதல் கேள்விப்பட்டபோது அதிர்ச்சி தான் அடைந்தேன். ஆனாலும் மெல்ல அந்த நினைப்பு மனத்தைவிட்டு அகன்று அகன்று போய்க்கொண்டிருந்துவிட்டது. அவரது ஞாபகங்களைப் பதிவாக்கவேண்டு மென்ற எண்ணம் பெரிதாக என்னை அலைக்கழிக்கவில்லை.

சுஜாதா மறைந்து இன்றைக்கு இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. உயிர்மை, காலச்சுவடு இதழ்கள் அவருக்கான நினைவுப் பக்கங்களையும் வெளியிட்டுவிட்டன. இன்னும் ஆனந்தவிகடன் போன்ற வாராந்தரிகளில் அவர் பற்றிய ஞாபகங்கள் அவ்வப்போது பகிரப்படுவதோடு, அவரது எழுத்துக்களும் ஒரு தேர்வில் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இப்போது பார்த்து எனக்கு இப்படியொரு தவிப்பு எழுந்திருக்கிறது.

சிலவேளைகளில் மனத்துக்குள் ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் நினைவுகளை ஒன்று திரட்டிப் பார்க்கும்போது திடுக்கிடும்படியாய் ஆகிவிடுகிறதுதான். சிலரது ஞாபகங்களும் அப்படியே. நம்மோடு மிகநெருக்கமில்லை யென்று எண்ணிக்கொண்டிருக்கும்போதே, ஏதோ ஒருவகையில் அவர்களுடனான பழக்கம் ஆழமாக இருந்திருப்பதை எண்ணி வியக்கின்ற தருணம் வாழ்க்கையில் எப்போதாவது ஒருவருக்கு ஏற்படவே செய்திருக்கும்.

என் கதையும் அதுதான்.

சுஜாதா தமிழ் எழுத்துலகில் மிகப்பெரிய ஆளுமை. திரைப்படத் துறையிலும் அவருக்கு அதேயளவான மதிப்பும் மரியாதையும் இருந்தது. தினமணி, குமுதம், ஆனந்தவிகடன் போன்ற நிறுவனங்களின் கதவுகள்போலவே, சுஜாதாவுக்கு ஏவிஎம்'-மினதும், ஜெமினியினதும் கதவுகளும்கூட திறக்கும்.

மறக்கமுடியாத சில உன்னதமான சிறுகதைகளின் கர்த்தாவாய் இருந்ததோடு, சங்க இலக்கிய ஆர்வமும் அதுபற்றிய அறிவும் கொண்டவராய் அவர் விளங்கினார். நற்றிணை, சிலப்பதிகாரம், திருக்குறள் போன்றவற்றிற்கான அறிமுகமாய் அவர் இலகு தமிழில் செய்த இனிய எழுத்துக்கள் இன்றைக்கு தமிழிலக்கியப் பயிற்சி அற்றவர்களுக்கும் இளைய தலைமுறையினர்க்கும் நிறையவே உதவக்கூடியவை.

எழுத்துலகிலும் திரையுலகிலும் நிகரான செல்வாக்குப் பெற்றிருந்த திரு.சுஜாதாவின், எழுத்துக்களை, திரையாக்கங்களை மதிப்பிடாமல் ஒரு சக மனிதனாய், ஒரு இலக்கியவாதியை மதிக்கும் பண்புடையவராய் எப்படி அவர் இருந்தார் என்பதை என் அனுபவங்களினூடாகத் தொட்டுக்காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

தமிழ் நாட்டில் நான் தங்கியிருந்த காலத்தில் கணையாழி கவிதை அரங்குகளில்தான் சுஜாதாவை நான் முதன் முதலாகப் பார்த்தேன். ஆனாலும் ஓரிரு வார்த்தைகள் பேசியது தவிர, வேறு பெரிதான பழக்கமேதும் எமக்கிடையே ஏற்பட்டு விடவில்லை.

அம்பலம் மிஞ்சிகை (அம்பலம்.கொம்) வெளியாகி இரண்டாவது ஆண்டிலென்று நினைக்கிறேன். இலக்கியக் கூட்டமொன்றில் சந்தித்த நண்பரொருவர், 'சுஜாதா உங்களைச் சந்திக்கவேண்டுமென்று நீண்டகாலமாகத் தேடிக்கொண்டிருக்கிறார், அண்மையில் என்னைச் சந்தித்தபோதுகூட முகவரி அல்லது தொலைபேசி எண் கேட்டார், நான் இரண்டுமே அவருக்கில்லை, ஆனால் இம்மாத இலக்கியச் சிந்தனைக் கூட்டத்தில் அவரைப் பார்க்க முடியும், அப்போது உங்கள் விருப்பத்தைத் தெரிவிக்கிறேன் என்று கூறிவந்தேன்' என்றார். சுஜாதா என்ன விஷயமாக என்னைச் சந்திக்க விரும்பினார் என்று நண்பருக்குத் தெரிந்திருக்கவில்லை. வீட்டில் தொலைபேசி இல்லாததோடு, அடிக்கடி வீடு மாறும் அவஸ்தையிலும் இருந்த நான் இப்படித்தான் சிலபோது முகவரி இல்லாதவனாக ஆகியிருப்பேன். அப்படியான தருணங்களில் என்னைச் சந்திக்கக்கூடிய ஒரே இடம் இலக்கியக் கூட்டங்களாகவே இருக்கும். என்னை நண்பர் சந்தித்து விபரம் தெரிவித்தபோது மிகவும் காலதாமதமாகியிருந்தது. இருந்தாலும் மவுண்ட் ரோடு செல்ல நேர்ந்த ஒருநாள் அம்பலம் இணைய தள அலுவலகம் சென்று சுஜாதாவைச் சந்தித்தேன்.

கன்னத்தில் முத்தமிட்டால் திரைப்படப் பிரதியாக்கத்தில் நான் இலங்கைத் தமிழ் சார்ந்த பகுதியில் சுஜாதாவோடு வேலை செய்யும் சந்தர்ப்பம் அவ்வாறுதான் நேர்ந்தது. இது நிகழ்ந்து சில மாதங்களின் பின் மீண்டுமொரு முறை சுஜாதாவிடமிருந்து அழைப்பு. நேரில் பார்த்தபோது, 'இப்போது அங்கு டயலக் கோச்சாக இருப்பவரை வைத்துக்கொண்டு கன்னத்தில் முத்தமிட்டால் படத்தின் ரீ-ரிக்கார்டிங்கை முடிக்கமுடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். உங்களால் அந்த வேலையைச் செய்து கொடுக்க முடியுமா?' என்று கேட்டார். நான் கண்டிப்பாக முடியாது என்று மறுத்தேன். திரையுலகின் போக்கு எனக்குத் தெரியும், அங்கு பணத்துக்கும் பகட்டுக்கும் இருக்கும் மதிப்புப்போல் மனிதருக்கு இருப்பதில்லை, ஒரு இலக்கியவாதியாய் என் கவுரவம் எனக்கு முக்கியமென்பதுவே நான் மறுப்பிற்குச் சொன்ன காரணம்.

அப்படியெதுவும் நேராமல் தான் பார்த்துக் கொள்வதாய் எனக்கு உத்தரவாதம் தந்தார் சுஜாதா. நானும் ரீ-ரிகார்டிங் நடைபெற்ற ஸ்ருடியோவுக்கு மறுநாள் சென்றேன். சென்றேன் என்றால் போதுமானதில்லை. ஸ்ருடியோவிலிருந்து கார் வந்து அழைத்துச் சென்றது. அன்று பத்து மணியளவிலேயே தயாரிப்பாளர்களில் ஒருவராகிய திருமதி. சுஹாசினி வந்து என்னைப் பார்த்ததோடு, என் கவுரவம் குறையாமல் நடத்தப்படுவதற்கான அறிவுறுத்தல்களையும் உதவி இயக்குநர்களிடம் கூறிச் சென்றார்.

சுஜாதா சொன்னதையெல்லாம் எங்கே நினைவில் வைத்திருக்கப்போகிறார், ஏதாவது கவுரவப் பிரச்சினையெழுந்தால் பேசாமல் நடையைக் கட்டவேண்டியதுதான் என்பதே என் எண்ணமாக அதுவரை இருந்தது. ஆனால் சொன்னதை மறக்காமல், ஒரு இலக்கியவாதி மனம் வெந்து விடக் கூடாதென்பதை மிக ஞாபகமாக வைத்திருந்து அவர் செய்த ஏற்பாடு என்னை சிலிர்க்கவைத்துவிட்டது.

இன்னொரு சந்தர்ப்பம்.

இன்னும் சுஜாதாவின் அந்த முகமும், பார்வையும் நினைவழியாமல் என்னுள். மோப்பக் குழையும் அனிச்சம்போல் மிக மென்மையும் நளினமும் கொண்ட மனங்களும் இருக்கின்றன. அனிச்ச மலரை நான் பார்த்ததுமில்லை, உணர்ந்ததுமில்லை. ஆனால் சில அற்புதமான மனங்களைச் சந்தித்திருக்கிறேன். அவற்றுளொன்று சுஜாதாவினது.

ஒருமுறை சுஜாதாவை வீட்டிலே சந்தித்து அவரோடு கூடிக்கொண்டு இயக்குநர் மணிரத்தினத்தைச் சந்திக்கச் செல்வதாக இருந்தது. ஒரு காலை வேளை பத்து மணியளவில் சுஜாதா வீடு சென்றேன்.

சுஜாதா அவசரமாக அப்போதுதான் வெளிக்கிட்டுக்கொண்டிருந்தார். நான் சென்றதும் உள்ளே வந்தமரும்படி கூறி விட்டு எடுத்துச்



செல்லவேண்டிய சில கோப்புக்களைச் சரி பார்த்தும், சில தாள்களை தேடியும் கண்டு பிடித்து உள்ளே வைத்துக்கொண்டும் சுஜாதாவிருக்க, அவரது மனைவி அப்போது சோபாவிலே தான் உட்கார்ந்திருந்தவர், என்னைப் பார்த்து, 'பாருங்கள், தேவகாந்தன்! எப்போதும் இப்படித்தான். ஓய்வென்பதே இல்லை. மூன்று நான்கு மணிநேரம்கூடத் தூங்குவது கிடையாது. சாப்பாடுகூட அப்படித்தான். இப்போது உங்களோடு வருவதற்கு நேரமாகிவிட்டதென்று காலையில் எதுவும் சாப்பிடாமல் தான் வரப்போகிறார். நீங்கள் சாப்பிட்டு வந்தீர்களா?' என்று கேட்டார். நான் சாப்பிட்டு வந்ததாகத்தான் சொன்னேன். 'பரவாயில்லை. கொஞ்சமாகச் சாப்பிடுங்கள். நீங்கள் சாப்பிட்டால், அவரும் ஒரு இட்லியாவது சாப்பிட்டுவிட்டு வருவார்' என்றார் அவர்.

எனக்கு ஒருமாதிரிப் போய்விட்டது. இதய சத்திர சிகிச்சை முடிந்து தேறிக்கொண்டிருப்பவர் சுஜாதா. அவருக்காகவேனும் சாப்பிடலாம்தான். ஆனால் ஒரு வீட்டில் அந்தமாதிரி ஏதுகாரணத்தால் செய்வதும் ஒரு கவுரவக் குறைவுதான். சாப்பிட்டுச் சென்றிருந்த வேளையிலும், சாப்பிடும்படியும், கொஞ்சமாகச் சாப்பிடுங்கள் என்றும் உபசாரம் பண்ணியிருந்தால், நான் சில வேளை மனம்நோகாமல் சாப்பிட்டிருக்கக் கூடும். ஆனால் இன்னொருவர் சாப்பிடுவதற்காக தான் அங்கே சாப்பிட நேர்வதை தன்மானமுள்ள மனது பொறுக்காது. இருந்தாலும் சுஜாதாவின் உடல்நிலையைக் கருதி சாப்பிடவே முடிவுசெய்தேன். பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைகிறதை நயத்தக்க நாகரீகமாக நம்புகிறவன் நான்.

அப்போது என் முகத்தில் ஏதோ பட்டுப்பூச்சி மொய்ப்பதுபோல் உணர்விலாகி நிமிர, சுஜாதாவின் கண்கள் என்மீது படிந்தும் மிதந்தும் விலகியுமாய் சஞ்சரித்துக்கொண்டிருந்ததைக் கண்டேன். அந்தக் கண்களில் இருந்த உணர்வு என்னவென்பதை இப்போதும் என்னால் அறுதியிட்டு உரைக்க முடியவில்லைத்தான். என் மீதிலான இரக்கம், சுயஇரக்கம் என்பதில் எது அது? வகையுரைக்க முடியாவிட்டாலும் அது அபூர்வமானவோர் உணர்வு.

நான் ஒன்றோ இரண்டோ இட்லி சாப்பிட்டேன். சுஜாதா ஒரு இட்லி சாப்பிட்டார் என்று ஞாபகம். அதுவும் நின்ற நிலையில் தாள்களைச் சரிபார்த்து வைத்துக்கொண்டே.

கோப்பி குடிக்கிறபோதுதான் சுஜாதாவின் மனைவி சொன்னார், 'தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள், தேவகாந்தன். சுஜாதா சாப்பிடவேண்டுமென்பதற்காக அல்ல, நீங்கள் சாப்பிடவேண்டும் என்பதற்காகத் தான் அப்படிச் சொன்னேன்' என்றார்.

நான் அதிர்ந்துபோனேன்.

அப்போது சுஜாதாவின் முகத்தைப் பார்த்தேன். விகசித்துப்போய்க் கிடந்தது.

மனிதனாக வாழ்வது சுலபம். மனிதனாக ஒழுகுவது சிலபேரால்தான் முடிகிறது. அதுவும் சிலநேரங்களில்.

■ ■ ■



# 2008லும் வீட்டு விலை பலமாக இருக்கும்



s.k. பாலேஸ்
- வீடு விற்பனை முகவர் -
skbales@thaiveedu.com

பல்பட்டியல் சேவை (MLS) வீடுகளின் சராசரி விலை 10.6 வீதத்தால் உயர்ந்து 2004ம் ஆண்டில் $ 306,000க்கு வருமென எதிர்பார்க்கப்பட்டது. மேற்குக் கனடாவின் பலமான வீட்டு விற்பனை விலைகள் மீது அழுத்தத்தைக் கொடுக்கிறது.

2008ல் இப்போதுள்ள வீட்டுச் சந்தைகள் ஒரு நிலைப்பட்டு விலைகளின் மீதுள்ள அழுத்தம் எடுபடும். 2008ல் சராசரி வீட்டின் விலை (பல் பட்டியல் சேவை MLS) 5.2 வீதம் உயர்ந்து ஏறக்குறைய $ 322,000ல் நிற்கும்.

சற்று முன்னோக்கி 2009ம் ஆண்டைப் பார்ப்போமானால் MLS சராசரி விலை 3.8 வீதத்தால் அதிகரித்து $ 335,000 அளவில் நிற்குமென அறியப்படுகின்றது.

## வீட்டு விலையைப் பாதிக்கும் காரணிகள்

### பொருளாதாரம்

2007 பின்பகுதியில் கனடாவின் பொருளாதாரம் வேகம் குறைந்து காணப்பட்டது. வருடாந்த G.D.P. வளர்ச்சி 2.9 வீதம் குறைந்து 2007ன் இரண்டாம் காலாண்டு வருவாயை விட 3.8வீதத்திலும், முதலாம் காலாண்டை விட 3.5 வீதமும் இறங்கியது.

கனடாவில் பலமான டொலர் தான் 2007ம் ஆண்டில் 3ம் காலாண்டுப் பகுதியில் G.D.P யின் வளர்ச்சியைக் குறைக்க உதவியது. கனடாவின் பலமான டொலர் தான் கனடாவின் இறக்குமதிப் பொருட்களின் விலையைக் குறைக்கவும் ஏற்றுமதிப் பொருட்களின் கிராக்கியையும் குறைக்கும். இதனால் கனடாவின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும். ஆனாலும் வளர்ச்சி வீதம் 2006ம் ஆண்டு 4வது கால் ஆண்டை விட 1.5வீதம் அதிகமாகவே இருந்தது. 2007க்கு என பொருளாதார வளர்ச்சி 2.6 வீதமாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. 2008ல் அது 2.4 வீதமாக இருக்கும்.

நுகர்வோர் பொருளாதாரம் தொடர்ந்து மெதுவாக வளர்ந்தது. தனிநபர் செலவு வருடத்துக்கு 3.0 வீதம் 2007ன் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் உயர்ந்தது. இத்துடன் ஒப்பிடும் போது 2வது காலாண்டில் 5.9 வீதமும் முதலாவது காலாண்டில் 3.4 வீதமும் உயர்ந்தது. ஆனாலும் நுகர்வோர் 2008ல் பொருளாதாரத்தை மேன்மைப்படுத்த வட்டி வீதம் இன்னும் குறைவாக இருப்பதால் நுகர்வோர் குறிப்பிடத்தக்க தாக்கத்தை தங்கள் செலவு செய்யும் சக்தியில் போடமாட்டார்கள்.

தொடர்ந்தும் கனடாவின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் காரணிகள் அதன் ஏற்றுமதியும், உற்பத்தித் தொழில் துறை வேலைகளுமாகும். 2007ல் தொழில் வாய்ப்புகள் 100,000 பதவிகள் குறைந்துள்ளன. அமெரிக்காவின் பொருளாதாரம் இன்னும் பாதிப்படையாமல் இருக்க வேண்டுமானால் அதன் வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட வேண்டும். அத்துடன் வீட்டு நிர்மானத்துறையில் அமெரிக்க அரசு எடுக்க இருக்கும் நடவடிக்கையிலும் தங்கியுள்ளது.

தொழில் உற்பத்தி 2007ல் 0.35 வீதத்தால் குறைவடைந்தது. (மூன்றாவது காலாண்டில்) உற்பத்தித் துறையின் உற்பத்தி வருடம் 2.8 வீதம் குறைந்தது. அதேநேரம் சேவை செய்யும் துறை 3ம் கால் நூற்றாண்டுப் பகுதியில் 3.8 வீதத்தால் உயர்ந்தது. மொத்த விற்பனை சுரங்கத் தொழில், நிதித்துறை, கட்டிட நிர்மானத்துறை போன்றவை இவ் உயர்வுக்குக் காரணிகளாக அமைந்தன.

முடிவாக உள்ளூர் கொள்வனவு சக்தி 2008ல் கனடாவின் பொருளாதார விரிவாக்கத்துக்குக் காரணியாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. நுகர்வோர் வாங்கும் சக்தியும் ஊதிய உயர்வும், குறைந்த வட்டி வீதமும் இந்தப் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணிகளாகும்.

கனடாவின் பணவீக்கம் 2007ல் 2.4வீதமாக இருந்தது. 2008ல் 2.3ஆக இருக்குமெனக் கூறப்பட்டது. கனடாவுடைய மொத்த பணவீக்கம் 2007ல் 1.7 வீதத்தால் அதிகரித்தது.

### அடமான வீதம்

அடமான வீதம் 2007ன் ஆரம்ப முடிவு காலத்துள் 100 அடிப்படைப் புள்ளிகளால் குறைந்துள்ளன. இதற்குப் பலகாரணிகள் உண்டு. அமெரிக்காவின் பொருளாதாரம் பெரிய வீழ்ச்சியை அடையலாம். அப்படியானால், அமெரிக்க சேமிப்புப் பத்திர விற்பனையில் பெருவீழ்ச்சி ஏற்படலாம்.

கனடாவில் G.D.P.ல் ஏற்பட்ட சிறு நெருடல் கனடாவின் கடன் வழங்கலில் ஏற்பட்ட கட்டுப்பாடுகள், கனடாப் பணத்தின் பெறுமதி அதிகரிப்பு 2008ம் ஆண்டுக்கான அடமான வீதத்தில் சிறு ஏற்ற இறக்கங்களை ஏற்படுத்தவும். அடமான வீதம் 25-75 அடிப்படைப் புள்ளிகளுக்குள், 2008ல் இருக்குமெனவும் அது 2009ல் ஒரு நிரந்தர இடத்தில் நிலை கொள்ளுமெனவும் நம்பப்படுகிறது.

### குடிவரவு (குடிவரவிலிருந்து குடிபெயர்வு கழிந்த மீதமாகும் தொகை)

2007ம் ஆண்டில் குடிவரவிலிருந்து குடி பெயர்வைக் கழித்து வந்த தொகை 5.4 வீதம் உயர்ந்து 228,000க்குள் இருந்தது. இது 20008ல் 235,000 ஆக உயரலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் புள்ளிவிபரம் கனடாவின் வீட்டுத் தேவைக்கு ஆதரவாக உள்ளது. புதிய குடிவரவாளர்கள் முதலில் வாடகை வீடுகளில் தங்கினாலும் கனடாவின் சொந்த வீடுகளுக்குக் குடிபோவார்கள். ALBERTA, COLOMBIA, SASKATCHEWAN மாகாணங்களுக்கிடையில் ஏற்படும் குடிவரவு குடி அகல்வுகள் இம்மாகாணங்களில் வாடகை மற்றும் சொந்த வீடுகளுக்கான தேவையை அதிகரிக்கும். இது 2008லும் தொடரும்.

### தொழிலும் வருவாயும்

2007ல் தொழில் வாய்ப்பு 2.3 வீத நல் வளர்ச்சி கண்டது. இதனுடன் ஒப்பிடும்போது 2006ல் அதிக புதிய வேலைகள் உருவாக்கப்பட்ட நிலையிலும் 1.9 வீத வளர்ச்சிதான் காணப்பட்டது. 2007ல் அநேக கனடா மக்களுக்கு வேலை கிடைத்தது. இதனால் கனடாவில் தொழில் இல்லாதோர் தொகை குறைந்தது.

2008ல் வேலைவாய்ப்பு 1.5 வீதத்தால் அதிகரித்தும் தொழில் அற்றோர் தொகை 6 வீதத்தால் குறைந்தும் காணப்படும். இவை கனடாவின் தொழிற்சந்தையில் நல்ல அபிவிருத்தியாகக் காணப்பட்டாலும், கனடாவின் பொருளாதாரத்துக்கு எவ்வளவு நன்மை எனச் சிந்திக்க வேண்டும்.

கனடாவின் உற்பத்தித்துறை தற்போது சிறிது பாதிக்கப்பட்டுள்ளது. இதற்குக் கனடாவின் பணத்தின் பெறுமதி உயர்ந்ததே காரணம்.

2008ம் ஆண்டில் புதிய வீடுகளின் விற்பனை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

■ ■ ■





# எழுத்தாளர்



வி. கந்தவனம்
kanthavanam@thaiveedu.com

## இலக்கிய மரபு

பிற கலைகளைப்போன்று இலக்கியத்துக்கும் விதிமுறைகள் இருக்கின்றன.

எழுதப்படுவனவெல்லாம் இலக்கியமாகா. கலைத்துவம் வாய்ந்த எழுத்துக்களே இலக்கியமாகக் கருதப்படுகின்றன.

கலைக்காவன்றி, சமுதாய மேம்பாடு கருதி ஒரு படைப்பினை ஆக்குகின்றபோதும் அதில் ஒரு கவர்ச்சி, அழகு அல்லது கலைத்துவம் இல்லாது போனால் எவர்களுக்காக எழுதப் படுகின்றதோ அவர்களே அப்படைப்பினை நிராகரித்தல் கூடும்.

கலை பற்றியும் அழகு பற்றியும் இதுவரை யாம் முன் வைத்த கருத்துகள், இலக்கியத்தின் அடிப்படை இயல்புகளைச் சிறிதேனும் விளக்கியிருத்தல் வேண்டும். மேலும் -

இலக்கியம் என்ப தென்ன இலங்கிடும் உள்ளு ணர்வு
இலக்கியம் இன்ப ஊற்று இயற்கையின் அழகுக் கோலம்
இலக்கியம் தெளிந்த ஞானம் ஈர்த்துளம் ஆளும் ஆற்றல்
இலக்கியம் மனித வாழ்க்கை இவையெலாம் தருமெ முத்து.

ஒட்டி உணர்ந்து நெறியிலே – கலை
முட்டி வடியும் முறையிலே
இட்டுத் தெரிந்த எழுத்திலே – பொருள்
கட்டி வடித்தல் இலக்கியம்.

என்றெல்லாம் இலக்கிய உலகம் என்ற நூலில் இலக்கியம் பற்றி விளக்கியிருத்தலையும் காண்க.


எழுத்தைக் கலைத்துவமாக்கும் முயற்சி, வீடு கட்டும் ஒரு முயற்சி. வீட்டை எப்படி வேண்டுமாயினும் கட்டலாம். மண்ணால் கட்டலாம்; கல்லால் கட்டலாம்; மரத்தாலும் கட்டலாம். இரண்டு அறைகளாகவோ நான்கு அறைகளாகவோ பல அறைகளைக் கொண்ட பெரும் மாளிகையாகவோ அமைக்கலாம். பின்னர் விரும்பியவகையாக அதனை அழகுபடுத்தலாம்.

ஆனால், வீட்டுக்கும் ஏனைய கட்டடங்கள் அனைத்துக்கும் அடிப்படையானதும் அவசியமானதும் ஒன்றுள்ளது. அதுவே அத்திவாரம் எனப்படுவது. அத்திவாரம் இன்றியும் வீடுகளை அமைக்கலாம். அவை தற்காலிகமானவையாகவே இருக்க முடியும். உறுதியான வீட்டுக்கு முறையான அத்திவாரம் இன்றியமையாதது.

இலக்கியத்துக்கும், அத்திவாரம் போன்ற சில விதிமுறைகள் வளர்ச்சி பெற்ற எல்லா மொழிகளிலும் இருக்கவே செய்கின்றன. இவ்விதிமுறைகள் எழுத்தாளரின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் சட்டதிட்டங்களல்ல. மாறாக, அவரது முயற்சிக்கு முழுமையான கலைத்துவம் அளிக்க முயலும் வழிவகைகள். இவை, எமக்கு முன் வாழ்ந்த பெரும் இலக்கிய கர்த்தாக்களால், பலமுறை பரீட்சிக்கப்பட்டுச் சிறந்தவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை. பரம்பரை பரம்பரையாக அறிஞர்களால் கையாளப்பட்டவை.

தமிழ் மொழி நெடுங்கால வளர்ச்சி பெற்ற தொன் மொழியாதலால் இவ்வழிவகைகள் ஆழமாக வேரூன்றி விட்ட இலக்கிய மரபாக விளங்குகின்றன.

Law Office
T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.
தி. ஜெகதீசன்
(Barrister, Solicitor and Notary Public (on)
Off: 416 • 266 • 6154
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677
2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

தமிழ் இலக்கிய மரபைச் செவ்வனே அறிந்துகொள்ள வேண்டியது, ஒவ்வொரு தமிழ் எழுத்தாளரதும் தலையாய கடனாகும்.

## பசளை இல்லாத பயிர்

தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய நூல் ஒன்றினைப் படித்த அளவில், தமிழ் இலக்கிய மரபினை அறிந்துகொண்டதாக, எழுத்தாளர் பலர் அமைதி அடைகின்றனர். தமிழ் இலக்கண இலக்கிய நூல்களிற் போதிய பயிற்சி உள்ளவர்களே தமிழ் இலக்கிய மரபினை நன்கு அறிந்தவர்களாகக் கருதப்படுவர்.

தமிழ் எழுத்தாளர் பலருக்கு, ஆங்கில இலக்கிய மரபு நன்கு தெரியும்; பிரான்சு நாட்டின் இலக்கிய வளர்ச்சி தலைகரணம்; ரஷ்யா, சீனா போன்ற நாடுகளின் பொதுவுடைமைத்-தத்துவங்களுந் தண்ணீர்ப்பாடம். ஆனால், தமிழ் இலக்கிய மரபு அவ்வளவு தெரியாது. இஃது, அவர்களது குறை அல்ல. அவர்களது குடும்பநிலை, வளர்ந்த சூழல், கற்ற கல்விமுறை எல்லாமே இந்த நிலைக்குக் காரணங்களாக அமைகின்றன.

இன்னுஞ் சிலர், பழைய இலக்கியங்களைப் படிப்பதால் வரும் பயன் என்ன என்று கேட்கின்றனர். அவற்றின் பெருமைபற்றிப் பேசுவதும் எழுதுவதும் பிற்போக்குவாதம் எனக் கருதுகின்றனர். பழைய இலக்கியங்கள் இக்காலத்துக்குப் பயனற்றவை என்றும் வாதாடுகின்றனர்.

இஃது ஒரு வியாதி. இதற்குப் பெயர் தாழ்வுச் சிக்கல். தனது வீட்டில் அம்பலவி மாம்பழம் இருந்தும் அடுத்தவன் வீட்டு அம்பலவிக்கு ஆசைப்படும் சிக்கல். ஒரு திருக்குறளை மேற்கோள்காட்ட விரும்பாது (தெரியாது), அதே கருத்துள்ள வேற்று நாட்டுப் பழமொழி ஒன்றைச் சொல்லி, கொய்யகம் கட்டும் சிக்கல்.

தாழ்வுச் சிக்கல் எழுத்தாளருக்கு இருத்தலாகாது. தாழ்வுச் சிக்கல் இருந்தால், தனித்துவத்தைப் பாதிக்கும்.

தமது இனத்தின் பாரம்பரியத்தையும் ஒப்பீட்டளவில் அதன் குறைநிறைகளையும் அறிந்து கொள்ளாத எழுத்தாளர் முழுமையான எழுத்தாளராக மாட்டார். பயளை இல்லாத நிலத்தில் வளரும் பயிருக்கு இவரை ஒப்பிடலாம்.

எழுத்தாளருக்குத் தன்னம்பிக்கை மிகவும் அவசியம். இந்தத் தன்னம்பிக்கை, அவர், தமது முன்னோரின் அருமை பெருமைகளை நினைக்கையில், தானாகவே வந்து பிறக்க வல்லது. இதனையே எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே, ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே என்றார் பாரதியார்.

தமிழ் இலக்கிய மரபு, தனிச்சிறப்பு வாய்ந்தது. காரணம், தமிழரின் வரலாறே அதற்குள் அடங்கிக் கிடக்கின்றது. பழந் தமிழரின் அகம் - புறம் ஆகிய வாழ்க்கை முறைகளையும் அவர்தம் பண்பாட்டையும் அறிந்துகொள்வதற்கு, பண்டைத் தமிழ் நூல்களைப் படிப்பது அவசியமாகின்றது.

மேலும், காலத்துக்குக் காலம் தமிழ் இலக்கிய வளர்ச்சி கண்ட மாற்றங்களை அறியவும் சொல்வளத்தைப் பெருக்கவும் மொழி கையாளப்பட்டிருக்கும் முறைகளை உணரவும் பழந்தமிழ் நூற்பயிற்சி இன்றியமையாததாகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழ்மொழியின் தனித்துவத்தையும் சிறப்பியல்புகளையும் விளங்கிக் கொள்ள இப்பயிற்சி உதவவல்லது.

எழுத்தாளருக்கு மொழிவளம் இருந்தால் மட்டும் போதாது. அதனைப் பிழையின்றிப் பிரயோகிக்கும் திறனும் இருத்தல் வேண்டும். இந்தத் திறனுக்கு ஆதாரமாக இருப்பது இலக்கண அறிவு.

எழுதும் பொழுது ஏற்படக்கூடிய இலக்கணம் பற்றிய கவலை, எழுத்தோட்டத்தைத் தடை செய்யுமா?

## இலக்கண அறிவு

எழுதும் பொழுது இலக்கணத்தைப் பற்றிக் கவலைப் படுகின்றவர் எழுத்தாளரேயல்லர். இலக்கணம் எழுத்தாளருக்கு இயல்பாய் வருதல் வேண்டும். இந்த இயல்பை அவர்கள் ஒரு திறனாக வளர்த்துக் கொண்ட பின்னர் எழுத்துலகில் காலடி எடுத்து வைப்பதே நல்லது. இதற்காகப் பண்டித அறிவைப் பெறும் முயற்சியில் இறங்க வேண்டியதில்லை. அடிப்படை இலக்கண அறிவே போதுமானது.

இலக்கணத்தை மரபு முறையில் கற்பதால் ஒருவரின் எழுத்தாற்றல் வளர்ந்துவிடும் என்று சொல்ல முடியாது. இஃது, இத்துறையில் ஆராய்ச்சி செய்தவர்கள் கண்ட முடிபு. மேலும், எழுதுகையில் இலக்கணத்தை மரபுவழி பிரயோகித்தல் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தால் எழுத்தோட்டம் தடைப்படும்.

எந்த இலக்கணம் எழுத்தாற்றலை வளர்க்கின்றதோ அதுவே பயனுள்ள இலக்கணம்.

மொழி மரபு, முறையான கல்வியிலும் சமூகத்தில் வாழ்ந்து வளர்வதன் மூலம் அதிகம் பெறப்படுகின்றது. அதனால், எழுத்தாளர் தமக்குச் சொந்தமான இலக்கணத்தைப் பின்பற்றுகின்றனர். அது அவர் வாழும் சூழலில் விளைந்தது. அதனால், அவரது சமூகத்தினால் விளங்கிக் கொள்ளக் கூடியது.

அதற்காக, கொச்சை நடையைப் பெருமளவு பின்பற்ற வேண்டும் என்பதில்லை. ஒரு மொழியின் பேச்சு முறை இடத்துக்கு இடம் வேறுபடலாம். ஈழத்துப் பேச்சு மொழியைத் தமிழ்நாட்டு மக்கள் விளங்கிக் கொள்வதிற் சிரமப்படுகின்றார்கள் என்று டாக்டர் மு. வரதராசன் முன்பு குரல் கொடுத்தார். தமது சமூகத்துக்கு மட்டுமன்றிப் பிற சமூகத்துக்கு எழுத விரும்பும் எழுத்தாளர் இக்கருத்தை மனங்கொள்ளல் வேண்டும். அவசியமற்ற கொச்சைச் சொற்களைத் தவிர்த்தும், தவிர்க்க முடியாதவிடத்து அவற்றைச் சீர்செய்தும் இலக்கண அமைதியை மேற்கொண்டும் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம்.

மாறாக, தமது சமூகத்தின் தனித்துவத்திற்கே (மண் வாசனைக்கே) முக்கியத்துவம் கொடுக்க விரும்புவோர் பிற சமூகத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. இருப்பினும், எழுத்தாளர் இலக்கணப் பிழையின்றி மொழியைக் கையாளும் திறனைப் பெற்றிருத்தல் வேண்டும்.

பொதுவாக, இக்காலத்தில் வளர்ந்துவரும் எழுத்தாளர்களது இலக்கியப் படைப்புகளில் இலக்கணப் பிழைகள் காணப்படுகின்றன. இத்தகைய பிழைகள் பலவற்றை, கலாநிதி க.செ. நடராசா அவர்கள், கனடாவில் ஒலிபரப்பாகும் தேமதுரம் வானொலி மூலம் சுட்டிக் காட்டியிருந்தார்கள். வளருந் தமிழில் நுழையும் வழுக்கள் என்ற தலைப்பிலே அவர் நிகழ்த்திய தொடர் உரைகளில், எழுத்தாளர்கள் விடும் எழுவாய் - பயனிலைப் பிழைகள் முதல் எழுத்துக் கூட்டல் பிழைகள் வரை பலவற்றை அவர் எடுத்துக் காட்டி, அவற்றுக்கான திருத்தங்களையும் விளக்கியிருந்தார். அவை அனைத்தும் அடிப்படை இலக்கணம் சார்ந்தவை.

அடுப்படி வேலைக்கேனும் அடிப்படை அறிவு வேண்டும் என்பார்கள்.

அடிப்படை இலக்கணமே தெரியாத எழுத்தாளர்கள் எழுத்துத் துறையில் நின்று நிலைப்பார்களா? இலக்கணமே தெரியாமல் இவர்கள் எழுத்துலகுக்கு வந்ததெவ்வாறு?

■ ■ ■

# புது புல்லு புது நாத்து

- மகேன் சிங்கராஜா -
mahen@thaiveedu.com

எம்மில் பலர் வீடு வாங்கி, வீட்டில் இருக்கவும் நேரமில்லாமல் புல்லு வெட்டவும் நேரமில்லாமல் அலைந்து திரியும் நேரத்தில் ஒரு விடிவெள்ளியாக உருவாக்கப்பட்ட புல் தான் சூழற்புல் (Eco Grass).

இச் சூழற்புல் மிரியம் கோல்ட்பேர்கர், போல் ஜென்கின்ஸ் ஆகியோரால் 1997ல் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இவர்கள் கனடாவின் வட பகுதியின் பைன் காடுகளிடையே (Pine Forests) செழிப்பாக வளர்ந்த புற்களைக் கண்டு, இவற்றை புற்தரையாக பயன்படுத்தினால் கனடாவை செழிப்பாக்கலாம் என தீர்மானித்து 7 வகையான புற்களின் சேர்க்கையைக் கொண்டதாக ஒரு புல்லினத்தை உருவாக்கினார்கள். அதுதான் இன்று வட அமெரிக்கா முழுவதிலும் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றது. இப் புல் இருவாட்டி மண்ணிலும்(Loam), நன்கு வடியக்கூடிய களி மண்ணிலும் (Well Drained Clay) மற்றும் வளமற்ற வரண்ட மண்ணிலும் (Infertile Dry Soil) அடர்த்தியாக வளரக்கூடியது. சூழல் புல்லானது, அதிக சூரிய வெளிச்சத்திலும், குறைந்த சூரிய வெளிச்சத்திலும், நிழற் பகுதியிலும் கூட வளரக் கூடியது. இது உங்கள் பராமரிப்பு நேரத்தையும் செலவையும் குறைக்கக் கூடியது.

புல்வெட்டுதல் (Grass Cutting), நீர்ப்பாய்ச்சல்(Watering), வளமாக்கியிடல்(Fertilizing) என்பன தேவையற்ற ஓர் புல்வகையே சூழலுக்குகந்த புற்தரையாகும் (Eco Lawn). சாதாரண புற்தரையில் நீங்கள் ஒரு கிழமைக்கு ஒரு தடவை வெட்டுவதை விட சூழல் புற்தரையில், ஒரு மாதத்திற்கு ஒரு தடவையே வெட்டவேண்டிய தேவை இருக்கும். இதனால் புல் வெட்டும் செலவை குறைக்கலாம். அத்துடன் செலவுகூடிய இரசாயனங்கள் வாங்கவும் தேவையில்லை. சூழல்புற்தரையில் எந்தவொரு ஆபத்தை விளைவிக்கக் கூடிய வளமாக்கிகளோ அல்லது கிருமிநாசினிகளோ பயன்படுத்தத் தேவையில்லாதபடியால், உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்பத்திற்கோ இரசாயனங்களால் வரக்கூடியஆபத்தை இச் சூழல் புற்தரை நீக்குகின்றது. மேலும், சூழல் புற்கள் நீண்ட வேர்த்தொகுதியைக் கொண்டிருப்பதால், குறைந்தளவிலான நீர்ப்பாய்ச்சல், அல்லது நீர்ப்பாய்ச்சாமலேயே வளரக் கூடியது.

> “ புல்லு வெட்டி களைத்து விட்டீர்களா?
>
> அல்லது புல்லு வெட்ட நேரமில்லையா?
>
> இதோ ஒரு புதிய வழி.
>
> அப்பாடா...
>
> என்ன நிம்மதிப் பெருமூச்சா...? ”

எமது புவியில் பசுமை இருப்பது நல்லது என்பது எங்கள் எல்லாருக்கும் தெரியும். ஆனால் சூழலைப் பாதுகாக்க இன்னும் அதிகமாக முயற்சிக்கும்படி மக்களிடம் கேட்டால் அதனை தியாகமாக நினைப்பார்கள். வசதிகளை விட்டுக் கொடுக்கும் அதே நேரம் சூழலுக்கு நட்பான மாற்றீடுகளை (Eco friendlier alternatives) ஏற்படுத்துதலே பொறுப்பள்ள செயலாகும். பசுமையில் வாழ்தல் உண்மையில் பணத்தையும் மேலும் அதிகமானவற்றையும் சேமிக்கச் செய்யும்.

## இந்தப் புல் எப்படி நேரத்தைச் சேமிக்கிறது

இதன் பராமரிப்பு இலவசமானது. சூழல்புற்கள் விரைவில் முளைக்கக் கூடியது. ஆனால், வேர்விட்டதும் மிகவும் மெதுவாக வளரும் ஓர் புல்லினம் இதுவாகும். இது மெல்லிய அலகுகளை (Thin blades) கொண்டிருப்பதால் தடிப்பான அலகுகளைக் கொண்ட புற்களைப் போல் அதிகளவு நீர் தேவைப்படாது. சூழல் புற்களுக்கு மிக நீளமான வேர்கள் இருப்பதால், தேவையான போஷணைப் பொருட்களையும் நீரையும் அதிகஆழத்திலிருந்து இயற்கையாகவே பெறக்கூடியவை. இவை மண் தின்னலை (Erosion) கட்டுப்படுத்துவதுடன் மண்ணை இறுகப் பற்றிப் பிடிக்கக் கூடியவை. இதன் மூலம், நீர்ப்பாய்ச்சல், வளமாக்கிகளை இடு தல், மண்ணை காற்றூட்டம் செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் நேரத்தை மிச்சமாக்குகின்றது. பாரம்பரியப் புற்களைப் போலன்றி, இதன் வேர்கள் 9 அங்குலங்கள் (22.86செ.மீ) வரை கடினமான களி மண்ணிலும், மணல் மண்ணில் 14 அங்குலங்கள் (35.56 செ.மீ)வரையும் செல்லக் கூடியவை.

## இது எவ்வாறு சூழலை பாதுகாக்கிறது

நீர் சேமிப்பு அத்தியாவசியமானதாக இருக்கும் பிரதேசங்களுக்கு, சூழல்புற்கள் (Eco Grass) மிகவும் பொருத்தமானதாகும். சூழல் பற்றி அக்கறை கொண்டிருக்கும் சமூகத்திற்கு, இது ஓர் கனவுப் புற்தரையாகும் (Dream Lawn). இது மெதுவாக வளர்வதால், புல் வெட்டும் நேரத்தைக் குறைப்பதுடன், பச்சைவீட்டு வாயு (Green House Gas Emissions) வெளியேற்றத்தையும் குறைக்கின்றது. ஒரு மணித்தியாலத்திற்கு புற்தரையை இயந்திரத்தினால் வெட்டும்போது (Lawn mower) ஏற்படும் மாசடைதல், ஒரு மணித்தியாலத்திற்கு 40 புதிய மோட்டார் வாகனங்கள் ஓடுவதால் ஏற்படும் மாசடைதலுக்குச் சமனானது.

புற்தரை வெட்டும் இயந்திரம் (Lawn mower), இலைகளை சீராக்கும் இயந்திரம் (Trimmer), ஏனைய நில அமைப்பாக்கும் (Landscaping) இயந்திரங்களை எரிபொருளால் நிரப்பும் போது சிந்தும் எண்ணெயின் வருடாந்த அளவு 13 Million கலன்களாகும். இது Exxon Valdez எனும் அமெரிக்க எண்ணெய் கப்பலிலிருந்து 1989 இல் சிந்தப்பட்ட எண்ணெயை விட 2 மில்லியன் கலன் (7,570,9823.6 லீற்றர்கள்) அதிகமாகும். சூழல்புற்கள் மாதத்திற்கு ஒரு தடவை மட்டுமே வெட்ட வேண்டியிருப்பதால், ஆபத்தான பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தை குறைப்பதுடன் எண்ணெய் சிந்துவதையும் விரைவாக குறைப்பீர்கள்.

வண்டுகள், பூச்சிகளின் எச்சங்களால் இப் புற்கள் அதிகம் பாதிக்கப்படமாட்டா. இந்த உயிரினங்கள் ஈரலிப்பான மண்ணில் எச்சங்களாக (Grubs) இரண்டு வருடங்களுக்கு உயிர் வாழ்ந்து கோடைகால ஆரம்பத்தில் முதிர்பருவம் அடைகின்றன. இந்த முதிர்

49ம் பக்கம் பார்க்க...



பருவ உயிரினங்கள் 6 கிழமைகட்கு மட்டுமே உயிர் வாழ்கின்றன. எனவே இவற்றின் முதல் இலக்கு இனப் பெருக்கம் செய்வதாகும். பெண்பூச்சிகள், தமது முட்டைகளை குளங்கள், ஆறுகளின் கரைகளின் ஈரலிப்பான மண்ணில் இடுகின்றன. இன்று இந்த எச்சங்களை நன்கு நீர்ப்பாய்ச்சப்பட்ட புற்தரைகளில் காணலாம். இதற்குக் காரணம் பாரம்பரிய புற்தரைகளில் உண்மையான வேர்த்தொகுதிகள் இல்லாமையும், இதன் காரணமாக நீங்கள் உங்கள் புற்தரையை மென்மையானதாகவும் ஈரலிப்பானதாகவும் மாற்றுவதற்கு, அதிக நீர் பாய்ச்ச வேண்டியிருப்பதாகும். இதன் மூலம் பெண்வண்டு முட்டையிட ஏற்ற சூழலை நீங்கள் உருவாக்குகிறீர்கள். இப் புற்தரைக்கு மிகவும் குறைந்த நீர் தேவைப்படுவதால், தரை கடினமாகவும் ஈரலிப்பற்றதாகவும் இருப்பதால் முதிர்ந்த வண்டுகள் தமது முட்டைகளை இடுவதற்கு இவ் இடத்தை தேர்ந்தெடுப்பதில்லை. எனவே இவை தமது முட்டைகளை இடுவதற்கு வேறு இடத்திற்குச் செல்வதால், எச்சங்கள் உங்கள் புல்தரையில் காணப்படாது.

சூழல்புற்கள் மிக விரைவாக முளைத்த போதும் மிகவும் மெதுவாகவும் அடர்த்தியாகவும் வளரும். இவை 9 அங்குல நீளத்திற்கு வளர்ந்த போதும், இவை மிகவும் மென்மையானதாக இருப்பதால், 4 அங்குல உயரத்தில் மடிந்து விடுவதால் கம்பளம் போன்ற அமைப்பைத் தோற்றுவிக்கின்றன. வெட்டிய தோற்றத்தை நீங்கள் விரும்பினால், மாதமொரு தடவை 3-4 அங்குல உயரத்திற்கு வெட்டி விடலாம்.

உதாரணமாக, உங்கள் புல்லை வெட்டுவதற்கு ஒரு கிழமைக்கு $40 தேவைப்பட்டால், வருடாந்தம் புல்வெட்டும் செலவில் $800 டொலரை சேமிப்பீர்கள். சூழல் புல்லுக்கு நீர்ப்பாய்ச்சல் அல்லது விலையுயர்ந்த வளமாக்கிகள் தேவைப்படாததால் உங்கள் மொத்த வருடாந்த சேமிப்பு $1000 டொலரை விட அதிகமாகும். எனவே ஓர் சூழல் புல்தரை இருந்தால், நீங்கள் சூழலைப் பாதுகாப்பது மட்டுமல்லாது, உங்கள் வங்கிக் கணக்கையும் பாதுகாக்கின்றீர்கள். "வாழிட நிலஅமைப்பு: பராமரிப்புச் செலவு, காலம், வளங்களின் ஒப்பீடு" (Residential Landscaps: Comparison of Maintenance Costs, Time, and Resources) என்னும் 2000 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட ஆய்வின் படி, கனடா ஈட்டுக்கடன் மற்றும் வீட்டு கூட்டுறவு நிறுவனத்திற்கான சூழலியல் வெளிநோக்கின் படி, வரட்சியைத் தாங்கக் கூடிய, மெதுவாக வளரக் கூடிய குறைந்த பராமரிப்புச் செலவைக் கொண்ட சூழல் புல்தரை போன்ற புற்தரைகள், எல்லா வகையான நில அமைப்பிலும் "குறைந்த வருடாந்த பராமரிப்புச் செலவைக்" கொண்டிருப்பதுடன் எல்லா ஆய்வு செய்யப்பட்ட நில அமைப்புகளிலும் "அதிகநேரம், பொருள் மற்றும் செலவு சிக்கனமான" வையாக இருக்கும்.

## சூழல் புல்தரையை எவ்வாறு உருவாக்கலாம்?

எந்த ஒரு விதையை விதைப்பதற்கும் மண்ணை பண்படுத்தல் இன்றியமையாத ஒன்றாகும்.. புதிய விதையை விதைப்பதற்கு முன்னர் களைகள் இல்லாது ஒழிப்பது அவசியம்.

## எப்போது விதையிட வேண்டும்?

இவ் விதையை விதைப்பதற்கான சிறந்த காலம் ஆகஸ்ட் பிற்பகுதியிலிருந்து செப்டம்பர் பிற்பகுதி வரையிலாகும். தொழிலாளர் தின (Labour day) விடுமுறை மிகவும் உகந்ததாகும். குளிரான பின்னேர வெப்ப நிலைகள், அதிகாலை பனி மற்றும் இலையுதிர்கால மழை ஆகியன புல் முளைக்கவும் வளரவும் சரியான நிலைமைகளை உருவாக்குகின்றது. அத்துடன் இயற்கையில், இலையுதிர்காலத்தில் ஒருசில களைகளே முளைக்கின்றன. ஆகவே உங்கள் புதிய சூழல் புற்தரையானது குறைந்த களைகளின் போட்டியுடன் மிகவும் விரைவாக ஸ்தாபிக்கப்படுகின்றது.

ஏப்ரலின் நடுப்பகுதியிலிருந்து ஜூன் மாத நடுப்பகுதி வரை விதையிடல் இரண்டாவது தெரிவாகும். மண்ணின் வெப்பநிலை $15^0$C ($60^0$F)ஆக வரும்போது விதைகளை தூவுங்கள். அநேகமான களைகள் வசந்த காலத்திலும் கோடைகாலத்தின் ஆரம்பத்திலும் முளைப்பதுடன், இது உங்கள் சூழல் புற்தரையுடன் தவிர்க்க முடியாதவாறு போட்டியிட்டு வளரும். சூழல் புற்தரை 3 அங்குல நீளமானதாக வந்த பின்பு, நீங்கள் களைகளை பல்வேறு விதமான களை கொல்லிகளைப் பயன்படுத்தி அகற்ற வேண்டியிருக்கும்.

களைகள் மிக வேகமாக வளர்வதால், அவை, வசந்த காலத்தில் நடப்பட்ட விதைகளை விட வேகமாகவளரும். மண் ஈரலிப்பாக இருந்தாலொழிய வசந்த காலததில் நடப்பட்ட நாற்றுகளுக்கு நாளாந்தம் நீர் விட 15-30 நிமிடங்கள் தேவைப்படும். பின்னேரங்களிலிருந்து நீர்விடுவதால் ஏற்படும் பங்கசு நோய்களிலிருந்து தவிர்ப்பதற்கு அதிகாலையில் நீர் விடுங்கள். புதிதாக நடப்பட்ட பகுதி பச்சை நிறமாக வந்தவுடன், உங்கள் மண் வகை மற்றும் வானிலை நிலைமைகளிற்கு ஏற்ப நீரை பாய்ச்சுங்கள். இப் புற்களை நாட்டி ஒரு வருடத்தின் பின்னர் நீங்கள் மீண்டும் நீர் விடும் அளவை மிகவும் குறைத்துவிடலாம்.

## சூழல் புல் விதையை விதைத்ததன் பின்னர்

சூழல்புற்கள் 7-14 நாட்களில் முளைக்கும். (இது மிக விரைவில் முளைவிடுவதுடன், பின்னர் மிக மெதுவாக வளர்கிறது). முதல் சில கிழமைகளில், விதைப்படுக்கையின் மேல் நடந்து செல்வதைத் தவிர்க்கவும். மென்மையான முளைகள் மிதிபடுவதை தாங்கமாட்டா. புற்கள் 4-5 அங்குலங்கட்கு (10-12 செ.மீ) வளர்ந்த பின்னர், நீங்கள் வெட்ட விரும்பினால் வெட்டலாம். இது புற்கள் வளர்ந்த 4-6 கிழமைகட்குப் பின்னர் மேற்கொள்ளப்படல் வேண்டும். ஒரு களைக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்க வேண்டுமென நீங்கள் நினைத்தால், விதைத்த பின்னர் 6 கிழமை வரை பொறுத்திருங்கள். சில இடங்களில் மற்ற இடங்களைப் போல் அடர்த்தியானதாக இராவிடில், இவை போதியளவு விதைகளைப் பெற்றிராததாக இருந்திருக்கும். இந்த இடங்களின் மேலாக விதைகளைத் தூவுவதற்கு பயப்பட வேண்டாம். இந்த இடங்கள் வெளியாக இருந்தால், உங்கள் புற்தரைகளினுள் களைகள் ஊடுருவ வழி ஏற்படும்.

## சூழற்புற்தரையை வெட்டுதல்

பாரம்பரிய "நன்கு வெட்டிய புற்தரை தன்மையை" நீங்கள் விரும்பினால், இடையிடையே வெட்டுதல் அவசியமாகும். உங்கள் புல்வெட்டும் இயந்திரத்திற்கு கூரிய அலகுகள் இருப்பதை உறுதிப்படுத்துங்கள். இதன் மூலம் புல்லிற்கு சேதம் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். உங்கள் புல்வெட்டும் இயந்திரத்தை 3 அங்குல (7.5 செ.மீ) உயரத்திற்கு வைத்துக்கொள்ளுங்கள். 3 அங்குலத்திற்கு குறைவாக வெட்டும் போது உங்கள் சூழல் புற்தரைக்கு சேதத்தை ஏற்படுத்தும். எல்லா தாவரங்களையும் போல சூழற் புற்தரையும், உயிர் வாழ்வதற்கு, ஒளித் தொகுப்பு செயல்முறை தேவைப்படும். புற்களின் வளர்ச்சியின் 1/3 பகுதிக்கு குறைவாக வெட்ட வேண்டாம். மிகவும் குட்டையாக வெட்டுவது புல் வளர்ச்சியைப் பாதிப்பதுடன் அதன் பலத்தையும் குறைக்கும். மக்கள் தமது புற்தரைகளை மிகவும் குட்டையாக வெட்டுவது மிகவும் பொதுவான புற்தரை பிரச்சனைகளுள் ஒன்றாக உள்ளது.

## ஏற்கனவே இருக்கும் புற்தரைகளை சூழல்புற்தரைகளாக மாற்றுதல்

ஏற்கனவே ஒரு பாரம்பரிய புற்தரை காணப்பட்டால், குறைந்த பராமரிப்புள்ள சூழல்புற்தரையாக மாற்ற வேண்டுமெனில், நீங்கள் பின்வரும் வழிகளை பின்பற்றலாம்.

### சேதன மாற்றம் (Organic Conversion)

விரைவான மாற்றத்திற்கு, பழைய புற்தரையை 2-3 அங்குல ஆழத்தில் வெட்டி முற்றிலுமாக அகற்றி விட வேண்டும். பின்னர் நன்கு கிளறி கூட்டி, ஓர் விதை மேடையை உருவாக்கவும். பின்னர் விதையைப் பரவி மண்ணினுள் விதைகள் உள் செல்லுமாறு கிளறி விடுங்கள். முடிந்தால் புற்தரையை மட்டமாக்கும் உபகரணத்தால் நிலத்தை மட்டமாக்குங்கள்.

இன்னோர் முறையாக, ஏற்கனவே காணப்படும் உங்கள் புற்தரையில் 4 அங்குலத்திற்கு புதிய மண்ணையிடுங்கள். நீங்கள் புதிய மண்ணை வாங்கும் போது வேறு ஒருவருடைய நிலத்தில் இருக்கும் களைகளையும் வாங்குகின்றீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இம்முறையில் உள்ள குறைபாடு இதுவாகும். இச் சந்தர்ப்பத்தில் மேலே விவரிக்கப்பட்டபடி, நீங்கள் இந்த களைகளை அகற்ற வேண்டும்.

### சேதனமற்ற மாற்றம் (Non – Organic Conversion)

ஏற்கனவே இருக்கும் புற்றரையில் களை-களை, களை நாசினியைக் கொண்டு அழிக்கலாம். சந்தையில் சூழலுக்கு ஏற்றவாறான புதிய சேதன களை கொல்லிகள் காணப்படுகின்றன. இவை நன்கு வேலை செய்யக் கூடியவை. அநேகமான களைகொல்லிகள் செயற்படுவதற்கு 2 கிழமைகள் காலம் எடுக்கும். உங்கள் பழைய புற்தரை இறந்து போனால், இறந்த புற்களையும் கழிவுகளையும் அகற்றி கடினமாக கூட்டுவதன் மூலம் இறுக்கமாக்குங்கள். அல்லது உங்கள் பழைய புற்தரையில், இறந்த புற்களுக்கிடையில் இலகுவாக விதையுங்கள். இறந்த புற்களுக்கிடையில் நேரடியாக விதைக்க வேண்டுமெனில், உங்கள் புதிய சூழல் புற்தரையினால் பழைய இறந்த புற்களை மறைப்பதற்கு 8 கிழமைகள் எடுக்கும். அத்துடன் உங்கள் புற்தரை இக் காலப்பகுதியில் கபில நிறமாகக் காட்சியளிக்கும்.

## உங்கள் சூழல் புற்தரையை பராமரித்தல்

உங்கள் சூழல் புற்தரை அமைக்கப்பட்ட பின் மிக வரண்ட பருவத்தில் மட்டுமே நீங்கள் நீர்பாய்ச்ச வேண்டியிருக்கும். நீர் விட வேண்டும் என நீங்கள் எண்ணுவீர்களாயின், அடிக்கடி மெல்லிய தூறலாக நீர் விடுவதை விட எப்போதாவது நன்கு நீர் நிரம்பக் கூடியதாக நீர்ப்பாய்ச்சுவது சிறந்ததாகும். இதன்மூலம் வேர்கள் ஆழமாகச் செல்வதற்கு வழிவகுப்பதுடன், புற்களை அதிக வரட்சியைத் தாங்கக் கூடியதாக்குவீர்கள். தேவையெனின், வசந்த கால ஆரம்பத்தில் அல்லது கோடைகால பிற்பகுதியில் மட்டும் மிகச் சிறியளவில் இடலாம். நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் ஆகியவற்றின் சமனான அளவுடனான வளமாக்கியை சிறிதளவில் இடல் சிறப்பானதாகும். இதன் மூலம், புற்கள் ஆரோக்கியமாகவும் அதே சமயம், வெட்டத் தேவையில்லாத அளவு மேல்வளர்ச்சி குறைவாகவும், இருக்கக் கூடியதாக பலம் வாய்ந்த வேர் வளர்ச்சிக்கு உதவும். அதிகுறைந்த வளமாக்கியிடல், நீர்ப்பாய்ச்சல் என்பவற்றுடன் குறைந்தபராமரிப்பு, குறைந்த செலவு மற்றும் ஆரோக்கியமான சூழலை நீங்கள் பெறமுடியும். அடர்த்தியான, ஆரோக் கியமான புற்றரையானது களைகள், நோய், வரட்சி, பூச்சித் தாக்கம் என்பவற்றுக்கெதிரான சிறந்த பாதுகாப்பாக அமையும். வருடாந்த அடிப்படையில் உங்கள் சூழல் புற்தரையை அளவுக்கதிகமாக விதையிடலானது, புதிய வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன், உங்கள் சூழல் புற்தரையை அடர்த்தியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும். அத்துடன் குளிர்காலத்தில் ஏற்படும் சேதம், பூச்சிகள் மற்றும் ஏனைய சேதங்களிலிருந்து விரைவாக மீளமைக்கவும் இவ் விதையிடல் உதவுகின்றது.

எப்படா இதிலிருந்து ஒரு விடுதலை கிடைக்கும் என எண்ணியிருந்த எம்மில் பலருக்கு கிடைத்தது நிம்மதி.

■ ■ ■

## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

மே மாதக் குறிப்புகள்

- அன்னையர் தினத்தை மே 11, 2008ல் கொண்டாடதிட்டமிடுங்கள்
- வீட்டிற்கு வெளியிலிருக்கும் குழாய் தொடர்புகளை திறந்து விடுங்கள் (Open garden hose connections).
- தளபாடங்கள் மற்றும் சுவர்களிலுள்ள வெடிப்புக்கள், உடைவுகளைத் திருத்தி மெருகிடுங்கள் (waxing).
- வெளிப்புறத்தில் அதாவது, யன்னல், கதவு ஓரங்கள் தீந்தையிட (Paint) வேண்டிய தேவையிருந்தால் அதனைச் செய்யுங்கள்.
- வீட்டினுள் தளர்ந்து காணப்படும் திருகாணிகள் (screws), கதவுகுமிழ்கள் (doorknobs) ஆகியவற்றை இறுக்கமாக்குங்கள்.
- புத்தக அலுமாரிகள், CD மற்றும் DVDகளை ஒழுங்குபடுத்தி அடுக்குங்கள். உங்களுக்கு தேவைப்படாது என்று கருதுபவற்றை அன்பளிப்பாக கொடுத்து விடுங்கள்.
- குளியலறையில் பாசி, பூஞ்சணம் (mildew) பிடித்திருக்கின்றதா என்பதை சரிபார்த்து தேவையானால் சுத்திகரிக்கும் கலவையால் (mildew remover) சுத்திகரியுங்கள்.
- கூரைகள், கூரையிலிருந்து நீர் வழியும் பீலிகள் (gutters), குழாய்கள் (downspouts) ஆகியவற்றில் கசிவுகள் இருக்கின்றதா என்பதை சரிபார்த்து தேவையெனின் திருத்தம் செய்யுங்கள்.
- வீட்டினுள்ளும் வெளிப்புறத்திலும் பூச்சிகள், எலி போன்றவை காணப்படுகின்றதா என்பதை கண்டறிந்து இவற்றை அகற்றுங்கள்
- வீட்டினைச் சுற்றி குளவிக் கூடுகள் (Wasps' nests) காணப்பட்டால் அதனை அகற்றுங்கள். தேவைப்படின் சரியான முறையில் அகற்றுபவர்களை (Professionals) அழைத்து அகற்றுங்கள்
- வெளிப்புறத்தில் தாவரங்களை வளர்ப்பதற்கு மண்ணை பசளையிட்டு தயார்ப்படுத்துங்கள். மாட்டுச் சாணம், கூட்டுப் பசளை (compost) ஆகிய சேதனப் பொருட்களை தோட்ட மண்ணிற்கு இடுங்கள்.
- வெளிப்புற புல்தரையில் மீண்டும் தாவரங்களை வளர்ப்பதற்குரிய விதையிடுங்கள்.
- யன்னலுக்கருகாமையிலுள்ள பிரதேசத்தில் (window boxes) வருடம் முழுவதும் நிரந்தரமாக வளரக் கூடிய தாவரங்களை (annuals and perennials) நாட்டுங்கள்.
- வெப்பமான காலத்திற்குரிய காய்கறிகளான மிளகு, தக்காளி, வெங்காயம், உருளைக் கிழங்கு போன்றவற்றை இப்போது பயிரிடலாம்.
- அளவுக்கதிகமாக வளர்ந்திருக்கும் தாவரங்களை (hedges) வெட்டி விடுங்கள் (Prune).

தொகுப்பு: மகேன் சிங்கராசா

# குடும்ப வன்முறை (Domestic Violence)

ஜீவா திசைராஜா
jeeva@thaiveedu.com



வீட்டினுள் நிகழும் வன்முறைகள் பலவிதம். இவற்றின் அறிகுறிகளை எவ்வாறு இனங் காணலாம் என்பதை நோக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஓர் நெருக்கமான குடும்ப வகை உறவு முறையினுள் உடலியல் (Physical), உளவியல் (Psychological), பாலியல் (Sexual), அல்லது நிதி சார்ந்த (Financial) வன் முறையாக ஏற்பட்டு வற்புறுத்தும் அல்லது கட்டுப்படுத்தும் நடத்தையாக உருவெடுப் பதே குடும்ப வன்முறையாகும் என Women's Aid Federation (பெண்கள் உதவி அமைப்பு) குடும்ப வன்முறையை வரையறுக் கின்றது.

குடும்ப வன்முறையானது பரந்த அளவிலான துஷ்பிரயோகங்களை (Abuse) உள்ளடக்கலாம் என்பதை இந்த வரைவிலக்கணம் குறிப்பிடுகின்றது. இவற்றுள் சில, சட்டங்களை மீறுதலாகவும் (Criminal offence), சில துஷ்பிரயோகங்கள் பாதிக்கப்பட்டவர் சமுதாயத்திற்குரிய நடவடிக்கை களை (Civil action) எடுக்கக் கூடியதாக வும் சில அவ்வாறு எடுக்க முடியாததாக வும் அமையும். குடும்ப வன்முறையானது ஓர் குறித்த சட்ட மீறலாக இராவிடினும், குறிப்பிட்ட அளவான குற்றவியல் நடவடிக்கைகளை விவரிக்கப் பயன்படுத்தப் படலாம். இங்கு, சட்டமானது குடும்ப வன்முறையின் மிகவும் பாரதூரமான செயல் முறைகளை அதிகமாக உள்ளடக்குவதற்கு முன்னுரிமை கொடுத்து குடும்ப வன்முறையை வரையறுக்கின்றது. உதாரணமாக 1996இன் வீட்டுச் சட்டம் (Housing Act), "அவர் சேர்ந்திருக்கும் நபரிடமிருந்தான வன்முறை, அல்லது அத்தகைய நபரிட மிருந்து வன்முறை ஏற்படக்கூடிய பயமுறுத்தல்கள்" என வரையறுத்தது.

HM Inspectorate of Constabulary பின்வரும் வரைவிலக்கணத்தை மிக அண்மையில் பயன்படுத்தியது. "ஓர் நெருக்கமான உறவு முறையினுள், எங்கேயாயினும், எப்போதாயி னும் தற்போதைய அல்லது முந்திய துணைவர்களால் ஏற்படுத்தப்படும் வன்முறை. இந்த வன்முறையினுள் உடலியல், பாலியல், உணர்ச்சிகள் சார்ந்த (Emotional) அல்லது நிதிசார்ந்த துஷ்பிரயோகங்கள் உள்ளடங்கும்".

உங்கள் கணவர் அல்லது ஆண் நண்பர் உங்களை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத் தினால், அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவர் ஓர் துஷ்பிரயோகமான உறவுமுறை யினுள் இருக்கிறார் என நீங்கள் சந்தேகித் தால், நீங்கள் இதற்கான அறிகுறிகளை அறிந்து கொள்வது இதிலிருந்து விடுபடுவதற்கான முதலாவது படிமுறையாகும். ஆண்களும் கூட குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டிருந்தபோதும், ஆண்களைவிட பெண்கள் ஓர் நெருக்கமான துணைவரால் 5 இலிருந்து 8 மடங்கு அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ் வன்முறை எதிர்ப்பாலினரிடையே மட்டுமல்லாது ஒத்த பால் துணைவர்களிடையேயும் ஏற்படுவதுடன், எல்லா வயதுப்பிரிவினர், வெவ்வேறு இனப் பின்னணி கொண்டவர்கள், வெவ்வேறு நிதி நிலைமையைக் கொண்டவர்களிடமும் ஏற்படுகின்றது.

ஓர் நெருக்கமான உறவுமுறையில் (Intimate relationship) அல்லது திருமணத்தினுள் ஓர் நபர் இன்னொரு நபரை தனது ஆதிக்கத் திற்குட்படுத்தி (Dominate) கட்டுப்படுத்தும்போது வாழ்க்கைத்துணை வன்முறை எனவும் (Spousal abuse) அழைக்கப்படும் குடும்ப வன்முறை நிகழ்கின்றது. இவ்வன் முறையானது உறவுமுறையின் போது மட்டுமல்லாது, இந்த சோடியினுள் பிளவு ஏற்படும்போது அல்லது உறவுமுறை முடிவ டைந்த பின்பும் கூட ஏற்படலாம். துஷ்பிரயோகம் செய்பவர் இந்நிலமையின் போது நியாயமாக நடந்துகொள்வதில்லை. இவர் பயம், வெட்கம், குற்றவுணர்வு ஆகியவற் றை உங்களில் ஏற்படுத்தி உங்களைக் களைத்துப் போகச் செய்வதன் மூலம் உங்களின் மேல் பூரணமான ஆதிக்கத் தைப் பெற்றுக் கொள்கிறார். இவர் உங்க ளை பயமுறுத்தலாம் அல்லது துன்புறுத்தலாம் அல்லது உங்களைச் சுற்றியுள்ளவர் களைத் துன்புறுத்தலாம்.

துஷ்பிரயோகம் செய்பவர் தனது நடத்தையைக் கட்டுப்படுத்த முடியாததன் காரண மாக இந்த குடும்ப வன்முறை ஏற்படுகின்றது என பலர் எண்ணலாம். உண்மையில், துஷ்பிரயோகம் செய்பவர் தனது மனைவியை அல்லது துணைவரைக் கட்டுப்படுத்து முகமாக வேண்டுமென்றே எடுக்கும் ஒரு தெரிவே (Deliberate choice) வன்முறையாகும்.

"கோபம் மற்றும் சீற்றத்தினால் இத்தகைய நடத்தை துஷ்பிரயோகம் செய்பவரில் ஏற் படுவதில்லை". இக்கூற்றினை நியாயப்படுத்த பின்வரும் காரணங்கள் கூறப்படுகிறது.



இவர் கோபம் வரும்போது ஏனையவர்களை அடித்து நொருக்கமாட்டார். விடுமுறை கொடுக்க மறுக்கும் மேலதிகாரியை அல் லது காரின் பக்கத்தில் gasஐ சிந்தி விடும் gas stationஇன் ஊழியரை அடிக்க மாட்டார். சாட்சிகள் எதுவும் இல்லாதவரை காத்திருந்து தான் நேசிப்பவர் என கூறிக்கொள் ளும் நபரை துஷ்பிரயோகம் செய்கிறார்.

துஷ்பிரயோகத்திற்கு உட்பட்ட பெண்களை, "தொலைபேசி மணி ஒலிக்கும்போது அல்லது பொலிஸ் உங்கள் வீட்டுக் கதவண்டை வந்தால் அவர் துஷ்பிரயோகத்தை நிறுத்து வாரா?" என்று கேட்டால் அப்பெண் "ஆம்" என்று தான் கூறுவார். அதிகமாக பொலிஸ், வன்முறை நிகழும் வீட்டிற்கு வரும்போது துன்புறுத்திய கணவர் மிகவும் அமைதியாக தோற்றமளிக்கும் போதுபாதிக்கப்பட்ட பெண் ஹிஸ்டீரியா வந்தவர் போல் காட்சி கொடுப் பார். கணவர் தன்னைத்தான் கட்டுப்படுத்த முடியாத கோபக்காரனாக இருந்தால், பொலிஸின் முன்பாகவும் மற்றவர் முன்பாக வும் சாந்தமாக தோற்றமளிக்க முடிவது எவ்வாறு?

துஷ்பிரயோகம் செய்பவர், காயங்கள், தழும்புகள் வெளித்தெரியாத இடங்களில் அடித்தல், தள்ளுதல், உதைத்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்வார். இவர் தன்னைத்தானே கட்டுப்படுத்த முடியாதவராக இருந்தால் காயங்கள் வெளித்தெரியாத இடங்களாகத் தெரிந்தெடுத்து தாக்க முடியாது.

மூலம்: *Mid-Valley Women's Crisis Service*

வாழ்க்கைத்துணை துஷ்பிரயோகமானது, பாதிக்கப்படுபவரின் மேல் முழுக் கட்டுப்பாட்டையும் கொண்டு வந்து அதைத் தொடர்ந்து நிலைநிறுத்திக் கொள்ளும் ஒரே ஒரு நோக்கத்திற்காகவே பயன்படுத்தப்படுகின்றது.

## ஆதிக்கம் (Dominance)

துஷ்பிரயோகம் செய்யும் தனிப்பட்டவர்கள், உறவுமுறையினுள் (Relationship) பலம் வாய்ந்தவர்களாக தாம் உணரவேண்டிய தேவை ஏற்படுகிறது. உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்காகவும் தீர்மானங்களை அவர்களே மேற்கொள்வார்கள். எதைச் செய்யவேண்டும் என்று அவர்களே உங்க ளுக்குச் சொல்வதுடன் அதனை எதிர்த்து எந்தக் கேள்வியையும் கேட்காது கீழ்ப்படிய வேண்டும் என்றும் எதிர்பார்ப்பார்கள். உங்களை துஷ்பிரயோகம் செய்பவர் உங்களை ஒரு வேலைக்காரியாகவோ அல்லது சிறு பிள்ளையைப் போலவோ அல்லது தனது ஓர் சொத்துடமையாகவோ நடத்துவார்.

## சிறுமைப்படுத்தல் (Humiliation)

உங்களைப் பற்றி நீங்களே தாழ்வாக எண்ணுமளவிற்கு அல்லது குறைவாக எண்ணுவதற்கு தன்னால் எவற்றையெல்லாம் செய்யமுடியுமோ அவற்றையெல்லாம் செய்வார். இவை எல்லாவற்றிற்கும் பின்பு, உங்களை நீங்களே ஒரு பயனுமில்லாதவர் என எண்ணுவதுடன், ஒருவரும் உங்களை விரும்பமாட்டார்கள் என நீங்கள் எண்ணினால், நீங்கள் அவரை விட்டு நீங்கும் எண்ணம் படிப்படியாகக் குறைந்து செல்லும். அவமரியாதைகள் - பட்டப்பெயர்கள் கொண்டு அழைத்தல், பிறருக்கு முன்னால் தாழ்வுபடுத்திக் கதைத்தல் என்பன எல்லாம் உங்கள் சுயமரியாதையைக் குறைத்து உங்களை வலிமையற்றுப் போகச் செய்வ தற்கு அவர் பயன்படுத்தும் ஆயுதங் களாகும்.

## தனிமைப்படுத்தல் (Isolation)

தன்னிலே மட்டும் நீங்கள் தங்கியிருப்பதை அதிகரிக்கச் செய்யுமுகமாக, துஷ்பிர யோகம் செய்யும் துணைவர் வெளியுலகத் தோடு உங்களுக்குள்ள தொடர்பினை

51ம் பக்கம் பார்க்க...

OFFICE SPACE FOR RENT

OFFICE SPACE AVAILABLE FOR RENT AT
MORNINGSIDE & SHEPHERD
(near Home depot)

Office space, Also use as a show room, available for rent at

Murali: 416-569-4065
emk4u@hotmail.com




ATEAM Towing

"Affortable and Trusted Services"

Light Towing
Flatbed
Carrier Services
Unlocking The Doors
Free Scrap Car Removal
Top Dollars For Your Unwanted Cars

Call Esan or Donald
Direct: 416-835-1700

525 Bloor St W
Toronto, ON , M5S1Y4
Dispatch: 416-642-TEAM (8326)

### 50ம் பக்கத் தொடர்ச்சி...

அற்றுப்போகச் செய்வார். உங்கள் குடும்பத் தினரையோ, உறவினர்களையோ, அல்லது நண்பர்களையோ பார்ப்பதை தடுப்பார். அல்லது சிலசமயம் பாடசாலைக்கோ அல்லது வேலைத்தலத்திற்கு செல்வதை யோ தடுப்பார். எதைச் செய்வதென்றாலும், எங்கு போவதென்றாலும், யாரைப் பார்ப்ப தென்றாலும் அவரிடம் அனுமதியைப் பெற வேண்டும்.

மூலம்: *Domestic Abuse Intervention Project*
(குடும்ப வன்முறை தலையீட்டு செயற்திட்டம்)

### அச்சுறுத்துதல் (Threats)

பாதிக்கப்பட்டவர் வீட்டைவிட்டு நீங்கிச் செல்லாதிருக்குமுகமாக துஷ்பிரயோகம் செய்பவர் பொதுவான அச்சுறுத்தல்களை மேற்கொள்வார். உங்களை துஷ்பிரயோகம் செய்பவர், உங்களை அல்லது உங்கள் பிள்ளைகளை, ஏனைய குடும்ப அங்கத்தவர்களை அல்லது உங்கள் செல்லப் பிராணிகளைக்கூட காயப்படுத்த அல்லது கொலை செய்வதாக அச்சுறுத்துவார். அத்துடன் தான் தற்கொலை செய்யப்போவ தாகவும், வீடடை விட்டு தான் எங்காவது போய்விடுவதாகவும், உங்களுக்கெதிராக பொய்க்குற்றச்சாட்டு சுமத்துவேன் என்றும் அல்லது பிள்ளைகளின் சேவையிடங்களில் (Child Services) உங்களைப் பற்றி அறிவிப் பதாகவும் அச்சுறுத்துவார்.

### பயமுறுத்தல் (Intimidation)

உங்களைப் பணியச் செய்வதற்கு பலவித மான பயமுறுத்தல் உபாயங்களை துஷ்பிர யோகம் செய்பவர் கையாளலாம். இதனுள் பயமுறுத்தல் பார்வைகள் அல்லது முகபா-வத்தை மாற்றுதல், உங்களுக்கு முன்னால் பொருட்களை வீசி எறிதல், சொத்துக்களை அழித்தல், உங்கள் செல்லப் பிராணிகளை காயப்படுத்துதல் அல்லது ஆயூதங்களை பார்வைபடும் இடங்களில் வைத்தல் போன்-றன உள்ளடங்கும். நீங்கள் கீழ்ப்படியா-விட்டால், வன்முறையான விளைவுகள் ஏற்படும் என்பதைத் தெளிவாகப் புலப்-படுத்துவார்.

### மறுத்தலும் குற்றஞ்சாட்டுதலும் (Denial and blame)

இவர்கள் தமது வன்முறையான மற்றும் துஷ்பிரயோகம் செய்யும் நடத்தைக்கு சிறுவயதில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அல்லது அன்று நாள் சரியில்லாதிருத்தல் அல்லது பாதிக்கப்படுபவரையும்கூட காரணமாகக் கூறுவார். அல்லது நடந்த நிகழ்வுகளையே அவ்வாறு நடக்கவில்லை எனக் கூறுவார். பொதுவாக இதற்கெல்லாம் நீங்கள் தான் காரணமென பழியை உங்கள் மேல் போடுவார். எப்படியோ தனது வன்முறையும் துஷ்பிரயோகமும் உங்களது தவறால் தான் ஏற்பட்டது எனக் கூறுவார்.

### வன்முறைச்சக்கரம் (Cycle of Violence)

குடும்ப வன்முறையானது ஓர் வன்முறைச் சக்கரமாக தொடர்ந்து ஏற்படுவதாக உள்ளது.

### துஷ்பிரயோகம் (Abuse)

துஷ்பிரயோகம் செய்பவர் கடூரமான அல்லது வன்முறை நடத்தையில் ஈடுபடு வார். துஷ்பிரயோகமானது 'யார் பொஸ்' (Who is boss?) என்பதை பாதிக்கப்படுபவ-ருக்கு காட்டுவதற்கான ஓர் ஆதிக்க நாடகமாகும்.

### குற்றமனப்பான்மை (Guilt)

துஷ்பிரயோக நாடகம் முடிவடைந்ததும் துஷ்பிரயோகம் செய்தவர் குற்றமனப்-பான்மையாக உணர்வார். ஆனால் இது பாதிக்கப்படுபவருக்கு தான் செய்ததை நினைத்து எழுந்த குற்றமனப்பான்மையல்ல. தான் இதனால் பிடிபட்டு இதன் விளைவாக எதிர்நோக்க வேண்டியிருக்கும் விளைவு களையே எண்ணி குற்றமனப்பான்மையால் கலங்குவார்.

### நியாயப்படுத்தல் அல்லது சாட்டுக் கூறல் (Rationalization or excuse)

துஷ்பிரயோகம் செய்தவர் தான் செய்தவற்-றுக்கு நியாயம் கற்பிப்பார். இவர் தனது பொறுப்புக்களில் இருந்து தப்பித்துக் கொள்ள சாட்டுக் கூறுவார். அல்லது தனது சொந்த துஷ்பிரயோக நடத்தைக்கு பாதிக்கப்பட்ட வரை காரணமாகக் கூறுவார்.

### 'சாதாரண நடத்தை' (Normal behaviour)

துஷ்பிரயோகம் செய்பவர் பாதிக்கப்பட்ட வரை உறவுமுறையினுள் தொடர்ந்தும் வைத்துக்கொண்டு தனது கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவதற்கு எல்லாவித முயற்சி களையும் மேற்கொள்வார். இவர் எதுவும் நடைபெறாதது போல் நடந்து கொள்வார். அல்லது பாதிக்கப்பட்டவரை வசப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுவார். துஷ்பிரயோகம் செய்தவர் இம்முறை உண்மையில் மன-மாற்றம் அடைந்து விட்டார் என பாதிக்கப் பட்டவர் எண்ணுவதற்கு இந்த அமைதியான தேனிலவுக் கட்டம் தூண்டும்.

### கற்பனை செய்தலும் திட்டமிடுதலும் (Fantasy & Planning)

பாதிக்கப்பட்டவரை மீண்டும் துஷ்பிரயோகம் செய்து தண்டிப்பதற்கு என்ன தவறை அவரில் கண்டுபிடிக்கலாம் என யோசிப்பதற்கு அதிகநேரம் செலவிட்டு கற்பனைகளில் ஈடுபடுவார். பின்னர் அந்தக் கற்பனையை உண்மையாக்குவதற்குரிய திட்டங்களில் ஈடுபடுவார்.

### நிலைமையை உருவாக்குதல் (Set up)

துஷ்பிரயோகம் செய்பவர், தனது செயலை நியாயப்படுத்துமுகமான நிலைமையை உருவாக்கி பாதிக்கப்பட்டவரை, மீண்டும் துஷ்பிரயோகம் செய்வதற்குரிய திட்டத்தை செயல்முறைக்கு கொண்டுவருவார்.

இக் குடும்ப வன்முறை வட்டம் மீண்டும் மீண்டும் ஏற்படும் ஓர் வட்டச் செயல் முறையாக தொடர்ந்தவண்ணம் இருக்கும்.

மூலம்: *Mid-Valley Women's Crisis Services.*

இந்தக் கட்டங்களுக்கிடையே உங்களைத் துஷ்பிரயோகம் செய்பவரின் மன்னிப்புக் களும் காதல் பார்வைகளும் அவரை விட்டு நீங்கள் நீங்கிச் செல்வதை கடினமாக்கும். நீங்கள் தான் தனக்கு இந்த உலகில் உதவக் கூடிய ஒரே ஒரு நபர் என்றும், இம்முறை நிலைமைகள் முற்றிலும் மாறா-னதாயிருக்கும் என்றும் அவர் உண்மையில் உங்களை நேசிக்கிறார் என்றும் உங்களை நம்பச் செய்வதற்கு அவர் முயல்வார். எனினும் ஆபத்துக்கள் மறைந்து விட்டன என்று எண்ணுவது உண்மையாகாது.

■ ■ ■

**ஒரே நாளில் Saree Blouse**

**Saree Blouse ஒரே நாளில் (Indian Cutting) முழுமையாக வெட்டி தைத்துப் பழகுவதற்கு அழையுங்கள்.**

**Mississauga, Scarborough ஆகிய இரு இடங்களில் வகுப்புகள் நடைபெறுகின்றன. உங்கள் வீடுகளுக்கு அருகாமையிலே வந்தும் சொல்லித்தரப்படும்.**

தொடர்புகளுக்கு

905 - 712 9721




Cell tel Mobility
CELL TEL MOBILITY
For all your cellphone and accessory needs...
We sell new & used cellphones, Pagers and accessories for:
ROGERS WIRELESS, FIDO,
TELUS MOBILITY, BELL MOBILITY
Unlimited Calling !!!
Anywhere in USA & CANADA
Unlimited Outgoing USA & CANADA
Unlimited Incoming USA & CANADA
Unlimited SMS USA & USA
Unlimited Date browsing in USA
No contracts
No credit check
Free caller ID
FREE voicemail
WE UNLOCK
GSM PHONES
Call Toll free:- 1.877.312.5123
SHOP ONLINE @ www.celltelmobility.com
CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER
NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG
HTC,BLACKBERRY,iPHONE.
Display,Antenna Replacement and all other
Repairs (Software & Hardware).
2637 Eglinton Ave. East,
Eglinton Ave/Midland Rd
416.266.6818
220 - 5990 16th Avenue
16th Avenue/ Markham Rd
905.201.4859
5C - 2950 Birchmount Rd
Birchmount / Finch Ave
416.495.7776

# யோகம் தரும் ஆரோக்கிய ரகசியம்


**N.T. கருணாகரன்**
- யோகா ஆசிரியர் -
ntkaruna@thaiveedu.com




## ஆரோக்கிய ரகசியம் - 4

### மகராசனம்

கதயோகத்தில் மூன்றாவது படியாக ஆதனங்கள் இருக்கின்றன. ஆதனங்கள் (ஆசனங்கள்) எமது முன்னோர்களால் கண்டுபிடிக்கப்பட்டவையாகும். பூமியில் பல்லாயிரம் உயிரினங்கள் வாழ்கின்றன. அவை ஒவ்வொன்றும் தனித்துவமும் பல்வேறு திறமையான செயற்பாடுகளையும் கொண்டுள்ளன. உதாரணமாக மகராசனத்தை எடுத்துக் கொண்டால் மகரம் என்றால் முதலை ஆகும். உலகில் வாழும் சீவராசிகளில் நரம்பு மண்டலம் பலம்வாய்ந்த விலங்கு முதலையாகும்.

எனவே முதலை ஆசனமாகிய மகராசனத்தை செய்யும்போது எமது நரம்பு மண்டலமும் பலம் பெறுகிறது. இதன் மூலம் உடலும் மனமும் உறுதி பெறுகிறது.

இன்று அவசரகதியான உலக வாழ்வில் குருதி அமுக்க நோய் என்பது சர்வ சாதாரணமாக அனேகரிடம் காணப்படுகிறது. இந்தப் பிரச்சனையில் இருந்து முற்றாக விடுதலை பெற இவ்வாசனத்தை செய்து வந்தால் முற்றாகக் குணமடையலாம். இப் பயிற்சியை காலை மாலை செய்துவர உயர் குருதியமுக்க நோயில் இருந்து முற்றாக விடுதலை பெறமுடியும்.


இப்பயிற்சியை வயது வேறுபாடின்றி யாரும் பயிலமுடியும். யோகப் பயிற்சிகளை இனி-வரும் இதழ்களில் தொடர்ந்து நாம் பார்க்க இருப்பதால் யோகாசனங்கள் பயிலும் முன் நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை சற்று மேலோட்டமாகப் பார்ப்போம்.

### யோகாசன பயிற்சிகளை பயில்வோர் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்

- ஒவ்வொரு ஆசனப்பயிற்சிகளையும் மனதொன்றி செய்வது அவசியம்.
- அதிகளவு நன்மைகளை யோகம் உங்களுக்குத்தரக் காத்திருக்கின்றது. யோகப் பயிற்சிகளை உங்கள் உடல் நிலை, வயது என்பவற்றைக் கருத்திற்கொண்டு நிதானமாகவும், நம்பிக்கையுடனும், விடா முயற்சியுடனும் பயிலவேண்டும்.
- யோகப்பயிற்சியைப் பயில்வதற்கு 3 வேளைகள் உகந்தது. அவை முறையே காலை, மாலை, மதியம் ஆகும். இந் நேரங்களில் காலையும் மாலையும் முதல் சிறப்பாகும். எனினும் சில நோய்களுக்கு ஏற்ப நேரங்களைத் தெரிவு செய்வது அவசியம்.
- யோகக்கலையானது ஆன்மீகம், மருத்துவம் சார்ந்த வாழும் கலையாகும். இது உடலின் நுட்பமான கருவிகள், சுரப்பிகள் போன்றவை அதிகளவு பயிற்சி பெறுகின்றன. பயிற்சியின்போது வயிறு வெறுமையாக இருக்க வேண்டும்.
- உணவு அருந்தி 5-6 மணி நேரமும், சிற்றுண்டி அருந்தி 4 மணிநேரமும் மற்றும் தேநீர் போன்றவை அருந்தி 1/2 மணி நேரமும் சென்றபின்னர் யோகம் பயில்வது சிறப்பாகும். அப்பொழுது வயிறு வெறுமையாக இருக்கும்.
- ஏதாவது நோய்கள் இருப்பினும், மற்றும் சத்திரசிகிச்சை செய்து இருப்பினும் உங்களுடைய யோகா ஆசிரியருடன் ஆலோசனை செய்ய வேண்டும்.
- யோகப்பயிற்சியை அதிகதூரம் பயணம் செய்த நாள், அதிக மனக்கவலை, தீவிரமான நோய்கள், தலைவலி, தூய்மை அற்ற காற்றுள்ள இடம் போன்றவை இருப்பின் பயிற்சிகளை செய்யாமல் விடுவது நன்மையாகும்.
- பெண்கள் மாதவிலக்கான காலங்களில் யோகப்பயிற்சிகளை செய்யாமல் மூச்சுப் பயிற்சி, தியானம் போன்றவற்றை செய்யலாம்.
- யோகாசனம் பயிலும் பெண்கள் கர்ப்பவதியானால் கடினமான யோகாசனங்களை செய்யக்கூடாது. கர்ப்பவதிகளுக்கு என்று விசேடமான யோகப்பயிற்சிகளை மட்டுமே செய்யவேண்டும்.
- மூன்று வேளைகளில் ஏதாவது ஒன்றையோ அல்லது இரண்டையோ தெரிவு செய்யலாம். ஆகக் குறைந்தது வாரத்தில் வாரத்தில் 4 நாட்களாவது பயிற்சி செய்ய வேண்டும்.
- ஒவ்வொரு ஆசனங்களும் உங்களுக்கு நன்மைகளை மட்டுமே தரக்காத்திருக்கிறது. உங்களது உடல்நிலை உங்களுக்கு மட்டுமே நன்கு தெரியும். எனவே உங்களால் சுகமாகச் செய்யக்கூடிய பயிற்சிகளை மட்டும் செய்வதே நன்மையாகும்.
- உங்களது உணவு முறை எதுவானாலும் யோகத்தை நீங்கள் பயிலலாம். உங்களது உணவுடன் சமைக்காத இயற்கை உணவுகளை சேர்த்து உண்பது உன்னதமாகும்.
- உணவு உண்ணும் நேரங்களைத் தவறவிடாமல் உண்பது அவசியம். மற்றும் இரவில் இலைவகைகளை உண்ணாமல் இருப்பது நன்மை தரும். மற்றும் இரவில் உணவு உண்டவுடன் 2 மணிநேரம் சென்றபின் உறங்குவது உசிதமாகும்.
- உணவில் அதிக சீனி, அதிக உப்பு, அதிக காரம் (உறைப்பு), அதிக புளி, போன்றவற்றைக் குறைத்து அளவுடன் பயன்படுத்தலாம்.
- யோகப்பயிச்சிகளை பயின்றுகொண்டு இருக்கையில் ஏதாவது காரணத்தினால் பயில்வதில் தடை ஏற்பட்டால் மீண்டும் ஆரம்பிக்கும்போது ஆரம்பத்திலிருந்து பயில வேண்டும்.
- அதிக ஆர்வம் காரணமாக தீவிரமாக உடலை வருத்தி பயிற்சிகளை செய்யக்கூடாது. இதனால் உடலில் நோக்கள், வலிகள் தோன்றலாம். ஆரம்பத்தில் இவ்வாறான இடையூறு ஏற்பட்டால் அது பயிற்சியின் தவறல்ல. இதனால் உங்களுக்கு ஆரம்பத்திலே யோகத்தில் வெறுப்பு ஏற்பட்டு இதன்மூலம் அடையப் போகும் நன்மைகளை இழக்கநேரிடும்.

மேற்கூறப்பட்ட விடயங்களை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளவும். உங்களுக்கு மேலும் தகவல்கள் தேவைப்பட்டால் ஓர் யோகாசன ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

மென்மையான விரிப்பில் குப்புறப் படுத்திருக்கவும். உங்களது வலது கையை இடது தோளிலும், இடது கையை வலது தோளிலும் மாறி மாறி வைக்கவும். படத்தில் காட்டியபடி கால்கள் இரண்டையும் நன்றாகத் தள்ளி வைக்கவேண்டும். சாதாரண மூச்சில் 5 தொடக்கம் 20 நிமிடம்வரை படுத்திருக்கலாம். அதிகநேரம் இப்பயிற்சியில் இருக்கும்போது தோள்கள் நோகலாம். எனவே தலை அணையை உருட்டி நெஞ்சுக் குள் வைத்திருந்தால் இலகுவாக இப்பயிற்சியை செய்யலாம்.


மகராசனம்

வயோதிபர்கள், நோயுற்றோர் கட்டிலிலும் இப்பயிற்சியை செய்யலாம். எடுத்த எடுப்பிலேயே அதிக நேரம் செய்யாமல் ஆரம்பத்தில் குறைந்தளவு நேரத்தில் பயில்வது நலம்.

### பயன்கள்

- நரம்பியல் நோய்கள் அனைத்தும் மறையும்.
- உயர் குருதி அமுக்க நோயில் இருந்து முற்றாக விடுபடலாம்.
- உடல் இறுக்கம் மன இறுக்கம் நீங்கி இலேசாக உணரலாம்.
- வேலை முடிந்து மாலையில் வீடு வந்து இப்பயிற்சியை 10 நிமிடம் பயின்றால் உடல் மிகுந்த உற்சாகம் அடையும்.
- மனித மின்சாரத்தை உடலின் பாகங்கள் அனைத்திற்கும் சீராக பரவச்செய்யும்.
- மற்றும் மறைமுகமாக ஏகப்பட்ட நன்மைகளை மகராசனம் தரும்.

பயின்று பயன் அடையுங்கள்.

■ ■ ■


J.R.B Universal Inc.
Almost All Services Available
- கடன் - அடமானக்கடன் - காப்புறுதி
• Loans
• Mortgages
• Insurance Claims
• Traffic Ticket
• Auto/Life Insurance
• Scholarship Plan (RESP)
• Real Estate Related
• Credit Counselling
• Accounting
• Tax Services

R.R. Rajkumar
B.Com (Hons) M.B.A
Dip. In Accy.
Bus; 416 • 752 • 7555 Fax: 416 • 752 • 7556
Cell: 416 • 937 • 9081
2390 Eglinton Ave. East, 206B, Scarborough, Ont. M1K 2P5

எலி பூச்சித் தொல்லையா...?
RUBAN PEST CONTROL

▸▸ வீடுகள்
▸▸ தொடர்மாடி வீடுகள்
▸▸ தொழிற்சாலைகள்
▸▸ வியாபார நிலையங்கள்
ஆகிய அனைத்து இடங்களிலும்
எலி, பூச்சித் தொல்லைகளை
அறவே நீக்க அழையுங்கள்!
KANTHAN
416 • 291 • 3997

பிரதான பராமரிப்பாளர்

# சுவர் இருந்தால் தான் சித்திரம்

பகுதி - 3

குமார் புனிதவேல் பக்கம்

kpunithavel@thaiveedu.com

ஒரு மரணப் படுக்கையில் இருப்பவர்க்கு பராமரிப்பாளராக இருப்பவர் ஆரோக்கியம் பெருமளவு அவரை அறியாமலே பாதிக்கப் படலாம். போதிய போஷாக்குள்ள உணவை உட்கொள்ளாமல் இருக்கலாம். போதுமான அளவு துயிலாமல் இருக்கலாம். இவற்றின் விளைவு ஒரு நாளில் தெரியாது. அவரை அறியாமலே கடலிலே சுழி வரும்போது காலடியில் இருக்கும் மணலை அரித்துக் கொண்டு போவது போல அவரை மெது வாக வீழ்த்திவிடக் கூடும். வள்ளுவர் கூறி யதுபோல் மயில் பீலி கூட அளவுக்கதிக-மாகும் போது இரும்பு அச்சை உடைத்து விடும். நீங்கள் உடல் ஆரோக்கியத்தில், உள ஆரோக்கியத்தில் எல்லாம் சக்தி விரயமாகக்கூடும். இந்நிலையில் உள்ள பலர் கூறும் கூற்று, ‘நான் களைப்பாய் இருக்கிறேன், ஆனால் ஆறுவதற்கிது நேர-மல்ல’ நீங்களும் அப்படியே உணரக்கூடும்.

இப்படியான குழப்பம் மிக்க வேளையில் என்ன செய்யலாம் என சற்று கவனிப்பது அவசியம். நீங்கள் சுகமாய் இருந்தால்தான் உதவி செய்ய முடியுமல்லவா? முற்றுமுழு தாய் உங்களை நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள். உங்கள் ஆரோக்கியம் தான் நோயாளியின் ஆரோக்கியத்தின் முதல் படி.

உங்கள் உடம்பின் தேவைகளுக்கு செவி-சாயுங்கள். உங்கள் உடம்பின் தேவை களை பூர்த்தி செய்யாமல் உங்கள் உடம்பு நோயாளியின் பாராமரிப்புக்கு ஒத்துழைக்க முடியாது. நீங்கள் பராமரிப்பவர் நன்மைக் காக உங்களை கவனிப்பதவசியம். எனவே அன்புக்குரியவர் மரணிக்கும் போது நீங்கள் சுயநலத்துடன் செயற்படுவதாக குற்றவுணர் கொள்ளத் தேவையில்லை.

### 1, உங்கள் உடலின் தேவைகளுக்கு மதிப்புக் கொடுங்கள்.

உங்கள் உடம்பு தக்க பராமரிப்பு இல்லா மல் தொடர்ந்து நீங்கள் செய்யும் பராமரிப்பு வேலைகளில் ஒத்துழைக்க முடியாது. ஆரோக்கியமான சத்துள்ள உணவுகளை சாப்பிடுங்கள். விட்டமின் மாத்திரைகளை தேவைக்கேற்றபடி சாப்பிடுங்கள் போதியளவு ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். முக்கியமாக போதியளவு நேரம் நித்திரை செய்வது அவசியம். போதிய உடற்பயிற்சியை பெறத் தவற வேண்டாம். இங்கு எல்லோரும் கவனிக்க வேண்டிய விடயம். ‘பாவிக்காத பொருள் பறிக்கப்பட்டுவிடும்’ if you Don’t use it you loose it ஆம். உங்கள் தசை நார்கள் பாவிக்காமல் விட்டால் அவை சிறுகச் சிறுக சக்தி இழந்துவிடும். இதனால் தான் சத்திரசிகிச்சை செய்த அடுத்த நாளே நோயாளியை எழுந்திருக்கவும் நடக்கவும் கூறுகிறார்கள். நீங்கள் மருந்து சாப்பிடுபவர் கள் என்றால், அவற்றைத் தவறாமல் உரிய நேரத்தில் உட்கொள்ள தவற வேண்டாம். பராமரிப்பு வேலைப்பளுவில் தமது மருந்தை தவற விடுவது பலர் விடயத்தில் உண்மை யாயுள்ளது. நீங்களும் நோய்வாய்ப்பட்டால் பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதையாகிவிடும்.

மன ஓய்விற்கு தியானம் செய்யப் பழகுவது உங்கள் சுமையை எளிதாக சுமப்பதற்கு உதவும்.

### 2, தேவையற்றவற்றை விலக்கப்பழகுங்கள்

இப்படியான வேளைகளில் முக்கியமான விடயங்களில் உங்கள் நேரத்தை செலுத் துங்கள். மற்றவற்றை விட்டுவிடுங்கள். வேலைகளை எளிதான சுருக்கமான வழிக-ளில் செய்யப்பழகிவிட்டால் வீண்நேரவிர யத்தை தவிர்க்கலாம். உங்கள் சக்தியை அவசியமில்லாத விடயங்களில் செலவிடுவ தால் செய்யவேண்டியதை தவறவிட்டு விடுவீர்கள். மற்றவர்கள் நீங்கள் மேலும் எளிதாக செய்ய வழிகாட்டினால் அதை பின்பற்றுங்கள்.

### 3, எல்லைகளை நிர்ணயுங்கள்

உங்களுக்கென கொஞ்சநேரமும் இடமும் வேண்டும் என்பதே யதார்த்தம். உங்களு-டைய உணர்ச்சிகள், அது எதுவானாலும் இருக்க உங்களுக்கு உரிமையுண்டு. மற்ற வர்கள் வெளிக்காட்டும் உணர்ச்சிகள் உங்களுக்கு உண்டாகும் என்றில்லை. மற்றவர் எதிர்பார்ப்பிற்கு நீங்கள் வாழ வேண்டும் என்ற நியதியில்லை. அதுவும் உங்களுக்கு அது பிழையெனப்பட்டால் இல்லை முடியாது என கூறும் உரிமை உங்களது இயல்பாக இருக்க வேண்டும். உங்களால் இயன்றளவு நோய் வருமுன் சுயமகிழ்ச்சிக்காக செய்துவந்த செயற்பாடு-களை தொடர்ந்து செய்ய முயற்சி செய்யுங் கள். நாளாந்த கருமங்களில் இயன்றளவு மாற்றமில்லாதிருப்பது உங்களுக்கு கூடிய மன அமைதியைத்தரும். நண்பர்களுடன் தொடர்புகளை தொடர்ந்து வைத்திருங்கள். இன்றைய விஞ்ஞான உலகில் தொலை பேசி, கணணி ஆதியன இவற்றிற்கு பெரும் துணையாயிருக்கும்.

### 4, உங்களுக்கென்று சில நேரத்தை ஒதுக்குங்கள்

உங்கள் நெருங்கிய உறவினரையோ அல்லது நண்பரையோ இருக்கச்சொல்லி விட்டு வெளியே சென்றுவாருங்கள். இது உங்களுக்கு புதிய உற்சாகத்தை தருவ தால் நீங்கள் கூடிய சிறப்பாக நோயுடை-யவருக்கு உதவமுடியும். உங்களுக்கு மகிழ்ச்சிதரும் விடயத்தில் ஈடுபடுவதால் நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள், இதனால் நீங்கள் பயனடைவதுடன் நோயாளியும் பயனடைவார். உறவினர், நண்பர் இல்லா விடத்து சமுகசேவையாளரை அணுகலாம்.

### 5, நகைச்சுவைக்கு இடந்தாருங்கள்

வாழ்க்கையில் ஆகக்கொடிய இன்னலிலும் நகைக்க இடமுண்டு. வள்ளுவர் கூட ‘இன்னல் வருங்கால் நகுக’என்று கூறியுள்-ளார். எவ்வளவு கவலையுள்ள நேரத்திலும் நகைச்சுவை உங்கள் கவலையை நீங்கள் பராமரிப்பவர் கவலையை சிறிதுநேரம் மறந்து இருக்க உதவும். இதற்கு நகைச்-சுவையுள்ள படங்களைப் பார்க்கலாம். அல்லது கடந்தகால நகைச்சுவை மிக்க நிகழ்வுகளை இரைமீட்கலாம்.

### 6, விளைவுகளிலிருந்து விலகி இருங்கள்.

நீங்கள் எதாவது செய்கையில் பலனை எதிர்பார்த்து செய்யாதீர்கள். உதாரணத் திற்கு ஏதாவது நோயாளியின் ஆரோக்கி-யத்தில் முன்னேற்றம் வரும்போது நோயாளி உங்களுக்கு நன்றி செலுத்தவேண்டும், மகிழ்ச்சியாகவிருக்க வேண்டும் என்றெல் லாம் எதிர்பார்க்கவேண்டாம். காரணம் எதிர் பார்ப்புகள் தாம் ஏமாற்றத்திற்கு காரணம். மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என் பதில் உங்கள் பராமரிப்பு தங்கிருக்கக் கூடாது.

### அந்த நிமிடத்திற்கு வாழப்பழகிக்கொள்ளுங்கள்

ஒவ்வொரு நாளையும் சரியாகச்செய்தால் அதுவே போதுமானது. நீண்ட எதிர்கால விளைவுகள் உங்கள் கட்டுப்பாட்டில் இல்லை. உடனடித் தேவைகளில் விழிப்பா யிருங்கள். அவற்றை அவதானமாகவும் நிறைவாகவும் செய்யுங்கள். உங்கள் திருப்தி உங்களைத் திருப்திப்படுத்த வேண்டும். மற் றவர்களின் அதிருப்தி அவர்கள் பிரச்சினை உங்களுடையதல்ல.

இந்தப்பயணம் எவ்வளவு காலத்திற்கு நீடிக் கும் என்பது இது மரணிப்பவர் நடத்தும் நாடகம். மரணித்துக் கொண்டிருப்பவரும் நீங்களும் சமமானவர்கள் தாம். உங்கள் உறவில் இருவருக்குமே சிலவற்றை பெற்-றுக்கொண்டு சிலவற்றை கொடுக்கிறீர்கள். ஆனால் ஒரு அடிப்படை விடயத்தில் நீங்கள் சமமானவர்கள் அல்ல. மரணிக்க உள்ளவர் பல அடிப்படை முடிவுகளை அவராகவே எடுக்க வேண்டும். இம்முடிவு-களில் சில உங்களிலும் தாக்கம் ஏற்படுத்த லாம். ஆனால் இம்முடிவுக்கு நீங்கள்

58ம் பக்கம் பார்க்க...

## துயர் பகிர்வோம்



யாழ் / தெல்லிப்பளை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும், கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொன்ட திரு ஆறுமுகம் பாலச்சந்திரன் அவர்கள் ஏப்ரல் மாதம் 24ம் திகதி ரொறன்ரோவில் காலமானார். இவர் உதயலீலா (தாய்வீடு பத்திரிகை யின் கட்டுரையாளர் - தயா பாலா) வின் அன்புக் கணவரும், பிரசன்னா, தேபோரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலஞ்சென்ற பாலசரஸ்வதி, பாலசிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

**இவரின் பிரிவுத்துயரில் தாய்வீடும் பங்குகொள்கின்றது.**

| | | |
|---|---|---|
| பிரசன்னா | கனடா | 001 4167564948,<br>001 4169062060, |
| லீலா | சுவிஸ் | 0041 412608398, |
| சிவா | பிரான்ஸ் | 0033 140934372,<br>0033 669543640. |

www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam

416-400-6406

# நிகழ்ச்சி நிரல்

## "மனிதராய் இருத்தல்: தமிழராய் விளங்கல்"

## மூன்றாவது தமிழியல் மாநாடு

## தொறொன்ரோ பல்கலைக்கழகம், மே 15-17, 2008

www.tamilstudiesconference.ca

### மே 15 - வியாழன்

பேராளர் வருகை வரவேற்பு விருந்து:
மாலை 7:00 - 9:00
Combination Room, Trinity College

### மே 16 வெள்ளி

பதிவு: காலை 8:30 - 9:30
The Buttery, Larkin Building

வரவேற்பு: காலை 9:30 - 10:00
George Ignatieff Theatre
அரங்கம் 1:
காலை 10:00 - பகல் 12:00

அமர்வு 1: Combination Room
*சமணம், வைஷ்ணவம், கிறிஸ்தவம்: ஆள்நிலை/ஆளாயிருத்தல் பற்றிய எண்ணக்கரு*

**ஜோசப் சந்திரகாந்தன்**
*கிறிஸ்தவ இறையியலில் ஆழ்நிலை பற்றிய எண்ணக்கருவும் 17, 18ம் நூற்றாண்டு தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்களில் அதன் பாதிப்பும்.*

**கிறிஸ்தோப் எம்ரிச்**
*காஞ்சிபுரம் சமண சமூகத்தில் கல்வியும் வழிபாடும்.*

**கத்தரின் யங்**
*மதம் சார்ந்த தமிழ் அடையாளத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள்*

அமர்வு 2: George Ignatieff Theatre
*மேலாட்சி, கலகம், சூரிய மானுடநேயம்*

**பிருந்தா பெக்**
*பொன்னிவளத்தின் பாளையக்காரர்கள்*

**டேவிட் பக்**
*அழகை மொழி பெயர்த்தலின் அழகற்ற பின்விளைவுகள்: திருக்குற்றாலக் குறவஞ்சியில் பாத்திரப் படைப்பு*

**எஸ். குணசேகரன்**
*தமிழ்ச் சித்தர் மரபில் சூரிய மானுடநேயம்*

பகல் உணவு:
பகல் 12:00 - பகல் 1:00
Munk Centre for International Affairs

அரங்கம் 2:
பகல் 1:00 - பிற்பகல் 3:00

அமர்வு 1: Combination Room
*கருத்தியலும் அடையாளம் நோக்கிய தேடலும்*

**சூசன் கிரான்**
*தமிழ் அடையாளம் பற்றிய மார்க்சிய, பெண்ணிய அணுகுமுறைகள்*

**போல் யங்கர்**
*தமிழ் அடையாளம்? இந்து அடையாளம்? பிரிப்பு ஏன்?*

**நர்வினி காங்கேசன்**
*இரட்டைப் பண்பாட்டின் உளவியல் அர்த்தங்கள்*

அமர்வு 2: George Ignatieff Theatre
*இலக்கிய/இலட்சியப் பாத்திரங்கள்*

**லஷ்மி ஹோல்ம்ஸ்ரம்**
*சல்மாவின் இரண்டாம் ஜாமங்கள் கதையில் விதியும் விதி மீறலும்*

**பிரீதா மணி**
*சுதந்திரத்திற்கு பின்னால் தமிழ்ச் சிறுகதைகள்*

**ஃபிராங் கோடி**
*அறிவொளி இயக்கத்தில் மானுடம்*

சிற்றுண்டி: பிற்பகல் 3:00 - 3:30
The Buttery, Larkin Building

அரங்கம் 3:
பிற்பகல் 3:30 - மாலை 5:30

அமர்வு 1: Combination Room
*மதம்சார் மரபுகளும் சுய அடையாளமும்*

**ஃபிரான்சிஸ் குலூனி**
*வீரமாமுனிவரின் அஞ்ஞான நிவாரணத்தில் மானுடமும் தெய்வீகமும்*

**ஆன் மோனியஸ்**
*தமிழ்ச் சமண இலக்கியத்தில் நகைச்சுவையும் மானுடமும்*

**மார்கிரெட் ட்ரேவிக்**
*ஆள்நிலை, "நான்" பற்றிய தமிழ்ச் சைவ சிந்தாந்த எண்ணக்கரு*

அமர்வு 2: George Ignatieff Theatre
*மன்னரும் மாட்சிமையும்*

**கில் பென் ஹேரூத்**
*மானுடமும் தெய்வீகமும் பற்றிய நாயக்கர் காலக் குறிப்புகள்*

**லெஸ்லி சி. ஓர்**
*விம்பம், சின்னம், நடிகர்: தென்னிந்திய சமூகங்களில் பெண்களும் பரிசிலும்*

**மைதிலி தயாநிதி**
*கலகக்காரர்களாகச் சித்தர்கள்: தமிழ்ச் சித்தர் மரபில் எதிர்ப்பும் ஒத்தோடலும்*

அமர்வு 3: Rm 211, Larkin Building
*நிலக்காட்சி - அடையாளம் சுற்றுச்சூழலியல்*

**ஆ. வேலுப்பிள்ளை**
*இயற்கை, அடையாளம், தமிழிலக்கியம்*

**பொன்னம்பலம் இரகுபதி**
*மனித இயற்கை உறவு: இலங்கை தமிழ் இடப்பெயர்களில் அடையாளம்*

**நடராஜா சிறிஸ்கந்தராஜா/ நர்மன் சவிமுத்து**
*சூழலியலில் கடந்த காலமும் எதிர்காலமும்*

சிற்றுண்டி: மாலை 5:30 - 6:00
The Buttery, Larkin Building

விரிவுரை: மாலை 6:00 - 7:30
George Ignatieff Theatre

**பாமா**
*மனிதராய் இருத்தல் தலித்தாய் விளங்கல்*

இரவு விருந்து: மாலை 7:30

### மே 17 சனிக்கிழமை

பதிவு: காலை 9:00 - 10:00
The Buttery, Larkin Building

அரங்கம் 1:
காலை 10:00 - பகல் 12:00

அமர்வு 1: Combination Room
*எல்லைகளைக் கேள்விக்குள்ளாக்குதல்*

**கஜேந்திரன் அய்யாத்துரை**
*தலித்துக்களாகவும் ஒடுக்கப்பட்டோராகவும் தமிழரைப் பார்ப்பதில் உள்ள எல்லைப்பாடுகள்*

**சூசன் ஷோம்பேர்க்**
*ஏ, பொடிச்சி! மோட்சக் கும்மி அடி!: இளையான்குடி கச்சிப்பிள்ளையம்மாளின் கவிதையியல்*

**கிறிஸ்டர் நோஸ்டரம்**
*தமிழ் நாட்டுப் பழனி மலையில் பழங்குடி அடையாளம்*

அமர்வு 2: George Ignatieff Theatre
*பரதநாட்டியத்தில் வரலாறு, அடையாளம், நினைவு*

**ஹரி கிருஷ்ணன்**
*ஆண் பரதக் கலைஞர்களின் பன்முகப்பட்ட அடையாளங்கள்*

**ஜெனட் ஓ'ஷே**
*கோயிலிருந்து போர்க்களத்துக்கு: இலங்கையின் பரதநாட்டியம்*

**தவேஷ் சொனேஜி**
*நவீன தமிழ்த் தேவதாசி சமூகங்களில் கழிவிரக்கமும் இழப்பும்*

அமர்வு 3: Rm 211, Larkin Building
*புகலிடப் படிமங்கள் - மூத்தோர்? சண்டியர்? அகதி?*

**றிச்சார்ட் அந்தனி**
*சண்டியர்குழுக் கலாசாரமும் தென்கிழக்கு இங்கிலாந்தில் புகலிடத் தமிழ் இளையர்களும்*

**ராஷல் புலாக்கியா**
*கனேடிய குடிவரவுத் துறையினரின் விசாரணைகளில் தமிழர்கள் கட்டமைக்கப்படும் வகைப்பாடு*

**கினிவிஸ் ஜோர்ஜ்**
*தொறொன்ரோவில் தமிழ் மூதாளரும் பல்லினக் கலாசாரமும்*

பகல் உணவு: பகல் 12:00 - பகல் 1:00
Munk Centre for International Affairs

அரங்கம் 2: பகல் 1:00 - பிற்பகல் 3:00

அமர்வு 1: George Ignatieff Theatre

**பாக்மார் ஹெல்மான் இராஜநாயகம்**
*போர்ச் சூழலில் பெண் அடையாளம்: பெண் புலிகள்*

**சித்தார்த்தன் மௌனகுரு**
*மனிதம்/அ-மனிதம்: போர்ச் சூழலின் அன்றாட வாழ்க்கையும் ஐயப்பாடும்*

**நிக்கோல் ஏ. வில்சன்**
*தேசியவாதக் கதையாடலூடாக பெண்கள் பலம் பெறல்: இலங்கை, இந்தியத் தமிழ் தேசியவாதங்கள் பற்றிய ஓர் ஒப்பீட்டாய்வு*

அமர்வு 2: Combination Room
*தமிழ் இலக்கியமும் சுய அடையாளமும்*

**இளையதம்பி பாலசுந்தரம்**
*சங்க காலத்தில் மானுடமும் ஆள்நிலையும்: புறநானூற்றை முன்வைத்து ஓர் ஆய்வு.*

**சேரன்**
*சோலைக்கிளி கவிதைகளில் தொன்மம், விடுதலை, மானுடம்*

**செல்வா கனகநாயகம்**
*மரணத்துள் வாழ்வோமுக்குப் பிற்பாடு: மானுடமும் கவிதையும்*

அமர்வு 3: Rm 211, Larkin Building
*புலம்பெயர்ந்த தமிழர்களின் உளவியல் நல்வாழ்வு*

**சுந்தரி பாலன்**
*இலட்சியத் தாய்மையும் புலம் பெயர்ந்த தமிழ்ப் பெண்களும்*

**சாந்தா கனுகொல்லு**
*"தூய" பெண்மையும் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாகிய பெண்களும்*

**ஜெனிஃபர் மிம்**
*வெண்ணிற ஆண்மையும் மண்ணிற ஆண்மையும்*

சிற்றுண்டி: பிற்பகல் 3:00 - 3:30
The Buttery, Larkin Building

அரங்கம் 3: மாலை 3:30 - 5:30

அமர்வு 1: George Ignatieff Theatre
*சிதைவும் புனைவும்*

**சைரஸ் சுந்தர்சிங்**
*சீன அமெரிக்க - இந்திய யமேய்க்க - ஆபிரிக்க கலப்பு: வீடும் அடையாளமும்*

**தா. சனாதனன்**
*இலங்கையில் தமிழராக இருத்தல்: காண்பியக் கலைகளுக்கூடாக ஆள்நிலை பற்றிய கதையாடல்கள்*

**அனுரேந்திரா ஜெயதேவா**
*புலம்பெயர் அனுபவங்களின் காட்சிப் பதிவுகள்*

அமர்வு 2: Rm 211, Larkin Building
*அலைந்துழல்வும் அடையாள மாற்றங்களும்*

**மார்க் பிராட்லி**
*தமிழ் அடையாளத்தைக் காவுவதில் கோயில்களின் முக்கியத்துவம்*

**ஆன் சிக்ரிட் கூன்செத்**
*நோர்வேயில் தமிழராய் இருத்தல்*

**மார்க் பி. விட்டேக்கர்**
*புதிய ஊடக யுகத்தில் மனவடுவும் மாற்றங்களும்: இலங்கை, தொறொன்ரோ*

அமர்வு 3: Combination Room
*காலனித்துவத்தின்போது தமிழ்த்துவத்தின் உருவாக்கம்*

**விஜயா ராமசாமி**
*பாலினம், மொழி, தமிழ் அடையாளம் நோக்கிய தேடல்*

**ரவி வைத்தீஸ்பரா**
*தமிழர் மதம்: வள்ளலாரில் இருந்து மறைமலை அடிகள் வரை*

**ஸ்ரீலதா ராமன்**
*யாக்கையைப் பேணல் ஆன்மாவைக் கொல்லல்: தமிழ்ச் சைவ இறையியல்*

சிற்றுண்டி: மாலை 5:30 - 6:00

விரிவுரை: மாலை 6:00 - 7:30

**டேவிட் ஷுல்மன்**
*16ம் நூற்றாண்டுத் தமிழிலக்கியத்தில் தான்/தன்னிலை/முழுமை*

University of Windsor

U of T

MUNK CENTRE For International Studies

# காலத்தின் கோலங்கள் - 3

- பொன் குலேந்திரன் -
kulendran@thaiveedu.com

காலம் நான்காம் பரிமாணமாகக் கருதப் பட்டதினால் காலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் அறிந்ததில் வெளியை X, Y, Z என நீளம், அகலம் உயரமென்ற மூன்று பரிமாணங்களாக ஆரம்பத்தில் வகுத்துள்ளனர். இதை அடிப்படையாக வைத்தே முப்பரிமாண வடிவக். கணிதம் (Three Dimensional Geometry) உருவாகியது. காலப்போக்கில், சார்புக் கொள்கையின் ( Theory of relativity) தோற்றத்தின் பின்னர் நேரத்திற்கும் தூரத்திற்கும் உள்ள தொடர்பினால், வேகமானது ஒளியின் வேகத்தை அணுகும்போது நீளத்தின் அளவில் மாற்றத்தைக் கொண்டு வருகிறது என்பதை அயன்ஸ்தீன் தனது சமன்பாட்டின் மூலம் விளக்கினார். ஆன்மீகக் கண்ணோட்டத்தில் உடலை முதல் மூன்று பரிமாணங்களாகவும், மனதின் எண்ணங்களை நான்காம் பரிமாணமாகவும் எடுத்துக்கொள்ள லாம். எண்ணங்கள் பின்னோக்கியும் முன்னோக்கியும் செல்கிறது. காலத்தை கடந்த காலம், நிகழ்காலம், வருங்கால மென வகுத்துள்ளோம். லோரன்ஸ் என்ற பௌதிக விஞ்ஞானி கண்டுபிடித்த சமன்பாட்டின் அடிப்படையில் சார்புக் கொள்கை உருவாகியது. இச்சமன்பாட்டின்படி, வேகம் ஒளியின் வேகத்தை நெருங்கும் போது நேரத்தில் விரிவைக் காணலாம். நீளத்தில் சுருக்கத்தை அவதானிக்கலாம். இதனால் ஒளியின் வேகம் மாறாமல் இருக்கிறது. இதனை விண்வெளிப்பயணத்தின்போது அவதானித்துள்ளார்கள். உதாரணத்துக்கு வின்வெளிக் கப்பல் ஒன்றில், ஒளியின் வேகத்திற்கு அருகாமையில் பயணத்தை 1.1.2008ம் ஆண்டு ஆரம்பித்து ஒரு வருடம் பயணத்தை அணிந்திருந்த கடிகாரத்தின் படி முடித்து, திரும்பினால் பூமியில் திகதி 31.12.2008ஆக இருக்காது. குறைந்த திகதியை காட்டும். அந்த பயணத்தினால் உங்கள் ஆயுள், நேரத்தைப் பொறுத்தமட்டில் நீண்டு இருக்கும்.

இந்த நான்கு பரிமாணங்களை, கற்பனையில் புத்தகவடிவில் பல எழுத்தாளர்கள் உருவாக்கியுள்ளார்கள். H.G Wells என்பவர் 1895ல் எழுதிய “கால இயந்திரம்” (Time Machine) சினிமாவாக வெளிவந்து பலரது பாராட்டினைப் பெற்றது. இந்த கால இயந்திரத்தில் அமர்ந்து அதனை இயங்க வைத்தால் காலத்தில் பின் நோக்கிச் சென்று அக்காலத்தில் நடந்ததை அறியலாம். அதே போல் முன்னோக்கி சென்று நடக்கப்போவதையும் அறியலாம். இதனால் மனிதனின் முற்பிறவிகள், வரப்போகும் பிறவிகள் பற்றி அறிய முடிகிறது. இது புரட்சிகரமான கற்பனை. ஆனாலும் இப்போது தமிழ்நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள வைத்தீஸ்வரன் கோயிலுக்கு அருகாமையில் வதியும் நாடி சாஸ்திரம் சொல்லுபவர்கள் முற்பிறவி, அடுத்த பிறவியைப் பற்றி ஓலை பார்த்து சொல்வதைப் பற்றி நாம் அறிவோம். அதில் எவ்வளவுக்கு உண்மையிருக்கிறது என்பது கேள்விக்குறி..

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் சந்திரனில் மனிதன் காலடி எடுத்து வைப்பது பற்றி பேசினால் அது நடக்க முடியாத காரியம் என்பார்கள். அண்மையில் இலங்கையில் காலம்சென்ற பிரபல விஞ்ஞான எழுத்தாளர் ஆர்தர் சி கிளார்க் என்பவர், தனது புத்தகத்தில் இதைப்பற்றி எழுதிய போது நடக்கமுடியாததொன்றை எழுதுகிறார் என்றார்கள். அவர் பிற கிரகங்களில் உயிரினங்கள் வாழ சாத்தியமுண்டு என எழுதினார். யார் கண்டது - வருங்காலத்தில் அது உண்மையாகலாம். ET என்ற சினிமாப்படம் இந்த கற்பனையை அடிப்படியாக கொண்டது. Armstrong என்ற அமெரிக்கர், சந்திரனில் 1969ஆண்டில் நடந்துகாட்டிய போது மக்கள் வாயடைத்துப் போனார்கள். அதே போன்று செய்மதிபற்றி பற்றி ஆர்தர் சி கிளார்க் அது கண்டுபிடிக்க முன்னர் எழுதியபோது அதைப் பற்றி வேடிக்கையாக விமர்சித்தனர். ஆனால் ரஷ்யா 1957ம் ஆண்டு ஸ்புட்னிக்கை வான்வெளியில் சுற்றி வரவிட்டது. விஸ்வாமித்திரன் திரிசங்குவை வான் வெளியில் பறக்க விட்டபோது அந்தக் கதையை மட்டும் ஏற்றுக் கொண்டனர் பல இந்துக்கள். இதே போன்று இராமாயணத்தில் இராவணன் சீதையை புஷ்பக விமானத்தில் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வான் வெளியாக கவர்ந்து சென்றான் என்று எழுதப்பட்டபோது அதை பலர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இப்போது விமானத்தில் ஒரு மணி நேரத்துக்குள் அவ்விரு நாடுகளுக்குமிடையே பயணத்தை மேற்கொள்கிறார்கள். இதே போன்று குமரி கண்டம் கடலுக்குள் மறைந்தது என்று பல கட்டுரைகள் வந்தபோது புருவங்களை உயர்த்தினர். கற்பனை என்றனர். 2004ம் ஆண்டு சுனாமி ஏற்பட்டபோது சிந்திக்கத் தொடங்கினர். ஏற்பட்ட பூகம்பத்தால் பூமியின் சுழலும் வேகம் பாதிக்கப்பட்டு காலமும் பாதிக்கப்பட்டதாம். இதே போன்று விக்கிரமாதித்தன் கதைகளில் கூடு விட்டு கூடு பாயும் கதைகளை பலர் வாசித்துள்ளார்கள். இது நடக்கக் கூடியதா எனக் கேட்டவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இருதய மாற்று சிகிச்சையை கிறிஸ்டியன் பேர்னாட் என்ற இருதய வைத்தியர் உலகில் முதலில் 1969ம் ஆண்டு தென் ஆபிரிக்காவில் செய்து காட்டிய போது பிரமித்துப் போனார்கள். சில எழுத்தாளர்கள் தீர்க்கதரிசிகள். இதில் பாரதியும் அடங்குவர். இவர்கள் காலத்தோடு கலந்து பயணம் செய்து கற்பனையில் வருவதை எழுதுவார்கள். Nosterdamus என்பவர் வருங்காலத்தில் உலகில் நடக்கப் போவதை முன் கூட்டியே சொன்னவர். பிரான்ஸ் தேசத்தில் 1503ம் ஆண்டு பிறந்து 63 வயதுவரை வாழ்ந்தவர். அவரை சூனியக்காரன் என்றும் பலர் விமர்சித்தனர்.

இது போன்ற நடக்க முடியாத விடயங்கள் அடங்கிய நூல்களில் 1987ல் Invisible Man என்ற நூலையும் வேல்ஸ் எழுதினார். இது நான்கு பரிமாணங்களையும் முறிவுக் குணகத்தையும் (Refractive Index) அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட கதை. இதில் நான்கு பரிமாணத்தில் வாழக்கூடிய ஒரு மருந்தை கதாநாயகன் அருந்தியதாகவும் அதனால் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் எழுதப்பட்டது.

காலத்தின் மாற்றம் பல சமூகத்தில் பல விழிப்புணர்வுகளைக் கொண்டு வந்துள்ளது. அதோடு மனித இனத்துக்கு உதவக்கூடிய பல விஞ்ஞானக் கண்டுபிப்புகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. உடலுக்குள் இருப்பதை கண்டறிய X ray இயந்திரம் உருவாகியது. இப்போது பல விதமான உடலை ஊடுருவி வியாதியைத் தெளிவாகக் கண்டு பிடிக்கும் மருத்துவ இயந்திரங்கள் செயல்படுகின்றன. இவற்றில் மிக முக்கியமானது MRI – Magnetic Resonance Imaging என்ற விலையுயர்ந்த இயந்திரம். புற்று நோய் இருக்கும் இடத்தை துள்ளியமாக இது கண்டுபிடிக்க உதவுகிறது. இருதய சத்திரசிகிச்சை காலப்போக்கில் விரைவாக முன்னேறி அச்சிகிச்சையின் போது இறப்பவர் எண்ணிக்கை 0.5 விகிதமாக குறைந்து விட்டது. இருதயமாற்றம், சிறு

59ம் பக்கம் பார்க்க...

Connectiong tutors & students in the GTA

BRILLIANT TUTOR @ YOUR HOME INC.

தமிழ் மாணவர்களின் நலன் கருதி அவர்களின் வீடுகளுக்கு சென்று
பாடங்களை ஒன்ராரியோ பாடத்திட்டத்திற்கு அமைய கற்பித்து வருகின்றோம்.

- SCIENCE
- CHEMISTRY
- PHYSICS
- BIOLOGY
- MATH
- CALCULUS
- ALGEBRA & GEOMETRY
- DATA MANAGEMENT
- ENGLISH
- FRENCH

EQAO Preparation



Over 100 Tutors

Call Kuna Today

Tel: 416-291-4684, 905-507-8470, 647-295-5862, Fax: 416.264.6306

E-mail: info@brillianttutor.com

We will visit your home

JK to GRADE 8 $80^{00}$/MONTH | 1 ON 1 OR GROUP | 9 to University 2nd Year $90^{00}$/MONTH

Over 1500 Students

79 Eastvale Drive, Markham, ON, L35 4R9

Markham, Scarborough, Mississauga, Toronto, Etobicoke, Brampton, North York, East York, Richmond Hill, Ajax, Malton, New Market, Vaughan

digi Media - 416-467-4952

58ம் பக்கத் தொடர்ச்சி...

நீரக மாற்றம், போன்ற சத்திர சிகிச்சைகள் இலகுவாகவும், விரைவாகவும் வெற்றியுடனும் செயல்பட புது கண்டுடிப்புகள் மட்டுமல்ல, சத்திரசிகிச்சைக்குப் பின்னர் உடல் விரைவில் சுகமடைவதற்கான மருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. காலத்தோடு மருத்துவத்துறை வெகு விரைவாக முன்னேறிவருகிறது.

நாம் அனுபவாயிலாக அறிந்தது மனிதனின் உணர்வுகள் காலத்தோடு மாறக்கூடியது என்பது. இளமையில் இருக்கும் உணர்வுக்கும் வயது வந்த பின்னர் இருக்கும் உணர்வுகளுக்கும் வித்தியாசங்களுண்டு. இதற்குக் காரணம் காலத்தோடு தோன்றிய, அனுபவம், அறிவு, விழிப்புணர்வு ஆகியவையாகும். தீடீரென சிறு கருத்து வேற்றுமையால் கோபம் ஏற்பட்டு, பலகாலம் பிரிந்து இருந்த பலர், காலப் போக்கில், நடந்ததை மறந்து திரும்பவும் ஒன்று சேர்ந்த பல கதைகளைக் கேட்டுள்ளோம். எப்படி காலம் உடலில் ஏற்பட்ட காயத்தை சுகப்படுத்துகிறதோ அவ்வாறே மனதில் ஏற்பட்ட இரணத்துக்கு மருந்தாகி மாற்றுகிறது. காலப்போக்கில் நடந்த புதிய, நல்ல சம்பவங்களை, பழையதை சிறிது சிறிதாக மறக்க வைக்கிறது. வாழ்க்கையில் பார்த்த சம்பவங்களை ஒப்பிட்டுப் பார்த்ததினால், தவறினை உணர்ந்து கோபப்பட்டவர் மேல் பரிவு தோன்றுகிறது. இது பல குடும்பங்களில் காலத்தோடு ஏற்படும் மாற்றமாகும். மகள் தங்களது விருப்பத்துக்கு மாறாக ஒருவனை காதலித்து திருமணம் செய்ததிற்காக குடும்பத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட கதைகள் பல அறிந்துள்ளோம். காலப்போக்கில் இந்த பிரிவு பேரப்பிள்ளைகளின் வருகையாலும், தேகநலத்தில் ஏற்பட்டபாதிப்பாலும், படிப்படியாக மறைகிறது. இணைப்பு திரும்பவும் ஏற்படுகிறது. இது போன்ற மாற்றங்கள் தேசங்களுக்கிடையேயும் நடக்கிறது. உதாரணத்துக்கு இரண்டாம் உலக யுத்தத்தின போது ஜப்பானும் அமெரிக்காவும் விரோதிகளாக இருந்தனர். பல்லாயிரக்கணக்கான ஜப்பானியர்கள் அணுக்குண்டால் இறக்க அமெரிக்கா காரணமாக இருந்தது. இதே போன்றுதான் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் இடையிலான உறவுகள் பாதிப்படைந்த கட்டத்திலிருந்து இப்போது உறவு சீராகிவிட்டது. இதுபோன்று சீனாவுடன் அமெரிக்காவின் உறவு வலுவடைந்து வருகிறது. காரணம், சீனாவின் பொருளாதாரமும், அதன் மிகப் பெரிய சந்தையுமாகும். இதே போன்று கஸ்டிரோவின் அரசியல் ஓய்வுக்குப் பின் பல காலம் அமெரிக்காவுடன் பாதிக்கப்பட்ட கியூபாவின் உறவில்கூட சில ஆண்டுகளில் நல்ல மாற்றம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. காலம் தான் பதில் சொல்லும். உறவுகள் சீரழிவதற்கு ஒரு சிலர் சுயநல காரணங்களுக்காக துணை போகிறார்கள். இந்த சுயநலவாதிகள் அகற்றப்பட்டு விட்டால் காலம் உறவை சீர்திருத்தும்.

இலங்கை அரசியலில் சுமார் 1500 ஆண்டுகளுக்குள் நடந்த பல சம்பவங்கள், படையெடுப்புகள் அத்தீவில் வாழும் இனத்தினர்களிடையே பிரிவை வளர்த்துள்ளது. வரலாற்றில் நடந்த கசப்பான சம்பவங்களைப் பயன்படுத்தி அரசியல் இலாபம் பெற்றவர்கள் பல அரசியல்வாதிகள். இதில் குறிப்பாகச் சொல்லப்போனால் சோழ மன்னர்களின் ஆக்கிரமிப்பு, எல்லாளன் - துட்ட கைமுனு யுத்தம், கஜபாகுவின் இந்திய படையெடுப்பு போன்றவையாகும். இங்கு வெகு காலத்துக்கு முதல் நடந்த சம்பவங்கள் வரலாற்றுக்குள் புகுந்து, அதை அடிப்படையாக வைத்து பெருமை பேசி, இனத்தினிடையே விரிவை வளர்த்துள்ளது. சென்றதை மறந்து விடு. நடப்பதையும், இனி நடக்கப்போவதையும் கணக்கில் எடுத்து செயல்படு. இடைவெளி குறைந்து விடும். வரலாறு என்பது காலத்துடன் இணைந்தது. எந்த சாம்ராஜ்யமும் பல காலம் நீடித்ததில்லை. இலங்கையில் ஆட்சி புரிந்த மேற்கத்திய நாடுகளான போர்த்துக்கல், ஒல்லாந்து, பிரித்தானியா, தமிழ்நாட்டு மன்னர்களின் அரசுகள் இதற்கு உதாரணம். இதே நிலை தான் தற்போது ஆட்சிநடத்தும் அரசுக்கும் பொருந்தும். காலப்போக்கில் பல மாற்றங்கள் ஏற்படலாம். இதுவும் ஒரு வகை காலத்தின் கோலங்களில் ஒன்று. இவ்வுலகில் எதுவுமே நிரந்தரமானதல்ல. சூழல், அரசியல், கலாச்சாரம், மத நம்பிககைகள் மாறிக் கொண்டே இருக்கிறது. இஸ்லாமிய மதத்தில் வன்முறை புகுந்துவிட்டது. பெளத்தமத அடிப்படை தத்துவம் எவ்வளவுக்கு, காலத்தோடு இலங்கையில் அரசியல் கலந்து, வன்முறை புகுந்து வருகிறது என்பதும் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு

வணிக, பொருளாதாரத்துறையில் காலத்தின் மாற்றம் புது யுக்திகளையும் சந்தைப் படுத்தும் முறைகளையும், வணிகத்தை செயல்படுத்தும் முறைகளையும், சந்தைக்கு தேவையான புதிய பொருட்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது. வருங்காலத்தில் உற்பத்தியைக் கணிப்பதற்கு கடந்த காலத்தில் சந்தையில் விலைபோன பொருட்களின் எண்ணிக்கையை வைத்து கணித முறையை பாவித்து வருங்காலத்தில் தேவைப்படும் எண்ணிக்கையைக் கணிக்கும் (Forecasting) முறையில் காலம் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனை ஆங்கிலத்தில் (Time series Analysis) என்பர். புதிய வணிக முறையில் குறித்த நேரத்தில் செயல்படுவது (JIT- Just in Time), செலவையும் நேரத்தையும் குறைக்கக் கூடியது. அதோடு வீட்டில் இருந்து கணனியைப் பாவித்து வேலை செய்யும் முறையும் காலத்தோடு ஏற்பட்ட மாற்றங்களில் ஒன்றாகும். இணையத்தளத்தைப் பாவித்து வணிகம் செய்வது பல நாட்டு மக்களுடன் தொடர்பை ஏற்படுத்துகிறது. Kapruk என்ற இலங்கையில் உள்ள வணிக ஸ்தாபனம் இந்த முறையை கடைப்பிடிக்கிறது. கனடாவில் இருந்தவாறே இலங்கையில் வாழும் பெற்றோருக்கு, அவர்களது பிறந்த நாள் அன்று உணவு அல்லது கேக் ஓடர் செய்து கொடுக்கக் கூடிய வசதி உண்டு. அவ்வாறே Amazon.com என்ற புத்தகங்களை விற்கும் ஸ்தாபனமும் புத்தகங்களை விற்பனை செய்கிறது. வெப்பக்கம் முறை இதற்கு துணைபோகிறது. பல தசாப்தங்களுக்கு முன்னர் அது இருந்ததில்லை. காலப்போக்கில் இணையத்தள மூலம் நேரடியாக உரையாடி பொருட்களை வாங்கலாம். காலத்தின் மாற்றத்தால், கலை, கலாச்சாரம், தொழில், புரட்சி முறைகள் ஆகியவை எவ்வாறு மாறுகிறது என்பதை அடுத்தமாதம் பார்ப்போம்.

(தொடரும்)


# நீங்கள் புகை பிடிக்கும் பழக்கம் உள்ளவரா?

புகைப்பதால் உங்களுக்கு மட்டுமல்ல உங்களைச் சார்ந்தவர்களுக்கும் புற்றுநோய் வருவதற்கான அறிகுறிகள் அதிகம் உள்ளன.

புகைத்தலை நிறுத்துவது கடினம் இல்லை.

இயற்கை மூலிகையினால் தயாரிக்கப்பட்ட, பக்கவிளைவுகள் அற்ற ஔடதம்

100% இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.

**AMAZON HEELTH CARE**
**2602 Eglinton Ave East**
**Midland & Eglinton**
**416 264 8787**



**OVER 3000 sq.ft**
**4 Bedroom**
**4 washroom**

## MARKHAM & HIGHGLEN



IMMACULATE FAMILY HOME,
DOUBLE DOOR ENTRANCE.
9 FT CEILING ON MAIN FLOOR,
POT LIGHTS, SECURITY CAMERAS,
NO WEAR AND TEAR ON THIS BEAUTY.
JUST MOVE IN AND ENJOY.
WALKING DISTANCE TO SCHOOL,
SHOPPING AND PARK.

**Suresh Sellathurai**
*Sales Representative*
**Dir. : 416.356.7330**



Apex Creations - 416-297-0707

Century 21
AFFILIATE REALTY INC. BROKERAGE
**Bus. : 416.290.1200 (24Hr.)**
80 Corporate Drive,Unit #208, Toronto, ON. M1H 3G5

**www.PowerofSaleHome.com**

# சுவர் இருந்தால்...

54ம் பக்கத் தொடர்ச்சி...

தலைசாய்க்கத்தான் வேண்டும்.
இந்த நாடகத்தில் கதாநாயகர் மரணத்தின் வாசலில் இருப்பவர் தான். மற்ற அனைவரும் உபபாத்திரங்கள். கதாநாயகருக்கு கட்டுப்பட்டவராயிருக்க வேண்டும் அன்றி அவரையும் கட்டுப்படுத்தும், முடிவெடுக்கும் உரிமை உங்களுக்கு ஒருபோதுமில்லை என்பதை மறக்கவேண்டாம்.

மரணத்தை அண்மிப்பவருக்கு பல தேவைகள் உண்டு. அவற்றை வழங்கக் கடமைப்பட்டுள்ளீர்கள். அதேவேளை அவரது உரிமைகளுக்கு நீங்கள் மதிப்பளிக்க வேண்டும். இந்த அனுபவம் எப்படி என்று அவர்களுக்குத் தான் தெரியும். அந்த அனுபவத்தில் அச்சம், நோவு, வெட்கம், ஏக்கம், தனிமை எல்லாமே கலந்திருக்கும். இத்தனைக்கும் உள்ளாகும் அவருக்கு இயன்றளவு வசதியும், ஆறுதலும் தருவது தான் உங்கள் கடமை. அவர்கள் விரும்புவதை கூடியளவு அவதானமாகக் கேட்டு நிறைவேற்றுவதுடன் அவர்களை கௌரவமாக நடத்தவேண்டும். இயன்றளவு அவர்கள் தீர்மானங்களை எடுக்கவிட்டு அதைச்செயல்படுத்துவது தான் உங்கள் கடமை.

அவர்கள் வீட்டினை எப்படி வைத்திருக்க வேண்டும். அந்தவறையில் எங்கு கட்டிலைப்போட்டு படுக்கவேண்டும். அறையில் எவ்வளவு வெளிச்சம் வேண்டும், என்ன இசை வேண்டும், தொலைகாட்சி என்ன வேண்டும். அறையில் மற்றவர்கள் வருவது விரும்புவார்களா?. யார் எவ்வளவு நேரம் வரலாம் என்பவற்றை எல்லாம் தீர்மானிப்பது இறக்கப் போரவராய் தான் இருப்பதவசியம்.

எந்த வைத்தியரிடம் மருந்தெடுப்பது என்பதை இயன்றளவு அவரே தீர்மானிக்க வேண்டும் என்பதுடன் அவருடைய வருத்தத்தை பற்றி இயன்றளவு தெளிவாக விளங்கவைக்க வேண்டும். அவர் எடுக்கும் தீர்மானம் சிலவேளைகளில் உங்களுக்கு ஏற்புடையதாயில்லாமல் இருக்கலாம். இது இருவருக்குமே வேதனை தரலாம். ஆனாலும் அந்த உரிமை அவருடையதே அதை மறுக்கவோ தடுக்கவோ கூடாது.

இதன் அர்த்தம் அவர்கள் தமக்குத்தாமே தீமைசெய்தால் அல்லது பிறருக்கு தீமை செய்தால் தடுப்பதில்லை என்பதல்ல. அவர்கள் உங்கள் உரிமைகளை அல்லது தேகரோக்கியத்தை பாதிக்கும்படி செய்ய விட வேண்டுமென்பதில்லை. உங்களுக்கு குற்ற உணர்வை ஏற்படுத்தி நிற்பந்திக்க வேண்டுமென்பதுமில்லை. அவரைப் பராமரித்துக் கொண்டிருக்கையில் கொஞ்சம் கொஞ்சமாக அவரால் முடிவுகள் எடுக்கமுடியாத நிலைமை வரலாம். அப்போ நீங்கள் தீர்மானங்கள், முடிவுகள் எடுக்க வேண்டி வரும். ஆனால் அதுவரை அவரை உற்சாகப்படுத்தி அவருக்கு அனுசரணையாக இருப்பதுதான் உங்கள் கடன், அவர் அனுமதி இல்லாமல் அவருக்காக நீங்கள் முடிவுகள் எடுப்பது தவறு. அவருக்காக நீங்கள் சிந்திக்க முற்படக்கூடாது. இது அவர்கள் நடத்தும் நாடகம். அவர்கள் அதில் நட்சத்திரம்.

தனக்கு மரணம் நெருங்கிவிட்டது என்பதனை புரிந்து கொண்டவருக்கு தமது ஆழ்மனதின் உணர்வுகளை வெளியே சொல்ல தயக்கப்படுவது இயற்கை. தமது வேதனையால் மற்றவர்களுக்கு வேதனை ஏற்படுமோ என்ற தயக்கத்துடனிருப்பர். மற்றவர்கள் தமது அச்சத்தில் ஏக்கத்தால் எவ்வளவு தூரம் பங்குகொள்ள தயாராய் உள்ளார்கள் என தயங்குவார்கள். இதேவேளை பராமரிப்பவர்களும் தாம் எவ்வளவு தூரம் நோயாளியின் அந்தரங்கத்தில் பங்குகொள்ளலாம் என தயக்கம் காட்டுவதும், அதனால் கதைக்கும்போது விடயங்களை ஆழமாக சிந்தித்து இயன்றளவு தயக்கத்துடன் கதைப்பார்கள். இத்தன்மை தாமே காத்துக்கொள்ளும் செயலாயும் அமையும். ஆனால், இவற்றின் விளைவு நோயாளி அண்ணியப்படுத்தப்படுவார் என்பதுதான் உண்மை. ஆனால் அது உங்கள் நோக்கமல்ல. நீங்கள் நேசக்கரத்தை நீட்டுங்கள். அவர்கள் ஆர்வத்துடன் அதனை ஏற்றுக் கொள்வார்கள்.

## சம்பாஷனையை ஏற்படுத்துங்கள்

நீங்கள் முதலாவதாக நேயாளியை உங்களுக்கு சமமானவராக பாவிப்பதவசியம். முகத்துக்கு முகம் பார்த்து நேரிடையாக கதையுங்கள். நீங்கள் நினைப்பதை ஒளிவு மறைவின்றி சொல்லுங்கள். நீங்கள் வெளிப்படையாக கதைக்கும் வேளையில் அவர்கள் தயக்கம் காட்டினால் எல்லை மீறி அவர்களை பேசச் சொல்லாதீர்கள். நீங்கள் தெளிவாக்க வேண்டியதெல்லாம் அவர்கள் எப்போ வேண்டுமானாலும் உங்களுடன் பகிர்ந்துகொள்ளலாம். அதற்கு நீங்கள் தயார் என்பதே. உங்களுக்கு கண்ணீர் வந்தால் மறைக்க வேண்டாம். அவை நீங்கள் அவரிடம் காட்டும் அன்பை கரிசனையாகத் தான் சுட்டிக்காட்டும். அத்துடன் நடக்கும் நாடகத்தில் உங்கள் விருப்பமின்மையைத் தான் எடுத்துச் சொல்லும். நீங்கள் மரணப்படுக்கையில் இருக்கையில் பராமரிப்பவர் மகிழ்ச்சிப்படுவதை நீங்கள் விரும்புவீர்களா? உண்மையாய் இருங்கள். நேரடியாக கதையுங்கள். இரகசியங்களை தவிருங்கள். சரியான சந்தர்ப்பத்தில் கதைப்பதும் சரியான சந்தர்ப்பத்தில் நிறுத்திக் கொள்வதவசியம். நோயாளியை கொஞ்சம் கொஞ்சமாக வெளிக்கொண்டு வரப்பாருங்கள். ஆனால் அதையும் இயல்பாக செய்வதில் தான் உங்கள் வெற்றி தங்கியிருக்கும். நீங்களும் வெளியே வந்து அவர்களை வெளிக்கொண்டு வருவதில்தான் உங்கள் வெற்றி தங்கியுள்ளது என்பதை மறக்க வேண்டாம்.

## குறைகளை கேட்பதால் தொடர்பு ஏற்படுத்தலாம்

நோயாளி எத்தனை விடயங்களை, எண்ணங்களை பகிர்ந்துகொள்ள, புரிந்து கொள்ள ஆசையாயிருப்பது இயற்கை. எத்தனையோ சந்தேகங்களை தீர்த்துக் கொள்ள முயற்சிக்கலாம். தாம் தெரிந்தவற்றை புரிந்தவற்றை தமது கருத்தை சொல்லிச் சொல்ல விரும்பலாம். பொறுமையுடன் அவர்கள் சொல்வதை கேட்பது ஒரு பெரும் சேவையாகும். இதுவே நீங்கள் அவர்களுக்கு கொடுக்கக்கூடிய பெரிய பரிசிலாகும்.

இறுதி நாட்களில் இருப்பவருக்கும், அவருக்கு உறுதுணையாக உதவிக்கு இருப்பவருக்கும் இடையில் உள்ள உறவில் நாளுக்கு நாள் மாற்றம் வந்து கொண்டே இருப்பது இயல்பு. உங்களை சுற்றி வேகமாக உலகம் மாறும் வேளையில் உங்கள் உறவுமுறையில் மாற்றம் ஏற்படுவதை எதிர்பார்க்கலாம்.


## நெருக்கம் கூடிக்கொண்டிருக்கக்கூடும்.

நோயாளிக்கும் பராமரிப்பவருக்கும் இடையில் எஞ்சியுள்ள நேரம் குறைந்து கொண்டு வர உங்கள் உறவில் கூடிய நெருக்கம் ஏற்பட காரணமுண்டு. இந்த நேரம் இனி வராது எனும் நிலையில் அதை எவ்வளவு நெருக்கமாக அனுபவிக்க முடியுமோ அப்படி அனுபவிக்க முயல்வார்கள். ஒருவரை ஒருவர் சாதாரணமாக புகழாதவிதத்தில் இவ்வேளைகளில் புகழுவார்கள். முன்பு செய்த நல்லவற்றிற்கு முயன்று நன்றி சொல்ல முன்வருவார்கள். ஒருவரை ஒருவர் நன்றாக புரிந்துணர்ந்து கொள்ள இதுவே சந்தர்ப்பம். முன்புள்ள பந்தங்களிலும் இவ்வேளையில் ஏற்படும் பிணைப்பு கூடிய இறுக்கமாக அமையும்.

இதைப் பார்த்தவுடன் உங்களிடையில் முரண்பாடு வராதுஎன நினைக்க வேண்டாம். இவ்வளவு பிரச்சினைகள் நிறைந்த வேளையில் அது மிக எளிதாக தலையெடுக்க இடமுண்டு. ஆனால் இந்த பிரச்சினைகளில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து உண்மையாக புரிந்துணர்ந்து அன்பு காட்டலாம். துரதிஷ்டவசமாக சிலவேளைகளில் இந்த வேளைகளில் பிளவு ஏற்பட்டு தீராப்பகையாக, வெறுப்பாக மாறுவதும் உண்டு. இவ்வேளைகளில் அனுபவமிக்க ஒருவருடைய மத்தியஸ்தம் இருப்பது நல்லது. அவர்கள் சிக்கலை விலக்கி மீண்டும் சுமூக நிலையை ஏற்படுத்த இயலும்.

■ ■ ■




6 மாதங்களுக்கு
இலவசம்!
tvi
Tamil Vision Int.
TVi மூலம் Bell ExpressVu (satellite) இணைப்பை ஏற்படுத்துபவர்களுக்குTVi 6 மாதங்களுக்கு இலவசம். மேலதிக விபரங்களுக்கு TVi உடன் தொடர்பு கொள்ளவும்.
Bell ExpressVu
Tel: 416-593-9300 Ext. 400
www.tamilvision.tv

# "தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை உள்ளது" - கரன் பார்க்கர்

## (பலரதும் பாராட்டைப் பெற்ற தமிழ் மிரர் இரவு – 2008)

'உலகில் தமிழ் மக்களைப் போல எந்தவொரு இனமும் நிர்வாகத்துறை கல்வித் துறை மற்றும் அரசியலில் இனரீதியாக மோசமாகப் பாதிக்கப்பட்டதில்லை என்பது எனது கருத்தாகும். இது அனுமதிக்க முடியாத ஒன்று. நாங்கள் ஒருமித்து இணைந்து இதற்கெதிராக உழைப்போம் " என்று பிரபல அமெரிக்க சட்டத்தரணியும், மனித உரிமை ஆர்வலருமாகிய கரன் பார்க்கர், ரொரன்டோவில் தமிழர்களுக்கென வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகையான தமிழ் மிரர் விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

மேற்படி நிகழ்வு ஏப்ரல் மாதம் 20ம் திகதியன்று மார்க்கம் நகரில் உள்ள சுவகட் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. மண்டபம் நிறைந்த இந்நிகழ்வில் அவர் மேலும் கூறுகையில் 'தற்போது இலங்கையில் நிகழும் ஆயுதப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று கூறுவது, விடுதலைப் புலிகளை மட்டும் அல்ல, உலகெங்கும் உள்ள தமிழ் மக்களையும் வெகுவாகப் பாதித்துள்ளது" எனக் கூறினார்.

'தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உள்ளது" எனக் கூறிய அவர் அதற்குரிய 5 காரணிகளான நிலம், ஆட்சிமுறை, பண்பாட்டு வேறுபாடு, விருப்பமும் மனோதிடமும், ஆளுமைத் திறமை என்பன நிறையவே இருக்கின்றன என்பதுடன் அண்மையில் சுதந்திரம் பெற்ற கொசோவோ மக்களிடம் இருந்ததைவிட மேலதிகமான சார்புக் காரணிகள் தமிழ் மக்களிடம் உள்ளன" எனக் கூறினார். கனடாவின் பங்கு பற்றிக் கூறும் போது 'கனேடிய அரசு இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கும், வன்முறைகளுக்கும் வெறுமனே கவலை மட்டும் தெரிவிக்காமல் இலங்கை அரசைக் கடுமையாக ஐக்கிய நாடுகள் சபையில் எதிர்கொள்ள வேண்டும்" என்றும் கூறினார்.

தேசிய கீதம், தமிழ் தாய் வாழ்த்து மற்றும் திருமதி.சியாமா தயாளன் மாணவிகளின் வரவேற்பு நடனத்துடன் ஆரம்பித்த விழாவில் திரு.சாள்ஸ் தேவசகாயம் வரவேற்புரை நிகழ்த்தினார். ஆசிரியர் ஏ.ஜீ. ரட்ணராஜாவின் உரையைத் தொடர்ந்து தமிழ் மிரர் பத்திரிகையின் எழுத்தாளர்களும், தொண்டர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து செலீன் தேவசகாயத்தின் ஆங்கில மற்றும் தமிழ்ப் பாட்டுக்கள் இடம்பெற்றன. தாய் மொழி தமிழ் இல்லாது போனாலும் அழகாக தமிழில் பாடிய செலீனின் திறமையைப் பலரும் மெச்சினார்கள்.

திருமதி. நிரோதினி பரராஜசிங்கத்தின் மாணவிகள் தந்த அருமையான நடனத்தைத் தொடர்ந்து கரன் பார்க்கர் உரையாற்றினார். உரையின் இறுதியில் அனைவரும் எழுந்து நின்று அவருக்கு கௌரவம் கொடுத்ததுடன், அவர் தமிழ் மக்ளுக்கு ஆற்றிய சேவையை மெச்சி தமிழ் மிரர் சார்பில் கேடயமும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து தமிழ் சமூகத்தில் இருந்து 3 பேருக்கு விருது வழங்கப்பட்டது. செல்வி - சாயி பிருந்தா அருந்தவசண்முகநாதனுக்கு இளையோர் தலைமை விருதும், திரு. பரமநாதன் விக்னேஸ்வரனுக்கு செய்தித் துறை சாதனையாளர் விருதும், திரு.ராஜரட்ணம் குணநாதனுக்கு மனித நேய மற்றும், சமூக சேவை விருதும் வழங்கப்பட்டது. (இறுதியில் தமிழ் மிரர் புரவலர்களும் கௌரவிக்கப்பட்டனர். விழா நாவுக்குச் சுவையான இரவுணவுடனும் மற்றும் செல்வா குழுவினரின் செவிக்கு இனிமையான பாடல்களுடனும் நிறைவு பெற்றது.)


































## specialize in

• **Storage**
Free of charge for Loading & Unloading

• **Cross Docking**

• **Pallets**
Custom Pallets
New & Used Pallets
We also buy used Pallets



**GTA Special Rates!!!**

For Straight Truck.
Also available
Dock to Dock
*Direct*
*Rush*
*Sameday*
*TailGate Orders*

11 years in Business

**CONTACT: MURALI**
**416.569.4065**
89 Thournmount Dr., Unit 11&12, Scarborough, ON M1B 5V4
Morningside/Sheppard - Next to Home Depot
1 min. from Hwy401
fax: 416.724.8417, e-mail: emk4u@hotmail.com

emk ENTERPRISES INC
LOGISTIC & TRANSPORTATION

வெகுசன ஊடகவியலின் தாரகமந்திரத்தை உணர்த்திடும்

# TAMIL ONE

தமிழ் ஒளிபரப்பு துறை வரலாற்றில்
புதிய அத்தியாயங்களை வரையும்
முதல்த்தர தொலைக்காட்சி

tamil one

24 மணிநேரமும் உங்களுடன்...




# M and M CONSULTANTS

**Serving 22years in Canada**
www.mandmconsultants.net

- Financial Planning
- Advice on Bankruptcy
- Arrangement with Creditors
- Credit Management & Counselling
- Corporate & Personal Tax Consultations
- Settlement without Bankruptcy / Consumer Proposals
- Interview with CCRA and Ministry of Finance on Audit Issues
- Client Support on Audit Issues relating to Canada Revenue Agency & Ministry of Finance

2075 Lawrence Ave East #203
(Warden & Lawrence)
Scarborough, ON
M1R 2Z4
Tel: 416-266-0706
Fax: 416-256-2876

3645 Bathurst Street #212
(Bathurst & Wilson)
North York, ON
M6A 2E4
Tel: 416-256-9550

BMK

# நவபிருந்தாவனம்



திரு மகேசன்
mahesan@thaiveedu.com

நவபிருந்தாவனத்தின் மகிமைகளையும் துன்பத்தில் வாடிக் கொண்டிருப்பவர்களுக்கு இது ஒரு சிறந்த பரிகாரத்தலம் என்பதை யும் சுட்டிக்காட்டி மக்களுக்கு நல்வழியை காட்டும் நோக்குடனேயே ஆன்மீகக் கட்டு-ரையை வரைய வேண்டிய எண்ணமேற்பட்டது.

இது என்ன இவ்வளவு காலமும் களியாட டம் கொண்டாட்டம் என்று உல்லாசப் பயணத்திற்கு வழிகாட்டிய கட்டுரை எழுதியவர் திடீரென 'சாமி' வேடம் போடத் தொடங்கிவிட்டார் என்று புருவங்கள் உயர்த்தி கேள்விகள் கேட்கப்பட்டாகவும் செவிவழிச் செய்திகள் வந்தன. நாம் என்ன "Drive Through" கோயிலா திறக்கப் போகி றோம். ஏன்என்றால், திரும்பினால் கோயில் நின்றால் கோயில், என்று திரும்பிய பக்க மெல்லாம் 'Convenence Store" கணக்கில் கோயில் வியாபாரம் கொடிகட்டிப் பறக்கி றது. அப்படியெல்லாம் எண்ணமொன்றும் நமக்கில்லை.

நோய், குழந்தைப் பேறின்மை, கணவன் - மனைவி பிரச்சினை, பிள்ளைகளின் கல்வி யில் பிரச்சினை, பிள்ளைகளால் பிரச்சினை என்று பயங்கர பிரச்சினைகளுக்கு மத்தி யில் வாழும் மக்களுக்கு பரிகாரம் என்ற பெயரில் பணத்தை வாரிச்சுருட்டும் பயங்கர மோசடிகளில் இருந்து மக்களை காப்பாற்றி எந்தவித பணச் செலவுமின்றி அவரின் துன் பங்களைப் போக்கவேண்டும் என்ற நோக் கோடு தான் இவ் ஆன்மீக கட்டுரை வரை யும் எண்ணம் உதித்தது.

'எந்த இன்பமும் நிரந்தரமில்லை எந்த துன்பமும் நிரந்தரமில்லை" என்பது மகரிஷி களின் வாக்கு.

கிரகங்கள் சதா சுழன்று கொண்டிருப்பதும் இரவும் பகலும் மாறிமாறி வருவதும், மனித வாழ்க்கையில் சுகமும் துக்கமும் மாறிமாறி வரும் என்பது இறைவனின் சித்தத்தையே குறிக்கின்றன.

இயற்கை என்று கூறுகின்றார்களே அதுவும் இறைவனின் திருவுள்ளப்படியேதான் நிகழ் கின்றது. ஆதலால் வாழ்க்கையில் சோத-னைகள் ஏற்படும்போது அவை தீரும் என்ற மன உறுதியும் நம்பிக்கையும் அவசியம்.

இதனால் தான் பவித்ரமான நுங்கபத்ரா நதிக்கரையில் அமைந்திருக்கும் நவபிருந்-தாவனம் மிகச்சிறந்த பரிகாரத் தலமாக எம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பக்திமான் AMR ஐயாவின் வழிகாட்டுதலால் தான் இக்கட்டுரை இனிவரும் காலங்களில் தொடரப்போகின்றது.

ஆனே குந்தியை அடைந்து நாம் ஜீவ தீர்த்தமான நுங்கபத்ரா நதியில் நீராடி னோம். உண்மையை சொல்ல வேண்டு மானால் அத்தீர்த்த நதியில் ஏதோ ஒரு புரியாத புதிர் நிச்சயமாக இருக்கின்றது. ஏதே ஒரு உணர்வு எமக்கு ஏற்பட்டது. அது என்னவென்று விபரிக்க முடியாது. நதியில் இருந்து வெளியே வந்த பலரும் இதையே சொல்லி ஆச்சரியப்பட்டார்கள். நாம் பரிசலில் ஏறி நவபிருந்தாவனத்தை அடைய முன் நம்மோடு பரிசலில் பயணம் செய்த மலேசிய நாட்டைச் சேர்ந்த தம்பதியினர் சொன்ன சம்பவம் நுங்கபத்ரா நதியின் மகத்துவத்தை அப்போதுதான் எமக்குப் புரியவைத்தது. அதிகாலை நாலரை மணிக்கே பெங்களூரி-லிருந்து நுங்கபத்ர நதிக்கரையை அடைந் துவிட்டனர். இந்தத் தம்பதியினர் சிறிது நேரம் காரில் இருந்தபின் சரி நதியில் இறங்கி நீராடிவிட்டு வரலாமே என்று நதிக் கரை நோக்கி ஓரளவு இருட்டில் நடந்து சென்றிருக்கிறார்கள் இந்தத் தம்பதியினர். நதிக்கரையை அடைய 10 அடி தூரங்களே இருந்த நிலையில் அதிர்ச்சியில் உறைந்து நின்றிருக்கிறார்கள். காரணம் நதிக்கரை யில் இரண்டு பாம்புகள் படம் எடுத்த நிலை யில் நின்று இவர்களை நதியில் இறங்க விடாது மறித்தபடி நின்றிருக்கின்றன. மிகுதிச் சம்பவத்தை அந்த மலேசிய அன்பரின் மனைவி கண்களில் கண்ணீர்வடிய விபரித் தார். "அந்த நேரம் ஆற்றில் வெள்ளை ஆடையுடன் ஒரு சுவாமி குளித்துக் கொண் டிருப்பதை பார்த்தோம். மெல்லிய மங்க லான வெளிச்சத்தில் அவர் நீண்டதாடியுடன் ஒளிமயமாக இருந்தார். ஒரு மகரிசிபோல் தோற்றமளித்தார். அவர் நுங்கபத்ரா நதியில் இருந்த வரையில் இந்த இரண்டு பாம்பு களும் எம்மை மறித்தபடி நின்றன. எம்மை அவை தீண்டவில்லை. சிறிது நேரத்தில் அந்த மகான் கரையேறி மறைந்துவிட்டார். பாம்புகளும் ஆற்றோரமாய் போய்விட்டன" என்று அவர்கள் சொன்ன போது எமக்கு புல்லரித்துவிட்டது. எப்படிப்பட்ட ஆச்சரியம். அந்த மகான் நீராடும்வரை அவருக்கு பாம்புகள் காவலிருந்திருக்கின்றன என்றால் அவர் யார்? நவபிருந்தாவனத்தில் இருக்கும் நலம்பல நல்கும் நவநிதிகளில் ஒருவரா? திகிலில் உறைந்து போனோம். இப்படி நிறைய ஆச்சரியங்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன. இந்த நவபிருந்தா வனத்தில்.

எண்களில் ஏழு, ஒன்பது இரண்டிற்கும் ஒரு பிரத்தியேக தனிச் சிறப்புண்டு. இவற்றில் ஒன்பதை எடுத்துக்கொண்டால் அதற்கு எத்தனையோ உதாரணங்களைக் கூறலாம். நவக்கிரகம் (ஒன்பது கோள்கள்), நவ நதி கள் (ஒன்பது செல்வங்கள்) நவதானியங் கள், நவசக்திகள், நவராத்திரி, நவகன்னியர், நவபாஷணம் இதேபோல் துன்பங்கள் தீர நவபிருந்தாவனம் (ஒன்பது சமாதிகள்). அந்த ஒன்பது மகான்களும் 1.ஸ்ரீ பத்மநாப தீர்த்தர், 2. ஸ்ரீ கவீந்திர தீர்த்தர் 3. ஸ்ரீ வாகீச தீர்த்தர் 4. ஸ்ரீ வியாசராஜ தீர்த்தர் 5. ஸ்ரீ ரகுவர்ய தீர்த்தர் 6. ஸ்ரீ சிறினிவாச தீர்த்தர் 7. ஸ்ரீ ராம தீர்த்தர் 8. ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் (ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகளின் குரு) 9. ஸ்ரீ ராக வேந்திரர் (மிருத்திகா பிருந்தாவனம்) 10. ஸ்ரீ கோவிந்த உதையகு. இந்த ஒன்பது மகான்களின் சமாதிகளைத் தவிர அந்த சமாதிகளில் இருந்து கொண்டே இவர்கள் தினமும் பூசிப்பதற்காக ஸ்ரீ அனுமனின் சந்நிதி ஒன்றும் இங்கே இருக்கின்றது. இந்த அனுமனின் சக்தியும் அளவற்றது. மேலும் ஸ்ரீ ராகவேந்திர சுவாமியின் குருவான ஸ்ரீ சுசீந்திரதீர்த்தர் தன் சிஷ்யனிடம் தன் சொந் தப் பிள்ளைபோல் பாசம் காட்டி அவரைத் தன்னிடமே வைத்திருந்ததால் இங்கிருக்கும் பிருந்தாவனத்தில் மற்றொரு பக்கத்தில் ஸ்ரீ ராகவேந்திரரின் மிருத்திகா பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

பரிசலில் இருந்து இறங்கியவுடனேயே மெய் சிலிக்கின்றது. ஒன்று மகான்களும் நம் மோடு இருக்கின்ற உணர்வு ஏற்படுகின்றது. கிடைத்தற்கரிய ஒன்பது மூலிகைகளை ஒரே இடத்தில் கண்டால் ஒரு கொடிய நோயாளிக்கு எத்தனை மகிழ்ச்சி ஏற்படும்? அத்தகைய மகிழ்ச்சியையும் மன நிம்மதி யும் மனநிறைவும் ஏற்படுகின்றது. கிருத யுகத்தில் பிரகலாதன் அமர்ந்து ஸ்ரீ நரசிம்ம ரை தன் இதயத்தில் இருத்தி கடும் தவம் இயற்றிய இடம் இது. பிரகலாதன் அமர்ந்து தவம் இருந்த அதே இடத்தில் தான் இன்று ஸ்ரீ வியாசராஜ தீர்த்தருடைய ஜீவ சமாதி உள்ளது.

துவாபர யுகத்திலும் துர்வாசர், வியாசர், போன்ற பல மகான்களும் இப்புண்ணிய பூமியில் தவமிருந்த காரணத்தினால் மேலும் புனிதமடைந்தது இந்த நவபிருந்தாவனம். ஆதலால் தான் கலியுகத்தில் இந்த ஒன்பது மகா புருஷர்களும் பிருந்தாவனஸ்தர்களாக எழுந்தருளியிருந்து நம்மைப் போன்றவர்-களுக்குத் துணையாக இருப்பதற்கு இத் தீவை தேர்ந்தெடுத்தனர்.

'நமக்கினி வாழ்வில்லை" என்ற அளவிற்கு துன்பம் நமக்கு ஏற்படும் போது இல்லை, இல்லை. உனக்கு நிச்சயம் நல்வாழ்வுண்டு என அபயம் அளித்து தங்கள் தவத்தின் பலனை நமக்கு அளித்து காக்கும் இம் மகான்களை அங்கே கண்டபோது ஒளி-வெள்ளம் எம்முள் பாய்ந்தது.

இங்கே எப்படி வந்தார்கள்? ஏன் இந்த இடத் தை தேர்ந்தெடுத்தார்கள்? என்ற கேள்வி களுக்கு நம்மால் விடை காண முடிய வில்லை. குழந்தை வடிவாக நின்று சிரிக் கும் ஸ்ரீஅனுமன் முன் நெய்தீபம் ஏற்றி வணங்கும் மக்கள் கூட்டம் அளவிட முடியாது.

நீங்கள் உங்கள் பிரச்சினைகள் தீர நெய் தீபம் ஏற்றவிரும்பினால் உங்களுடன தேவை யான நெய் மண்சட்டி போன்றவற்றை எடுத் துச் செல்லவும். பட்டுச் சாத்த விரும்பினால் வேளைக்கே பட்டை கொடுத்துவிட வேண்டும். காரணம் பட்டை நுங்கபத்ராவில் தோய்த்த பின்பே நவபிருந்தாவனத்திற்கு சாத்துகின்-றனர்.

அற்புதங்கள் நாளாந்தம் நிகழ்ந்து கொண் டிருப்பதால் பக்தர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே இருக்கிறது.

இப்படிப்பட்ட ஆச்சரியமான இடத்திற்கு நாம்ஏன் அழைத்துச் செல்லப்பட்டோம் என் பதை எம்மால் இன்னும் புரிந்து கொள்ள முடியவில்லை. அது எப்படி நிகழ்கிறது என்பது கூட புரியவில்லை. அதனை நினைப்பது போல் தனக்கு நிகழ்ந்த அனுப வத்தை மெய்சிலிர்க்க விளக்குகிறார் கனடாவிலிருந்து நவபிருந்தாவனம் சென்று திரும்பிய ஒரு நடன ஆசிரியை.

பெங்களூரில் நான் தங்கியிருந்த HOTEL ஐச் சேர்ந்தவர்கள் நவபிருந்தாவனம் போக வில்லையா என்று எம்மை கேட்டார்கள். நவபிருந்தாவனத்தை பற்றி எனக்கு எதுவு மே தெரியாது. சரி பார்த்துவிடுவோமே என்று புறப்பட்டேன். மாலையில் இரவில் சென்னைக்கு புறப்பட வேண்டும். ஆனாலும் பார்த்து விட்டு வந்து விடுவோமே என்ற ஆவலில் புறப்பட்டேன். நுங்கபத்ரா நதிக் கரையை அடைந்து பரிசலில் சென்று நவபிருந்தாவனத்தை அடைந்தோம்.

நவபிருந்தாவனத்தை சுற்றி வலம் வந்து விட்டு மீண்டும் பரிசலுக்கு வரத் தயாரான போது அங்கே இருந்த அர்ச்சகர் தானும் எம்மோடு வருவதாக கூறிப் புறப்பட்டார். இரவில் யாரும் நவபிருந்தாவனத்தில் தங்கு வது கிடையாது. நாம் கடைசி ஆட்களாக பரிசலில் ஏறி உட்கார்ந்தோம். நவபிருந்தா வனத்தில் யாருமே கிடையாது. அந்த மகான் களை தவிர. பரிசல் புறப்பட்டு சில செக்க னில் மணியோசை மெல்ல மெல்ல நவ பிருந்தாவனத்தை நோக்கிய திசையில் கேட்கத் தொடங்கியது. யாரோ அங்கே பூசை செய்வது போல் இருந்தது. பரிசலில் இருந்த அர்ச்சகர் கண்களை மூடி தியானிக் கத் தொடங்கினார். பரிசல் ஓட்டும் சிறுவர் கள் இருவரும் சிறிது கலக்கத்துடன் காணப்பட்டனர். அங்கே ஏதோ அதிசயம் நடப்பது அவர்களுக்கு தெரிந்திருக்கின்றது.





பரிசலில் கரையை அடைய மணிச்சத்தமும் எம்காதுகளில் இருந்து நின்றுவிட்டது. யார் பூசை செய்தார்கள்? யாருமில்லாத அந்த தீவில் மாலைநேரத்தில் யார் வந்தார்கள்? என்றால் விடை காணமுடியவில்லை.

ஆனால் நான் கரையை அடைந்தவுடன் மந்ராலயம் நோக்கி போனேன். ராகவேந் திரா மந்திராலயத்தில் தரப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் எனக்கான விடை கிடைத்தது. அந்த துண்டுப் பிரசுரத்தில் சொல்லப்பட்டது இதுதான்.

நவபிருந்தாவனத்தில் இன்னமும் மகான்கள் உலாவிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். எனவே வேளைகளுக்கு இடையூறு செய்யா மல் நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள். நவபிருந்தாவனத்தை தொட்டு வணங்காதீர் கள். நீங்கள் அதிஸ்டம் செய்தவராக இருந்தால் அவர்கள் பூசை செய்கின்ற ஒலி யையோ அல்லது நீராடும் போது நதியின் தண்ணீரில் மூழ்கி எழும் ஓசையையோ கேட்கும் பாக்கியம் பெறுவீர்கள். நவபிருந்-தாவனத்தை புனித பூமியாக மதியுங்கள். இதுதான் அந்த துண்டுப் பிரசுரத்தின் சாராம்சம்.

நான் அதிர்ச்சியில் மூச்சடைக்க நின்றேன். மகான்களை நான் அறியேன். ஆனால், அவர்கள் செய்த பூசையை கேட்கும் பாக்கி யம் எனக்குக் கிடைத்திருக்கிறது என்று சொல்லி முடித்தார் அந்த கனடிய நடன ஆசிரியை.

கேட்கவே புல்லரிக்கின்றது. இதைப்போல் நிறையவே உண்டு.

■ ■ ■

# CTR தகவல் பலகை

## ROOMS / BASEMENT RENT

**DONMILLS & FINCH**
1 B/Room Basement for Rent
Call: 416 756 4365

**BRIMLEY & LAWRENCE**
2 B/Room, 11/2 W/R
416 265 3352 / 416 704 8534

**WARDEN & FINCH**
1 Room in condo for Rent
Call:416 493 0514

**SCARBOROUGH GOLF CLUB & LAWRENCE**
1 B/Room for Rent
Call: 647 284 8494

**MIDLAND / EGLINTON**
One Basement for Rent
Call: 416 226 1597

**BRIMLEY & LAWRENCE**
3 B/Room Bang low House for Rent
Call: 905 209 0856

**SCARBOROUGH GOLF CLUB & ELLESMERE**
3 B/Room for Rent(Up stair)
Call: 416 836 2253

**NEILSON & FINCH**
1 Room for Rent (Up Stair)
Call: 416 609 8077

**MCGOWAN & EGLINTON**
2 B/Room Condo for Rent
Call: 416 265 1421

**THIRUVANMIYOOR, VADAPALANI (INDIA)**
Guest House for Rent
Call: Canada – 416 285 9118

**DON MILLS & EGLINTON**
2 B/Room Condo for Rent/Sale
Call: 416 901 0816 / 647 283 5909

**MARKHAM & EGLINTON**
1 room in Apt. for Rent
Call: 416 269 4918

**MORNINGSIDE & SHEPPARD**
1 Room for Rent in a House
Call: 416 724 7877

**WITBY**
3 B/Roo T/House for Rent
5 App. Walk Out Basement
Call: 416 291 3997

**MIDLAND & EGLINTON**
Basement for Rent (Separate Entrence)
Call: 416 226 1597

**LAWRENCE & MCCOWAN**
1 B/Room Basement for Rent
Call: 416 439 3858

**KENNEDY & FINCH**
Business Space for Rent
Call: 416 464 7228

**MARKHAM & PAINTED POST**
2 B/Room Basement for Rent
Call: 416 494 5813 / 647 500 5813

**BRAMPTON**
Queen $ Airport
1 B/Room for Rent(in House)
Call: 647 894 2929

**SACRBOROUGH GOLF CLUP $ LAWRENCE**
1 B/Room Basement for Rent
Call: 647 284 8494

**MARKHAM & ELSON**
1 B/Room Basement for Rent
Call: 416 917 8336

**MORNINGSIDE & OLD FINCH**
Room for Rent
Call: 647 894 2416

**DENISON & MARKHAM**
2 B/Room Basement for Rent
(Separate Entrance, Parking)
Call: 905 294 1018

## HOUS / CONDO FOR SALE

**WARDEN & FINCH**
2 Room in condo for Sale
416 804 6855

**MCGOWAN & MCNICALL**
3 B/Room , 21/2 W/Room for Sale
Call: 416 754 9359

**WARDEN & ELLESMERE**
3 B/Room + 2 B/Room Banglow House
Call: 416 752 2789 / 647 295 5716

**MCCOWAN & MCNICOLL**
3 B/Room House for Sale
Call: 416 754 9359

**WARDEN & LAWRENCE**
3 B/Room + 2 B/R House for Sale
(7 Parking Also) $389.00
Call: 647 295 5716 / 416 752 2789

**MCCOWAN & EGLINTON**
2 Luxury Condo for Sale
(2 B/Room + 2 W/R.)
Call: 416 265 1421

**45 ACCAR FIELD LAND FOR SALE IN SRILANKA**
(Kanthalai – Pooddankaadu Field)
Call: 416 701 1764

**MIDDLEFIELD & FINCH**
a B/Room + Den Condo for Sale
416 312 8026 / 416 901 0877

**KENNEDY & EGLINTON**
2 B/Room Condo Den for Sale
416 303 7425

**KENNEDY & 401**
2 B/Room condo for Sale
416 723 3610

**KENNEDY & MIDLAND**
2 B/Room + Den Condo for Sale
Call: 416 303 7425

**BRAMPTON**
Dixie & Boor
4 B/Room House for Sale
Call: 905 494 0220

**AJAX**
2500 Sq. feet 4 B/Room House for Sale
$335
647 244 3799

## OTHERS

**GERMAN SHEPP - DOG**
for Sale
Call: 416 901 0816 / 647 283 5909

**CTR**
கனடியத் தமிழ் வானொலி
**416.264.8798**

**DOG FOR SALE**
White Bommanerian Dog for Sale
(Female)
Call: 416 743 6994

**NIKON X96 CAMERA**
28.5 View lence for Sale
Call: 416 423 6404

**92, TOYOTA CAMRY**
290 Km for Sale ($1000.00)
Call: 647 295 5716 / 416 752 2789

**JAFFNA PERIYAVILLAN**
1 House with land for Sale
3 B/Room, $30.000.00
905 723 1543

**DAY CARE FOR KIDS SWING WORK AVAILABLE**
416 431 8655

**WEIGHT LOSE**
647 261 0281 / 416 577 9737

**TV REPIRE**
Call: 905 472 2534

**TUITIONS /TRANSLATION**
416 282 0951 / 416 570 6920


**TUITION CLASS**
Middlefield & Finch
Tuition Class for Student
Call: 416 830 7078 / 416 609 9043

**YOGA**
Birchmount & Eglinton)
Yoga (Thiyanam) Class (Free)
Call: 416 642 4883

## OFFICE SPACE FOR RENT

**OFFICE SPACE AVAILABLE FOR RENT AT MORNINGSIDE & SHEPHERD**
**(near Home depot)**

**Office space, Also use as a show room, available for rent at**
**Murali: 416 - 569 - 4065**
**emk4u@hotmail.com**

**இந்த அழகிய வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?**

240 Bedrooms, 78 Washrooms, 825,000 square feet, 40 acre garden, 1500 doors, 750 windows, movie theatres, swimming pools, many more..

இன்னும் பல வசதிகள்... அது
**பக்கிங்காம் அரண்மனை**

துரதிஷ்டவசமாக அது விற்பனைக்கில்லை. ஆனாலும் என்னால் உங்களுக்கு பொருத்தமான, பிடித்த அழகியதோர் இல்லத்தை வாங்கித் தரமுடியும்.

**SHRI PARAMSOTHY**
Sales Representative

**Dir: 647.285.4663**
**Office: 905.812.9000, fax: 905.812.6909**
**shri@shri.ca, www.shri.ca**

TERREQUITY REALTY, BROKERAGE,
Independently Owned And Operated
2690 Erin Centre Blvd., Unit A5,
Mississauga, ON L5M 5P5



COLDWELL BANKER

# உலகு எதிர்கொள்ளவிருக்கும் பெரும் நெருக்கடி: பஞ்சம்



மாமூலன்
maamulan@thaiveedu.com

உலகநாடுகள் பலவற்றிலும் பஞ்சம் பற்றிய பயம் பற்றி எரியத் தொடங்கியிருக்கிறது.

வளர்ந்த நாடுகள் என்று சொல்லிக் கொள்பவை ஓர் வரட்டு, அசட்டுத் தைரியத்தில் அப்படி எதுவும் நடக்காது மக்களை ஏமாற்றி நாளைக் கடத்தும் கதைகளைக் கட்டுகிறார்கள். உண்மையில் நிலைமை ஆபத்தானது.

கடந்த கிழமைகளில் எகிப்து, இந்தியா, இந்தோனேசியா, செனகல், மொசாம்பிக், மொராக்கோ, கமரூன், அய்வரிகோஸ்ற், மொரித்தானியா, ஹாயித்தி, மெக்சிக்கோ எனப்பலநாடுகளில் ஆங்காங்கே மக்கள் கலவரம் செய்திருக்கிறார்கள். காரணம் உணவுப் பொருள் தட்டுப்பாடு. இந்தக் கலவரம் ஏற்பட்டதற்கு காரணம் உணவுப் பொருட்களான அடிப்படைத்தானிய வகைகள் கிடைக்கவில்லை என்பதுதான். தானியங்களின் விலை ஒருபக்கம் உயர்ந்துகொண்டே போனாலும் அவற்றின் வழங்கலும் உரிய படி இல்லை.

இந்நிலையைக் கண்ட பல நாடுகள் உணவுப்பொருட்கள் ஏற்றுமதியாவதைத் தடைசெய்துவிட்டன.

சீனா, ரசியா, உக்ரைன், கசக்ஸ்தான், ஆர்ஜென்ரீனா, கம்போடியா, வியட்நாம், இந்தியா மற்றும் எகிப்து போன்ற நாடுகளே தானிய ஏற்றுமதியைத் தடைசெய்துவிட்ட நாடுகள். இவை அனைத்தும் கோதுமையும் அரிசியும் உற்பத்தி செய்யும் உலகின் முதன்மை நாடுகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆர்ஜென்ரீனாவின் அண்டை நாடான எல் சல்வடோரில் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது.

இந்தியா தான் ஏற்றுமதியைத் தடைசெய்தாலும் வெளிநாடுகளில் இருந்து உணவுத் தானியங்களை இறக்குமதி செய்யவிருக்கின்றது.

தானிய ஏற்றமதியை எந்த நாடும் தடை செய்யக்கூடாது என்று உலக வங்கி சொல்கிறது.

குறிப்பாக கசக்ஸ்தான் மற்றும் ஆர்ஜென்ரீனா போன்ற நாடுகளின் தடைகள் நிறுத்தப்படவேண்டும் என்று உலக வங்கி பொங்குகிறது.

உண்மையில் இவ்வாறு இன்று உலகில் தானிய நெருக்கடி வருவதற்கு உலக வங்கியின் முடத்தனமான கொள்கைகளும் அது பல நாடுகளின் மீது விதிக்கும் நிபந்தனைகளும் தான் ஒருவகையில் காரணம் என்பது பலரும் அறிந்திராதது. பெயரில் தான் அது உலக வங்கி - ஆனால் உண்மையில் அது மேற்குலகத் தாங்கி. மேற்கு நாடுகளின் நன்மையைக் கருத்தில் கொண்டு பிற நாடுகளை அடிமைப்படுத்தும் பொறி.

கிரெடிட் காட் போன்றவற்றில் எவ்வாறு ஒரு மத்திய பொருளாதாரா நிலையில் இருப்பவர் சிக்கிச் சிதைகிறாரோ அதே போல உலவங்கியின் கடனினால் பல முன்னேறத் துடிக்கும் நாடுகள் சீரழிகின்றன.

பல நாடுகளில் உலக வங்கி கடனைக் கொடுப்பதற்கு விதித்த நிபந்தனையில் ஒன்று அந்தந்த நாடுகள் தங்கள் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கக் கூடாது என்பது. விவசாயிகளுக்கு எவ்வித சலுகை விலைகளும் அறிவிக்கக்கூடாது. அப்படியாயினும் விவசாயிகளுக்கு உரம், மருந்து, மின்சாரம் போன்றவற்றில் உதவி அல்லது சலுகை விலை வழங்கக்கூடாது என்பனதான்.

நிலைமை இப்படியிருந்தால் எப்படி தானிய விளைச்சல கொளிக்கும்? இப்படி தானிய வகைகள் கிடைக்கவில்லை என்றால் அனைத்து உணவு வகைகளும் விலை ஏறும் நிலை ஏற்டும்.

இறைச்சி முதற்கொண்டு பால்வரை விலை உயரும்.

கனடா போன்ற நாடுகளில் மாடுகள் மற்றும் பிற கால்நடைகள் கோழிகள் போன்றன தானியங்களை அடிப்படையாகக் கொண்ட உணவிலேயே தங்கியிருக்கின்றன. ஆகவே தானியத் தட்டுப்பாடு என்பது பாலினதும் முட்டையினதும் இறைச்சியினதும் தட்டுப்பாடு என்று பொருளாகும்.

இன்றைய மேற்கு நாட்டவர் அவர்களின் முந்நாள் உருளைக்கிழங்கு, சோளத்-தானிய அடிப்டையிலான உணவுப் பொருள் பழக்கத்தல் இருந்து வெகுவே விலகி கோதுமை மற்றும் அரிசி அடிப்படையிலான பல உணவு வகைகளைக் கைக்கொள்ளத் தொடங்கிவிட்டனர்.

இந்நிலையில் தற்போதுவரத் தொடங்கியுள்ள தானியப்பஞ்சம் மக்களிடையே ஓர் விழிப்பு நிலையைத் தோற்றுவிக்கலாம்.

மேற்கு நாடுகளில் இருக்கும் மக்கள் தாங்கள் ஓர் சொர்க்கபூமியில் வாழ்வதாகவும் தங்களைவிட மோசமாக மற்றைய தென் பகுதி நாடுகள் இருப்பதாகவும் எண்ணுகின்றன. அவற்றின் ஒரே எதிரியான ரசியாவின் முந்நாள் வடிவமான சோவியத்தும் உடைந்து விட்டதால் இந்த நினைப்பில் பெருமை பிடிபடாது அவர்களுக்கு. ஆனால் இந்தத் தானியப்பஞ்சம் வருமாயிருந்தால் ஒரு காலத்தில் எவ்வாறு வாழைப்பழம் போன்ற வெப்பவலய நாடுகளின் உணவுப் பொருட்கள் சோவியத்தில் அரிதாகக் கிடைத்ததென்று சொல்லப்படுகிறதோ அதே நிலையை மேற்கு நாடுகளின் சுப்பர் மாக்கற்றுக்கள் எட்டும்.

அதற்கு மறுதலையாக எரிகின்ற நெருப்பில் எண்ணையாக எரிபொருள் விலை அதிகரிப்பு உள்ளது.

தற்போதே அனைத்துப் பொருட்களும் விலை அதிகரிக்கப்பட்டுவிட்டது. காரணம் எண்ணைவிலை எனப்படுகிறது.

கனடாவின் டொலர்மதிப்பு அதிகரிப்பால் எவ்வித பயனும் தற்போதைக்கு இல்லை என்பது பலருக்கும் தெரியவில்லை. டொலர் அதிகரிப்பு ஏற்படுத்திய விலை அதிகரிப்பு எண்ணை விலை அதிகரிப்பு விகிதத்துக்கு ஏற்ப கனடாவில் சம்பளத்தின் உயர்வு உள்ளதா? இல்லையே. அப்படியாயின் டொலர் மதிப்பு தனிமனிதருக்குக் கொண்டு வந்த நன்மை என்ன?




இந்நிலையில் உணவுப் பொருள் விலையேற்றங்கள் பலமாக மேற்கு நாடுகளைப் பாதிக்கப்போகின்றன.

இலங்கை போன்ற நாடுகுளிலாவது வெளியில் படுத்துறங்கி ஒருவேளை உண்டு உயிர்வாழலாம். இந்த நாடுகளிலும் அதுவும் இயலாது. பங்குச் சந்தையில் இட்ட பணமும் வங்கி வைப்பில் இட்டபணமும்கூட உணவைக் கொண்டு வந்து தராது. பல நெருக்கடிகள் வரவிருக்கின்றனது. தற்போதைய கனடாவின் பொருளாதார வீழ்ச்சி நிமிர்வதற்கு இன்னம் இரண்டு ஆண்டுகளாவது பிடிக்கும் என்கிறார்கள்.

அதற்குள் மேற்குநாடுகளிலும் கனடாவிலும் உணவுப்பொருள் தட்டுப்பாட்டால் மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்யும் காட்சியை காணும் பாக்கியம் கிடைக்கும் என்றே கருதுகின்றேன்.

மொராக்கோவிலும் எகிப்திலும் நடந்த மக்கள் கலவரம் ஐரோப்பி நாடுகளைத் தொற்றிக்கொள்ள பல தூரமும் காலமும் இடைவெளியாக இல்லை.

கடந்த மார்ச்சிலிருந்து இன்றுவரை 1 டொலரிலிருந்து 1.74ஆக அரிசியின் விலை உயரந்துள்ளது. கோதுமை விலை 1டொலராகவிருந்தால் 2.30 ஆக உயர்ந்துள்ளது. சாதாரணமாக ஒரு வளர்ந்தவருக்கு 2000 கலோரிகள் தேவைப்படும். இந்த சக்தி பெரும்பாலும் தானிய வகைகளில் இருந்தே பெறப்படும். தானியப் பஞ்சம் இந்த அளவைக்குறைக்கும் போது மக்களுக்கு நோய்தாக்குதல் நடைபெறுகிறது.

1960 இலிருந்து இன்றுவரை தானியங்களின் உற்பத்தி அளவு தொடர்ந்து குறைந்தே வருகிறது. இதற்குவிளைச்சல் நிலங்களில் வீடுகள் போன்ற கட்டிடங்களைக் கட்டுவதாலும் விளை நிலங்களுக்கும் அந்த தொழிலுக்கும் உரிய பெறுமதி கிடைக்காததாலும் இவ்வாறு ஏற்படுகிறது எனக் காரணம் சொல்லப் படுகிறது. பெரும்பாலான நாடுகளில் குடியிருப்புக்கள் விளைச்சல் நிலங்களை அழித்தே செய்யப்படுகின்றன.

தான்சானியா மற்றும் ஆஸ்திரேலியாவில் எற்பட்ட கடும் தொடர் வரட்சியால் பெருமளவு விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. அதே போல ஒப்பீட்டளவில் விளைச்சல் தேவை அதிகரிக்கும் போது விளைச்சலை அதிகரிக்கும் புதிய முறைகளைக் கடைப்பிடிக்காமல் விட்டிருப்பதும் இந்தத் தட்டுப்பாட்டுக்கு ஒரு காரணம் எனப்படுகிறது.

ஏனெனில் புதிய பெருமெடுப்பு நடைமுறைகளை விளைச்சல்கானக் கடைப்பிடித்த பிரேசில் இன்று தனது உணவுத் தேவையை நிறைவு செய்து ஏற்றுமதி செய்யும் நிலையில் உள்ளஎ. ஒரு காலத்தில் பிரேசில் உணவுப் பஞ்சத்துடன் இருந்த நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

காரணங்கள் பல இருப்பினும் தொடர்ந்து விளைச்சலின் வீதம் குறைந்து வருவதை உலகப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

உணவுத்தட்டுப்பாட்டினால் மக்கள் வீதியல் இறங்கிப் போராடுவதைச் சயெதிகள் காட்டுகின்றன.

அனைத்துப் பொருட்களுக்கும் எண்ணை விலை (பெற்றோல்) ஏற்றத்தினால் விலை அதிகரிப்பு உள்ளது என்று செய்திகள் சுட்டுகின்றன. 2012இல் (இன்னும் 4 வருடத்தில்) எரிபொருள் விலை 2.40 ஆக இருக்கும் என்று முன்கூறப்பட்டுள்ளது.

உலகை மிரட்டுகிறது ஓர் பெரும் நெருக்கடி. கண்டும் காணாமல் இருக்கின்றன மேற்கு நாடுகள்.

■ ■ ■



# A1 TOP QUALITY FLORIST





**உங்களின் மங்களகரமான வைபவங்களுக்கு**

**தேவையான பொருட்களுக்கும் நாடுங்கள்**

**பிள்ளை 416-269-5522**

**2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8**



# A1 TOP QUALITY FLORIST

## Funeral Services




**Floral Arrangement for Funeral Needs**


**பிள்ளை 416-269-5522**

**2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8**

# மலர்கள் பேசுமா?

## (இங்கிலாந்தின் கண்டுபிடிப்பான எளிய மலர் மருத்துவம்)

இராஜசேகர் ஆத்தியப்பன்
rajasegar@thaiveedu.com



வாசகப் பெருமக்களுக்கு சித்திரைப் புத்தாண்டின் வாழ்த்துக்கள். வசந்தம் பிறந்தாச்சு இனிவரும் நாட்கள் இனிமையாக அமையட்டும். தொடர்வது நீங்கள் கேட்டவை.

**என் கணவர் வளவள என்று பேச மாட்டார். கடினமான வேளைகளில் கூட புன்சிரிப்புடன் இருப்பார். எளிதில் எடைபோட முடியாது. தனது கவலைகளை மறக்க குறிப்பிட்ட சில நண்பர்களைத் தேடிச் சென்று இரகசியமாகக் குடிக்கின்றார். பேரம் பேசாமல் அதிக விலை கொடுத்துப் பொருட்களை வாங்கி வந்து விடுவார். இவரை மாற்ற என்ன செய்யலாம்?**

திருமதி. ஈஸ்வரன், Brampton

இந்த குணாதிசயமுள்ளவர்களை மாற்றுவதற்கு மலர் மருத்துவம் என்று ஒன்று உள்ளது. ‘அக்ரிமணி’ என்ற மருந்தை தொடர்ந்து 30 நாட்கள் (ஒரு நாளைக்கு 4 முறை) கொடுத்துவர, நீங்கள் நினைக்கும் யதார்த்த மனிதராக மாறிவிடுவார்.

**வேகமாக ஒரு வேலையை ஆரம்பித்து எளிதில் சோர்ந்து விடுகிறார் என் மனைவி.**

இராஜ், North York

ஒலிவ் (Olive) என்ற மலர் மருந்து நல்ல பலனைத் தரும். இருதய பலவீனம் இருந்தால் அதனையும் நீக்கும். இதனுடன் ‘ஹார்ன்பீம்’ (Hornbeam) என்ற மருந்தையும் சேர்த்துக்கொள்ளலாம்.

**நான் ஒரு நிறுவனத்தின் மேலாளராக இருக்கின்றேன். கொஞ்ச நாட்களாக எனக்குச் சரியான தூக்கம் இல்லை. குடும்ப வாழ்வில் நாட்டம் இல்லை. பல மருந்துகளை முயற்சித்து விட்டேன். பலன் ஏதும் இல்லை.**

Roy SanthaKumar, Scarborouy

செர்ரி ப்ளம், ஒயிட் செஸ்நெட், பீச் என்ற மருந்துகளை தொடர்ந்து எடுத்துவர வேண்டும். வாரத்தில் 2 நாட்கள் எண்ணெய் தேய்த்து முழுக வேண்டும். காபி, தேநீர், மது போன்றவைகளைத் தவிர்க்க வேண்டும். குறிப்பாக 9 மணிக்கு படுக்கைக்குச் செல்ல வேண்டும். விரைவில் பூரணகுணம் கிட்டும்.

**எனது மூத்த மகனுக்கு வயது 6. இப்பொழுது அவனுக்கு ஒரு தம்பி பிறந்தது பிடிக்கவில்லை. வீட்டிலுள்ள விளையாட்டு சாமான்களை எறிந்து உடைக்கின்றான். தூங்கும் குழந்தையின் மீது தலையணையைத் தூக்கி எறிகின்றான்.**

ஷோபனா, North York

ஹோலி, செர்ரி பிளம், வைன் என்ற மூன்று மலர் மருந்துகளைத் தொடர்ந்து கொடுத்து வந்தால் 50 நாட்களுக்குள் முற்றிலும் குழந்தை மாறிவிடுவான்.

**என் மனைவி காரணமில்லாமல் பயப்படுகின்றாள். *‘Passiflora’* என்ற மருந்தை எடுத்துப் பார்த்தோம். ‘அமுக்ரா’ என்ற ஆயுர்வேத மருந்தை எடுக்கலாமா?**

எட்கர்சன், மார்க்கம்

இதற்கு (Aspen) ஆஸ்பென் என்ற மலர் மருந்து நல்ல தீர்வு. 3 மாதங்கள் தொடர்ந்து எடுக்க வேண்டும்.

**என் கணவர் எல்லா வேலைகளையும் வேக வேகமாகச் செய்கின்றார். எல்லோரும் தன்னைப் போல விரைவாகச் செயல்பட வேண்டும் என்று நினைக்கின்றார். இதனால் கை கால்களில் அடிபட்டு நொந்து கொள்கின்றார்.**

சந்திரா, Victoria park

இம்பேஷன்ஸ் (Impatience) என்ற மலர் மருந்து நாள் ஒன்றுக்கு மூன்று வேளை தொடர்ந்து 4 மாதம் கொடுக்க வேண்டும்.

**எனது மகன் வயது 19. திக்குவாயால் மிகவும் அவதிப்படுகின்றான்.**

சிவயோகராஜா, மிஸ்ஸிஸாகா

ஸ்கிர்லாந்தஸ் (Scerlanthus) என்ற மலர் மருந்து ஒரு நாளைக்கு 3 வேளை வீதம் ஒரு மாதம் கொடுக்கலாம். ஒரு வாரத்தில் நல்லபலன் கிட்டும். தவிர சித்த மருத்துவத்தில் உள்ள ஓமான் சுடர் தைலம், வல்லாரை இவைகளும் பலன் தர வல்லவை.

**எனது மகள் குளிர்காலம் முழுவதும் வீட்டிற்குள்ளேயே இருக்கின்றாள். வெளியில் சென்றால் உடனே தும்மல் வந்துவிடும். சைனஸ் வந்துவிடும் என்று பயப்படுகின்றாள்.**

இந்திரன், Down town

‘வால்நட்’ என்ற மலர் மருந்தை காலை – மாலை இருவேளை ஒரு மாதம் கொடுத்தால் போதும்.

**எனக்கு வயது 50 நாள் முழுவதும் பசியும், மயக்கமும் உள்ளது. ஆனால், சாப்பிட முடியவில்லை. சாப்பிட்டால் வயிற்றில் எரிச்சல் உண்டாகின்றது.**

சாவித்திரி, U.S.A.

Clematis, walnut, Scerlanthus ஆகிய மூன்று மலர் மருந்துகளை தினமும் 3 வேளை எடுத்துவர 4 நாட்களில் நல்ல மாற்றம் கிட்டும்.

எனக்கு அடிக்கடி சிறுநீர் கழிக்கும் பழக்கம் உள்ளது. வேண்டாத நினைவுகள் திரும்பத் திரும்ப மனதில் தோன்றி தொல்லை படுத்துகின்றது. எனக்கு ஆஸ்துமாவும் உண்டு. காதில் பல்வேறு சத்தங்கள் கேட்பது போன்று உள்ளது. முன்பக்க தலைவலியும் அவ்வப்போது உண்டு.

திருமதி. இராணி இராமசாமி, Red hills

இதற்குச் சரியான மருந்து ‘white chest nut’ என்ற மலர் மருந்துதான் விரைவில் குணம் கிடைக்கும்.

**எனது மனைவி அற்ப விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பெரிய விஷயங்களில் ஏமாந்து விடுகின்றாள். தாய்ப்பால் கொடுப்பதால் தன் அழகு போய்விடும் என்று கவலைப்படுகின்றாள். பொது இடங்களில் உள்ள கழிவறைகளைப் பயன்படுத்த மாட்டாள். எப்பொழுதும் மூக்கு ஒழுகிக் கொண்டே இருக்கும்.**

அன்பரசன், GTA

அன்பரே இது சின்ன விஷயம் கவலை வேண்டாம். ‘கிராப் ஆப்பிள்’ (crab apple) என்ற மலர் மருந்தை தினசரி 3 வேளை கொடுத்து வாருங்கள். அப்புறம் உங்கள் மனைவி எப்படி நடந்து கொள்கிறார் என்று பாருங்கள்.

**எனது கணவர் எப்பொழுதும் நடிகை ஸ்னேகா பற்றிய கனவில் வாழ்கின்றார். குடும்பத்தை பற்றிய சிந்தனையே சிறிதும் இல்லை. அடுத்தவர்கள் பேசுவதைக் கவனிக்கவே மாட்டார். எப்பொழுதும் கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருப்பார்.**

நிலரோமி, லான்ஸ்டவுன்

‘clematis’ என்ற மலர் மருந்தை தினசரி மூன்று வேளை கொடுத்தால் எளிதில் மாறிவிடுவார்.

**எனது அம்மா எல்லோரையும் அடித்து உதைக்க முற்படுகின்றார். (நாட் உட்பட) யாரோ செய்வினை செய்ததாகத் திரும்ப திரும்ப கூறுகின்றார். சாமியார், டாக்டர் என்று எல்லோரையும் பார்த்து விட்டோம். பலன் இல்லை. என்ன செய்யலாம்?**

பாஸ்ரா, Don mills

Willow, Carb apple, White Chest nut, வைன் ஆகிய நான்கு மலர் மருந்துகளை தினசரி 3 வேளை தொடர்ந்து கொடுத்தால் 15 நாட்களில் முன்னேற்றம் தெரியும்.

**எனது மாமியார் எனது கணவரை என்னுடன் அன்பாக இருக்க விட மாட்டார். அவருடைய பேச்சை கேட்டே எனது கணவர் நடக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றார். தீர்வு ஏதாவது சொல்லுங்களேன்.**

வசந்தி Down town

‘Ehicory’ என்ற மலர் மருந்து நல்ல பலனைத் தரும். எளிதில் மன்னிக்க முடியாத சுபாவம் உள்ளவரையும் மாற்றிவிடும் மருந்து இது.

**என் கணவர் ரொம்பப் படித்தவர். ஆனால், தன்னையே தான் நம்பமாட்டார். சுய புத்தியும் கிடையாது. சொல் புத்தியும் கிடையாது. அடிக்கடி பலரிடம் யோசனை கேட்பார். ஆனால் எதையும் செய்ய மாட்டார்.**

தியாகராஜன், overlea

‘Cerato’ என்ற மலர் மருந்து இவருக்கு ஏற்றது. மாறி மாறிப் பேசும் மன நிலை விரைவில் மாறும்.

**எனது தம்பி எப்பொழுதும் குற்ற உணர்வினால் தன்னைத்தானே தாழ்த்திக் கொள்கின்றான். சந்தோஷம் இன்றி காணப்படுகின்றான். மாற்ற வழி உண்டா?**

ஜெயந்தி, மார்க்கம்

தன்னைத்தானே குறை கூறிக்கொள்ளும் நபர், அடிக்கடி மன்னிப்பு கேட்கும் நபர் இவர்களுக்காக கொடுக்க வேண்டியது ‘Pine’ என்ற மலர் மருந்து நல்ல மாற்றம் கிட்டும்.

**எனது மூத்த அக்கா திடீரென உடல் பருமன் அதிகரித்து மிகவும் குண்டாகக் காணப்படுகின்றாள். இப்பொழுதெல்லாம் அடிக்கடி ‘மூட்டுவலி’ இருப்பதாகக் கூறுகின்றாள்.**

செல்லம்மாள், Broadway

‘Hornbeam’ மற்றும் ‘Crab apple’ இந்த இரண்டு மலர் மருந்துகளை தினசரி 3 வேளை கொடுத்து வந்தால் மூட்டுவலி 1 மாதத்திலும் உடல் பருமன் 3 மாதத்திலும் சரியாகி விடும்.

**இரண்டு பொருட்களில் எதைத் தேர்ந்தெடுப்பது என்ற கவலைதான் எப்பொழுதும் எனக்கு.**

வால்டன், Finch

‘Scerlanthus’ உங்களுக்கு ஏற்ற மருந்து.

**சிந்திக்க, சிரிக்கத் தெரியாதவர் என் கணவர். தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் சிறிதும் இல்லாதவர்.**

சாந்தி, Steels

‘Wild rose’என்ற மலர் மருந்தை தினமும் 3 வேளை உங்கள் கணவருக்குக் கொடுங்கள். அப்புறம் பாருங்கள் மாற்றத்தை.

■ ■ ■



# $5=$3+$.50+1.50

# (உணவு+சக்தி+மீதிச் செலவு)

மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -
maran@thaiveedu.com



மேலுள்ளது ஐவர் கொண்ட ஒரு வங்காள தேச குடும்பத்தினரது நாளாந்த வரவு செலவுத் திட்டம். ஒரு நாளைக்கு ஒருவரது சராசரி உழைப்பு 1 டொலராகும். இதிலும் எல்லோரும் உழைப்பதாக இருந்தால்தான் ஒரு வரவுசெலவுத் திட்டம் மேற்கண்ட மாதிரி இருக்கும். இருவர் உழைப்பில் அல்லது ஒருவர் உழைப்பில் வாழும் சராசரி குடும்பத்தினரின் பாடு மிகக் கடினமாகவே இருக்கும்.

இது இப்படி இருக்க, உலகளாவிய ரீதியில் உணவுப் பொருட்களுக்கு குறிப்பாக அரிசி, கோதுமை போன்ற அடிப்படை உணவுப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மெக்சிக்கோவில் tortilla உணவின் விலை உயர்வு காரணமாக கலகம் ஏற்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸ் நாட்டில் ஆயுதம் தரித்த இராணுவ வீரர்கள் விலைக் கட்டுப்பாட்டை அமுல்படுத்த ஆரம்பித்துள்ளனர். தாய்லாந்தில் நெல்வயல்களுக்கு ஆயுதம் தாங்கிய விவசாயிகள் காவல் புரிகின்றனர். எகிப்தில் அண்மைக் காலங்களில் பதினொரு பேர் வரையில் பாண் வாங்க வரிசையில் நின்று வெயில் காரணமாக உயிரிழந்திருக்கின்றார்கள். இது போன்ற துன்பம் தரும் செய்திகள் ஜோர்தான், பாக்கிஸ்தான், மொசாம்பிக், ஐவரி கோஸ்ற், மொராக்கோ, ஆர்ஜென்ரினா போன்ற நாடுகளிலிருந்து வந்து கொண்டிருக்கின்றன. இலங்கையைக் கூட இந்தப் பிரச்சினை பாதிக்காமல் இல்லை. அங்கு அரிசிக்கு விலைக்கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனால், அங்குள்ள தலைவர்களின் கவனம் இன்னொரு பிரச்சினையில் இருக்கின்றது.

பல தசாப்தங்களுக்குப் பிறகு முதல் முறையாக பெரிய அளவில் பசியும், பட்டினியும் உணவை இறக்குமதி செய்யும் வறிய நாடுகளில் ஏற்படும் அபாயம் ஏற்பட இருக்கின்றது. கடந்த காலங்களில் தனித்து ஒரு இடத்துக்கோ ஒரு நாட்டிலோ பஞ்சம் ஏற்பட்டால், சர்வதேச உதவிகள் மூலம் அதை நிர்வகிக்கக் கூடிய நிலை இருந்தது. ஆனால், இந்தத் தடவை அப்படி சமாளிக்க முடியுமா என்ற அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு சனீஸ்வரனும், செவ்வாயும் தற்போது இருக்கும் வீடுகள் காரணமாக இருக்குமோ என்பது சரியாகத் தெரியாவிடினும் இதற்குக் காரணங்களாக ஆய்வாளர்கள் பல காரணங்களைக் காட்டுகிறார்கள்.

கடந்த சில தசாப்தங்களாக உணவு உற்பத்தியின் வேகம் அதிகரித்ததை விட, சனத் தொகை அதிகரிப்பு அதிகமாகும். அதுவும் வறிய நாடுகளில் இந்த விகிதாசாரம் அதிகம். அத்துடன், இந்தியா, சீனா, இரஷ்யா போன்ற நாடுகளில் முதலாளித்துவத்தின் வரவால் வளர்ச்சியடைந்த மத்தியதர வகுப்பினரின் வருவாய் அதிகரிப்பினால் முன்னர் எப்போதும் இல்லாத அளவு நுகர்வு அதிகரித்துள்ளது. செம்பு, இரும்பு, எரிபொருள் போன்ற வற்றின் விலையேற்றம் போலவே இதுவும்.

எரிபொருளின் விலையேற்றத்தால் பயிரிடுதலுக்கும் போக்குவரத்துக்குமான செலவினங்களின் தாக்கத்தாலேயும் விலை அதிகரித்துள்ளது.

அத்துடன், அவுஸ்திரேலியா போன்ற முக்கியமான கோதுமை பயிரிடும் நாடுகளில் வரட்சி காரணமாக பல போக பயிர்கள் நாசமடைந்ததால் உலகச் சந்தைகளில் வழங்கல் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த வரட்சி ஆப்பிரிக்காவிலும் சில நாடுகளில் உணவுற்பத்தியைப் பாதித்துள்ளது.

சில நாடுகளில் வரட்சி பிரச்சினையாக இருக்க, வரட்சிப் பிரச்சினை இல்லாத சில நாடுகளில் உள்நாட்டு யுத்தம், பொருளாதார நிர்வாகக் குறைபாடு, ஊழல் என்பனவும் இந்த விலை உயர்வுக்குக் காரணமாகின்றது.

இவையெல்லாம் வழமையான காரணங்களாக இருக்க, புதிதாக ஒரு காரணம். அதாவது உணவுற்பத்திக்கு ஒரு போட்டியாக எதனோல் உற்பத்தி சேர்ந்துகொண்டது. தற்போது காருக்கு எண்ணெய் போடும்போது, அதில் எதனோல் சேர்ந்திருப்பது பற்றி எல்லோரும் அறிந்திருப்பீர்கள். காபனீரொட்சைட்டு காரணமாக பூகோள வெப்பமடைதலையொட்டி சுத்தமான எரிபொருளைப் பாவிக்க மேற்கு நாடுகள் சட்டங்களை உருவாக்கியதைத் தொடர்ந்து எதனோல் தேவை அதிகரித்தது. சோளம், கரும்பு என்பவை எதனோல் உற்பத்தியை நோக்கிச் செல்ல, பல லட்சக் கணக்கான ஏக்கர் உணவுப் பயிர் நிலங்கள் இந்த சோளம், கரும்பு பயிர்ச் செய்கை நோக்கி திருப்பப்பட்டன. இது மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்ததுபோல தானிய விலைகளை இன்னும் அதிகரித்துள்ளது.

அத்துடன் உங்கள் வீடு இருப்பது பழைய பண்ணை நிலத்தில் என்றால் நீங்களும் ஒரு காரணம் இந்த விலை ஏற்றத்திற்கு. கடந்த பல ஆண்டுகளாக நடந்த வீட்டு கட்டுமான விரிவாக்கத்தில் பலலாயிரம் ஏக்கர் பண்ணை நிலங்கள் பறிபோய் விட்டன.

இதற்கு என்ன முடிவு என ஐக்கிய நாடுகள் சபையும் பல அரச அமைப்புகளும் வழிவகை தெரியாமல் திணறிக்கொண்டிருக்க, இதற்கு உடனடித் தீர்வு இல்லை என்றே ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

இது இப்படியிருக்க, இந்த உணவுப் பதார்த்த முதலீட்டாளர்கள் முதலிட பல வழிவகைகள் இருக்கின்றன. இந்த Exchange Traded Notes என்று சொல்வார்கள் - உதாரணமாக, Dow Jones AIG Grains, Total Return ETN என்பது 54% ஒரு வருடத்தில் அதிகரித்துள்ளது. இதனுடைய ஐந்து வருட அதிகரிப்பு 11% ஆகும்.

இந்த அமெரிக்க முதலீட்டு பங்கினைப் பின்பற்றி கனடாவில் Beta Pro என்ற நிறுவனம் அண்மையில் இந்த உணவுப் பதார்த்தங்களின் விலையேற்றத்தில் முதலிட்டு பணம்பண்ண ஒரு கருவி ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த கட்டுரையின் ஆரம்பத்தில் சொன்னதுபோல, உலகத்தில் உணவுப் பிரச்சினைகள் இருக்கும்போது இப்படிப்பட்ட முதலீடுகளில் இன்னும் ஆதாயம் வர இடமுண்டு.

இதுபற்றிக் கருத்துத் தெரிவித்த முதலீட்டு ஆலோசகர் Terry Olson என்பார் இது ஒரு பிரகாசமான வழி, சாதாரணமானவர்கள் இதைப் புரிந்துகொள்வது கடினம். ஆனால் இந்தக் கருவி மூலம் இதில் அவர்கள் பங்கெடுத்துக்கொள்ளலாம் என்றார்.

ஆனால், Larry Merman என்பார், இப்படிப்பட்ட முதலீடுகளில் Speculation நிறைய இருப்பதால் மிகவும் இடர் நிறைந்தது என்றார். எது எப்படி இருப்பினும் சரியான ஆலோசனையுடன், சரியான வழியில் பல்வேறு முதலீடுகளை முதலிடுவதன் மூலம் இடரைக் குறைத்து வரவைக் கூட்டிக் கொள்ளலாம். அந்தப் பல வழிகளில் இதுவும் ஒன்று!





# Divine Home

*Ancient Indians designated an important part of the home as a sacred section where they retreat before each dawn to commune with the Supreme Being, the centre of the Spiritual Force is called Devatarchanam.*

*Love, Joy and prosperity come to a Hindu Family who worships in their homes through Poojas where the divine energies are invoked. The home shrine is also the focus point for private and group prayers.*

*The place should be meticulously kept like a temple through which whole household will be charged with Spiritual Vibration.*

OUR CRAFTSMEN CAN CUSTOM DESIGN AN ALTAR FOR YOUR POOJA ROOM AS REQUIRED

**NO PLYWOOD AND NO VARNISH**
**HEAT, OIL AND WATER RESISTANT**
**SPRAYED WITH HIGH QUALITY A.C. LAQUER**
**MORE THAN 100 MODELS ON DISPLAY**

## THE PERFECT POOJA MANDIR FOR YOUR HOME





A HOME IS NOT COMPLETE WITHOUT A "DIVINE HOME"



Jaipur Gore Plaza
Units 9 & 10
8917 The Gore Road
Brampton, ON
Tel: 647 887 3997

747 Flea Market
Booths, 326,327,328
Tel: 416 999 3997
www.divinehome.org

1845 Lawrence Ave East
Scarbourough, ON. M1R 2Y3
Tel: 647 435 0105
divinehome@rogers.com

LOFRANCO CHAGPAR
PERSONAL INJURY LAWYERS

"Dedicated and determined to provide the best results for your personal injury claims"

# 30 மில்லியன் டொலர்கள்

2006ம் ஆண்டு இழப்பீடாக மீளப் பெற்றுக்கொடுத்துள்ளோம்



- வாகன வீதி விபத்தில் காயமடைந்தீர்களா?
- விபத்தின் காரணமாக வேலைக்கு செல்வதில்லையா?
- உங்கள் குடும்பத்தின் தேவைகளை கவனிக்க முடியவில்லையா?
- காப்புறுதி நிறுவனம் பணம் செலுத்துவதை நிறுத்திவிட்டதா?
- இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதில் தாமதமா?




**Rocky Lofranco**
Senior Partner

இலவச ஆலோசனைகளுக்கு அழையுங்கள்

**LOFRANCO CHAGPAR**
Personal Injury Lawyers

**வாகன விபத்து கோரிக்கைகளில் 15 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் கொண்ட சட்ட நிறுவனம்**

தமிழில் சேவை வழங்கப்படும்
இலவச ஆலோசனைகளுக்கு
**இலங்கதாஸ் பத்மநாதன்**

TORONTO OFFICE
Yonge / Norton Centre
5255 Yonge Street,
Suite1300 North York
416 223-8333

MISSISSAUGA OFFICE
Dundas / Hurontario
257 Dundas St. East,
Unit 1
905 275-8806

FREEE CONSULTATION
**LANKATHAS PATHMANATHAN**
**416 774-8122**
DIRECT LINE
TORONTO • BRAMPTON • MISSISSAUGA • KITCHENER

# சாத்திரிய சங்கீதமும் புதிய சாத்தியப்பாடுகளும்

கர்நாடக இசையின் உன்னதங்களையும் உளவியல்சார் நுணுக்கங்களையும் மேற்குலகும் உணர ஆரம்பித்ததன் விளைவாக கர்நாடக இசை இப்போது படிப்படியாக சர்வலோக வியாபகம் பெற்று, விஸ்தாரமடைந்து வருகின்றது.

காலைப் பொழுதுக்கோர் ராகம், மதியத்துக்கொன்று, மாலைக்கொன்று, அழும் மனதுக்கொன்று, ஆனந்தத்திற்கொன்று, அழகிய வசந்தத்திற்கொன்று, கோடைக்கொன்று, கொடும் கோபத்துக்கொன்று எனப் பல ராகங்கள் கர்நாடக இசையில் உண்டு. சூழலுடன் மனதால் இணைந்து செயற்படும் மனிதத்தைப் புரிந்துகொள்வதற்கான முயற்சி இது! இதனாலேயே கர்நாடக இசை இன்றைய குழப்பமான சூழலில் மனதுக்கு ஆறுதலளிக்கும் சாதனமாக வரவேற்கப்படுகின்றது.

அதேவேளை, உலகளாவிய ரீதியிலான மானுட விகசிப்பிலும், இசையின் பங்களிப்பும் இப்போது மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறலாயிற்று. பொருளாதாய அடிப்படையில் வரலாறு காணாத வெற்றி கண்டுள்ள மனிதனின் மமதையைக் குறைப்பதற்கு இசை பெரிதும் உதவுகின்றது. நாயாய்ப் பேயாய் அலையும் மனித மனத்தை முதலில் விலங்கிட்டுக் கைதுசெய்து, உள்ளுணர்வு கூட்டும் பணியைப் புரிந்துவரும் அதே வேளை, என்றுமிலாத வகையில் சமாதானத்தின் குறியீடாகவும் சங்கீதம் இந்நாட்களில் பரிணமித்து வருகின்றது.

எழுபதுகளில் தோற்றம் பெற்ற இந்தப் புதிய போக்கு New Age Music - அதாவது புதிய காலத்தின் இசை எனப் பெயர்பெற்று, உலகெங்கும் பரவலாயிற்று. நிறத்தின் பெயரால், மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால், பணத்தின் பெயரால் சதா அடிபட்டுக்கொண்டிருக்கும் மனிதனைச் சமாதானப்படுத்தி-அவனையே அவனுக்கு அடையாளம் காட்டி - நல்ல புத்தியைப் புகட்டும் அரும்பணியை, இந்தப் புதிய காலத்தின் இசை செய்ய ஆரம்பித்துள்ளது.

"ரகுபதி ராகவ ராஜாராம் பதீத பாவன சீதாராம்..." என ஆரம்பித்து "ஈஸ்வர அல்லா தேரோநாம் சபுகோ சம்மதி ஹேய் பகவான்" என்று சர்வமத சமத்துவ தத்துவத்தை போதிக்கும் போக்கு மகாத்மா காந்தி காலத்தில் ஆரம்பமாகியிருந்தது. அதன் தொடர்ச்சியாக பிற்காலங்களில் மைக்கல் ஜக்ஸன், எல்ரன் ஜோன்ஸ், பில் கொலின்ஸ், ஸ்ரீவி வொண்டர் போன்ற பிரபல மேற்கத்தைய இசைக் கலைஞர்களது பாடல்களிலும் மனித ஒருமைப்பாட்டுக்கும் மேம்பாட்டுக்கும் அவசியமான சிந்தனைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

இந்த மேற்குலக இசைக் கலைஞர்கள் பலரும் இணைந்து இருண்ட கண்டமான ஆபிரிக்கக் கண்டத்தின் பஞ்சப் பிணியைப் போக்குவதற்கென, We are the World என்று ஏககுரலில் பாடிநின்று, ஒருமுறை நிதி சேகரித்துக் கொடுத்தனர். மற்றும் சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களின் போதும் இசைக் கலைஞர்கள், பல இசை நிகழ்ச்சிகளை நடத்தி, அளப்பரிய தொண்டாற்றி வந்திருக்கின்றனர். மானுடத்தை தக்க வைப்பதற்கென இந்த புதிய காலத்தின் இசை பயன்பட்டு வருகின்றது என்பதற்கு இவை தகுந்த உதாரணங்களாகும்.

இத்தகைய வலிமை மிக்க இசைத் துறையில் மனித மனத்தை தியான நிலைக்குக் கொண்டுசெல்வதற்கான புதிய முயற்சிகளும் வெற்றிகரமாக அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வாய்ப்பாட்டுக்களின்றி, சம்பிரதாய இசைக் கருவிகளான வயலின், கிட்டார், சித்தார், வீணை, பியானோ ஆகியவற்றின் இசையையும் synthesyser இசையையும் இணைத்து Fushion Music என்ற பெயரில் புதிய இசைவடிவம் ஒன்று தோன்றி ஆண்டுகள் பலவாகிவிட்டன.

யப்பானிய இசைஞானியான கித்தாரோ என்பவரால் துவக்கி வைக்கப்பட்ட இந்த Fusion Music சகல கலாச்சாரப் பின்னணிகளிலிருந்தும் பின்னர் வெளிவரலாயிற்று. இந்திய இசைத்துறையில் இதை வெற்றிகரமாகச் சாதித்துக்காட்டிய பெருமை ரவிஷங்கரையே சாரும். உலகப் புகழ்பெற்ற பீட்டில்சுடனும், லண்டன் ஃபில் ஹார்மோனிக் ஒகஸ்ராவுடனும் ரஷ்யா, ஜப்பான் உட்பட ஏனைய பன்னாட்டுக் கலைஞர்களுடனும் இணைந்து ரவிஷங்கர் அகில உலகெங்கும் இசைப் புரட்சியையே செய்திருக்கின்றார்.

வயலின் மேதை எல். சுப்ரமணியமும் உஸ்தாத் பிஸ்மில்லாக் கானும் ஜெனீவாவில் ஒருமுறை இணைந்து நிகழ்த்திய ஜுகல்பந்தி Fusion Music நிகழ்ச்சி உலகப் பிரசித்தி பெற்றது. இந்நிகழ்ச்சியில் இவர்களுடன் கலந்துகொண்ட சக்ஸபோன் இசை மேதையான சார்ளி மரியானோ என்பவர் இதுபற்றிக் குறிப்பிடும்போது, "இந்திய இசையுடன் இளமையிலேயே எனக்குப் பரிச்சயம் ஏற்பட்டிருந்தால், இன்னும் எவ்வளவோ சாதனைகளைச் செய்திருக்க முடியும்" என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறியிருந்தார்.

இதேவேளை, எமது தமிழ் வயலின் இசை விற்பன்னரான குன்னக்குடி வைத்தியநாதனுக்கு என்ன நடந்தது என்று ஒரு முறை சிந்தித்துப் பார்ப்பது நல்லது. வயலினையும் தவிலையும் இணைத்து தென்னிந்திய கிராமங்களில் Fusion Music முயற்சிக்கு வித்திட்ட குன்னக்குடியை, ஒரு கோமாளியாவே தமிழ் இசையுலக மேதாவிகள்பார்த்தனர். வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு நதிக்கரையிலிருந்தவாறு வயலின் வாசித்ததை கேலி செய்தார்கள். அதன் பின்னால் மறைந்துள்ள இயற்கையின் பாலான அன்பை அவர்கள் புரிந்து கொள்ளத் தவறியிருந்தனர். இதனையே ஓர் இயக்கமாக்கி, சூழலை விளங்கி, அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான அரிய வாய்ப்பை எம்மவர் அந்நாட்களில் இழந்துபோனமை துரதிஷ்டமான விடயமாகும்.

இவ்வாறான சோகங்கள் எமக்கு இனியும் ஏற்படாவகையில், பாரம்பரிய இசைக் கலையில் உள்ள ஆழமான பல விடயங்களை அடியொற்றி, புதுமைகள் நிகழ்த்தப்பட வேண்டும். மேற்குலக இசைக் கருவியான கிட்டாருக்கு இவ்வளவு கமகம் உண்டு என்பதை ஒரு விஸ்வமோகன் என்ற இந்திய இசைக் கலைஞர் வாசித்தபோதுதான் எம்மவர் அனைவரும் ஆச்சரியத்தால் வாய்பிளந்து போயினர். ஸ்பானிஷ் இசைக் கருவியான மெண்டலினை சீனிவாசன் வாசிக்கும்போது தான் நாம் மெய் சிலிர்த்துப் போனோம்.

இவை போன்ற உலக இசைக் கருவிகளிலும் எமது இளம் தலைமுறையினரின் திறமைகளைப் பயன்படுத்தி, புதுமை செய்ய அவர்களை நாம் ஊக்குவிக்க வேண்டும். புதுமை செய்ய வெட்கம் தேவையில்லை. வெட்கம் புதுமையின் சத்துராதி. நல்லது குறித்து நாம் வெட்கத்தை விடுவதே நமக்கு நல்லது!

அடுத்து, இங்கு சுட்டிக் காட்ட விரும்பும் பிறிதொரு விடயம், மொழி சார்ந்ததாகும்.

"தமிழனுக்கு காது மரத்தால் செய்யப்பட்டதா...? வேற்று மொழி இசைகளையே கேட்டுக் கேட்டு அவனுக்கு எந்த எதிர் வினையும் ஏற்படவில்லையே!" என்ற தொனியில் கல்கி அவர்கள் ஒருமுறை கூறியிருந்தார்.

சங்கீதத்திற்கு மொழி தேவையில்லை என்பது சிலரது வாதம். கர்நாடக இசைமேதை செம்மங்குடி கூட ஒரு நேர்காணலில் இதைக் கூறியிருந்தார். அவ்வாறாயின் இசைக்கு மொழி தேவையில்லை என்றால் வாய்ப்பாட்டு எதற்கு? வாத்திய இசையையே கேட்டுவிட்டுப் போகலாமே என்று கேட்கத் தோன்றுகின்றதல்லவா?

கர்நாடக இசைக்கச்சேரி முறை என்பது சுமார் 150 வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்டது. கச்சேரியில் அமர்ந்து பாட வசதியாக பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற பாணியில் அமைக்கப்பட்டுள்ள பாடல்களில் ராக ஆலாபனை, சுரம் பாடுதல் போன்ற வகைகளுக்கு இடம் கொடுத்ததால், இந்த இசைக் கச்சேரிப் பாணி பிரசித்தமாகிவிட்டது.

இந்த பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற பாடல் அமைப்பு முறையில் சங்கீத மும்மூர்த்திகள் தெலுங்கிலும் சமஸ்கிருதத்திலும் பாடினார்கள். அவர்களுடைய சிஷ்யர்களும் இதையே காலா காலமாகத் தமது சிஷ்யர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். இதுவே கர்நாடக சங்கீதம் என்று இன்று பெயர் பெற்று விளங்குகின்றது.



க. நவம்
navam@thaiveedu.com

ஆனால் பாடுகின்ற வரிகள் கேட்பவர்களுக்கு காதில் மட்டும் உறைத்தால் போதாது. மனதிலும் வாங்கிக்கொள்ளப்பட வேண்டும். அந்த வகையில் இசைக்கு மொழி அவசியமாகின்றது. இதை வலியுறுத்தவே நாற்பதுகளில் தமிழ் நாட்டில் தமிழிசை இயக்கம் தோன்றியது. அந்த இயக்கத்தின் மாநாடுகளில் தமிழில் கச்சேரிகள் செய்யப்பட்டன. கூடவே தமிழ்ப் பண்புகளும் ஆராயப்பட்டன. ஆனால் இன்றுவரை தமிழிசை மீது தமிழருக்கு பூரண ஈடுபாடு ஏற்பட்டுவிட்டதாகக் கூறமுடியாதுள்ளமை வருத்தற்குரியது,

வருடாவருடம் சென்னையில் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் இடம்பெற்று வரும் இசைவிழா கச்சேரிகளின் பெரும் பகுதிகளில் மும்மூர்த்திகளின் பிறமொழிப் பாடல்களே இடம்பெற்று வருகின்றன. அவற்றில் ஒரு சிறு பகுதியாவது பாபநாசம் சிவனுக்கும், கோபாலகிருஷ்ண பாரதிக்கும், மகாகவி பாரதிக்கும், தேசிக விநாயகம் பிள்ளைக்கும், ராமலிங்க அடிகளுக்கும் ஏன் வழங்கபடக்கூடாது என்று தமிழ் நாட்டிலுள்ள தமிழிசை ஆர்வலர்கள் சிலர் இன்றும் ஆதங்கப்படுகின்றனர்.

தமிழிசைப் பாடல்கள் என்ற கருத்து வடிவத்திற்கும் மேலாக, தமிழர் பாரம்பரியத்தோடு இரண்டறக் கலந்து நின்று, இன்று பலராலும் மறந்து போய்விடப்பட்ட இன்னொன்றையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

கவிஞனுக்கும் இசைக் கலைஞனுக்கும் ஊற்றுக் கண்ணாக எல்லோராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை கிராமியப் பாடல்கள். மண்ணிலே மலர்ந்த கிராமிய இசைதான் நாட்டுப் புறப் பாடல்கள் என வழங்கலாயிற்று. அது கல்லாதார் இலக்கியமாக முதலில் வடிவெடுத்தது. ஆனால் அவற்றிலிருந்துதான் மொழி வடிவமும் இலக்கிய வடிவமும் மலர்ந்தன. மேலும் தமிழர்களின் கலை, இலக்கியம், பண்பாடு ஆகிய எமது பாரம்பரியத்தை காப்பாற்றியதில் நாட்டுப்புற பாடலுக்கும் கிராமியக் கலைக்கும் பெரிய பங்குண்டு என்பதில் சந்தேகத்துக்கிடமில்லை.

இந்த உண்மையை எவ்வித தலைகுனிவுமின்றி பெருமிதத்துடன் ஒப்புக்கொண்டு, கர்நாடக இசையிலும் பரத நாட்டியத்திலும் நாட்டார் பாடல்களைப் பயன்படுத்தும் புது முயற்சியை ஏன் நாங்கள் செய்யக்கூடாது? தொண்ணூறுகளில் இவ்வாறான புதிய முயற்சிகள் பல, தமிழ் நாட்டில் பரீட்சார்த்

71ம் பக்கம் பார்க்க...

GP TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)

For Your Business We
- Install, Repair, Sell
- Meridian Phone Systems & System Phones
- Structured Voice & Data Cabling
- Install, Repair Home Phone Wiring
- TV Cable (RGB)
- Network Cable

உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்படாமல்
சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்

416.203.0344



தமாக மேற்கொள்ளப்பட்டு வெற்றிபெற்றும் உள்ளன.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் இந்திய இசைத்துறையினர் நடத்திய நிகழ்ச்சி ஒன்றில் கே. எஸ். சுப்ரமணியம் என்ற இசைக் கலைஞர் நாட்டுப்புறப் பாடல்களை கர்நாடக இசையில் அற்புதமாக் பாடி வித்து வான்களது பாராட்டுக்களைப் பெற்றிருந் தார். இதே போன்று வேதநாகம் பிள்ளை யின் சமூக சீர்திருத்தப் பாடல்கள், பாரதி-தாசனின் புரட்சிப் பாடல்கள், கண்ணதாசனின் தத்துவப் பாடல்கள் போன்றவற்றை கர்நாடக இசையில் பாடி சாதனை புரிந்த இசைஞர் கள் பலர் உள்ளனர்.

இந்நிலையில் எமது கிராமிய மண்வாசனை யை கமழச் செய்யும் பாடல்களையும், எமது இனவிடுதலை வேட்கையைப் பிரதி-பலிக்கும் பாடல்களையும், எமது புலம் பெயர் வாழ்வின் பரிமாணங்களை வெளிப் படுத்தும் பாடல்களையும் கர்நாடக சங்கீதத் திலும் நாட்டியங்களிலும் பயன்படுத்த பதிய தலைமுறையினருக்கு நாம் வாய்ப்பளிக்க வேண்டும். அது மட்டுமன்றி ஈழத்துக் கவிஞர்களான மஹாகவி, முருகையன், நீலாவணன் போன்றோர் உட்பட, இன்றைய சமகாலக் கவிஞர்களான சேரன், செழியன், ஜெயபாலன் போன்ற பலரது பாடல்களை யும் கர்நாடக இசையில் பாடும் மனத் துணிவும் மாற்ற விருப்பும் எமது இசைத் துறை ஆசான்களிடம் ஏற்பட வேண்டும்.

இனிய தமிழையும், தமிழ் இசைக் கலை யையும் அழிவிலிருந்து தடுத்திடுவதோடு - பொலிவுடன் அவற்றை வளர்த்தெடுப்பதை இலக்காகக் கொண்ட இசை ஆசிரியர்களை யும், ஆர்வலர்களையும், ஆர்வமுடன் தமது பிள்ளைகளுக்கு இசை பயிற்றுவிக்கும் பெற்றார்களையும் உள்ளடக்கிய வகையில் உருவாக்கப்பட்ட தமிழிசை மன்றங்கள் இவற்றைக் காலத்தின் கட்டாய தேவையா-கக் கருதிச் செயல்வடிவாக்க முன்வர வேண்டும்.

கர்நாடக இசைத் துறையில் தமிழைப் புகுத்தியபோது பாபநாசம் சிவம் பாவம் செய்தவராக கருதப்பட்டார். பாரதி தமிழ் கவிதையில் பரட்சி செய்தபோது பண்டிதர்க ளால் சபிக்கப்பட்டார். சிறுகதைத் துறையில் புதுமையைப் புகுத்தியபோது புதுமைப்பித்த-னும் ஆரம்பத்தில் தீண்டப்படத் தகாதவரா-கத் தூர விலக்கி வைக்கப்பட்டார். ஆனால் கடைசியில் நடந்ததென்ன? அவரவர் துறை களில் புதுமைகளை அறிமுகம் செய்த செம்மல்களாக இன்று அவர்கள் போற்றிப் புகழப்படுகின்றனர்.

கிழக்கிலிருந்தாலும் சரி, மேற்கில் வளர்ந்-தாலும் சரி, எமது இளம் கலைஞர்கள் எதிர்காலத்தில் இந்த விதமான புதுமை களைச் செய்யும் வகையில் - இசை உலகின் உச்சங்களையும் உன்னதங்களையும் அவர் கள் தொடுவதற்கு ஏற்றவகையில் தமிழிசை ஆர்வலர்களும் இசை ஆசிரியர்களும் மாற்றங்களையும் புதுமைகளையும் அவர் களுக்கு அறிமுகம் செய்ய முன்வர வேண்டும்.

■ ■ ■

# சுவர்...

82ம் பக்கத் தொடர்ச்சி...

தில் இருந்து மற்ற கிராமத்துக்கு செல்வதே மிக கடினமாகும்.

இந்த மதில் பாலஸ்தீனிய போராட்டத்தை முழுமையாக கட்டுப்படுத்துகின்றது.

பாலஸ்தீனிய அகதிகள் தொடர்ச்சியாக உணவு விநியோகம் போன்றனவற்றின் தடை யால் பட்டினியால் வாடுகின்றனர். இதன் தொடர்ச்சியாக இவர்களது இறப்பு வீதம் அதிகரித்து பாலஸ்தீனிய சனத்தொகையை குறைக்கும்.

இந்த மதில் பாலஸ்தீனியரின் இறைமை யை, சுதந்திரத்தை பறித்துள்ளது. தேசிய போராட்டத்தில் உள்ள பல இனக் குழுக்-களுக்கு எதிராக இம் மாதிரியான மதில்-கள் அமைக்கப்படலாம். இஸ்ரேல் இம் மதில் கட்டப்பட்ட பின்னர் தற்கொலைப் போராளிகள் ஒரேயொரு தாக்குதலையை-யே நடாத்தியுள்ளார்கள் எனச் சுட்டிக்காட்டி பிரச்சாரம் செய்கின்றது. இந்த உதாரணத் தை ஏனைய நாடுகளும் பின்பற்றலாம். நான் பிறந்த நாட்டையும் ஒரு தடவை நினைத்துப் பார்க்கின்றேன். விளைவுகள் பயங்கரமாக இருக்கும்.

## சனத்தொகை

2006 முடிவில் சர்வதேச பாலஸ்தீனியர் சனத்தொகை 10.1 million people.

70% of Palestinians (7.5 million மக்கள்) அகதிகள் (internally displaced persons) (IDPs).

1948ல் இருந்து ஆறு மில்லியன் பாலஸ்-தீனியர் அகதிகள்

450,000 அதிகமான பாலஸ்தீனியர் IDPs in Israel and the Occupied Palestinian Territories. 2/3 அதிகமான பாலஸ்தீனியர் அகதிகளாக வெளிநாடுகளில் வாழ்கின்றனர்.

## அகதி முகாம்கள் - அகதிகள்

58 official Palestinian refugee camps

| | |
|---|---|
| Jordan | 10 |
| Lebanon | 12 |
| Syria | 9 |
| West Bank | 19 |
| Gaza Strip | 8 |

,375,050 Palestinian refugees in the region (less than a third of them living in camps).

| | |
|---|---|
| Jordan | 1,835,704 |
| Lebanon | 405,425 |
| Syria | 434,896 |
| West Bank | 705,207 |
| Gaza Strip | 993,818 |

பரிசோதனைச்சாலைகள்

According to the UN Office for the Coordination of Humanitarian Affairs (OCHA) "Movement within and in and out of the West Bank is controlled by numerous checkpoints, roadblocks, earth-mounds and gates. These manned and unmanned physical barriers...restrict the movement of around 2.4 million Palestinians."

In 2006, there were an average of 1,108 permanent and temporary (or 'flying') checkpoints operational each month across the West Bank.

In June 2007, there were 1,080 permanent and temporary checkpoints across the West Bank, including 556 permanent roadblocks and checkpoints and 524 flying checkpoints.

உசாத்துணை

*The Washington Report on Middle East Affairs www.wrmea.com Palestinians Right to Self Determination By. Lia Syed Malaysia Kini , December15,2003*

*Israeli Settlements In Occupied Territories: A Special Report of the Foundation for Middle East Peace Published by the Foundation for Middle East Peace Jerusalem Issue Brief Vol. I Issue 1 September2, 2001*

*A stamp of disapproval By Suryanarayan Sinha The Hindu,July 17,2004*

*The Washington Report on Middle East Affairs www.wrmea.com*

*The Price of Occupation by Anthony Lewis New York Times June 2,2001*

*Mid East Web Middle East Web Log- The ICJ writes off the UN Charter www.mideastweb.org*

*Brutal Israeli Terrorism Subsidized by USA By Kathryn Kingsbury Madison Capital Times August 14,2001*

*Palestinians Forced to Swallow Pride and Accept Handouts By Ewen MacAskill Independent June 28,2001*

*Final Status in Shape of the Wall By Catherine Cook Middle East Information and Research Project , September 2003*

*Apartheid is alive and well By Khaled Amayreh Al-Ahram July 25,2001*

*Resolution 242 Reinterpreted By Henry Siegman International Herald Tribune, June 12,2002*

*Aerial Survey Shows 34 New Settlements Built Under Sharon By Phil Reeves Fairness and Accuracy in Reporting , November 3,2000*

■ ■ ■



# உயிர் கொடுக்கும் முத்தம்
## Kiss of Life

கந்தையா செந்தில்நாதன்
senthil@thaiveedu.com

முத்தங்கள் பலவகை. குழந்தை பிறந்தவுடன் தாய், தந்தையர் மழலைக்கு கொடுப்பது ஒருவகை. கணவன், மனைவி பரிமாறும் முத்தங்கள், காதலர்கள் தம் வசமிழந்து பரிமாறும் முத்தங்கள் இன்னொரு வகை, என்று முத்தங்களை வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். நாம் இந்த இதழில் இதயத்தை மலர வைக்கும் அதாவது உயிர் கொடுக்கும் முத்தம் பற்றி ஆராய்வோம்.

சென்ற இதழில் மார்படைப்பு எப்படி ஏற்படு-கின்றது என்பதை கவனித்தோம். இதயத் தசைகளுக்கு குருதியை விநியோகிக்கும் குருதிக்கலன் அடைபடும் பொழுது இது ஏற்படுகின்றது. குருதிக்கலன்களில் அடைப்பானது படிப்படியாகக் கூடிச்சென்று இறுதியில் முழுமையான அடைப்பை ஏற்படுத்துகின்றது. முழுமையான அடைப்பு ஏற்பட முதல் நாம் வைத்திய பரிசோதனைகள் மூலம் அத்தகைய அடைப்பைக் கண்டுபிடித்து விட்டால் மார்படைப்பில் இருந்து தப்பிக் கொள்ள வாய்ப்புக்கள் உண்டு.

மார்படைப்பினாலோ அல்லது வேறு பலவிதமான நோய்கள், காயங்கள் என்பனவற்றி-னாலோ சில சமயங்களில் சுவாசமும், இதயத்துடிப்பும் நின்றுபோகலாம். இச்சந்-தர்ப்பங்களில் கைகொடுத்து உதவுவது CPR என்னும் மீளவுயிர்ப்பித்தல் செய்முறையாகும். இதனை Kiss of Life என்று ஆங்கிலத்தில் அழகாகக் குறிப்பிடுவர். செயற்கைச் சுவாசம் கொடுக்கும் பொழுது முதலுதவி செய்பவர், நோயாளியின் வாயில் தனது வாயை காற்று வெளியேறாத வகையில் உதடுகள், உதடுகளுடன் அணைந்த வண்ணமிருக்கும் பொழுது தனது சுவாசத்தை நோயாளியின் சுவாசப்பையினுள் செலுத்துவார். இதனை உயிர் கொடுக்கும் முத்தம் என்றால் மிகையாகாது.

### CPR முதலுதவி

CPR என்பது CARDIO PULMONARY RESUSOLTATION என்பதன் முதலெழுத்-துக்களின் சுருக்கமேயாகும். இது இதயத்-தையும், சுவாசத்தையும் மீளச செயற்படுத்துதல் என்று பொருள்படும். அதாவது சிகிச்சை நிலை இறப்பில் (CLINICAL DEATH) உள்ள ஒருவரை மீளவுயிர்ப்பித்தல் என்பதாகும். CPRஐ மீளவுயிர்ப்பித்தல் செய்முறை என்றே கூறிவிடலாம்.

ஒருவருக்கு இதயம் நின்று விட்டால் (CARDIAL ARREST) பிராணவாயு, போசனை என்பவற்றைக் காவிச் செல்வதற்கு இரத்த ஓட்டம் இருக்கமாட்டாது. அதே போல் சுவாசமானது நின்று விட்டால் (Respiratory Arrest) பிராணவாயு சுவாசப் பையினுள் குறைந்த பின்பு ஒவ்வொரு அவயங்களுக்கும் தேவையான பிராணவாயு கிடைக்கப்படமாட்டாது. பிராணவாயு இல்லாமல் முதலில் செயலிழப்பது மூளையும், இதயமுமே. இவையிரண்டும் செயலிழந்-தால் உடல் முழுவதுமே செயலிழந்து பின்பு இறப்பு நிகழும்.

இதயத்துடிப்பும், சுவாசமும் எவ்வளவு தூரம் பிரதானமானவை என்பதை அறிந்து கொண்டீர்கள். இதற்கு CPR பற்றிய அறிவு அவசியம். இங்கு நேரம் முக்கிய பங்கை ஆற்று-கின்றது. மூளையானது 4 நிமிடங்களில் இருந்து 8 நிமிடங்களில் இறக்கத் தொடங்கி விடும். முதல் 4 நிமிடங்களினுள் CPR செய்து மூளைக்குரிய குருதிச் சுற்றோட்டத்தைச் சீர்செய்தால் ஆபத்தின் பொழுது சடுதியாக இறந்த ஒருவரை மீளவுயிர்ப்பிக்கும்படி செய்துவிட வாய்ப்புக்கள் உண்டு. இதனை சிகிச்சை நிலை இறப்பு (Clinical Death) என்பர்.

முதலுதவி பற்றி அறிவதற்குச் சில அடிப்படை விளக்கங்கள் தேவைப்படுகின்றன. எமது வாயு மண்டலத்தில் பிராணவாயு 21% உள்ளது. நாம் உட்சுவாசிக்கும் பொழுது 21% பிராணவாயு சுவாசப்பையினுள் செல்கிறது. அங்கே 5% பிராணவாயு மாத்திரம் சுவாசப்பையினால் உறிஞ்சப்படுகின்றது. மிகுதி 16% (21-5=16) மான பிராணவாயு வெளிச்சுவாசத்தின் பொழுது வெளியேற்றப்-படுகின்றது. ஒருவருக்கு நாம் செயற்கைச் சுவாசம் கொடுக்கும் பொழுது இந்த 16% மான பிராணவாயு கொண்ட சுவாசத்தையே அந்நோயாளியின் நெஞ்சறையினுள் செலுத்துகின்றோம். மூச்சுக்காகத் திணறும் ஒருவருக்கு இந்தப் 16%மான பிராணவாயுவில் இருந்து பெறப்படும் பிராணவாயு போதுமானதே. அத்தருணம் சுவாசப்பையில் பிராணவாயுவிற்காக ஏங்கித்தவிக்கும் செங்-குருதி சிறுதுணிக்கைகள் அதனை நன்கு உறிஞ்சும் வலுவைப் பெற்றிருக்கும்.

இப்படியாகக் கொடுக்கப்பட்ட சுவாசம் சுவாசப்பையினுள் அடைப்பட்டிருந்தால் பயன் செய்யாது. அந்தப் பிராணவாயு காவிச் செல்லப்படல் வேண்டும். இதற்கு இதயத்தைச் செயற்படுத்தல் வேண்டும். சராசரி மனிதனின் இதயம் நிமிடத்திற்கு 70 தொடக்கம் 100 வரை சுருங்கி விரியும் வகையில் தொழிற்படுத்தல் வேண்டும்.

லாம். இயலாமையின் பொழுது நோயாளி-யினால் வாயினால் கூறமுடியாமல் தலையை அசைத்து ஆம் என்ற சைகை காட்டினா-லும் போதும்.

சுயநினைவற்று இருக்கும் நோயாளியிடமோ, மனநிலை பாதிக்கப்பட்ட இடத்திலோ, பெற்றோர் பாதுகாவலர் அற்ற இடத்தில் உள்ள குழந்தைக்கோ ஏதாவது ஆபத்து நடந்து விட்டால் நீங்கள் அனுமதி ஏற்கனவே தரப்-பட்டதாகக் கருதி முதலுதவியை ஆரம்பிக்கலாம். இதனை Impliment என ஆங்கிலத்தில் அழைப்பர்.

முதலுதவியாளர்கள் தமது முதலுதவியைச் செய்யுமிடத்து அவர்கள் சட்டத்தின் முன் பின்வரும் சந்தர்ப்பங்களில் காப்பாற்றப்படு-கின்றனர். இதனை GOOD SAMARITAN LAWS என்று ஆங்கிலத்தில் அழைப்பர்.

ஆபத்து அந்தரத்தில் உதவும் பொழுது நல்ல நோக்கோடு கடமையுணர்வுடன் செயற்படும் பொழுது எவ்வித ஊதியமும் எதிர்பாராது செயற்படும் பொழுது



### எப்படி இதனைச் செய்யலாம்?

இதயம் நெஞ்சறையினுள் எங்கே, எந்த இடத்திற்கு அருகே நிலைகொண்டுள்ளது என்பதை அறிதல் வேண்டும். நெஞ்சின் நடுப்பகுதியில் பட்டை போல் இப்பது மார்புப் பட்டை என்பாகும். நெஞ்சின் நடுப்பகுதியில் இரண்டு முலைக்காம்புகளிற்கு இடையே உள்ள பகுதி இதயத்தை அழுத்துவதற்கு உரிய இடமாகும். இந்த இடத்திற்குக் கீழே தான் இதயம் அமைந்துள்ளது. இதயத்தை அமுக்குவதற்கு நெஞ்சறையின் இந்தப் பகுதியை 1.5 முதல் 2 அங்குலம் வரை ஆழத்திற்கு அழுத்துதல் வேண்டும். அப்படியாக அமுத்தும் பொழுது நேரே கீழேயுள்ள இதய அறைகள் அமுக்கப்படுவதால் குருதியானது மூளைக்கும், இதயத்தசைகளுக்கும் பாய்ச்சப்படுகின்றது. அதே சமயம் செயற்-கைச் சுவாசத்தினால் பெறப்பட்ட பிராண-வாயுவும் உடல் பூராகவும் கடத்தப்படுகின்றது. மழலைகள், சிறுவர்கள் போன்றோ-ருக்கு நெஞ்சறையை அமுக்கும் விசையும் ஆழமும் வித்தியாசப்படும்.

நெஞ்சறையை அழுத்தும் பொழுது சோர்வடைந்து போகாமல் திடகாத்திரத்துடன் தொடர்ந்து அழுத்துதல் வேண்டும். அப் பொழுதுதான் தொடர்ச்சியான குருதி விநியோகமும், பிராணவாயுவும் உடல் அவயங்களுக்குக் கிடைக்கப்பெறும். முதலுதவி செய்வதற்கு முதல் சில ஒழுக்க விதிகளைக் கவனிப்போம்.

### சட்ட விதிகள்

முதலுதவி செய்பவர், அதனைப் பெறுபவரிடம் இருந்து அனுமதிபெற்ற (Consent) பின்பே முதலுதவியை ஆரம்பிக்க முடியும். நோயாளி சுய நினைவுடன் இருந்தால் முத-லுதவி செய்யட்டுமா என்று அனுமதி கேட்க

முதலுதவிப் பயிற்சியின் போது பெறப்பட்ட அறிவுரைகளைப் பின்பற்றியும், நல்ல நோக்குடனும் முதலுதவியைச் செய்யும் பொழுது நீங்கள் நிச்சயமாக சட்டத்தினால் காப்பாற்றப்படுவீர்கள். ஏனெனில் உங்கள் நோக்கம் புனிதமானவை.

### சட்டத்தின் முன் தண்டிக்கப்படக்கூடியவர்கள்

நோயாளியுடன் தவறான எண்ணத்துடன் செயற்படுதல்

வைத்திய அறிவுரை, நெறிமுறைகள் பின்பற்றப்படாமல் தான்தோன்றித்தனமாக உடலுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் செயற்படுதல்

முதலுதவிப் பயிற்சிப் பெற்றவர்கள் எத்த-கைய அவசர சந்தர்ப்பங்களிலும் முதலுதவியை கட்டாயம் செய்தல் வேண்டும் என்று சட்டம் கூறவில்லை. ஆனால், பின்வருவோர் முதலுதவி தேவைப்படும்பொழுது அவர்களால் முதலுதவி கொடுக்கப்படல் வேண்டும்.

### யார் அந்த முதலுதவியாளர்கள்?

அவர்களது தொழிலில் வலியுறுத்தப்பட்டால் தொழில் நிமித்தம் வேலைத்தளத்தில் 5பேர் தொடக்கம் 10பேர் கொண்ட குழுவுக்கு ஒருவர் வீதம் முதலுதவி பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். இவர்கள் வேலைத்தளத்தில் ஆபத்து நடக்கும் பொழுது முதலுதவி அளிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். உதாரணமாக ஆசிரியர்கள், வனவிலங்குப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், நீச்சல் தடாக உயிர்காப்பாளர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோர் இதில் அடங்குவர்.

### கடமையின் நிமித்தம்

பெற்றோர் தமது பிள்ளைகளுக்கும், வாகனச் சாரதி தனது வாகனத்தில் பயணம் செய்யும் பயணிகளுக்கும் முதலுதவி செய்யக் கடமைப்பட்டுள்ளனர். வைத்தியர்கள், தாதிமார்கள், வைத்தியசாலையில் கடமையாற்றும் சில உத்தியோகத்தர்கள் கட்டாயமாக முதலுதவிப் பயிற்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

'வருமுன் காப்போம்" என்பது நல்லதொரு தாரக மந்திரம். அதுபோல் உயிர்காக்கும் செய்முறையில் சங்கிலித் தொடர் போல் நான்கு இணைப்புக்கள் உள்ளன. அதாவது ஒரு உயிரினைக் காக்கும் செய்முறையில் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவாறு ஒரு ஒழுங்குமுறை உண்டு. அவை பின்வருமாறு:

ஒருவரினது நோயின் தன்மையை எச்சரிக்-கைக்குரிய குணங்குறிகள் மூலம் கண்ட-றிந்து காலம் தாமதியாது உடனேயே 911ஐ அழைத்து அம்புலன்ஸ் வண்டியை வரவழைத்தல். காரியாலயங்களில் 911ஐ அழைத்தல் வேண்டும்.

உடனேயே CPR செய்முறையை ஆரம்பித்தல் வேண்டும். இச்செய்முறை குறைந்த அளவு குருதியை மூளைக்கும் இதயத்திற்கும் பாய்ச்சிய வண்ணம் இருப்பதால் குறிப்பிட்ட நபரின் மூளையும் இதயமும் EMS வருமட்டும், காப்பாற்றப்படக்கூடிய வகையில் பிராணவாயுவைப் பெறக்கூடியதாக இருக்கும். அம்புலன்சில் வரும் EMS உத்தியோகத்தர்கள் பின்பு பொறுப்பேற்றுக் கொள்வார்கள்.

விரைந்து வந்த EMS உத்தியோகத்தர்கள் இருதயத்திற்கு மின் அதிர்ச்சியை DEFIB-RILATOR என்ற கருவி மூலம் கொடுப்பார்கள். இத்தகைய மின் அதிர்ச்சி சில நபர்களது இருதயத்தை மீண்டும் இயங்கச் செய்யவல்லது.

EMS உத்தியோகத்தர்கள் விரைவாக வந்து சடுதியாக இருதயத் துடிப்பு நின்ற நபர்களுக்கு உரிய உயிர்காப்பு முறைகளை உடனே தொடங்குவார்கள். இதில் நாளத்தினூடாக திராவகங்கள், மருந்துகள் கொடுக்கும் வகையில் நாள வடம் (IV LINE) ஒன்றை ஏற்படுத்துவார்கள். அத்துடன் செயற்கைச் சுவாசம் கொடுக்கும் உபகரணங்களையும் பொருத்துவார்கள். அம்புலன்ஸ் வண்டி பயணித்துக்கொண்டிருக்கும் பொழுதே வைத்தியர்களுடன் ஆலோசனைகள் தொலைபேசி மூலம் பரிமாறப்பட்டு அதற்குரிய மருந்துகளும் வைத்தியசாலையை அண்மிக்க முன்பே கொடுக்கத் தொடங்கி விடுவார்கள்.

மேற்கூறிய நான்கு சங்கிலிப் பிணைப்புப் போன்ற அடுத்தடுத்து செய்யவேண்டிய செய்முறைகளை ஆங்கிலத்தில் CHAIN OF SURVIVAL என்று கூறுவார்கள். முதலுதவிப் பயிற்சி பெற்ற ஒருவரால் இச் சங்கிலித் தொடரில் முதலாவதையும், இரண்டாவதையும் நன்கு பயின்று செய்யக் கூடியதாக இருக்கும். மூன்றாவது வகை-யைச் சார்ந்த DEFIBRILATOR என்ற இதய மின் அதிர்சிக்கருவி இப்பொழுது அநேகமான அரச காரியாலயங்களில் பொருத்தப்பட்டு வருகின்றது. அங்குள்ள சில உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்-பட்டும் உள்ளார்கள்.

'பயிற்சி பெறுங்கள் பயன் பெறுங்கள்"

■ ■ ■




உங்களின் வீட்டுக் கடனை குறைந்த வட்டி வீதத்தில் பெற்று உங்களின் மாதக் கட்டுப் பணத்தைக் குறைத்து கொள்ள அழையுங்கள்...

Interest Rate as low as

4%*

Call me now for more info at 416.936.5200

CENTUM™
One Financial Group Inc.

**Myuran Ramachandran**
Mortgage Consultant

**Direct: 416-936-5200**
Bus: 416-548-8000 • Fax: 416-548-8001
880 Ellesmere Road. Suite 203, Scarborough. Ontario

## தமிழ் மொழிக் கிழமை - தமிழின் வாழ்வே தமிழர் வாழ்வு

# ஆடற்கலை

- சண்முகம் குகதாசன் -

ஆடல், பாடல், வில்லுப்பாட்டு, நாடகம், கூத்து போன்ற கலை நிகழ்ச்சிகள், தமிழ்மொழிக்கிழமை நாட்களில் இடம் பெறுவதைப் பலர் அறிந்திருப்பர்: இக்கலை வழியே கருத்துகளை மக்கள் மனதில் விதைப்பதும் விழாவினை முன்னெடுப் போரது நோக்கமாகும்.

முதலாவதாக, நமது இனம் தன்னைப்பற்றி அறிந்து கொள்ளவேண்டும்: நம்மக்களது தோற்றம், காலம், பிறந்தகம், மொழி, ஊண், உறையுள், உடை, கல்வி, தொழில், வளம், வாழ்க்கைமுறை பழக்க வழக்கம், சீர்சிறப்பு ஆகிய அனைத்தையும் கலைநிகழ்ச்சிகள் மூலம் கண்டு தெளியலாம்.

பார்கண்ட முதல்மொழி, மூத்தமொழி, வளமார்மொழி, இயல், இசை, நாடகமென்னு முத்துறையிலும் சிறந்தமொழி, உயர்தனிச் செம்மொழி எனத் தமிழ்குறித்த தரவுகளோடு பெருமைகளையும் கலை நிகழ்ச்சிகள் வழங்குவதோடு, இத்தகைய தமிழைத் தமிழராகப் பிறந்த அனைவரும் பேணிக் காக்கவும், வையகம் வாழும்வரை நிலைக்கச் செய்யவும் புரியவேண்டிய பணிகளையும் உரைத்து நிற்கும், இவ்வாறு.

தமிழ் வழங்கலையும் தமிழ் மொழி கற்றலையும் பெருக்கும் குறிக்கோளொடு மே25 முதல் 31வரை தமிழ்க் கலை தொழில் நுட்பக் கல்லூரி முன்னெடுக்கவிருக்கும் தமிழ் மொழிக் கிழமையை ஒட்டி, தமிழ் வாழத் துணைசெய்யும் தமிழர்தம் நுண் கலைகளில் ஒன்றான ஆடற்கலைபற்றிய கட்டுரை வெளிவருகின்றது.

இது, முன்னாளிற் கூத்து, நாடகம், நாட்டியம், சதிர் எனப் பல பெயர்களால் அழைக்கப் பெற்றுவந்துள்ளது. சிற்பம், ஓவியம் போன்ற பிற கலைகளோடு ஒப்பிடுகையில் ஆடற் கலை காலத்தால் பழமையானதும் மதிப்பால் முதன்மையானதும் ஆகும். தமிழர் தம்மிறை வனையே ஆடல் அரசனாகக் (நடராசன்) கண்டவர். பண்டைத்தமிழர் ஆடிமகிழ்ந்தமைக்குப் பழந்தமிழ் இலக்கியங்களில் எண்ணற்ற சான்று காணப்படுகின்றன.

ஐவகை நிலத்தில் ஒன்றான மருத நிலத்தில் வாழ்ந்த ஆடவர் தாம் ஆற்றவேண்டிய பணிகளைப் பகற்காலத்தே முடித்துவிட்டு இராக்காலத்தே இன்பக்கலைவல்ல கூத்தரும் விறலி யரும் வாழும் இடம் சென்று ஆடல் கண்டு களித்திருந்த செய்திகளையும், ஆடல் காணச் சென்ற தங்கணவர் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாமையால், மனைவியர் ஊடல் கொள்ளும் காட்சிகளை ஒருபுறமும், குறிஞ்சிநிலத்தில் வாழ்ந்த மகளிர் வேலனொடு வெறியாட்டு அயரும் காட்சிகளை மறுபுறமும் சங்க இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

"கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந்து அற்று"

என்று கூறுவார்.

(திருக்குறள்: 342)

அ.்.தாவது ஆடல் நடைபெறும் அரங்குக்கு மக்கள் பல திசையில் இருந்தும் வந்து கூடுவதைப்போல செல்வமும் ஒருவனிடம் வந்து சேரும், ஆடல் முடிந்த பின்னர் மக்கள் அனைவரும் கலைந்து சென்று விடுவதைப் போல செல்வமும் கரைந்து இல்லாமல் போகும் என்று இக்குறள்வழிக் குறிப்பிடுகின்றார். இதன்வாயிலாக பண்டைத் தமிழகத்திலே அரங்குகளில் ஆடல்வல்லோர் ஆடல் பயின்றமையையும், அதைக் காண மக்கள் கூடிக்கலைந்தமையையும், ஆடற்கலையானது உவமானத்துக்கு எடுத்துச் சொல்லக்கூடிய அளவுக்கு அனைவராலும் அறியப்பெற்ற ஒன்றாக இருந்திருக்கின்றது என்பதையும் நாமறிய முடிகின்றது.

ஆடற்கலையில் அறுபதுக்கு மேற்பட்ட வகை இருந்தமையையும் இவற்றினது இலக்கணத் தைக் கூறும் பரதம், அகத்தியம், நாட்டிய நன்னூல், இசைநுணுக்கம், குணநூல், கூத்த நூல், செயிற்றியம், சயந்தம், பஞ்சமரபு, பெருநாரை, பெருங்குருகு, பேரிசை, புன்முறுவல் போன்ற நூல்கள் இருந்ததனையும் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்குநல்லார் உரைவழி அறிகின்றோம். பிற்காலத்தில் தமிழகத்தை ஆண்ட அயலவர் அரசுகளாலும் அவர்தம் பண்பாட்டுப் படையெடுப்புகளாலும் இவை அழிந்தன அல்லது அழிக்கப்பட்டன.

இன்றும் பரதநாட்டியம், காவடியாட்டம், கரகாட்டம், சிலம்பாட்டம், பொய்க்கால் குதிரை யாட்டம், பொடிக்கழியாட்டம், கோலாட்டம், குறவன் - குறத்தியாட்டம், மயிலாட்டம், புலியாட்டம், பாம்பாட்டம், கடுவாயாட்டம், சிம்மவாட்டம், கரடியாட்டம், வேதாளவாட்டம், தேவராட்டம், ஒயிலாட்டம், இடபவாட்டம், அனுமனாட்டம் உள்ளிட்ட முப்பது வகை ஆடல் சிற்றூர்களிலும் பெருநகர்களிலும் ஆடப்பெற்றும் பேணப்பெற்றும் வருவது ஆறுதல் அளிக்கும் செய்தியாகும். எனினும் இக்காலத்தில் நகர்ப்புறங்களில் பெருவழக்குப் பெற்றிருப்பது பரத நாட்டியம் ஆகும். இதனைச் செங்கூத்து (Classical Dance) எனக் கருதிவருகின்றனர்.

இவ்வாடல் அனைத்துக்குமான இலக்கணத்தைக் கூறும் முதனூல் இற்றைக்கு 2500 ஆண்டுக்கு முன்பு யாக்கப்பெற்ற தமிழ் நூலான தொல்காப்பியமேயாகும். தொல்காப்பியர் மெய்ப் பாட்டுக்கெனத் தனியோர் இயலையே வைத்துள்ளமை நோக்கற்பாலது. மெய்ப்பாடே பரதத்தின் உயிர்போன்றது. மெய்ப்பாடென்பது மெய்யில்தோன்றுவது, மெய்யால் தோன்றுவதென இருபொருள் தரும். அ.்.தாவது ஆடல் புரிபவர் தன் மனத்தின் கண்ணுள்ள எண்ணத்தை உடல் உறுப்புகள் வழிக்காட்டுவதும், உடல் இயக்கத்தால் உணர்ச்சிகளைக் காண்போரிடத்தே தோற்றுவித்தலுமாக இருபொருள் செறிந்த சொல்லாக மெய்ப்பாடென்ற சொல் விளங்குகின்றது. மெய்ப்பாட்டிலும் சிறப்புறுப்பாகிய கண்ணாலேயே உணர்ச்சிகளைத் திறம்படக் காட்டவியலும்.

ஆடல்புரிபவர் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சமநிலை என்ற ஒன்பது மெய்ப்பாடுகளைக் கண்ணாலும் கரணத்தாலும், கால் அடவுகளாலும், வினையம் எனப்படும் நளிநயத்தாலும் எடுத்துக்காட்ட வேண்டுமெனத் தொல்தமிழ் ஆசான் தொல்காப்பியன் எடுத்துரைக்கின்றான். மேலும் தொல்காப்பியர் திணை, கைகோள், துறை, கூத்து, கேட்போர், களம், காலம், மெய்ப்பாடு, முன்னம், பொருள், பயன், எச்சம் என்பவற்றைக் கூத்து உறுப்புகளாகக் கூறுகின்றார்.

இவ்வாறாகத் தொல்காப்பியத்தில் இலக்கணங் கண்ட ஆடற்கலையானது சிலப்பதிகார காலத்திலேயே, அ.்.தாவது இற்றைக்கு 1800 ஆண்டுக்கு முன்பே முழுமை பெற்ற நிலையினைக் காண்கின்றோம். மாதவியானவள் கலையில் அறிவோடு உலகியல் அறிவும் ஒருங்கு சேரப்பெற்ற நல்லாசிரியனிடம் ஏழாண்டு ஆடற்கலை பயின்று ஐம்பெருங்குரவரும் எண்பேராயமும் நிறைந்த சோழர் அவையினிலே அரங்கேற்றுவதனைச் சிலப்பதிகாரத்திலே நாம் காண்கின்றோம்.

சிலப்பதிகார அரங்கேற்று காதையிலே, நாட்டிய மேடை எப்படி அமையவேண்டும்? அதன் நீளம், அகலம், உயரம் போல்வன என்னென்ன விழுக்காட்டில் இருக்கவேண்டும்? எத்தனை திரைகள் போடப்பட்டிருக்க வேண்டும்? ஆடலாசிரியர், பாடலாசிரியர், இசையாசிரியர், குழலாசிரியர், யாழாசிரியர், தண்ணுமை ஆசிரியர் ஆகியோர் எவ்வெத்திசையில் அமரவேண்டும்? கருவிகள் இசைப்போர் எத்திசையில் இருக்கவேண்டும், பார்வையாளர் எத்திசையில், எக்கோணத்தில், எவ்வளவு தொலைவில் இருந்து பார்க்கவேண்டும்? என்பவற்றையும், அவ்வியங்கூத்து முதல் கொடுகொட்டி ஈறாகவுள்ள பதினொரு ஆடல் பற்றியும் மிகத் தெளிவாகவும், விரிவாகவும் இளங்கோவடிகள் எடுத்துரைக்கின்றார்.

இன்றைய ஆடற்றுறை சார்ந்த தமிழர் இவற்றையெல்லாம் அறிந்தோ, அறியாமலோ தொல் காப்பியம், சிலப்பதிகாரம் முதலாய தமிழ் நூல்களுக்கெல்லாம் காலத்தால் மிகவும் பிற்பட்ட 'நாட்டிய சாத்திரம்', 'தசரூபம்' ஆகிய சமற்கிருத நூல்கள்தாம் பரதத்துக்கு இலக்கணம் வகுப்பவை என்றும், பரதமுனிவரே ஆடற்கலைக்கு இலக்கணம்



வகுத்தவர் என்றும் எண்ணிக்கொண்டிருப்பது மிகவும் வருத்தத்துக்குரிய ஒன்றாகும். இந்நூல்கள் தொல்காப்பியம், சிலப்பதிகாரம் முதலாய நூல்களுக்கெல்லாம் காலத்தால் பிற்பட்டவை என்பதனை நாம் அறிதல் வேண்டும்.

பல்லவ காலத்தைத் தொடர்ந்துவரும் சோழர் ஆட்சிக்காலத்திலும் ஆடற் கலையானது அரச மட்டத்தில் போற்றப்பட்டு வந்துள்ளமையை ஆவணங்கள் வாயிலாக அறிய முடிகிறது. இராசராச சோழன் காலத்தில் தஞ்சைப் பெரியகோவிலில் நாட்டியமாட நானூறு ஆடல் வல்லோர் நியமிக்கப்பட்டிருந்த செய்தியைக் கல்வெட்டுகள் எமக்கு எடுத்துரைக்கின்றன. கோவில்களிலே பூசை நடைபெறும் வேளைகளில் முத்திரைகாட்டி நளிநயிப்பது, உணவின் (நெய்வேத்தியம்) பொழுது பலிபீடத்துக்கருகே தேவாரப் பாடல்களுக்கு நடனமாடுவது, கொடியேற்ற நாட்களில் எட்டுத் திசையிலும் அவற்றுக்குரிய 'விருத்தம்', 'கௌத்துவம்' போன்றவற்றை ஆடுவது எனப் பல நிலைகளிலும் ஆடல் முதன்மை பெற்றிருந்தது. கோயில்களில் ஆடல்புரிவோர் ஆடற்கலையில் துறைபோனவராயும், கூத்தின் வேத்தியல், பொதுவியல் இலக்கணங்களை அறிந்து, சான்றோர் முன்னிலையில் அரங்கேறியவராயும், நாட்டிய நன்னூலை நன்கு கடைப் பிடித்து ஆடக்கூடியவராயும் இருந்திருக்கின்றனர்.

மேலும் சோழர்காலத்தில் நாட்டிய மண்டபம், நாடகசாலை, ஆடலரங்கு, எனப் பல வகை ஆடற்களம் இருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள. சோழர் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலில் 108 தாண்டவ நிலையையும் சிதம்பரத்தில் 108 நளிநய நிலையையும் நாம் காணலாம். இவற்றின் வழியாக ஆடற் கலை இக்காலத்தில் உச்சநிலையை அடைந்திருந்ததை உணரமுடிகிறது.

இவ்வாறாகத் தமிழ் மக்களாலும் அரசாலும் போற்றப்பெற்றுவந்த ஆடற்கலையானது ஆரியம், புத்தம், மற்றும் சமணச் செல்வாக்கு, தமிழ் நாட்டில் புகுந்ததன் விளைவாகவும் அயலவர் ஆட்சிக்குத் தமிழகம் உட்பட்டதனாலும் சிறிது தளர்ச்சியுற்ற நிலையைச் சோழர்காலத்துக்குப் பிற்பட்ட தமிழகத்திலே நாம் காணமுடிகிறது.


19ஆம் நூற்றாண்டில் ஆடற்கலைக்குப் புத்துயிர் அளித்த பெருமை பந்தனை நல்லூர்ப் பாணியைத் தோற்றுவித்த தஞ்சாவூரைச் சேர்ந்த பொன்னையாபிள்ளை, சின்னையாபிள்ளை, வடிவேலுப்பிள்ளை, சிவானந்தம்பிள்ளை என்ற உடன்பிறப்புகளையும், வழுவூர்ப் பாணியைத் தோற்றுவித்த சாமுநட்டுவனார், அவர் மகன் வீரப்ப நட்டுவனார், அவர் புதல்வன் இராமையாபிள்ளை ஆகியோரையுமே சாரும். இவர் அனைவரும் தூய தமிழர் ஆவர்.

இன்றைய பரதநாட்டியத்தில் பயிலப்பெறும் முதன்மையான உருப்படிகளான 'வருணம்,' 'பதம்,' 'சாவளி' என்பவை தமிழ் அகப் பொருள் மரபிலிருந்து தோன்றியவையாகும்.'சப்தம்' என்னும் உருப்படியானது தெய்வத்தையோ அரசனையோ புகழ்ந்து அவனுக்கு கட்டியம் கூறுவதாக அமைவது. இது பழந்தமிழ் இலக்கியத்தில் வரும் பாடான் மரபின் தொடர்ச்சி யாகும்: அதாவது புறத்திணை மரபினைச் சார்ந்ததாகும். இந்நிலையில் பரதத்திலேபயிலப்படும் இசையும் துறையும் தமிழ் மரபைச் சார்ந்ததாலும் அதன் உடல் இயக்க இலக்கணம் தொல்காப்பிய மெய்ப்பாட்டியலிலும் சிலப்பதிகார அரங்கேற்றுகாதையிலும் நிறுவப்பெற்றதாலும் இன்றைய பரதம் அன்றைய அகக்கூத்தின் வழிவந்ததென்பது வெளிப்படையாகும். பண்டைத்தமிழர் ஆடிய கூத்தானது நாட்டியம், சதிர், பரதம் என்று வளர்ச்சியும் உருமலர்ச்சியும் அடைந்துள்ளது.

இவ்வாறாகக் கடந்த 2500 ஆண்டாகத் தமிழரால் போற்றப்பெற்று, பேணப்பெற்று, வளர்க்கப் பெற்று, பயிலப்பெற்று வரும் ஆடற்கலையைச் சொந்த நாட்டோடு விட்டு விடாமல் புலம் பெயர்ந்த நாடுகளுக்கும் கொண்டுவந்து அதனைப் போற்றிப் பேணிப் பயிலுவது பெருமை தரும் செயலாகும்.

ஆடற்கலையினைக் கற்பதன் விளைவாக நம் இளம்மரபினர், தமிழ் மரபுகளையும் விழுமியங்களையும் அறிய முடிகிறது. அவர்களைத் தமது வேர்களைத் தேடவும் தூண்டுகின்றது. தமிழ்மொழியைக் கற்கவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இந்நிலையில் ஆடற்கலையின் வரலாற்றைச் சற்று ஆழமாகக் கற்று, அது தமிழரது கலை என்பதை தாமும் உணர்ந்து மாணவரையும் உணரவைப்பதோடு, தமிழ் ஆடற்கலையுள் தெலுங்கையும் சமற்கிருதத்தையும் நுழைக்காமல், அதனைத் தமிழ்க்கலையாகப் பேணிக் காக்க வேண்டியது இன்றைய ஆடற்றுறை சார்ந்தோரது தலையாய கடமையாகும்.

■ ■ ■


இது உங்களுக்கு...!
$1000.00 GUARANTEED
வீடு வாங்கும் போதோ அல்லது விற்கும் போதோ
இந்த சன்மானம் உங்களுக்கு உறுதியாகிறது!
(நேரடியாக தொடர்பு கொள்பவர்களுக்கு மாத்திரமே)
Leading the Real Estate Industry with our Higher Standards Five Star Service.
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/ Future Realty Inc.
Brokerage
Realtor Member
262 Markham Road
Scarborough, ON M1J 3C5
Sinna S Rajagopal
Sales Representative
Bus: 416•264•0101
Cell: 416•727•8647
sinnarajagopal@hotmail.com

# கருவுற்ற தாய்மாரின் கவனத்திற்கு

சிவவதனி
பிரபாகரன்
vathani@thaiveedu.com



குறை மாதப் பிரசவம் (Premature birth) இது மிகப் பொதுவான பிரச்சினைகளில் ஒன்றாகும். சுமார் 11 வீதமான கர்ப்பங்கள் குறைமாதப் பிரசவத்தில் முடிவதாக மருத்துவ தகவல்கள் கூறுகின்றன. ஏதாவது கர்ப்பமெய்தி கருவயது 37 கிழமைகள் ஆகுமுன்பாக பிறக்கின்ற பிரசவங்களை குறைமாதப் பிரசவம் என்பர். ஒரு கருவின் முழுமை வளர்ச்சிக் காலமாக கருதப்படும் 37 வாரங்களுக்கு முன்பாக எத்தனை கிழமைகள் முன்னதாக பிறக்கின்றதென்ப-தைப் பொறுத்து ஒரு குழந்தை குறைமாதப் பிரசவத்தில் எதிர்நோக்கும் பிரச்சினை தங்கியுள்ளது. இதற்கான அறிகுறிகளாக பிறப்புறுப்பின் வழியான கருவு (Virginal Discharge) நீர் வெளியேற்றம் (leakage of fluid) வயிற்றுவலி, பின்முதுகு வலி, 1 மணித்தியாலத்திற்கும் மேலாக நின்றுபிடிக்கும் கீழ் வயிற்று வலி, முக்கி வெளியேற்றப்படுவதற்கான வற்றுதல் உணர்வு போன்றவற்றை அறிகுறிகளாகக் குறிப்பிடலாம். இவ்வண்ணம் குறைமாதப் பிரசவமானது குழந்தைகளுக்கு ஆபத்தானது. ஆதலால் உடன் மருத்துவ உதவியை நாடுதல் நன்றாகும்.

## குழந்தையின் அசைவுகள் குறைதல்.

இதற்கு பல காரணங்கள் இருக்கலாம். கருப்பையில் குழந்தைக்கும் குழந்தைக்கு கிடைக்கும் ஒட்சிசனின் அளவு குறைதல் பொதுவான காரணமாகும். இதனால் குழந்தையின் அசைவுகள் குறைய நேரிடும். மருத்துவர்கள் பொதுவாக தாய்மாரி-டம் குழந்தையின் அசைவு எண்ணிக்கையை (Kick Counts) கணக்கிடுமாறு அறிவுரைப்பர். ஆகக் குறைந்தபட்சம் இரண்டு மணித்தியாலங்களுக்குள் 10 தடவையேனும் குழந்தையின் அசைவு இருக்காவிட்டால் வைத்தியரிடம் தெரிவிப்பது அவசியமாகும். திடீரென நிறை அதிகரிப்பில் மாற்றம் ஏற்-படுதல், நிறை அதிகரிக்காதிருத்தல், முகம் வீங்குதல், கை கால்கள் வீங்குதல், பிறப்புறுப்பு வழியான குருதிப் போக்கு, நீர் வெளியேற்றம் போன்றன இருத்தல், குறிப்பிடத்தக்க தலைவலி, பார்வை மங்குதல், அல்லது பார்வையில் புள்ளிகள் தென்படல், அதீதமான வாந்திக் குமட்டல் இருத்தல், காய்ச்சல், சிறுநீர் கழிக்கும் போது எரிவு மற்றும் அடிக்கடி சிறுநீர் கழித்தல், கீழ் வயிற்று வலி, ஒரு மணித்தியாலத்திற்குள் 4 – 6க்கு மேற்பட்ட சீராக அடிக்கடி தோன்றும் வயிற்று வலி, குழந்தையின் அசைவு, துடிப்பு குறைதல் என்பன கருவுற்றிருக்கும் தாய்மார் கவனத்தில் எடுக்கவேண்டிய சில அபாய அறிகுறிகளாகும்.

## அதிக அச்சுறுத்தலான கர்ப்பங்கள் (High Risk Pregnancy)

கர்ப்ப காலத்திற்கு முன்பான சில உடற் பிரச்சினைகளோ அல்லது கர்ப்ப காலத்திலான சில உடற் பிரச்சினைகளோ கூட ஆரோக்கியமான மகப்பேற்றுக்கு எவ்விதத் தடையுமின்றி இருக்க வாய்ப்புண்டு. எனினும் இத்தகைய தாய்மாரினை அவதான-மாக கண்காணிப்பதும் அதிக சிறப்பு கவனத்தின் கீழ் பராமரிப்பதும் மருத்து-வர்களின் கடமையாகக் கருதப்படுகின்றது.

மேலதிக பரிசோதனைகள் மேலதிக மருத்-துவர்களின் பார்வையிடல்கள் வைத்தியசா-லையில் மறித்துவைத்து பராமரித்தல், கட்டிலில் படுக்கவைத்து பராமரித்தல் போன்ற கவனமெடுப்பின் மூலம் இத்தகைய பிரச்சி-னையுள்ள கர்ப்பிணிகளும் ஆரோக்கியமான குழந்தைகளைப் பெற முடியும்.

## பல கருக்களின் கர்ப்பம் (Multiple Pregnancy)

கருவுற்ற தாய் ஒன்றிற்கு மேலான கர்ப்பங்களை சுமக்கின்ற போது அச்சிசுக்கள் சாதாரண ஆரோக்கியமான வளர்ச்சியை கொண்டிருந்தாலும் அந்த கர்ப்பமானது



அச்சுறுத்தலான கர்ப்பமாகவே (High Risk Pregnancy)கருதப்படுகின்றது. மிகப் பொதுவான இத்தகைய கர்ப்ப வகையில் இரட்-டைக் கருக்கள் பெரும்பான்மையாக அமைகின்றன. 43 கர்ப்பங்களில் ஒரு இரட்டையர் கர்ப்பங்கள் என மதிப்பீடுகள் கூறுகின்றன. இரட்டை சிசுக்கள் இருத் தனித்தனி கருக்-களிலிருந்தோ ஒரு கரு இரண்டாகியோ உருவாகலாம். இரு தனித்தனி முட்டைக-ளில் இருந்து வரும் சிசுக்களை Fraternal twins என்பர். ஒரு முட்டை இரண்டாக பிரிந்து வரும் இரட்டைச் சிசுவை identical twins என்பர். இவ்வகை இரட்டையர் மிக அரிதானவை. 100 கர்ப்பங்களில் ஒன்றை விட குறைந்த கர்ப்பங்கள் இத்தகையவை-யாக அமைகின்றன என தகவல்கள் கூறுகின்றன.

மிகச் சில பல கரு கர்ப்பங்கள் 3 அல்லது அதைவிட அதிகமான சிசுக்களை சுமக்கின்றன. கருத்தரிப்பு சிகிச்சை முறைகள் IVF (in vitro fertilization) போன்ற சிகிச்சை முறைகள் பல சிசுக்களை ஒரே சமயத்தில் கருத்தரிக்கச் செய்கின்றன. இத்தகைய கர்ப்பங்கள் தாய்க்கும் சேய்க்கும் அச்சுறுத்-தலானவை. உயர் இரத்த அழுத்தம், குருதிச் சோகை, குறைமாத பிரசவம் போன்ற பிரச்சினைகளை இத்தகைய கருவுற்ற தாய்மார்கள் எதிர்நோக்கும் அபாயம் உண்டு. இத்தகைய தாய்மார்கள் மகப்பேற்று வேளையில் மருத்துவ கண்காணிப்பின் கீழ் இருப்பது மிக மிக அவசியமான-தாகும்.

## உயர் இரத்த அழுத்தம் (High Blood Pressure)

உயர் இரத்த அழுத்தம் சிக்கலானது. தாய்மாருக்கு கர்ப்பகாலத்திற்கு முன்பாக, கர்ப்பகாலத்திலோ உருவாகலாம். இதனால் குறைமாத பிரசவத்திற்கு அறுவைச் சிகிச்-சை மூலம் உள்ளாக நேரிடலாம். குறைந்த நிறையுடைய குழந்தைகளும் பிறக்கும் அபாயம் இதனால் உண்டு. உயர் இரத்த அழுத்தத்தின் அளவு நிலைக்கேற்ப தாய் சேய்க்கான பாதிப்புக்கள் பலவகையில் ஏற்-படும் அபாயம் உண்டு. பொதுவாக 110/80 என இரத்த அழுத்தம் இருக்குமாயின் நன்று. சில பெண்கள் கருவுற முன்பாகவே அதிக உயர் இரத்த அழுத்தம் உடையவ-ராக இருப்பர். வாழ்க்கை முறை, பரம்பரை, நிறை, உணவுமுறை போன்றன இரத்த அழுத்தத்தை நிர்ணயிக்கும் காரணிகளா-கின்றன. உயர் இரத்த அழுத்தம் காரண-மாக ஏற்படும் மற்றுமொரு கருக்கால சிக்கல் abruption placenta எனப்படும் மகப்பேற்றுக் காலத்திற்கு முன்பாக placenta கருப்பை-யிலிருந்து விடுபடும் அபாய நிலையாகும். ஆரம்ப நிலையிலேயே குருதிப்போக்கு மூலம் அறிகுறிக்காட்டும் இவ்வபாயமானது அபாயகரமான நிலையில் அவசர அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையைப் பெறுவதற்கு காரணமாகிறது. கருவுறு முன்பே உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் அதனைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவந்தபின் கருவுறுவது நன்று.

## Pree clampsia:

பின்பாதி கருக்காலத்தில் உயர் இரத்த அமுக்கமானது முதன் முறையாக வருமாயின் அதனோடு சிறுநீரில் புரதம் வெளிப்படுமாயின் உடலில் நீர்த்தேக்கம் ஏற்பட்டு வீக்கங்கள் உருவாயின் அதனை Pree clampisa என்பர். 100 கர்ப்பிணிகளில் 7 கர்ப்பிணிகள் இந்நிலைக்கு ஆளாகின்றனர் என ஆய்வுகள் கூறுகின்றன. குறிப்பாக உயர் இரத்த அழுத்தமுள்ள கர்ப்பிணிக-ளுக்கு இலகுவில் இந்நிலை உருவாகும் அபாயம் உள்ளதாக கூறப்படுகின்றது. எனினும் உயர் இரத்த அழுத்தம் இல்லாத தாய்மார்களுக்கும் இவ்வபாயம் ஏற்படலாம். இதற்கான காரணங்கள் இன்னமும் சரிவர அறியப்படவில்லை. இந்நிலையானது உயர் இரத்த அழுத்தம் கருவுறு முன்பே இல்லா-திருக்கும் தாய்மார்களுக்கு வருகையில் பொதுவாக முதலாவது கருத்தரிப்பிலும் மிக அரிதாக இதர கருத்தரிப்புக்களிலும் ஏற்பட சாத்தியமுண்டு எனக் கூறப்படுகின்-றது. இரத்த அழுத்தமானது மகப்பேற்றின் பின்பும் குறையாது இருக்குமாயின் இந்நிலை நீடிக்கலாம்.

இந்நிலையிலுள்ள தாய்மார் வீட்டிலோ வைத்தியசாலையிலோ படுக்கையில் ஓய்வி-லிருக்க வேண்டப்படுவர். ஓய்வு இரத்த எழுத்தத்தை குறைக்கவல்லது. இந்நிலை உள்ள தாய்மார்கள் இடப்பக்கமாக சரிந்து படுக்க வேண்டும். இதன்மூலம் கர்ப்பப்பைக்கும் சிறுநீரகங்களுக்கும் குருதி சீரா-கப்பாய சாத்தியமாகும். பொதுவாக ஓய்வின் மூலம் குழந்தை முழுமையாக ஆரோக்கியமாக பிறக்கும் வரை கர்ப்ப காலத்தை ஆபத்தின்றி பேணுதல் சாத்தியமாகும். அண்மையில் American Medicine அறிக்-கையின்படி போதிய கல்சியம் கர்ப்ப காலத்தில் எடுப்பதன் மூலம் PIH (pregnancy induced Hypertension) மற்றும் Pree clampsia போன்ற அபாயங்களை தவிர்க்கலாம் என கூறப்படுகின்றது.


## Eclampsia

கடுமையான Pree clampsia என்பது மிக அரிதானது. எனினும் அங்ஙனம் காணப்படு-மாயின் அது தாய்க்கு ஆபத்தானதாக அமைந்துவிடும். தாயின் உடல் உறுப்புக்கள் பலவற்றை பாதிக்கும் இந்நோய் நிலையை Eclmpsia எனக் கூறுவர். இந்நிலை தென்படின் தாயை பாதுகாக்க உட-னடி அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தை பெறப்படும் நிலை கட்டாயமாகிவிடும்.

இந்நோய்க்கான அறிகுறிகளாவன விழிக-ளின் முன் புள்ளிகள் தென்படல், வயிற்-றுக்கு மேலாக வலித்தல், தலைவலி, வலிப்பு உருவாகுதல் போன்றவற்றைக் கூறலாம்.

## Hellp Syndrome:

Hypertension எனப்படும் அதீத பதட்டத்துடன் Pree clampsiaவும் கர்ப்பகாலத்திலோ அதன் பின்னரோ வருகின்ற போது அல்லது மேற்கூறியவற்றில் ஏதேனும் ஒரு சிக்கல் வருகின்ற போது Hellp Syndrome எனப்படும் ஈரல் சுருக்கம் ஏற்படுகிறது. Hellp – Haemolytic anaemia (செங்குருதி சிறுதுணிக்கைகள் பாதிப்படைவதால்) Elivated Liver transminases (ஈரலிலுள்ள பிரச்சினைகளின் அறிகுறி) Low platelet count (குருதி உறையாநிலை இதனால் உருவாகும்) இந்நிலையானது பொதுவாக முதலாவது கர்ப்பத்தில் 3வது trimesterல் ஆரம்பகாலத்தில் (20ஆவது கிழமை முதல்) ஆரம்பமாகும். அடுத்துவரும் கர்ப்பகாலத்திலும் இது உருவாகலாம். இதனை எளிமையாகச் சொல்வதாக இருந்தால் Pree clampsiaவின் தீவிரநிலை என கூறலாம். Pree clampsia வுக்கு பாதிப்புக்குள்-ளான பெண்களில் சுமார் 15 வீதமானவர்களுக்கு Hellp Syndrome உருவாகிறது என மருத்துவ தகவல்கள் கூறுகின்றன.
Hellp பானது குருதி பரிசோதனை மூலம் குருதி உறையும் தன்மை ஈரலின் செயற்பாடு என்பவற்றை அறிவதன் மூலம் அறிய முடியும். உன்னிப்பான கண்காணிப்பு, ஓய்வு




ஆகிய அடிப்படையின் கீழ் இந்நிலை சாதாரணமானதாக கருதப்படினும் தீவிர நிலையில் தாய் சேய் நலன்களுக்கு ஆபத்தான-தாக நிலவும் Scanning பரிசோதனைகள் ஆரோக்கியமான உணவு முறைகள் போன்-றன இந்நிலையிலிருந்து பாதுகாக்க உதவும் வழிமுறைகள் என சில தகவல்கள் கூறுகின்றன.

## Place Problem :

Umblical Cord
Placenta
Cervix
Amniotic Fluid

79ம் பக்கம் பார்க்க...



# Buying or Selling Homes

## Selling Commission As Low As 1 - 3½%

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife Metro Realty Inc. Brokerage

Nada.G.Nadarajah B.V.Sc
Sales Representative

Platinum Award Winner
Ontario Emerald Club Member




**McCOWAN/MAJOR MAC**
Detached/2-Storey
4 Bedrooms - 3 Washrooms
2 Yrs. Old | 2947 sq. ft




**FINCH/ALBION**
BackSplit - 4
4 Bedrooms - 2 Washrooms
Finished Bsmt. w/ Sep. Entrance




**NEILSON/McCLEVIN**
Condo Apartment
1 Bedroom + Washroom




**PHARMACY/FINCH**
Condo. Townhouse
4 Bedrooms - 3 washrooms
Finished Basement




**McCOWAN/STEELES**
Condo. Apartment
2+1 Bedrooms - 2 Washrooms
1412 Sq. Feet




**KEELE/LAWRENCE**
Condo Apartment
2 Bedrooms - 2 Washrooms




**N. 14TH/E. 9TH LINE**
4 Bedrooms - 3 Washrooms
Unfinished Basement
1 1/2 yrs. Old




**MARKHAM/HIGHGLEN**
Detached 2-Storey
4+2 Bedrooms - 4 Washrooms
Basement Apt.




**TAPSCOTT/NEILSON**
Condo. Apt.
2 Bedrooms - 2 Washrooms




**KENNEDY/401**
Condo. Apt.
2 Bedrooms - 1 Washroom




**McLAUGHLIN/WILMS.PKWY**
Semi-Detached/2-Storey
4 Bedrooms - 2 washrooms




**McCOWAN/STEELES**
Condo. Apt.
2 Bedrooms - 2 Washrooms

# Call For An Appointment Today!

# Call Nada

**Cell: 416 – 616 – 8751**
**Bus: 416 – 293 – 5093**

# கருவுற்ற தாய்மாரின்...

76ம் பக்கத் தொடர்ச்சி...


Partial Placenta Previa (பகுதியாக கர்ப்பப்பையை மறைத்தல்)

Complete Placentia Previa (முழுமையாக கர்ப்பப்பையை மறைத்தல்)

Placentia Previa என்பது Placentia (தாயிடமிருந்து சேய்க்குத் தேவையானவற்றை அகத்துறிஞ்சிக் கொடுத்தல் பகுதி) யானது cervix எனப்படும் கருப்பப்பை வாசலை மறைத்திருத்தலைக் குறிக்கும். இது மிகப் பொதுவான Placenta பிரச்சினையாகும். சுமார் 250 கர்ப்பங்களுக்கு ஒரு கர்ப்பம் இத்தகைய சிக்கலுக்கு ஆளாகுவதாக அறிகைகள் கூறுகின்றன. இதனால் நோவற்ற குருதிப்போக்குடனான பாரதுர மான சிக்கல் உருவாக்கநேரிடும். 2nd trimesterஇல் அல்லது அதன் பின் ஏற்படலாம். குழந்தை Placentaவை உதையும் வேளைகளில் குருதிப்போக்கு மற்றும் குறை மாத பிரசவ சிக்கல் ஏற்படலாம். அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையை பல வாரங்களுக்கு முன்பாகவே குறைமாதத்தில் எடுக்கவேண்டிய தேவை ஏற்படலாம். தொடர்ச்சியான குருதிப்போக்கைப் பொறுத்து குழந்தையை வெளியே எடுப்பதை வைத்தியர்கள் தீர்மானிப்பார்கள். வைத்தியக் கண் காணிப்பு இந்நிலைச் சிக்கலுக்கு மிகமிக அவசியமானது.

### Incompetent cervix

சிலருக்கு cervix ஆனது மிகவும் மென்மையானதாக கர்ப்பகாலத்தில் முடியநிலையில் பேணமுடியாததாக இருக்கும்.
அத்தகைய cervix உள்ளவர்களுக்கு Labour அல்லது contraction எனப்படும் பிரசவவலி எழாமலேயே cervix ஆனது திடும் என வரிந்து விடுவதால் குறைமாத சிசுவை வெளியேற்றி பெரும்பாலும் சிசுவை பறிகொடுக்கும் நிலை ஏற்படும். இப்பிரச்சினை பொதுவாக 2வது trimesterஇல் ஆரம்ப காலத்தில் தோன்றும். எனினும் சிலருக்கு 3வது trimester இலும் தோன்றலாம்.
2வது trimester இல் ஏற்படும் கருவிழப்பிற்கு 20-25 வீதம் காரணமாக அமைவது இச் சிக்கலாகும்.




### இதற்குக் காரணமாக கூறப்படும் காரணிகளாவன:

- கர்ப்பிணியின் தாயார் இவரை கருவுற்றிருக்கும் வேளையில் Des எனும் மருந்தை எடுத்திருந்தால்.
- Cervical trauma எனும் நிலைமை தோற்றுவிக்கப்பட்டால்
- ஹோமோனில் மாற்றம் ஏற்பட்டால்
- cervix குறுகியதாக இருந்திருக்குமானால்
- கட்டாயப்படுத்திச் செய்த அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட D&Cக்கள்.
- கருப்பைச் சுவரின் சாதாரண மாற்றங்கள்.

இவ்வாறான காரணிகளால் உங்கள் cervix இல் பிரச்சினை இருக்கலாம் என உங்களுக்கு சந்தேகம் இருக்குமாயின் கருவுற்று 14 – 16 வாரங்களுக்குள் Cerclage எனப்படும் cervixஐ சுருக்கி மூடி தைத்தல் செயல்முறையை செய்ய வேண்டும். இதன் மூலம் குழந்தை cervical incompetent பிரச்சினை மூலம் வெளியேற்றப்படும் அபாயத்தை தவிர்க்கலாம்.

மேற்கூறிய கர்ப்பகால சிக்கல்கள் பலவற்றிற்கு கட்டிலில் படுத்து ஓய்வெடுத்தலே சரியான மருத்துவ வழியாகும். ஒவ்வொருவரது கர்ப்பத் தன்மைகளும் மாறுபடலாம். ஆனால் வைத்தியர்கள் 'bed rest' அவசியம் என கூறுவார்களாயின் அதனை கடுமையாகக் கடைப்பிடிப்பதன் மூலம் பிரச்சினைகள் விபரீதமாகாமல் பாதுகாக்கலாம்.


இவ்வண்ணம் ஓய்விலிருப்பது என்பது எளிதான காரியமன்று. எனினும் ஒரு சேயைப் பெறும் தவத்தினை ஆற்றும் தாய்க்குள் இயல்பாக துளிர்க்கும் பொறுமையால் எத்தகைய இயலாமைகளும் இயலுமாகி விடுகின்றன. ஒவ்வொரு வருடமும் 1/5 பெண்கள் பல்வேறு காரணங்களுக்காக படுக்கையில் ஓய்வெடுக்கப் பணிக்கப்படுகின்றனர்.

### HIV

இந்த சிக்கல் எமது சமூகத்தில் மிக மிக அரிதானதொன்றாக உள்ள போதும் அனைத்து கர்ப்பிணிப் பெண்களும் இப்பரிசோதனைக்கு உள்ளாகுவது கட்டாயமாகும். HIV POSIVTIVEஆக உள்ள கர்ப்பிணித்தாய் குழந்தை பெற விரும்பினால் மருத்துவ உதவியை நாடுவது அவசியம். HIV உள்ள பெண்ணிலிருந்து குழந்தைக்கு HIV காவப்படும் சாத்தியம் (கருவுற்றிருக்கும் போதோ மகப்பேற்றின் போதோ) சுமார் 25% ஆகவுள்ளது. கரு வுற்ற நிலையிலும் HIV Positive ஆக உள்ள தாய் அதற்கான சிகிச்சையைப் பெற பணிக்கப்படுவார். கர்ப்பகாலத்தில் Paptest செய்வது அவசியம். அத்துடன் CD4 Count எடுக்கவும் வைத்தியர்கள் அறிவுரை செய்வார்கள். இப்பரிசோதனையின் தரவுகள் அடிப்படையில் மறுபடியும் CD4 பரிசோதனை அவசியமா இல்லையா என மருத்துவர்கள் தீர்மானிப்பார்கள்.

HIV உள்ள தாய்க்கு பிறந்த குழந்தை HIV தொற்று கொண்டுள்ளதா என அடிக்கடி பரிசோதிக்கப்படும். HIVயானது தாய்ப் பாலூடாக தாயிடமிருந்து சேய்க்கு பரவவல்லது. ஆதலால் HIV Positiveஆன தாய்மார் தமது சேய்களுக்கு பாலூட்டக் கூடாது.

■ ■ ■



# நலம் நாடுவதும் அதுவே

## உங்கள் மாற்றத்தின் மாற்றத்திற்கு என்னை அழையுங்கள்



Markham & Eglinton
3 Bed Rooms
$139,900



Markham & Eglinton
2 Bed Rooms
$101,900



Midland & Lawrence
3 Bed Rooms
$128,900



Kennedy & 401
3 Bed Rooms
$134,900



Neilson & Tapscott
3 Bed Rooms
$159,900



Tapscott & Finch
3 Bed Rooms
$180,000



Markham & Fincht
3 Bed Rooms
$187,900



Midland & Lawrence
3 Bed Rooms
$190,000



Meadowvale & Sheppard
3 Bed Rooms
$209,900



Mclevin & Sewells
4 Bed Rooms
$239,900



Morningside & Mclevin
3 Bed Rooms
$249,900



Brimley & Danforth
3 Bed Rooms
$284,901

From 1000 sq. ft. to 5000sq.ft Office space available for lease.

*Also Commercial & Investment Properties*



Kathir S Kathirgamanathan P. Eng.

*www. kathirsubramaniam.com*

Email: kathirs@rogers.com

*Call me for a change*

Sales Representative

**24 Hrs 416 856 6900**

**HomeLife / GTA Realty Inc., Brokerage***

1711 McCowan Road, #206,Toronto, ON, M1S 3Y3

Tel: 416-321 6969 Fax: 416 321 6963

Independently owned and operated

# இன்றைய குழந்தைகள்: நாளைய எமது எதிர்காலம்

## RESP

### குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத் திட்டம்

*கனடிய அரசினால் வழங்கப்படும் 20 - 40 சதவீத மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15 சதவீத சலுகையயும் அதிகமாக வழங்கப்படும். அத்துடன் 500 டொலர்* Canada Learning Bond *அரசினால் வழங்கப்படுகின்றது.*

**Canada Education Savings Grant up to $7200**
**Canada Learning Bond up to $2000**
**Education Bonus From our Company 15%**

**சேமிப்புடன் கூடிய நிரந்தர ஆயுட்காப்புறுதி**
(Universal Life Insurance)

*உங்கள் ஆயுட்காலம் வரை இந்தக் காப்புறுதி நீடிக்கும். இதற்கான கட்டுப்பணம் எந்தக்காலத்திலும் அதிகரிக்காது. நீங்கள் விரும்பியபடி 10,15 அல்லது 20 வருடங்களுக்கு மட்டுமே பணம் செலுத்தவேண்டும். அதன்பின்பு விரும்பினால் நீங்கள் கட்டிய பணம் முழுவதையும் திரும்பப் பெறலாம்; அல்லது 75 வீதத்தை கடனாகப் பெறமுடியும்.*

**வைத்தியப் பரிசோதனை இல்லாத காப்புறுதி**
(Non Medical Life Insurance)

*இத்திட்டத்தின் மூலம் எண்பது வயதுக்கு உட்பட்டோர் அனைவரும் வைத்திய பரிசோதனை இன்றி ஆயுட்காப்புறுதியை செய்து கொள்ள முடியும். வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் இணைந்து கொள்ளலாம்.*

**கொடிய நோய்களுக்கான காப்புறுதி**
(Critical Illness Insurance)

Cancer, Stroke, Heart Attack, Bypass Surgery, Kidney Failure, Coma, Paralysis, Blindness, Deafness, Alzheimer, Parkinson *போன்ற 23 வகையான கொடிய நோய்களில் ஏதாவது ஒன்று உங்களுக்கு ஏற்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதியாகப் பெற்றுக்கொள்ளலாம். நோய் ஏதும் ஏற்படாவிட்டால் 65வது வயதில் கட்டிய பணம் முழுவதையும் திரும்பப் பெறலாம்.*



digi Media Creations



**சிறீதரன் துரைராஜா**
காப்புறுதி முகவர் (Insurance Broker)

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407

LILAND INSURANCE INC.
IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.

# ஆயுட்காப்புறுதி




**சிறீதரன் துரைராஜா**
- ஆயுட் காப்புறுதி முகவர் -
sritharan@thaiveedu.com


ஆயுட்காப்புறுதி அவசியமானதா அல்லது வீட்டுக்காப்புறுதி மட்டும் வைத்திருந்தால் போதுமானதா? அல்லது உங்கள் குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம் அவசியமானதா? அதைவிட கொடிய நோய்களுக்கான காப்புறுதி பெற்றுக் கொள்வது சிறந்ததா? எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு தொகைப் பணத்தை முதலீடு செய்து விட்டு வங்கியிலும் பணத்தை வைத்துக் கொண்டு வாழ்வது சிறந்ததா? குழப்பமான கேள்விகள், என்ன செய்வது எதை முதலில் செய்வது இப்படி பல சந்தேகங்கள். இப்படியான கேள்விகளை பலர் கேட்டுள்ளார்கள். இதற்கு பதில் காண்பது மிகவும் கடினம். காரணம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விடயம் முக்கியமாக இருக்கும். எனவே ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் அவர்களின் தேவைகள் அவர்களின் பொருளாதார நிலை, அவர்களிடம் இருக்கும் சொத்துக்கள், முதலீடுகள் என்பனவற்றை கருத்தில் கொண்டு அதன்பின்புதான் அவர்களுக்கு எந்த திட்டம் தேவை என்பதை அறிந்து கொள்ள முடியும்.

எனவே ஒருவர் தனக்குத்தேவையான காப்புறுதி அல்லது முதலீட்டுத் திட்டம் ஒன்றைப் பெறுவதற்கு முன்பு சரியான நிதித்திட்டமிடல் தேவைப்படுகின்றது. அதற்கு ஒரு தகுதி பெற்ற நிதித்திட்ட ஆலோசகர் (Financial Advisor) அல்லது காப்புறுதி முகவரிடம் தொடர்பு கொண்டு அதற்கான பதில்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்..

உதாரணமாக அண்மையில் ஒரு குடும்பத்தினரைச் சந்தித்த போது அவர்கள் தாங்கள் மாதாந்தம் முதலீட்டுத் திட்டமொன்றில் பணம் முதலிடுவதாகவும் அத்துடன் தவணைக் காப்புறுதி மட்டுமே வைத்திருப்பதாகவும் கூறினார்கள். அவர்களின் நிதித் திட்டமிடல் மற்றும் காப்புறுதித் திட்டங்களைப் பரிசீலித்துப் பார்த்தபோது அவர்கள் கடன் அட்டைகளில் (Credit cards) $24,000 இற்கு மேல் கடனும் அதற்கான வட்டி 22% ஆகவும் மாதாந்தம் அதிகுறைந்த கட்டுப் பணத்தை மட்டுமே செலுத்திக் கொண்டும் இருந்தார்கள். அவர்களின் மாதாந்த வருமானம் எல்லா செலவுகளுக்கும் மட்டுமட்டாகவே இருந்தது. சில சமயங்களில் கடன் அட்டையிலிருந்து கடன் எடுத்து முதலீட்டுத் திட்டத்துக்கு மாதாந்தம் பணம் செலுத்துவதாகக் கூறினார்கள். கடன் அட்டைக்கான வட்டி 22% அவர்களின் முதலீட்டில் கிடைக்கும் வட்டி 4% முதல் 6% ஆகவும் இருந்தது. இப்படியான சந்தர்ப்பத்தில் இவர்களின் முதலீட்டுத் திட்டம் அவசியமற்றதாகவும் பணத்தை விரயமாக்கும் திட்டமாகவும் உள்ளது.

எந்தத்திட்டம் எவருக்கு உகந்தது என்பதை மிகவும் கவனமாக பரிசீலனை செய்வதன் மூலம் தான் அறிந்து கொள்ள முடியும்

வயதில் குறைந்தவர்கள் சிலர் தவணைக் காப்புறுதித் திட்டங்களைப் பெற்றுக் கொண்டு சிறுவயதில் இருந்து முதலீட்டுத் திட்டங்களை ஆரம்பித்தால் சிறந்தது எனப் பொதுவாகச் சிந்திப்பதும் சில நிறுவனங்கள் இப்படியான திட்டங்களை மட்டும் மக்களுக்கு விற்பனை செய்வதையும் காணக் கூடியதாக இருக்கும்.

ஆயுட்காப்புறுதித் திட்டங்களைப் பொறுத்த வரையில் அடிப்படையாக 3 வகையான திட்டங்கள் மட்டுமே உண்டு.

- தவணைக் காப்புறுதி Term Insurance
- நிரந்தர ஆயுட்காப்புறுதி Whole life insurance
- முதலீட்டுடன் கூடிய நிரந்தர ஆயுட்காப்புறுதி Universal Life Insurance

இவற்றில் எது சிறந்தது என்பது ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.

மிகவும் வயதில் குறைந்தவர்கள் முதலீட்டுடன் கூடிய நிரந்தர ஆயுட்காப்புறுதி (Universal Life) பெற்றுக் கொண்டால் நன்மையடையலாம். வயோதிபர்கள் நிரந்தர ஆயுட் காப்புறுதி பெற்றுக் கொள்வது மிகவும் முக்கியம். காரணம் அவர்களின் ஆயுட் காலம்வரை திட்டம் நீடிக்கும். அத்துடன் அவர்களின் காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டுப்பணம் ஒருபோதும் அதிகரிக்காது. வயதில் குறைந்தவர்கள் முதலீட்டுடன் கூடிய நிரந்தர ஆயுட்காப்புறுதி பெறுவதில் பல நன்மைகள் உண்டு. அவர்கள் கூடுதலான பணத்தை ஆரம்பத்தில் செலுத்துவதால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்பு பணம் கட்ட வேண்டியதில்லை அத்துடன் அந்தக் காப்புறுதித் திட்டத்தில் உள்ள முதலீட்டுச் சேமிப்பு (Cash Value) உங்களின் அவசர தேவைகளுக்கு மீளப் பெறமுடியும்.

ஆயுட்காப்புறுதியின் தொகை காலத்திற்குக் காலம் அதிகரித்துக் கொண்டிருக்கும். அதிகம் வருமானம் உள்ளவர்கள் இந்த ஆயுட் காப்புறுதித் திட்டத்தில் பணத்தை முதலீடு செய்தால் அதில் கிடைக்கும் வட்டிக்கு வருமானவரி கட்ட வேண்டியதில்லை. காரணம் ஆயுட்காப்புறுதியும் முதலீடும் ஒன்றாக இருப்பதால். முதலீட்டுத் திட்டம் மட்டும் தனியாகச் செய்தியிருந்தால் அதில் கிடைக்கும் வட்டிக்கு வருமான வரி கட்ட வேண்டும்

தவணைக் காப்புறுதியைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தற்காலிகமாக காப்புறுதி தேவைப்பட்டால் தவணைக் காப்புறுதி உகந்த திட்டமாகும். உதாரணமாக வீட்டு அடமானக் கடன் (Mortgage insurance) அல்லது குறுகிய காலத்திற்குத் தேவைப்படும் தவணைக்காப்புறுதி சிறந்தது.

ஆயுட்காப்புறுதித் திட்டமானது ஒருவருக்கு எதிர்பாராத விதமாக மரணம் ஏற்படும்போது அதனால் ஏற்படும் பொருளாதார நெருக்கடியை தவிர்ப்பதற்கு செய்யப்படும் ஒரு முன்னேற்பாடாகும்

ஒருவரின் எதிர்கால திட்டங்களையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்வதற்கு ஆயுட்காப்புறுதித் திட்டம் மிகவும் சிறந்தது. ஒருவர் ஆயுட்காப்புறுதித் திட்டம் ஒன்றைப் பெறும்போது அவருக்குக் கிடைப்பது வெறும் பணம் அல்ல. மாறாக அவரின் குழந்தைகளின் எதிர்கால உயர்கல்விக் கான பணம். அவரின் குடும்பம் தொடர்ந்து வாழ்வதற்கான ஆயுட்கால வருமானம். ஒருவரின் இறுதிச் சடங்குகளுக்கு தேவையான பணம்.

■ ■ ■




# சுவர்



- ரதன் -
rathan@thaiveedu.com

நாம் பிறந்து வாழ்ந்த சூழலில் வேலி, வேலிச் சண்டை என்பன மிகவும் பழக்கப்பட்ட விடயங்கள். வேலிக்கு கிடைத்த அநீதி மதிலாக மாறியது. போர் தொடங்கியது. மதில்கள் ஆங்காங்கே உடைக்கப்பட்டன. எமது சூழலில் கட்டப்பட்ட மதில்கள் பாய்வதற்குக் கடினமானவை. மதிலின் மேல் பகுதியில் சில சமயங்களில் ஆணி வைத்து கட்டியிருப்பார்கள். 83ன் பிற்பகுதியில், இராணுவம் துண்டுப்பிரசுரம் விநியோகித்தமைக்காக துரத்திக் கொண்டுவந்த இளைஞர், எனது வீட்டிற்கு பின்பக்கம் இருந்த வீட்டின் மதிலைத் தாண்ட முற்பட்ட பொழுது துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தார். வேலியைச் சுற்றி சண்டை போன்று மதில்களும் பல சோகங்களைச் சுமந்து வாழ்கின்றன.

மதில் என்றவுடன் எனது வீட்டு மதிலையும் தாண்டி, அனைவருக்கும் தெரிந்த மதில் சீனப் பெரும் சுவர். கி.மு. 5ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இச்சுவர் சுமார் 6400 கி.மீ நீளமானது. இதன் கிளைகளுடன் சேர்த்தால் சுமார் 7300கி.மீ நீளமானது. இது பீஜிங்கிற்கு வடக்கில் கிழக்கு, மேற்காக சங்காயில் இருந்து போகாய் வரை பரந்துள்ளது. நாட்டை எதிரியிடமிருந்து காப்பாற்றுவதற்காகக் கட்டப்பட்ட இந்த மதிலைத் தாண்டி சீனா பரந்துள்ளது. இதற்கு முன்பாக கி.மு 200ம் நூற்றாண்டில் இந்த மதிலுக்கு வடக்காக ஒரு மதில் கட்டப்பட்டது. இதன் சில பகுதிகளை இன்றும் காணக்கூடியதாகவுள்ளது. இதன் பின்னர் பிரித்தானியாவின் வடக்குப் பகுதியில் Hadrian's Wall மற்றும், Antonine Wall ஆகியவை முறையே கி.பி 122, 144ம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்டன. கி.பி 43ம் நூற்றாண்டில் பிரித்தானியா ரோமரின் ஆட்சிக்குட்பட்ட பின்னர், ரோம அரசால் கட்டப்பட்டவை. இவை பிரித்தானிய தீவை மேற்கு, கிழக்காக பிரிக்கின்றன.

இவற்றைத் தவிர பல பிரசித்திபெற்ற மதில்கள் கட்டப்பட்டுள்ளன. Great Wall of Gorgan இது ஈரானில் உள்ளது. 155 கி.மீ நீளம் கொண்ட இம் மதில் ஆறில் இருந்து பத்து மீற்றர் அகலம் கொண்டது. லண்டன் மதில், யோர்க் நகர மதில், செஸ்ரர் சிற்றி மதில் ஆகியவை பிரித்தானியாவில் கட்டப்பட்டவை. Intramuros Walls ( Phillipnes), ரசியாவில் உள்ள கிரிமிளின் மதில், Serpent's Wall (Ukraine). Anastasian Wall (Turkey). Walls of Constantinople (Turkey) போன்றன மற்றும் சில.

நவீன காலத்தில் பிரசித்தி பெற்ற மதில் போர்லின் சுவர். இது கிழக்கு ஜேர்மனியையும், மேற்கு ஜேர்மனியையும் பிரிக்கும் சுவர். 43 கி.மீ நீளம் கொண்ட இந்தச் சுவர் பேர்ளின் நகரை கிழக்கு, மேற்காகப் பிரிக்கின்றது. சோவியத் யூனியனுக்கும், மேற்கத்திய நாடுகளுக்குமான "குளிர் யுத்தம்" வலுவடைந்த காலத்தில், இரண்டாம் உலகப் போரின் பின்னர் சோவியத் அதிபர் ஸ்ராலினின் அமைச்சராக இருந்த Vyacheslav Molotovன் பரிந்துரையில் கட்டப்பட்டது. இதன் ஆயுட்காலம் வெறும் 28 வருடங்களே. கார்த்திகை 9ம் நாள், 1989ல் இதனை தாண்டி மக்கள் சென்றனர். புரட்டாதி 3ம் நாள், 1990 இரு ஜேர்மனிகளும் இணைந்தன. கொரியச் சுவர் - இது 1977-1979 காலப் பகுதியில் வடக்கு, கிழக்கு கொரிய பகுதிகளை பிரிப்பதற்காகக் கட்டப்பட்டது. 248 கி.மீ நீளம் கொண்டது. 4 கி.மீ அகலம் கொண்ட இம் மதில் உலகிலேயே மிகவும் அதிகம் ஆயததாரிகளால் காவல் காக்கப்படும் மதிலாகும். மேற்கு சகாராவில் மணலால் கட்டப்பட்டுள்ள 2700 கி.மீ. நீளம் கொண்ட எல்லை மதில் மற்றுமொரு குறிப்பிடத்தக்க மதில். இதனை மொரக்கன் மதில் எனவும் அழைப்பார்கள். இதனைத் தவிர உலகின் பல நகரங்களிலும் மதில்கள் கட்டப்பட்டுள்ளன. பாகிஸ்தானின் லாகூர் நகரைச்சுற்றி கட்டப்பட்டுள்ளது ஒரு மதில். கனடாவிலும் கியுபெக் நகரத்தில் இவ்வாறான மதிலைக் காணலாம். Tortilla Wall இது சன்டியாகோ நகரின் மெக்சிக்கோ எல்லையில் அமைந்துள்ளது. மெக்சிக்கோவையும், அமெரிக்காவையும் பிரிக்கும இந்த மதில் 1990ல் கட்டிமுடிக்கப்பட்டது. சுமார் 22.5 கி.மீ நீளம் கொண்டது. இந்த மதில்களின் கீழ் சுரங்கம் தோண்டி சென்றோர் பலர்.

அண்மைக் காலங்களில் பிரசித்தி பெற்ற மதில் சுமார் 155 கி.மீ. நீளம் கொண்ட மதில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. 650 கி.மீ. நீளம் கொண்டதாக அமையவுள்ளது. இதன் உயரம் 9மீற்றர். (பேர்லின் சுவரின் உயரம் 3.6 மீற்றர்) ஆனி 16, 2002ல் கட்டத் தொடங்கப்பட்டது இம் மதில். வெஸ்ட் பாங் பகுதியில் இம் மதில் அமைந்துள்ளது. சீமேந்தினால் கட்டப்படும் மதிலைச் சுற்றி கரண்ட் வயர்களுடன், கமராக்களும் இணைக்கப்பட்டுள்ளன. இது தற்கொலைப் போராளிகளிடமிருந்து இஸ்ரேலைக் காப்பாற்றவே கட்டப்படுவதாக இஸ்ரேல் கூறிவருகின்றது. சில பகுதிகளில் சுமார் 6கி.மீ பாலஸ்தீனிய பகுதியின் உள்ளே இம் மதில் கட்டப்பட்டுள்ளது. இந்த மதிலைக் கட்டுவதற்காக பல ஆயிரம் வீடுகள் இடிக்கப்பட்டுள்ளன. இந்த மதில் பின்வரும் சர்வதேச சட்டங்களை மீறியுள்ளது. International Covenant on Civil and Political Rights (ICCPR, 1966) and the International Covenant on Economical, Social, and Cultural Rights (ICESCR, 1966), both of which Israel has signed. The rights violated include: freedom of movement (ICCPR, art. 12), property (ICCPR, art. 1,), health (ICESCR, art.12 and IV GC, art. 32), education (ICESCR, art.13, and IV GC, art. 50), work (ICESCR, art. 6), and food (ICESCR, art. 11).

1967ல் ஏற்படுத்தப்பட்ட பச்சைக் கோட்டை மீறி, இஸ்ரேல் தன்னிச்சையாக மதில் கோடுகளை தீர்மானித்துள்ளது. ஒரு மைல் மதிலுக்கு சுமார் 3.2 மில்லியன் டொலர்களை செலவாகின்றது. இதனை உலக வங்கி வழங்குகின்றது.

இந்த மதிலால் பாலஸ்தீனிய மக்கள் கடும் இன்னல்களை எதிர் நோக்குகின்றனர். பெத்தலகேம் மாவட்ட மக்கள் தொகை 170,000. இங்கு மூன்று முக்கிய நகரங்கள் உள்ளன. Bethlehem, Beit Jala, , Beit Sahour. இந்த மதில் இந்நகர மக்களின் மசூதிகளையும், விவசாய நிலங்களையும் இவர்களிடமிருந்து பிரிக்கின்றது. அருகேயுள்ள விவசாய நிலங்களுக்குச் செல்வதற்கு சுமார் 13கி.மீ தூரம் சுற்றி, பின்னர் அடையாளங்கள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே செல்ல வேண்டும்.

இந்த மதில்கள் பாலஸ்தீனிய மக்கள் வாழும் பகுதிகளை பல பிரிவுகளாக பிரிக்கின்றன. உதாரணத்துக்கு ஸ்காபரோ பகுதியில் பின்ச் வீதிக்கும், ஸ்ரீல் வீதிக்கும் இடையில் உள்ள ஒருவர், மார்க்கம் நகரத்தில் உள்ள டெனிசன் பகுதிக்கு செல்ல வேண்டுமெனில், அவர் மிசிசிக்கா சென்று, பிரம்ரன் ஊடாக , வோன் நகரம், ரிச்மன்ட் கில் என்பனவற்றை தாண்டி, மார்க்கம் நகர வட பகுதியில் இருந்து தெற்கு நோக்கி வந்தால் டெனிசனை அடையலாம்.

முன்னொரு காலத்தின் ஏழு கடல் தாண்டி, ஏழு மலை தாண்டும் கதைதான் இது. ஆடி 2004ல் சர்வதேச நீதி மன்றம் இந்த மதில் பாலஸ்தீனியத்தின் இறைமைக்கும் சுதந்திரத்துக்கும் எதிரானது என்று தீர்ப்பு வழங்கியது. இதனை இஸ்ரேல் ஏற்றுக் கொள்ளவில்லை. 1948ல் இஸ்ரேல் பாலஸ்தீனியத்தின் 78வீத நிலத்தைப் பறித்தெடுத்தது. இப்பொழுது இந்த மதிலால் மற்றுமொரு 11வீத நிலத்தைப் பறித்துள்ளது. பாலஸ்தீனியர்கள் தங்களது நிலத்தின் 90 வீதத்தை இழந்துள்ளனர். அத்துடன் தமது உறவுகளைப் பார்ப்பதற்கு பல மணி நேரங்களையும், பல காவல்களையும் கடக்க வேண்டியுள்ளது.

இந்த மதில் பல பொருளாதார இன்னல்களை உருவாக்கியுள்ளது. பாலஸ்தீனிய மக்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் நீர் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளனர். பலர் வறுமைக் கோட்டை நோக்கிச் சென்றுள்ளனர்.

## இந்த மதிலால் இஸ்ரேல் பெறுகின்ற நன்மைகளை

பாலஸ்தீனிய குடியிருப்புக்களையும், நிலங்களையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது. இஸ்ரேல் யூத பெரும்பான்மையைத் தக்கவைக்க இது வழி வகுக்கின்றது. பல வைத்தியசாலைகள் மதிலுக்கு மறுபுறம் அமைந்துள்ளன. மதிலில் உள்ள சோதனைச் சாலை மாலை 5 மணியுடன் மூடப்பட்டுவிடும். இதனால் பாலஸ்தீனியரின் இறப்பு வீதம் அதிகமாகும்.




பாலஸ்தீனிய தனி நாட்டை அமைப்பது கடினமாகும். நீர்ப்பாசனத்தை இஸ்ரேல் இந்த மதில் மூலம் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும். இதனால் பாலஸ்தீனியரின் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

1967ல் ஏற்படுத்தப்பட்ட "பச்சைக் கோட்டை" அழித்துள்ளது. இந்த மதில் இஸ்ரேலின் நிலப்பகுதியை அதிகரித்துள்ளது.

பாலஸ்தீனிய குடியிருப்புக்களின் தொடர்புகளை இம் மதில் கட்டுப்படுத்துகின்றது. வெஸ்ட் பாங்க், கிழக்கு ஜெருசலேம் ஆகிய பகுதிகள் முழுமையாக துண்டாடப்படுகின்றன. ஒரு பகுதியில் இருந்து மற்றப்பகுதிக்கு செல்வதற்கு இஸ்ரேலின் அனுமதி பெற்றே செல்ல வேண்டும். ஒரு கிராமத்-

71ம் பக்கம் பார்க்க...

RAVI
INCOME TAX
SERVICE

- LAST 14 YEARS IN TAX SERVICES
- PERSONAL INCOME TAX
- CORPORATE INCOME TAX
- SMALL BUSINESS TAX
- GST/PST AND PAYROLL REMITTANCE
- E.FILE SERVICES
- YEAR ROUND SERVICES

MORE INFO PLEASE CALL
RAVI PARAMU
416-262-4176

HOMELIFE
HIGHER STANDARDS

Ravi Paramu
Sales Representative
416•262•4176
rparamu@hotmail.com
www.raviparamu.com
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6




GRAND OPENING
B.Zorena Sawh
Broker of Record
Ganesh Thangarajah
Broker
Direct: 416-994-9046
Kuga Raveendrarajah
Broker
Direct: 416-843-8585
Raj Pathmarajah Ariyanayagam
Broker
Direct: 416-930-4663
Kirew Kanagasabai
Broker
Direct: 416-903-4663
Ramanan Ramachandran
Broker
Direct: 416-670-6467
Ravi Paramu
Broker
Direct: 416-262-4176
HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE TODAY
REALTY LTD., BROKERAGE
Independently Owned And Operated
Siva Kandiah
Sales Representative
Direct: 416-301-9540
Vasanthy Niranjan
Broker
Direct: 416-845-8272
Sri Ganeshan Thambaiah
Sales Representative
Direct: 416-402-3947
Tharsi Rajenthiram
Sales Representative
Direct: 416-843-7474
HomeLife Today Realty Ltd., Brokerage
Independently Owned And Operated
Office: 416-298-3200
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6
HWY 401
Kennedy Road
Midland Ave.
31 Progress Ave. #210
Ellesmere Road
N
Looking for New and Experienced Agents to Join our Team

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

என்றென்றும் இயற்கைப் பற்களின் ஆரோக்கியச் சிரிப்பிற்கு
பிரபல பல் வைத்திய நிபுணர் டாக்டர்
ஆதிகணபதி சோமசுந்தரம்
416.750.9969
2191 Warden Ave., Suite 3000,
Scarborugh, ON

BUY AND SELL through Pat Pushpakanthan
And enter to win Brand new Toyota FJ Cruiser
BUY AND SELL HOMES AND BUSINESS
WIN WIN
NEW
MARKHAM / ELSON
NEW
4 bdrm /3um In Markham/Steeles
Markham
PAT PUSHPAKANTHAN
Real Estate broker
416 493 2100
Dir: 416 490 SOLD
2.5%
total commission
Century 21 Affiliate Realty INC.
200 Consumers Rd Suite 406 TORONTO, ONT. M2J 4R4 416-290 1200
அனுபவம்! திறமை! நேர்மை!







இம்மாதப் புகைப்படக் கலைஞர்
**ராதா மணாளன்**
நொய்ஸ் ஜேர்மனியில் வசிக்கும் தொழில் நுட்பவியலாளரான இவர் புகைப்படத்துறையிலும் ஆர்வம்காட்டி வருகின்றார்

உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.
புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Insurance Ocean
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com
digi